

# க.நா.சு.

## நாவல்கள்

### ஒருநாள்

56782

# ஒரு நாள்

க.நா.சுப்ரமண்யம்

மின்னூலாக்கம்
முரளிதரன்

கண்மணி கிரியேட்டிவ் வேவ்ஸ்
92/66, டி.எஸ்.வி. கோயில் தெரு,
சென்னை-600 004.

ஒருநாள் - நாவல்

**ORU NAAL - Novel by Ka.Na.Subramaniam**

முதற் பதிப்பு : 200[illegible]

பக்கங்கள் : 170

விலை : ரூ. 75

மாவட்ட மைய நூலகம் ★ திருவாரூர் ★

56782

அட்டை அமைப்பு : ஜோதி

படம் : யோகா

வெளியீடு : கண்மணி கிரியேட்டிவ் வேவ்ஸ்
92/66, டி.எஸ்.வி. கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004

ஒளி அச்சு : லாவண்யா

அச்சு : மொனார்க் கிராபிக்
104, பெரியார் பாதை,
சென்னை - 600 094.

# தமிழில் நல்ல நூல்கள்

தமிழில் நல்ல நூல்கள் வருவது படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது. அடிப்படையில் ஏனோ எப்படியோ ஒரு கோணல், ஒரு கீறல் ஏற்பட்டுவிட்டது. ஏன் என்று விசாரித்து அறிந்து கொள்ள முயலுவது அவசியமாகும்.

ஒரு நல்ல சுகாதாரச் சூழ்நிலையில், தமிழை, மொழியை, இனத்தை, இலக்கியத்தை, கருத்துக்களை வளர்க்க ஒரு முயற்சியும் செய்யப்படவில்லை. திட்டுத்திட்டாக சிலருடைய முயற்சி அறிவும் ஆற்றலும் சுகாதாரமும் நிறைந்ததாக நமக்குத் தோன்றுகிறது- அவர்களில் ஜோதிராமலிங்கம், கோபாலகிருஷ்ண பாரதியார், வேதநாயகம்பிள்ளை, ஆறுமுக நாவலர், பி.ஆர்.ராஜமையர், அமாதவையா, டாக்டர் உ.வேசாமிநாதயர், சுப்ரமணியபாரதி, வ.வேசு. ஐயர் போன்றவர்கள் இலக்கியத்தைப் பற்றிய வரையில் முக்கியமானவர்களாக எனக்குத் தோன்றுகிறது.

சென்றுவிட்ட- அதுவும் சமீபத்தில் சென்றுவிட்ட- காலத்தை மதிப்பிடும்போது- அந்தக் காலப்பகுதியில் வாழ்ந்து பாடுபட்டவர்கள் எவரெவர் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள் என்று கணித்துக் கொள்வது- நமது காலகட்டத்தின் நினைப்பிலிருந்து கண்டுகொள்வது- அவசியமாகும். அப்படிக் கவனிக்கும்போது சென்ற நூற்றாண்டின் இலக்கிய சரித்திரத்திலே அதாவது 1820 முதல் 1920 வரை என்று எடுத்துக்கொண்டால், இந்த ஒன்பது பேரைத் தவிர வேறு யாரையுமே கவனிக்க வேண்டியது அவசியம் இல்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. பல அம்சங்களில் இவர்களையும் விடப் பெரியவர்கள், குறிப்பிட்ட ஒரு பகுதிக்குச் சிறப்பாக சேவை செய்தவர், பலர் இருக்கலாம்தான். ஆனால் அவர்களில் யாரும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இந்த ஒன்பது பேரைப் போல வழிசெய்து தரவில்லை

என்றுதான் சொல்லவேண்டும்.

எழுதுவது அதிகமாக இருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை- பரந்ததாக இருக்க வேண்டும். ஒரு தனித்துவம் இருப்பதாக இருக்க வேண்டும். வாழ்வில் ஏற்படுகிற பல அனுபவங்களையும் ஒன்று சேர்த்து ஒருமைப்படுத்திக் கொண்டு சிந்தித்தவன் எழுத்துத்தான் இலக்கியமாக இருக்க முடியும். இப்படி ஒருமைப்படாதவன், சிந்திக்காதவன் எழுத்து பிச்சைக்காரன் வாந்திதான். ஏதோ எங்கேயோ எப்படியோ ஒன்றிரண்டு நல்லதாக வந்துவிட்டால் போதாது. நல்லது வருவதற்கு எந்த நிமிஷமும் நிமித்தங்கள் இருக்க வேண்டும்- அப்போதுதான் ஒருவனை இலக்கியாசிரியன் என்று சொல்லலாம்- அவன் எழுதாவிட்டாலும் கூட சரிதான்.

❒ ❒ ❒ ❒

## ஒருநாள்

*1945-46*-இல் என்னுடைய நண்பர் ஒருவருடன் ஓர் இ.தே.ரா. மேஜரைச் சந்தித்தேன். அவர் சொல்லிய சில தகவல்களை வைத்துக் கொண்டு ஒரு நாவல் எழுத வேண்டும் என்று தோன்றிற்று. அச்சமயம் என்னை நாவல் கேட்டுக்கொண்டு வந்த என் நண்பர்- பிரசுரகர்த்தர்- அ.கி.கோபாலனிடம் அதை எழுதித் தருவதாக ஒப்புக்கொண்டேன். சாத்தனூரில் ஒருநாள் கால அளவில் நடப்பதாகக் கதையை வைத்து ஒருநாள் என்று பெயர் வைத்துச் சொன்னேன். *1946*-லே ஒரு பகுதியை எழுதிய நான் நாவலை *1950*-ல்தான் முடித்தேன்.

அந்த இ.தே.ரா. வீரன் வெளிநாடுகள் பலவற்றில் சுற்றியவன். நான் *1950*-க்கு முந்திய காலத்தில் வெளிநாடு சென்றதில்லை. ஆகவே சாத்தனூர்ச் சர்வமானிய அக்கிரஹாரத்துத் தெருக்களில் இருந்து மாத்திரம் வெளியூர்த் தகவல்களை அவசியத்துக்கு ஏற்பத் தருவது என்று தீர்மானித்தேன். இரண்டொருவரிடம் கேட்டறிந்து இரண்டொரு சில்லறை விஷயங்களையும் நாவலில் அவசியம் ஏற்பட்ட இடத்தில் சேர்த்துக் கொண்டேன்.

பலவீனமான உள்ளங்கள் பலவற்றில் ஒரு புது அநுபவம்

தாக்குகிறபோது அந்த அநுபவ வேகம் காரணமாகப் புதுவெள்ளத்தால் பழம் அழுக்குகள் அடித்துக்கொண்டு போகப்படுகிற மாதிரி பழம் நினைப்புகள், லட்சியங்கள் எல்லாமே போய்விடுகின்றன என்பது நம்முடைய தினசரி அநுபவம். மூர்த்தி பலவீனமானவன் தான்; ஹிட்லருக்கும் சுபாஷ் சந்திர போஸுக்கும் அடிமைப்பட்ட மாதிரியே தன் மாமாவுக்கும் மாமிக்கும் மனைவியாகப் போகிற (?) மங்களத்துக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கப் போகிறவன்தான் என்று தொனிக்கவே கதையை அமைத்துக் கொண்டேன்.

சாத்தனூர் நிலைக்களன் உண்மையிலேயே பலமானதுதான். சர்வமானிய அக்கிரஹார வாசிகள் ஒவ்வொருவரும், 'என்னைப்பற்றி எழுது! என்னைப் பற்றி எழுது!' என்று என் கண்முன் நிற்கிறார்கள். 'ஒருநாள்' எழுதி முடிக்குமுன் நின்றுகொண்டே இருந்தார்கள். கதை முக்கியம் அல்ல; மனிதர்களும் அந்த மனிதர்களுக்கு இடையே உள்ள உறவுகளுந்தான் முக்கியம் என்கிற எண்ணத்துடன்தான் சாத்தனூர்ச் சர்வமானிய அக்கிரஹார வாசிகளைப் பற்றி நான் இவ்வளவு விரிவாக எழுதினேன். என் தேவை (தேவை என்று சொல்வதைவிட ஆசை என்றும் சொல்லலாம்) அவர்களைப் பற்றி எழுதிப்பார்க்க என்னைத் தூண்டிற்று. மூர்த்தியின் சாத்தனூர் வருகையைச் சாக்காக வைத்துக்கொண்டு உற்சாகமாக எழுதினேன். அந்தப் பாத்திரங்களில் பலரும் உயிரோடு இருக்கிறார்கள் என்றால் அதற்கு என் கற்பனை காரணம் அல்ல; சாத்தனூர் வாசிகளேதான் காரணம். 'நான் ஒரு புஸ்தகத்தில் இருக்க வேண்டியவன்; தவறுதலாகச் சாத்தனூர்ச் சர்வமானிய அக்கிரஹாரத்திலே உயிருடன் இருக்கிறேன்' என்று அவர்கள் ஒவ்வொருவரும் என்னிடம்- இலக்கியாசிரியனாகிய என்னிடம்- வந்து என் காதில் மட்டும் பிரத்தியேகமாகச் சொன்ன மாதிரி எனக்குத் தோன்றுகிறது. என் அநுமதிக்காகக்கூடக் காத்திராமல் நேரே அவர்கள் ஓர் உரிமையுடன் என் நாவலுக்குள் நடந்து இடம் தேடிக் கொண்டுவிட்டார்கள்.

நான் சாத்தனூர் என்று சொல்லுகிற ஊரில் இருந்ததெல்லாம் என் கல்லூரிப் படிப்பு முடிந்தபிறகு இரண்டொரு வருஷங்கள்தான். அந்த இரண்டொரு வருஷங்களிலே நான் அறிந்துகொண்ட சாத்தனூர்வாசிகள் என் நினைவை விட்டு என் ஆயுள் உள்ளவரை

அகல மாட்டார்கள். அதேபோல என் ஒருநாள் வாசகர்களுக்கும் இந்த மனிதர்களில் சிலராவது நல்ல நண்பர்கள் ஆகவேண்டும் என்கிற நினைப்புத்தான் என்னைத் தூண்டியது. அவர்களைப் பற்றி எழுத இந்த அளவில் நான் எதிர்பாராததையும்விட அதிகமாகவே எனக்கு வெற்றி கிடைத்துவிட்டது என்று நான் நினைக்கிறேன்.

என் நாவல்களிலே எனக்கு மிகவும் பிடித்த நாவல் எது என்று யாராவது கேட்டால் அதனாலேயே எனக்கு 'ஒருநாள்' தான் என்றே பதில் சொல்லத் தோன்றுகிறது.

**- க.நா.சுப்ரமண்யம்**

# ஒரு நாள்

பங்கஜம் அதற்குமுன் ஒரு நாளும் அவ்வளவு அதிகாலையில் எழுந்ததில்லை. அவ்வளவு அதிகாலையில் எழுந்து செய்வதற்கு அவளுக்கு ஒன்றும் வேலையில்லை. வீட்டிலே, குழந்தை குட்டிகள், பிச்சுப் பிடுங்கல் எதுவும் கிடையாது. காபி போட்டுக் காலத்தில் தராவிட்டால் கோபித்துக்கொள்ளக் கணவன்கூடக் கிடையாது.

ஆனால் கணவனைப் பற்றித் தொடர்ந்து சிந்திக்கிற மனநிலையில் அவள் இல்லை. வாழ்க்கை பூராவும்தான் துயரில் ஆழ்ந்திருக்க வேண்டுமே - இந்த ஒரு நாளாவது, இந்த அறுபது நாழிகையாவது அவள் துயரத்திலிருந்து விடுபட்டிருப்பது நியாயமல்லவா? பெண்ணாகப் பிறந்ததற்கு உலகம் அந்த ஒரு நியாயத்தையாவது தனக்கு வழங்காமல் இருந்துவிடாது என்றுதான் அவள் எண்ணினாள். தன் துயரத்தைத் தானே நினைத்துப் பார்த்துக்கொள்ளாதிருப்பதற்கு யார் தயவு வேண்டும்?

இந்த மாதிரித் துயரங்கள் வந்துவிட்டால் வயதானவர்கள் - கணவனுடன் நாற்பது ஐம்பது வருஷங்கள் வாழ்ந்து பிள்ளை குட்டி பேரன் பேத்தி பெற்றெடுத்தவர்கள் - மனம் கல்லாகி விட்டது என்று சொல்வதைக் கேட்டிருந்தாள் பங்கஜம். மனம் கல்லாவது என்பது இன்னும் அவளுக்கு ஏற்படாத ஒரு அநுபவம், மற்றவர்கள் சொல்கிறார்களே என்று இந்த முடியாத காரியத்தைச் சாதித்துவிட இந்த ஏழெட்டு மாதங்களாகவே அவள் முயன்றுகொண்டு வருகிறாள்.

ஆனால் பங்கஜத்தின் மனம் பங்கஜமாகவே இருக்கிறதே தவிர, கல்லாகி விடவில்லை. ராமாயணத்தில் வருகிற, அகலிகையைப்போல் யாராவது சபித்து, அந்தச் சாபமும் பலித்தால்தான், அவள் மனம் கல்லாக முடியும்போல் இருந்தது!

வாசற்கதவின் குரங்குத்தாழ் திறப்பதற்குச் சிரமமாக இருந்தது. வேகமாகத் தட்டியதில் கையில் பட்டுவிட்டது. கை வலித்தது.

மன வலியுடன் கை வலியும் சேர, பங்கஜம் வாசற்கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து, திண்ணை ஓரத்துத் தூணில் சாய்ந்து கொண்டு நின்றாள்.

ஐப்பசி மாதந்தான் - எனினும் குளிர் விழுந்துவிட்டது. அதற்குள்ளாகவே; இழுத்துப் போர்த்துக்கொண்டேதான் நிற்க முடிந்தது பங்கஜத்தால். பொழுது இன்னும் விடியவில்லை. காற்று

அதிகமாக இல்லை. மங்கிய நிலவொளி தேய்ந்து கொண்டே போய்ப் பகலை வரவேற்கக் காத்திருக்கிற நிலவொளி அக்கிரஹாரத்தில் பரவியிருந்தது. குளம், குட்டை, மரம், மட்டை எல்லாம் ஆடாமல் அசையாமல் அலை வீசாமல் நிலைத்திருந்தன.

அக்கிரஹாரத்தில் அவ்வளவு அதிகாலையில் ஜன நடமாட்டமே இல்லை. ஒரு தலை முறைக்குமுன் என்றால், ஏன், பங்கஜத்துக்கே ஞாபகம் இருந்தது; பத்து வருஷங்களுக்கு முன்கூட ஐப்பசி மாதத்து அதிகாலையிலே யாராவது கிழங்கட்டைகள் எழுந்து போய் இதற்குள்ளாகவே நடுங்க நடுங்கக் காவிரியிலே குளித்து விட்டு வந்து, வீட்டில் காரியம் இருந்ததோ இல்லையோ, கை தடுக்கக் கால் தடுக்க மற்றவர்களையும் தூங்கவிடாமல் ஏதாவது பாத்திரங்களை உருட்டுவார்கள் - அல்லது ஸ்தோத்திரங்களை முணுமுணுப்பார்கள். பங்கஜத்திற்குக்கூட ஞாபகம் இருந்தது.

ஒரு திட்டமான வாழ்க்கை, துயரம் எதையுமே மறப்பதற்குச் சிறந்த வழியாகத்தான் இருந்தது என்பதைப் பங்கஜம் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. திட்டத்தையோ வாழ்க்கையையோ பற்றி அவள் அறிந்தது என்னவோ மிகவும் சொல்பம்தான். ஆனால் பெண்ணுக்கு என்று ஏற்படக் கூடிய துயரங்கள் பூராவையும் அறிந்துவிட்டவள் அவள். ஒன்றுகூட விடாமல் எல்லாத் துயரங்களையும் அவள்மேல் அடுக்கி அவளுடைய இளம் உள்ளத்தைச் சோதித்துவிட்டது. தெய்வம் - விதி.... என்ன சொன்னால் என்ன? துயரம் துயரந்தானே?

அவள் அவ்வளவு அதிகாலையில் எழுந்தது பிசகுதான். சாதாரண நாளில் உள்ள நாற்பது நாழிகை நேரத்தில் படுகிற துன்பம் போதாது என்றா அவள் இரண்டு நாழிகை நேரம் முந்தியே எழுந்து தன் துயரத்தைத் தனிமையில் நீடித்துக் கொண்டு நின்றாள்?

ஐயோ, பாவமே! என்றுதான் அக்கிரஹாரத்தார் அங்கலாய்ப்புடன் அவளைப்பற்றிச் சொன்னார்கள். சொந்தத் துயரங்களை மீறி அவள் உடலையோ, உள்ளத்தையோ தொடப் பிறருடைய அங்கலாய்ப்புக்கு இடம் இல்லைதான்; அங்கலாய்ப்புத் தேவையாக இல்லை அவளுக்கு; நம்பிக்கை தருவதாகக்கூட இல்லை.

வாழ்க்கைதான் தேவையாக இருந்தது - ஆனால் அதுவும், எண்ணிப் பார்த்தால், நம்பிக்கை தருவதாக இல்லைதான்.

பாவம்! என்ன செய்வாள்?

அக்கிரஹாரத்திலே அன்று அதிகாலையில் அவளைத்தவிர வேறு யாருமே உயிருடன் இருந்ததாகத் தெரியவில்லை. தெரு நிசப்தமாக இருந்தது. நள்ளிரவில் கோஷ்டியாக ஊளையிட்டுப்

பிறரைத் தூங்கவொட்டாமல் மனசில் கலவரத்தையும், காதில் கூக்குரலையும் உண்டாக்குகிற தெரு நாய்கள்கூட, ஓய்ந்து விட்டன. நன்றி மறவாத நாய்கள்கூட, எல்லாவற்றை யும் மறந்துவிட்டு, பிரக்ஞையற்றுக் கண்களை மூடிவிட்டன.

துயரத்தின் எல்லைகளை அறிந்த தன்னைத் தவிர... என்று எண்ணினாள் பங்கஜம்!

அப்படியானால் அந்தத் தெருவிலே அவளைத் தவிர துயரில் ஆழ்ந்தவர்கள் வேறு யாருமே இல்லையா, என்ன? தன்னைவிட அதிகத் துயர் அடைந்தவர்கள் உண்டு என்பது பங்கஜத்துக்கும் தெரிந்த விஷயந் தான்.

அடுத்த வீட்டிலே இருந்தாளே கல்யாணிப் பாட்டி - பெயர் தான் கல்யாணி. அவள் காரியங்களெல்லாம் கல்யாண மல்லாதவைதான்! கணவன் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டது அவள் ஏழாவது வயதில் - அறுத்துக் குளித்துவிட்டு வீட்டுக்கு வந்தது ஒன்பதாவது வயதில்- இப்போது அவளுக்கு வயது அறுபத்துக்குமேல் இருக்கும். ஐம்பது வருஷங்களிலே அவள் உள்ளம் மரத்துவிட்டதோ? ஐம்பது வருஷங்களில் தன் உள்ளமும் இப்படியேதான் மரத்துவிடுமோ?

பிறர் துயரத்தைப் பற்றி நினைப்பதால் தன் துயரம் மாறிவிடாது என்பது பங்கஜம் அநுபவபூர்வமாக அறிந்த விஷயந்தான். ஆனால் பிறர் துயரைப் பங்கிட்டுக் கொள்வதில் தன் துயரை மறக்க முடிவதையும் அவள் அநுபவபூர்வமாகக் கண்டிருந்தாள்.

அடுத்த வீட்டு அம்புலுவின் குழந்தை இறந்தபோது அவளுக் காகக் கண்ணீர் ஆறாகப் பெருக விட்டு, பங்கஜம் தன் துயரை வள்ளிசாகப் பதினைந்து நாழிகை நேரம் மறந்து விட்டுத்தான் இருந்தாள்.

மனிதர் மனோபாவத்திலே இது ஒரு விசித்திரந்தான். வேறு என்ன செய்தாலும் அகலாத ஒரு துயரம் பிறர் துயரத்தில் மங்கி, மக்கி, மறைந்துவிடுகிறது. வாழ்க்கையிலே துயரை அதிகமாக அநுபவித்தவர்களின் மனம் கனிந்திருப்பதற்கு இதுதான் காரணமோ? சுயநலம் காரணமாகவே அவர்கள் பிறர் துயரில் பங்கெடுத்துக்கொள்ள நேர்ந்ததோ?

தத்துவ விசாரம் பங்கஜத்தின் வயசுக்கோ அறிவுக்கோ எட்டாத விஷயந்தான். ஆனால் துயரங்களை ஒன்றன்பின் ஒன்றாக, நேருக்கு நேர் சந்தித்துப் பார்த்துவிட்டவர்களுக்குத் தானாகவே ஒரு தத்துவ விசார வேகம் அமைந்துவிடுகிறது. தத்துவ விசாரம் என்பது

இன்றுதான் கலாசாலைப் படிப்பாகி விட்டதே தவிர, என்றும் வாழ்க்கையோடு ஒட்டிய, வாழ்க்கையை விட்டு அகலாத ஒரு லக்ஷணமாகவே இருந்து வந்திருக்கிறது. இன்றும் சரி, நேற்றும் சரி, இனி வரப்போகிற நாட்களிலும் சரி, அநுபவத் துயரந்தான் கலாசாலைப் பேராசிரியர்களைவிடப் பெரிய தத்துவ ஆசிரியன் என்பதில் சந்தேகமில்லை.

பங்கஜம் சிந்தனையில் ஆழ்ந்து, ஆனால் எண்ணங்களைத் தெளிவாக உணராத அரைப் பிரக்ஞை நிலையில் தூணில் சாய்ந்துகொண்டு நின்றாள்.

அக்கிரஹாரத்தில் நடமாட்டம் எதுவும் இல்லை. ஆனால் விழித் துக்கொள்கிற நிலை வந்துவிட்டது. தூரத்திலே மேட்டுத் தெருக் கோழி ஒன்று அகம்பாவமாகக் கூவிற்று. கல்யாணிப் பாட்டியின் பேத்தி; அதாவது அவள் தங்கையின் பேத்தி; விடிகிற சமயம் அதற்கு எப்படித்தான் தெரிந்ததோ, விழித்துக்கொண்டு, அடுத்தவீட்டில், அலறிற்று.

கிழக்கும் நெடுக்குமாக நாலுதரம் திரும்பிப் பார்த்தாள் பங்கஜம். கழுத்தைத்தான் வலித்தது. 'தெருவில் வரானா' என்று அவள் யாரையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அன்று எழுந்தது முதலே அவளுக்கு என்னவோபோல்தான் இருந்தது. ஏதோ எதிர்பாராத ஒரு புதிய அநுபவம் ஏற்படப் போகிறது என்கிற முன்னெச்சரிக்கையான ஓர் உணர்ச்சி அவள் உள்ளத்தில் ஊசலாடியது. எதிர்பாராத அநுபவத்தை எதிர்பார்த்துப் பயனுண்டா என்பது பற்றி அவளால் தீர்மானிக்க முடியவில்லை.

தான் எதிர்பார்ப்பதாலேயே அந்த எதிர்பாராதது நடக்காமல் நின்றுவிடுமோ என்கிற பயம் மட்டும் அவள் மனத்திலே எழுந்தது.

கிழக்கே, தெருக்கோடியிலிருந்து மூங்கில் புதர், வெளுக்கும் கீழ் வானத்தில் படம் எடுத்துப் பதிய வைத்ததுபோல, அழகாகத் தெரிந்தது. அதையே பார்த்துக்கொண்டு நின்ற பங்கஜத்தின் காதில் ஒரு வீட்டுக் கதவுத் தாழ்ப்பாள் படார் என்று திறக்கப்படும் சத்தமும், கதவு கிறீச் சென்று அடுத்த நிமிஷம் திறக்கப்படும் சத்தமும் கேட்டது. எதிர்ச் சாரியில் இருந்த சிவராமையர் வீட்டுக் கதவுச் சத்தம் அது என்று எண்ணியபடியே திரும்பிச் சிவராமையர் வீட்டைப் பார்த்தாள் பங்கஜம்.

சிவராமையர் வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தது ஓர் உருவம். அந்த வீட்டில் இருந்தவர்களுடைய

உருவமெல்லாம் பங்கஜத்துக்குப் பதினாறு வருஷங்களாகப் பழக்கமானவைதான். ஆனால் வந்தது அவளுக்குப் பழக்கமான உருவம் அல்ல. யாரோ புதிசாக இருந்தது. வாலிபன். 'அவர்கள் வீட்டிலே வயதானவர்களையும் சிறுவர்களையும் தவிர வேறு யாரும் இல்லையே?'

சட்டென்று பங்கஜத்துக்கு, முதல் நாள் காலையில் இந்திராணி - சிவராமையரின் பத்துவயதுப் பேத்தி சொன்னது ஞாபகம் வந்தது. சிவ ராமையரின் தங்கை பிள்ளை ஒருவன் - சண்டை ஆரம்பித்த காலத்தில் ஜெர்மனியில் இருந்தவன், படித்துக்கொண்டு இருந்தவன், ஜெர்மனியிலேயே அகப்பட்டுக் கொண்டு அவர்களுடனிருந்து, அவர்கள் வாழ்க்கை வழிகளில் பிரியங் கொண்டு, அவர்கள் சண்டையைத் தனது ஆக்கி, முதலில் ஜெர்மானியருடனும் பிறகு நேத்தாஜி போஸின் இந்திய தேசியச் சேனையிலும் சேர்ந்து, பர்மாவில் சண்டையிட்டுக் கைதியாகி, விடுதலையடைந்திருந்தவன் - அன்று மாலை வரப் போகிறான். தன் அத்தான் என்ற இந்திராணி பெருமையாகச் சொல்லிக்கொண்டது ஞாபகம் வந்தது.

இவ்வளவு தெளிவாகச் சொல்லவில்லை சிறுமி. கேட்டுக் கேட்டுத் தான் அந்த அத்தானைப்பற்றி அறிந்துகொண்டாள் பங்கஜம். இப்போது வாசலில் வந்தது இந்திராணியின் அத்தானாகத்தான் இருக்க வேண்டும். அந்த அத்தான் வாசல் திண்ணையோரமாக வந்து பங்கஜம் நின்றமாதிரியே தூணில் சாய்ந்துகொண்டு கிழக்கும் மேற்குமாகத் தெருவை இரண்டு தடவை கவனித்தான். பங்கஜம் அவள் வீட்டுத் திண்ணையோரமாக நின்று கொண்டிருந்ததைக் கவனித்தானோ என்னவோ - கவனித்தமாதிரி காட்டிக்கொள்ளவில்லை. பையிலிருந்து சிகரெட் டப்பாவை எடுத்துப் படார் என்று திறந்து ஒரு சிகரெட்டை எடுத்து வாயில் வைத்துக் கொளுத்தினான்.

தீக்குச்சியின் வெளிச்சத்திலே அவன் முகம் நன்கு தெரிந்தது. அழகான முகம் என்று சொல்ல முடியாது என்றுதான் எண்ணினாள் பங்கஜம். முகம் எல்லாம் குழி விழுந்து, கண்கள் ஆழ்ந்து பஞ்சடைந்து உருவம் மெலிந்து... அந்தத் தீக்குச்சியின் வெளிச்சம் தன் முகத்தையும் காட்டியிருக்குமோ அவனுக்கு என்று பயந்தவள்போல, பங்கஜம் இரண்டடி பின்னிட்டு நின்றாள் ஒரு விநாடி - பிறகு கதவைத் திறந்து, சாத்திக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

## 2

மேஜர் மூர்த்திக்கு வேலை ஒன்றும் கிடைக்கவில்லை இ.தே.ரா. வீரன் மேஜர் மூர்த்தி என்று பெரிதாகப் பாராட்டிப்

பேசிவிட்டு நகர்ந்து விட்டார்களே தவிர, வேறு எவ்விதமான உதவியும் அவனுக்குச் செய்ய யாரும் முன்வரவில்லை. காங்கிரஸ் சர்க்கார்தான் மாகாணங்களிலும் மத்தி யிலும் ஆட்சியில் இருந்தது. அவர்கள் கவனத்தைக் கவர வேறு எவ்வளவோ பெரிய விஷயங்கள் இருந்தன - மேஜர் மூர்த்தி என்கிற இ.தே.ரா. வீரனின் எதிர்காலம் அவ்வளவு முக்கியமான விஷயமாக அவர்களுக்குப் படவில்லை.

அதுபற்றி மேஜர் மூர்த்தியும் அவர்களைக் குற்றம்சாட்ட வில்லை. தேசத்தின் எதிர்காலத்தைக் கவனிப்பது தவறு என்று அவன் நினைக்க வில்லை. தன் காரியத்தைக் கவனிப்பார்கள் என்று தான் எதிர் பார்த்தது தவறுதான் என்று சில வாரங்களுக்குள்ளாகவே அவன் அறிந்து கொண்டான். தன்மேல் பிசகு என்று தன்னையே குற்றம் சாட்டிக் கொண்டான்.

முதலில் சென்னையிலும் பிறகு டில்லியிலும் பல தலைவர்களைச் சந்தித்தான். தனக்கு இல்லாவிட்டாலும், தன்னைப் போன்ற மற்றவர்களுக்காவது ஏதாவது ஏற்பாடு செய்து தர முடியுமா என்று முயன்று பாடுபட்டான். 'சிவப்புநாடா' குறுக்கிடத்தான் குறுக்கிட்டது - இப்பொழுது அது கதர்நாடா என்று வேண்டுமானால் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்; அவ்வளவுதான். மற்றப்படி அதன் தன்மை, போக்கு எல்லாம் பழைய தன்மையும், போக்கும்தான்.

நாலு தடவை டில்லிக்குப் போய் வந்த பின், நானூறு உள்ளூர்த் தலைவர்களைச் சந்தித்த பின், மேஜர் மூர்த்திக்கு ஒன்று தெளிவாகியது; மனிதன் தனக்கென்று எப்படிப்பட்ட லக்ஷியத்தையும் மேற்கொள்ளலாம் - பிறருக்கென்று, இன்று உலகம் உள்ள நிலையில், எந்த லக்ஷியத்தையும் மேற்கொள்வது மகாத்மா பட்டத்துக்கோ அல்லது அதிஅசட்டுப் பட்டத்துக்கோ தான் வழி. மகாத்மா பட்டமோ, அசட்டுப் பட்டமோ தனக்குத் தேவையில்லை என்கிற முடிவுக்குத்தான் வந்தான் மேஜர் மூர்த்தி, சென்னைக்குத் திரும்பிய இரண்டொரு மாதங்களுக்குள்ளாக.

ஜெர்மனியில் அவன் படிப்புப் பூராவும் முடிந்துவிட வில்லை. பட்டம் பெற்றுவிட்ட பிறகு சைனியத்தில் சேரவில்லை அவன். லக்ஷியம் என்று அசட்டுத்தனமான ஒரு சிந்தனையிலே அவன் சேர்ந்து கொண்டான். பிறருக்கு ஏற்படாத அநுபவங்கள் ஏற்பட்டன அவனுக்கு - அவ்வளவு தான். பிற்காலத்தில் பிரயோசனப்படுத்தக் கூடியதாக எதுவும் அவனுக்குக் கிடைக்கவில்லை. உற்சாகம் மனிதனை எந்த எந்த வழிகளில் உந்தித் தள்ளிக் கொண்டு செல்லும் என்பதற்கு மேஜர் மூர்த்தியின் வாழ்க்கையை ஓர் உதாரணமாகச் சொல்லலாம்.

முதலில் ஆடல்ப் ஹிட்லரின் ஜெர்மனி அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஜெர்மானியர்கள் அறிஞர்கள் - அறிவை ஒட்டிய வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று எண்ணினான் அவன்.

கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த, உற்றார் உறவினர் இல்லாத ஏழைப் பையன் ஜெர்மனிக்குப் போக நேர்ந்ததே ஓர் அதிசய மான கதைதான். ஹாஸ்டலில் சாப்பிடுகிற பையன்களுக்குத் தண்ணீர் எடுத்துக் கொடுக்கிற பையனாக இலவச சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டு உண்மையான ஏழைச் சர்ட்டிபிகேட்டுகளுடன் இலவச மாணவனாகவும் படித்துக் கொண்டிருந்தவனை ஆசை காட்டி அழைத்தவர் கிருஷ்ணமேனன் என்பவர். அவர் கல்கத்தா சர்வகலாசாலையில் ரசாயனம் படித்து டாக்டர் பட்டம் பெற்று முதல் முதலாக உத்தியோகத்திற்கு வந்தது நம் கிருஷ்ண மூர்த்தி படித்துக்கொண்டிருந்த கல்லூரிக்குத்தான்.

கல்லூரியிலே முதல் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி என்கிற ஏழைப் பையன் கிருஷ்ணமேனனின் கவனத்தைக் கவர்ந்தான். அவனுடைய பணிவும் அறிவும் அறிவிலே இருந்த ஆசையும் அவரை அவனிடம் பிரியங்கொள்ளத் தூண்டின. பிரியம் நாளடைவில் நட்பாக மாறிற்று - மிகவும் புனிதமான குரு சிஷ்ய பாவமாக மாறிற்று.

அந்தக் கல்லூரியிலே கிருஷ்ணமேனன் ஒரு வருஷம் பூராவும் கூட வேலை பார்க்கவில்லை. அரசாங்கத்தாரே அவரை வர்ணச் சேர்க்கை விஷயமாக ரசாயன ஆராய்ச்சி செய்துவர ஜெர்மனிக்கு அனுப்பத் தீர்மானித்தார்கள். ஆர்டர் அவர் கையில் கிடைத்தபோது, அவர் கூட இருந்தான் கிருஷ்ணமூர்த்தி. அந்த ஆர்டர் தனக்கு எங்கே கிடைக்கப் போகிறது என்று நம்பிக்கையே இல்லாதிருந்த கிருஷ்ணமேனன். அந்தப் பையனின் அதிர்ஷ்டந்தான் தமக்கு உதவியது என்று எண்ணினார். அவன் தம்முடன் இருப்பது தமக்கு அதிருஷ்டகரமாக இருக்குமே என்று எண்ணியவர், முதலில் விளையாட்டாகவும், பிறகு உண்மையாகவும் அவனையும் தம்முடன் ஜெர்மனிக்கு வரத் தூண்டத் தொடங்கினார்.

அவர் தூண்டுதல் வீண்போகவில்லை. அவர் காட்டிய ஆசைகள் பையன் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. அவர் போலவே பட்டம் பெற்றுக் கல்லூரிப் பேராசிரியராகப் பதவியும் பெறலாம் என்று நினைத்தான் சிறுவன். அப்போது அவனுக்கு வயது பதினேழு, பதினெட்டுக்குள்தான் இருக்கும்.

அவனுக்குப் புத்தி சொல்லவோ, அவன் காரியங்கள் எதிலும்

குறுக்கே நிற்கவோ, யாரும் இல்லை அவனுக்கு. உண்மையிலேயே அநாதை அவன். பெற்றோர் இருவரும் வெகு நாட்களுக்கு முன்னரே இறந்து விட்டனர். நெருங்கிய உறவு அவன் தமக்கை ஒருத்திதான். அவள் இரண்டாவது தாரமாக ஒரு பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டவள். தம்பியைக் கவனிப்பதற்குப் போதிய செயலும் தெம்பும் இருந்தன. எனினும் கவனிப்பதில்லை. காரணம் தன் தம்பியிடம் பிடிப்பு அதிகம் இல்லை என்பது ஒன்று; இளையாளாகப் பெரிய குடும்பத்திலே இருந்த அவள் நிலை தடுமாறிவிடுமோ என்கிற பயம் இரண்டாவது; தம்பியிடம் சுபாவமாக இல்லாத ஒரு மனப் பிடிப்புக்காகக் கணவனிடம் உள்ள சௌகரியமான, லாபகரமான பிழைப்பைத் தியாகம் செய்யத் தயாராக இல்லை அவள். அவனுடைய தாயுடன் பிறந்த சகோதரர், அவன் மாமா இருந்தார். ஆனால் அவன் அப்பா உயிருடனிருந்தபோது மைத்துனருக்கும் அத்திம்பேருக்கும் ஆவதில்லை. தன் மாமாவையே கிருஷ்ணமூர்த்தி இரண்டொரு தரந்தான் சந்தித்திருந்தான். தான் தன் ஆசிரியருடன் ஜெர்மனிக்குப் போகிற விஷயம் பற்றி அவரிடம் அனுமதி கேட்கவேண்டும் என்றே அவனுக்குத் தோன்றவில்லை. அத்திம்பேருக்குத் தகவல் தெரிவித்து, அக்காளிடம் சொல்லச் சொல்லி எழுதினான் ஒரு கார்டு - அவ்வளவுதான் - இந்தியாவிலே அவனை நிறுத்தி வைத்திருந்த பந்தம் அறுந்துவிட்டது.

மாணவன் என்று சொல்வதற்கில்லை. பேராசிரியர் கிருஷ்ண மேனனின் கையாளாகக் கிருஷ்ணமூர்த்தி ஜெர்மனி போய்ச் சேர்ந்தான். 1936-ஆம் வருஷக் கடைசியிலே - கடுங்குளிரிலே.

1936-லிருந்து 1946 முடியப் பத்து வருஷங்கள்! அந்தப் பத்து வருஷங்களில் பத்து ஜன்மங்களின் அநுபவங்கள் அவனுக்கு ஏற்பட்டு விட்டன. 1938-லேயே கிருஷ்ணமேனனைக் கம்யூனிஸ்டுக் கட்சியை ஆதரிப்பவர் என்று ஜெர்மானியர்கள் நாடு கடத்தி விட்டனர். அவருடன் கிருஷ்ணமூர்த்தியும் வெளியேறியிருந்தால் ஆனால் அவன் வாழ்க்கையே வேறு தினுசாக மாறியிருந்திருக்கும். அவன் அந்த சமயம் ஜெர்மனியைவிட்டு வெளியேற விரும்பவும் இல்லை; அவனால் முடியவும் இல்லை. சுபாவமாகவே அவனுக்கிருந்த அறிவுத் தாகம் அவனுக்கு உதவி செய்தது. அந்த நாட்களில் ஜெர்மனியே விஞ்ஞானத்தின் பிறப்பிடம் என்று நம்பிவந்து, படிப்புப் படித்து ஆராய்ச்சியும் செய்வதில் ஈடுபட்டிருந்த இந்திய மாணவர்களிலே இந்த ஆர்.கே. மூர்த்தி என்பவனே சிறந்தவன் என்று பெர்லின் பேராசிரியர்கள் கருதினார்கள். சண்டை வந்திராவிட்டால் அவன்

இரண்டொரு டாக்டர் பட்டங்களுடன் ஊர் திரும்பியிருப்பான். புதிதாகத் தொழில்கள் ஆரம்பிக்க உதவுவது பற்றியும் அவன் கனவு கண்டு கொண்டிருந்தான்.

ஜெர்மனியரின் பிரசார வேகமும், யுத்தத்தின் வருகையும் அவனைத் தாக்கின. தாக்கியது மட்டும் அல்ல; அவனைக் காலைவாரியும் விட்டுவிட்டன. சாதாரண வீரனாக அவன் கீழ் முனையிலும், மேல் முனையிலும் சண்டை செய்தான். பிரிட்டிஷ் பிரசாரத்திற்கு எதிராக அதேபோல் அரை உண்மையுடன ஜெர்மனி செய்த பிரசாரத்தை நம்புவதற்கு அவன் தயாராக இருந்தான்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் வருகையால் நிலைமை ஓரளவு மாறிற்று. தன்னைப் பாதிக்கக் கூடிய பல விஷயங்களைப் பற்றிச் சிந்தித்து லக்ஷ்ய முடிவுகளை ஏற்க அவன் தொடங்கியது அந்த நாளில்தான். போஸுடன் அவன் ஜப்பான், மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு வந்தான். அவன் பதவி உயர்ந்தது. அவனுக்குத் திருப்திகரமாகவே இருந்தது. தைரியத்திற்கும் ஒரு கொள்கைக்கும் எடுத்துக்காட்டாக மேஜர் மூர்த்தியின் பெயர் விளங்கியது.

யுத்தம் கிழக்கேயும் ஓய்ந்து, எதிலும் மாட்டிக்கொள்ளாமல் எவ்வளவோ சிரமப்பட்டு, மேஜர் மூர்த்தி கல்கத்தா வழியாகச் சென்னை திரும்பியபோது அவன் மனநிலையை விவரிப்பது ஆகாத காரியம். ஒரு தேசத்தின் எதிர்காலமே தன்னைப் பொறுத்து இருந்தது போன்ற ஓர் உணர்ச்சி விசுவரூபம் எடுத்திருந்தது. காரண காரியம் இல்லாத, அஸ்திவாரமே அற்ற, உணர்ச்சிதான் அது. ஆனால் தன் அநுபவங்களுக்கும், தனக்கென்று கிடைத்துவிட்ட பதவிக்கும் ஏற்பத் தான் நடந்து, தன் தேசத்துக்கு உதவிசெய்து தீரவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு வந்தான் அவன்.

அவன் படம் இரண்டொரு ஆங்கிலப் பத்திரிகைகளிலும், எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் வெளியாயின. அவனைச் சந்தித்தவர்கள் எல்லோரும், "ஆஹா, அப்படியா!" என்று அதிசயோக்தியாக, ஆச்சரியத் துடன் அவனை மேலும் மேலும் விசாரித்தார்கள்.

இரண்டொரு வாரங்கள் ஆவதற்கு உள்ளாகவே மேஜர் மூர்த்திக்கு விஷயம் விளங்கிவிட்டது. இந்தியா தன் எதிர்காலத்தைப் பற்றி அவனைத் தொந்தரவு செய்வதாக இல்லை. தன் எதிர்காலத்தை அவன், சுயநலம் என்று கருதாமல், நிர்ணயித்தே தீரவேண்டும்.

அவன் படத்தைத் தமிழ்ப்பத்திரிகை ஒன்றில் பார்த்த அவன் மாமா, தன் மருமகனாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டு, பிள்ளையில்லாதவரின் புத்திர வாஞ்சையுடன் அவனை வரவேற்றுத் தன்னுடன் அவன் சில நாள் சாத்தனூரில் வந்து தங்கவேண்டுமென்று எழுதியிருந்ததும், எந்தப் பக்கம் திரும்புவது, என்ன செய்வது மேலே என்று அறியாமல் விழித்துக்கொண்டிருந்த மேஜர் மூர்த்திக்கு, இருபத்தேழாவது வயசில் மாமா என்கிற உறவு மிகவும் நெருங்கிய உறவு தான் என்பது ஞாபகம் வந்தது. ஜெர்மனிக்குப் போகும்போதும் சண்டைக்கு முந்தியும் சண்டைக்குப் பிந்தியும் அவருக்குத் தான் எவ்வித தகவலும் தராதது மிகவும் தவறான விஷயமென்று அவன் மனமே அவனைச் சுட்டது. அதற்குப் பிராயச்சித்தம் என்ன செய்யலாம் என்று அவன் யோசித்தான். உடனே அவர் அழைப்பை ஏற்றுக்கொண்டு கிளம்பிவிட்டான்.

கடிதம் வந்த காலை எட்டு மணிக்கு. உடனே தன்னிடம் உள்ள சொற்பச் சாமான்களைத் தூக்கிக்கொண்டு பெட்டி படுக்கை சகிதம் சாத்தனூருக்கு, பத்து மணிப் பகல் வண்டிக்கு டிக்கட் வாங்கிவிட்டான்.

## 3

புதிய இடத்தில் படுத்திருந்ததால் என்று சொல்வதற்கில்லை. இ.தே.ரா. மேஜர் மூர்த்தி புதிய இடங்களில், இடமல்லாத இடங்களிலும் படுத்துத் தூங்கப் பழகியவன்தான். ஆனால் காய்த்துவிட்ட, தழும்பேறிய அவன் உடல்கூட, சாத்தனூர்க் கொசுவிடம் தோல்வியை ஏற்கவேண்டியிருந் தது. குளிர் இருந்தால் கொசு இராது என்பார்கள். ஆனால் சாத்தனூர்க் குளிர் இ. தே. ரா. மேஜருக்கு - குளிர் நாட்களில் குளிர் தேசங்களில் பழகி விட்டவனுக்கு அலக்ஷ்யமாக இருந்ததுபோல உள்ளூர்க் கொசுவுக்கும் அலக்ஷ்யமாகத்தான் இருந்ததுபோலும்.

ஜன்னலே இல்லாத, கூண்டுபோன்ற மாடியில் படுத்திருந்தவன், போர்வையை உதறிவிட்டு, சட்டையை மாட்டிக் கொண்டு எழுந்தான். மாடியிலே விளக்கு இல்லை. புதிய இடமாதலால் தட்டுத் தடுமாறிக் கொண்டுதான் படியை எட்ட வேண்டியிருந்தது.

பக்கத்திலே படுத்திருந்த மாமா, கிழவர், லேசாக அரைக் கண் மூடியபடியேதான் தூங்கினார் போலும்! "என்ன கிட்டா? அதுக்குள்ளே எழுந்திருந்துட்டே! மணி அஞ்சுதானே இருக்கும்?" என்றார்.

தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான் கிட்டா என்கிற மேஜர் மூர்த்தி. மணி சரியாக ஐந்தடிக்க நாலு நிமிஷம் இருந்தது. கிழவருடைய அரை விழிப்புத் தூக்கமும் மணிக் கணக்குக் கூர்மையும் அவனுக்கு வியப்பளிப்பதாக இருந்தன; யுத்த அரங்கில் பல அதிகாலைச் சம்பவங்களை ஞாபக மூட்டிற்று அது அவனுக்கு.

"ஐந்து மணிக்கு எளுந்திருச்சிப் பழக்கம்" என்றான் மேஜர் மூர்த்தி.

"எளுந்திருச்சு" என்று சொன்ன பிறகுதான் அந்த மாதிரி அதை உச்சரித்தது தன் மாமாவுக்குப் பிடிக்காது என்கிற ஞாபகம் வந்தது அவனுக்கு. முந்திய நாள் வந்ததுமே, மாமாவினுடைய பெண்ணினுடைய பெண், எட்டு வயதுச் சிறுமி கேட்டுவிட்டாள், "அத்தான் மாமா, ஏன் தாத்தா, மோட்டுத் தெரு முதலியாரெல்லாம் பேசற மாதிரி பேசறா?" என்று.

"நான் முதலியார்தான்" என்றான் மேஜர் மூர்த்தி சிரித்துக் கொண்டே.

"பொய் சொல்றே நீ! முதலியாராயிருந்தா, தாத்தா ஒண்ணும் உன்னோட ஒக்காந்துண்டு சாப்பிடமாட்டா!" என்றாள் சிறுமி.

இதற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை மேஜர் மூர்த்திக்கு.

மாமிகூடச் சொன்னாள்: "நன்னாருக்கு! பிராம்மணா பேச்சுக் கூடன்னா மறந்து போச்சு! இப்படியும் ஒரு புள்ளையும் உண்டோடா?" என்று மோவாய்க் கட்டையில் கை வைத்தாள்.

பெரிய தவறு செய்துவிட்டுத் திருத்திக்கொள்ள விரும்புகிறவன் மாதிரி, "கத்துக்கறேன் மாமி" என்று தாழ்மையாகப் பதில் சொன்னான் மூர்த்தி.

சாத்தனூர் - ஸ்டேஷனில் இறங்கிய உடனே மேஜர் மூர்த்திக்குப் பல விஷயங்கள் புரியத் தொடங்கிவிட்டன. அவன் வெளியூர் எல்லாம் சுற்றியிருக்கலாம். எவ்வளவோ அற்புத விஷயங்கள் எல்லாம் தெரிந்து கொண்டிருக்கலாம். எவ்வளவோ அசாத்தியமான காரியங்களைச் சாதித்திருக்கலாம். ஆனால் அவன் தன் ஊரைப்பற்றியே, தன் ஊர்க்காரர்களைப் பற்றியே அறிந்துகொள்ள வேண்டியிருந்தது; நிறையவே இருந்தது.

முதல் தவறு அவன் செய்தது - காக்கி உடையை அவன் அணிந்து வந்ததுதான். அவர்களுடைய அநுபவம் என்னவோ - சாத்தனூர் கிராமவாசிகள் எல்லோரும் அவனை ஒரு தரம் பார்த்ததும்,

அவர்கள் முகத்திலே அவநம்பிக்கையும் சந்தேகமும் படர்ந்தன. இரண்டாந்தரம் யாரும் அவனை ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஒரு முகமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விட்டார்கள். பெட்டி படுக்கையைக் கடைசியாகத் தூக்க முன் வந்தவன், 'சண்டையிலே போய்ச் சம்பாதிச்சவன் பணத்திலே பாதியாவது பறிக்க வேணும்' என்கிற ஞாபகத்திலேதான் கூலி கேட்பது போல் இருந்தது. அக்கிரஹாரத்துக்கு என்றதும் இந்தக் கூலி இன்னும் கூடிற்று - தூரம் உண்மையிலேயே அதிகம் என்பதனாலோ, அல்லது பிரசித்திபெற்ற, பத்திரிகையில் அமர்க்களப்பட்ட, வகுப்புவாத உணர்ச்சியினாலோ!

வீடு போகிற வழியிலே வேண்டுமென்றே தன்னை மிகவும் கரடு முரடான பாதையிலே அழைத்துச் செல்லுகிறான் அந்தக் கூலி என்று தோன்றியது மேஜர் மூர்த்திக்கு. முனனெல்லாம் என்றால் இப்படி நினைப்பது தாழ்வு மனப்பான்மை என்று ஒதுக்கியிருப்பான். ஆனால் இப்பொழுது தான் அப்படி நினைப்பது சரி என்றும், அந்த நாட்டுப்புறத்தான் அப்படிச் செய்வது சரி என்றுமே அவனுக்குத் தோன்றிற்று. அரிசிலாற்றையும், காவேரியையும் கடப்பதற்குமுன் - அவன் பிராணனே போய்விடவில்லை; துணி எல்லாம் நனைந்துவிட்டது. எதிர்பாராமல் குறுக்கிட்ட ஆறுகளிலே ஜலம் எவ்வளவு இருக்கும் என்றுகூடச் சொல்லாமல், கூலி இறங்கிவிட்டான். மேஜர் மூர்த்தியும் உடன் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லாது போய் விட்டது. கூலி வாங்குகிறபோதுகூட மேஜர் மூர்த்தியின் முகத்தை நிமிர்ந்து பார்க்க நம்பிக்கை வரவில்லை அந்த நாட்டுப் புறத்தானுக்கு. பேசியதற்கு அதிகமாக இரண்டணா கொடுத்தான் மேஜர் மூர்த்தி. அதற்கு நன்றிகூடச் சொல்லாமல் சாமான்களைத் திண்ணையிலே போட்டுவிட்டுப் போய் விட்டான்.

மூர்த்தியின் மாமா வீட்டிலே அவனை வரவேற்கத் தயாராக நின்றவர்களையும் பார்க்க முதலில் அவனுக்குச் சங்கோஜமாக இருந்தது. முதலில் அவர்களில் யாராலும் அவனை அடையாளங் கண்டு கொள்ள இயலவில்லை. அவ்வளவு சீக்கிரமே தன் அழைப்புப் பலித்துவிடும் என்று அவன் மாமா சிவராமையரே எதிர்பார்க்கவில்லை. அவன் மாமி பாகீரதியம்மாள்தான் முதலில் அவனைத் தெரிந்து கொண்டாள். யாரோ அன்னியன் எதிரில் முதல் தடவை யாரும் பேசுகிற மாதிரி முதலில் கூச்சப்பட்டுக் கொண்டு, "கிட்டா மாதிரியிருக்கு - கேளுங் கோன்னா" என்று தன் கணவனைத் தூண்டினாள். மருமகன் கிட்டாதான் என்று நிச்சயமானவுடன், "வாடாப்பா வா" என்று வாய் நிறைய வரவேற்றாள். உடனேயே தன் மாமி தன் உள்ளத்தில் இடம் பெற்று விட்டதை அறிந்து கொண்டான்

மேஜர் மூர்த்தி. இந்த வார்த்தை உள்ளம் நிறையாத போலி இடங்களில் வரமுடியாதென்பது அவன் உணர்ந்து கொண்ட உண்மை.

அவன் மாமாவுக்கு வயது அறுபதுக்குக் குறையாது; மாமிக்கு வயது ஐம்பத்தைந்தாவது இருக்கும். அவர்கள் இருவருந்தான் அந்த வீட்டிலே பெரியவர்கள். அவர்களுக்கும் பிள்ளை கிடையாது என்கிற விஷயம் அடிநாட்களிலேயே கிருஷ்ணமூர்த்தி அறிந்திருந்த விஷயந் தான். ஆனால் மறந்துவிட்டது; அவனுக்கு.

"உங்க பிள்ளை?" என்று விசாரித்தான்.

ஐம்பத்தைந்து வயதிலும் மனத்திலிருந்த குறை தொனிச்சு அவன் மாமி பதிலளித்தாள்: "நீ தான் எங்க பிள்ளை!" என்றாள்.

இதற்குள் சாமான்களும் மேஜர் மூர்த்தியும் உள் கூடத்தை அடைந்துவிட்டார்கள். மாமி உள்ளே போய்க் கால் மணி நேரத்தில் 'அயனான' காபி தயாரித்து வந்தாள்.

"வேண்டாமே, சாப்பிட வேண்டியதுதானே!" என்று மேஜர் மூர்த்தி சொன்னதற்குப் பதில், அவன் மாமா சொன்னார். "அவ காபி நன்னாப் போடுவா. அதுக்கு மரியாதை செய்யறதுபோல நீ இதைச் சாப்பிட்டுத்தான் ஆகணும். தப்பிச்சுக்க முடியாது!" என்றார். தங்கள் குடும்ப வாழ்க்கையின் உயர்வை எடுத்துச் சொல்வதுபோல மாமா, 'அவ' தயாரித்த காபியின் நயத்தைப்பற்றிக் கூறினார். மருமகனுக்குக் காபியும் பேச்சும் திருப்தியாக இருந்தன. மாமிக்கும் திருப்தியாகத்தான் இருந்தது!

அவன் உள்ளம் அன்று சாதாரணமாக நெகிழ்ந்ததற்கு அவனுடைய பலஹீனமே காரணம் என்று சொல்பவர்கள் இருக்கலாம் - நூதனமான அநுபவங்களிலே ஆசை கொண்டவன் அவன்; இது மிகவும் நூதனமான அநுபவமாக அமைந்தது என்பதுதான் காரணம் என்று சொல்பவர்கள் இருக்கலாம் - தமிழ்க் குடும்பத்தையோ அதன் தரத்தையோ, அது காரணமான அன்பையோ உறவுப் பிடிணப்பையோ அறியாதவன் அவன். புதிசாக அறிய நேரிட்டது, அதுதான் காரணம் என்று சொல்பவர்கள் இருக்கலாம். அது எப்படியோ, அன்றிரவு ஓர் அதிசய அநுபவமாகவே அவன் உள்ளத்தில், மறுநாள் விடியற்காலையில், ஞாபகம் வந்தது.

சாவையும் ஏழைமையையும் நெருங்கி அறிந்தவன் அவன். வெட்டு வதும், கொல்லுவதும் ஆறு வருஷங்களில் அவன் ரத்தத்தில் ஊறி அவனுக்குச் சுபாவமாகி விட்ட விஷயங்கள். இது மாறாத ஒரு இயற்கை நியதி என்றுதான் அவன் எண்ணியிருந்தான். அவன்

விடியற்காலையில் சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தில், தன் மாமா வீட்டில் கண் விழித்தெழுந்தபோது இது இயற்கை நியதியல்ல; இயற்கைக்கு விரோதமாக ஆடால்ப் ஹிட்லர் முயன்று சாதித்துவிட்ட ஒரு காரியம் என்பது புலன் ஆகத் தொடங்கியது. 'ஹிட்லரை மெச்சுவதா? அல்லது தன் பலஹீனத்தை நொந்துகொள்வதா?' என்பது கடினமான பிரச்னைதான். அது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்ததுதான்!

யுத்தம் இந்தியாவை நெருங்கித் தொடவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பொருளாதார நெருக்கடி இருந்தது. அன்னிய ஆட்சியின் வலுக்கட்டாய அமல்கள் இருந்தன. எல்லைகளை எட்டி விடும்போல யுத்தம் சில சமயம் பயமுறுத்தியது. மற்றப்படி நேரடியாக யுத்தம் இந்தியாவிலே கிராமத்திற்கு இரண்டொரு பலிகளுக்குமேல் வாங்கவில்லை. ஐரோப்பாவிலே, யுத்த காலத்திலே, புனிதமான செம்மண் பூமி ரத்த ஆறாக ஓடியதைக் கண்களால் கண்டவன் மேஜர் மூர்த்தி, இந்தக் குருதி வெள்ளத் தினால் பூமியின் புனிதத்தன்மையோ, வளமோ அதிகரித்து விட்டதாகச் சரித்திரம் சொல்லாது - நிச்சயமாகச் சொல்லாது.

எத்தனையோ கிராமங்கள், குடும்பங்கள் அழிந்தன.

எதற்காக என்று மனிதனால் கேட்காமல் இருக்க முடியவில்லை தான்!

இந்தக் கேள்விக்கு அவரவர்கள் இஷ்டப்படி பதில் சொல்ல வேண்டுமே தவிர, உலகெங்கும் ஒரே மாதிரியான பதில் சொல்ல முடியாது. வென்றவர்கள் ஒன்று சொல்வார்கள். தோல்வியுற்றவர்கள் வேறு சொல்வார்கள்.

இ.தே.ரா.மேஜர் மூர்த்தி சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரம் வந்து சேரும் வரையில் யுத்தம் பற்றித் தீர்மானமான ஓர் அபிப்பிராயம் ஏ வத்திருந்தான் என்பது உண்மை தான். ஆனால் அந்த ஒரு இரவில், ஐந்து நாழிகை நேரம், மாமா, மாமி, அவர்களுடைய பேரன் பேத்திகள் இவர்களுடன் ஒன்றியிருந்த நேரத்தில், வாழ்க்கையிலே வேறு லக்ஷ்யங்கள், வேறு நியதிகள், வேறு முடிவுகள் இருக்கலாம் என்று தெரிய வந்தது.

புது அநுபவமும், இப்புது அநுபவத்தால் ஏற்பட்ட புதுச் சிந்தனைகளும்தான் அன்றிரவு அவனைச் சரியாகத் தூங்கவிடவில்லை போலும்.

"அத்தான் மாமா, அத்தான் மாமா" என்று முதல் நாழிகைக்

கூச்சத்திற்குப் பிறகு அந்தக் குழந்தைகள் எல்லாம் அவன் மடியில விழுந்தன. ஒன்றிரண்டு தைரியமாகவே, "எனக்கு என்ன மாமா கொண்டு வந்திருக்கே?" என்றும் கேட்டன. அந்தக் குழந்தைகளுக்கு ஒன்றும் கொண்டு வராதது தன்மேல் எவ்வளவு பிசகு என்று அப்பொழுதுதான் அவன் உணர்ந்தான். ஏழெட்டுக் குழந்தைகள் ஏழெட்டு வயசுக்கு உட்பட்டவை. அவற்றின் பெயரை எல்லாம் ஒவ்வொன்றாக விசாரித்து மனத்தில் இருத்தி வைத்துக் கொள்ள முயன்றான். பத்து வயதுப் பெண் ஒன்று. பன்னிரண்டு வயதுப் பெண் ஒன்று. இன்னும் பெரிய பெண் ஒன்று - ஆக மூன்று பெரிய பெண்கள் இருந்தன. உலகெல்லாம் சுற்றித் தான் பார்த்திருந்த பெண்களை விட இந்தப் பெண்கள் மூன்றும் அழகாக இருப்பதாக அவன் மனத்தில் பட்டது.

அந்த மூன்று பெண்களும் மற்றக் குழந்தைகளுடன் சேராமல் தனித்து நின்றதை அவன் மாமா, மாமியே பரிஹாசம் செய்தார்கள். "ஒத்தி தான் அத்தானைக் கல்யாணம் பண்ணிக்கலாம் - யார்னு தீர்மானம் பண்ணிண்டு மத்த ரெண்டுபேரும் அத்தானோடே சகஜமாப் பேசலாமே!" என்றார் மாமா.

"போ தாத்தா" என்றாள் மூவரில் மூத்தவள். மூவரில் இளையவள் குறும்புச் சிரிப்புடன், "அத்தானுக்கு இன்னும் கல்யாணம் ஆகலேன்னு எப்படித் தாத்தா நீ தீர்மானம் பண்ணினே? ஆயிருந்தாலும் ஆயிருக்கும்" என்றாள்.

மேஜர் மூர்த்தி சிரித்தான். "ஆகல்லேடி யம்மா ஆகல்லை. உன் பேரைச் சொல்லு - கல்யாணப் பத்திரிகை அடிக்க நாளைக்கே கொடுத்துடறேன்."

அத்தான் மாமா மற்றபடி எப்படியானாலும் பேச்சிலே தோல்வியை ஒப்புக்கொள்ள மாட்டான் என்று தோன்றிற்று போலும் அந்தப் பெண்ணுக்கு. மறுசமயம் கிடைத்தால் பார்க்கலாம் என்று அச்சமயம் பேசா திருந்துவிட்டாள்.

மற்றது எல்லாம் எப்படியானாலும் இந்தக் குடும்பம் என்கிற பிணைப்பு மட்டும் மனிதன் தப்பமுடியாத ஒரு உண்மை என்கிற முடிவுக்கு வந்தான் மேஜர் மூர்த்தி. ஆதிகாலத்திலிருந்து இன்றுவரை இதைக் காப்பாற்ற மனிதன் பாடுபட்டிருக்கிறான். சண்டையிட்டிருக்கிறான்.

ஆனால் அதற்கு ஆதாரம் அன்பு-

ஆம், அன்புதான்!



NB

# 4

தட்டுத் தடுமாறிக்கொண்டே மாடிப்படியிறங்கிக் கீழே வந்தான் மேஜர் மூர்த்தி. குழந்தைகள் எல்லோரும் கூடத்தில் வரிசையாகக் கொசு வலை கட்டிக்கொண்டு படுத்திருந்தார்கள். சிறிய 'பெட்ரூம்' விளக்கு ஒன்று சுவரில் ஆணியில் மாட்டப்பட்டிருந்தது - மங்கலான, ஆனால் போதிய வெளிச்சம் தந்துகொண்டிருந்தது. கொசு வலையில்லாத ஒரே ஒரு படுக்கை மட்டும் இருந்தது. அதில் மாமிதான் படுத்திருக்க வேண்டும் என்றும், அவள் அதற்குள்ளாகவே எழுந்திருந்து விட்டாள் என்றும் ஊகித்துக் கொண்டான் கிருஷ்ணமூர்த்தி. மாமியினுடைய வாழ்க்கை, பேரன் பேத்திகளால் சூழப்பட்டு, குடும்பக் கவலைகளில் முழுவதும் ஆழ்ந்து, அவள் நடத்திய வாழ்க்கை பரிபூரணமான வாழ்க்கையாகப் பட்டது கிருஷ்ணமூர்த்திக்கு - இந்த மாதிரியான பூரணத்வமும், பக்குவமும் பெற்ற வாழ்க்கை மேல் நாடுகளில் அபூர்வம்தான்- கிழக்கேயும் இந்தியாவிலும், சீனாவிலும்தான் சாத்தியமானது என்று சொல்ல வேண்டும்.

கையில் சிம்னி விளக்குடன் இரண்டாங்கட்டிலிருந்து உள்ளே வந்த அவன் மாமி கேட்டாள்: "என்ன கிட்டா, அதுக்குள்ளேயா எழுந்துட்டே?" என்று.

"இப்படிக் காலையிலே எழுந்துதான் பழக்கம்."

"வெந்நீர் அடுப்பை மூட்டிவிட்டு வந்தேன். பாளையமெல்லாம் விடிய காலம்பற எழுந்து குளிக்க ஆரம்பிச்சாத்தானே பத்துமணிக்கு வெந்நீர் அறை காலியாகும்?" என்றாள் மாமி சிரித்துக்கொண்டு.

"ஏன் மாமி, குழந்தைகளை அப்படிச் சொல்றே" என்றான் மூர்த்தி, குழந்தைகளுக்காகப் பரிந்துகொண்டு.

"பரிஞ்சு பேசறதைப் பாரு, புதுசா வந்தவன்" என்றாள் மாமி கேலியாக. பிறகு சொன்னாள்: "ஒரு நாள் பழகிப் பாரு தெரியும். பாம்பும் பல்லியுமா பிடுங்கத் தொடங்கிடாதுகளா?"

"எனக்கு என்னமோ, ஏன் இத்தனை நாளா இங்கே வராம இருந்தோம்னு இருக்கு, போ, மாமி" என்றான் மூர்த்தி.

"வந்தயே, கடைசியிலேயாவது - கொஞ்சநாள் இரு... பார்க்கலாம். நல்ல பொண்ணாப் பார்த்து."

"வேண்டாம் மாமி. இவ்வளவு அதி காலம்பர வேளையிலே

அது பத்தி வேண்டாம். வெயில் ஏறட்டும். மத்தியானமா பேசுவோம்" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

வாசற் கதவைத் திறந்துகொண்டு, வெளியே வந்தான். ஓர் இரவு பூராவும் சிகரெட்டு பிடிக்காமலே இருந்துவிட்டது இதுதான் முதல் தடவை. தெரு ஓரமாகப் போய் நின்றுகொண்டு, திண்ணைத் தூணில் சாய்ந்தபடியே, சிகரெட் பெட்டியையும் தீப்பெட்டியையும் சட்டைப்பையில் துழாவி எடுத்தான். சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டே தெருவைக் கிழக்குமேற்காக, இரண்டு தடவை மேலும் கீழும் பார்த்தான். வலது ஓரமாகத் தள்ளியிருந்த ஒரு வீட்டின் திண்ணையில் இருந்து ஒரு பெண்ணுருவம் வீட்டிற்குள்ளே நகருவது அவன் கண்ணில் பட்டது. பட்டணத்திலே யானால் அந்தப் பெண்ணைப் பற்றி இரண்டு நிமிஷம் ஏதாவது ஏதாவது, என்ன? ஒரு தினுசான - சிந்தனைகளுக்கு இடங்கொடுத்திருப்பான். சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தில் இருந்து கொண்டு அப்படி நினைப்பது தவறு என்று அவனுக்குத் தோன்றியது.

புகையை உறிஞ்சிக்கொண்டே கிழக்கே நோக்கினான். சாலை வானம் வெளிறிட்டுக் கிடந்தது. வானத்து வெளியிலே பரந்து நின்ற மூங்கிற் புதர் அழகாகக் காட்சியளித்தது. லேசான காற்றிலே அது அசைந் தாடியது, ஏதோ ஒரு இன்ப உணர்ச்சியை ஊட்டியது அவனுக்கு.. உலகம் என்கிற சிலுவையிலே மாலை நேரத்திலே அறையப்பட்டு, காலை வேளை யில் உயிர் நீத்துக்கொண்டிருக்கும் ஏசு பகவானாகக் கண்டான் அவன், அந்த மூங்கிற்புதரை.

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து சிந்திப்பதற்கும் பார்ப்பதற்கும் மகத்தான விஷயம் தான். பல பெரிய பெரிய கல் தச்சர்கள் கலைஞர்களின் கைவரிசையை ஐரோப்பாவிலே பார்த்திருந்தான் மேஜர் மூர்த்தி. தெருக்கோடியிலிருந்து மூங்கிற் புதர்ச் சிலுவையிலிருந்து கண்களைத் திருப்பித் தெருவிற்குள் கொண்டு வர வெகு நேரம் பிடித்தது அவனுக்கு. எதுவும் பிரமாதமான சிந்தனையல்ல. சிந்தனையற்றிருப்பதே ஓரளவுக்குப் பிரமாதமான விஷயமாக இருந்தது இந்த நாட்களில்.

இந்த நாட்களில் என்று எண்ணும்போது பெருமூச்சு விட்டான் மூர்த்தி. அந்த நாட்களில், இந்த நாட்களில் என்ற எண்ணம் அவனுக்கு ஒன்றும் அவ்வளவு வயதாகி விடவில்லை. யுத்தம் என்கிற மகா பெரிய, அவன் உள்ளத்தில் அடங்காத ஓர் அனுபவத்தைத் தவிர அவனுக்கு வேறு என்ன இருந்தது? அதுவும் அவனாகத் தேடிக்

கொண்டதல்ல - தானாகத்தான் வாய்த்தது. எப்படியோ வாய்த்தது. அந்த அனுபவத்திலிருந்து எவ்வளவு லாபம் அடைய முடியுமோ அவ்வளவையும் அடைந்து விட வேண்டும் என்று விரும்பினான் அவன். பொருள் பற்றிய வரையில் லாபம் எதுவும் இருக்குமென்று தோன்றவில்லை. ஆத்மீகமான ஒரு லாபம் ஏற்படுத்திக்கொண்டு விட்டால் போதும்.

அந்த யுத்தம் ஆத்மீக அனுபவமாக அமையவில்லை என்று அவனே ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது. ஆனால் அவன் மாமா வீட்டுக்கு வந்தது அமைந்து விடும் போல இருந்தது - இந்தக் குடும்பம், இந்த வீடு, இந்தத் தெரு -

இந்தத் தெருவிலே உயிர்வாழ்வது என்பது நடக்காத காரியமா என்று தன்னையே கேட்டுக்கொண்டான் அவன். உயிர் வாழ்வதும் நடந்ததா இங்கே, உண்மையிலேயே உண்டா? அந்தச் சமயத்திலே, விடியற்காலை வேளையில், அவ்வளவு நிசப்தமாக, அவ்வளவு நிம்மதியாக, அவ்வளவு... உயிரற்ற பான்மையிலே இருந்தது தெரு.

அவன் மனத்தில் இந்த மாதிரி ஒரு சந்தேகம் எழுந்ததே தவறு என்று உணர்த்துவதற்கேபோல மேலண்டைப் பக்கத்து வீட்டிலே ஒரு குழந்தை வீரிட்டு அலறியது.

அந்த அலறலுக்காகக் காத்திருந்தது போல, தெரு விழித்துக் கொள்ளத் தொடங்கியது.

எங்கேயோ இதுகாறும் முடங்கிக் கொண்டு இருந்த நாய்கள் யாரோ அந்நியன் அத்துமீறிப் பிரவேசித்துவிட்டவனைக் கண்டு குரைப்பது போலக் குரலெடுத்துக் குரைக்கத் தொடங்கின.

வடக்கே தொலைவிலிருந்து கோழிகள், உதிக்கிற நாளுக்கு கட்டியங் கூறின.

வானத்திலே மேற்கேயிருந்து கிளம்பி நாலைந்து காகங்கள் சிற கடித்து வெளுத்துக்கொண்டிருந்த கீழ்வானம் நோக்கி 'காகா' வென்று இரைந்து கொண்டே பறந்தன.

அக்கா குருவி என்பார்களே, அது கூவிற்று. பஞ்சாங்கத்தின் படி ஐப்பசி மாசம் என்பதை அது அறியாது ஆற்றிலே விழுந்துபோன தன் அக்காளைக் கூவியழைக்க, அன்புப் பிச்சை வேண்ட, பஞ்சாங்கம் வேறு பார்க்க வேண்டுமா?

இவ்வளவு நேரம் மரக்கிளையிலே ஓய்ந்து பதுங்கியிருந்த

வாடைக் காற்று ஊதத் தொடங்கியது. வெளிறிட்ட கிழக்கு வானத்தைக் கண்டு பொறாமை கொண்டு மற்றத் திசைகளும் வெளிறிடத் தொடங்கின.

எதிர் வரிசை வீட்டுக் கூரை மேடுகள் ஒன்றுக்கொன்று ஒவ்வாத லட்சியக் கோடுகளாக வானத்தை முட்டின. வானம் விட்டுக் கொடுக்க வில்லை - வளைந்து கொடுத்தது.

எதிர் வீட்டுக் கூரை மேட்டிலே உட்கார்ந்து தனிக் குரல் எடுத்துப் பாடிய காகம் அச்சமயம் கருமை நிறம் பெற்றிருக்கவில்லை - கண்ணனைப் போல் நீலமாக இருந்தது என்று கவனித்தான் மேஜர் மூர்த்தி.

அடிவானத்திலே திடீர் என்று தோன்றுகிற மொட்டைப் பனை மரத்தைப்போல "காக்கைச் சிறகினிலே, நந்த லாலா" என்று கவி பாரதியாரின் அடி அவனுக்கு ஞாபகம் வந்தது. அது சிந்தனை வேரும் விட வில்லை - தளிரும் காட்டவில்லை. தனிச் சிந்தனையாக நின்றது. மேஜர் மூர்த்தி சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தில் ஒட்டாமல் தனியாக நின்றது போல அந்தச் சிந்தனையும் அவன் மனத்திலே நின்றது. எதனுடனும் ஒட்டாமல், வேர் விடாமல், தொடர் சிந்தனை எழுப்பாமல், எதிரொலி தராமல் நின்றது.

கையிலிருந்த சிகரெட்டு கையைச் சுட்டது. அதைத் தூக்கித் தெருவில் எறிந்துவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான் மேஜர் மூர்த்தி.

## 5

"யாரு? சிவராமனா?" என்று கேட்டுக் கொண்டே வந்த கிழவருக்கு உடனே பதில் அளிக்கவில்லை அவன். பதில் தேவையில்லை என்று எண்ணினானோ, அல்லது கிழவர் யார் என்று முதலில் தெரிந்து கொள்ளலாமே என்று காத்திருந்தானோ - அவனுக்கே தெரியாது.

கிழவருக்கு வயது அறுபதாவது இருக்கும். அவன் மாமாவுக்குச் சகபாடிபோலும்; அவர் எந்தத் திசையிலிருந்து வந்தார் என்று மூர்த்தி ஆரம்பத்தில் கவனிக்கவில்லை. நரை பரந்த தலையும், ஒரு மாதத்துத் தாடியும், மீசையுமாக, குழி விழுந்த மஞ்சள் வர்ணமான கண்களுடன், பார்ப்பதற்கு விகாரமாக இருக்க வேண்டியவர்

கம்பீரமாக இருந்தார். முகத்திலே தேஜஸ் என்பார்களே அது இருந்தது; மூக்கு எடுப்பாக, கம்பீர மாக இருந்தது. கன்னங்கள் குழிவிழுந்து உலர்ந்து போயிருந்தன. நெற்றியில் சுருக்கங்கள் எண்ணிக்கையற்றிருந்தன. முதுகுக் கூனவில்லை. நிமிர்ந்துதான் நடந்தார். கைகள் நீளம் நீளமாக, விரல்கள் நீண்டு, ஒவ்வொரு விரலும் சாட்டைபோலத் துடிதுடிப்புடன் இருந்தன. அரையிலே மல்வேஷ்டியைப் பஞ்சக் கச்சமாகக் கட்டியிருந்தார். பூணூலைத் தவிர மேலே ஒன்றுமில்லை.

"சிவராமனா?'' என்று கேட்டுக்கொண்டே நெருங்கி வந்தவரின் மங்கிய கண்களுக்கு, திண்ணையில் உட்கார்ந்திருந்தது, சிவராமையர் அல்ல என்பது உடனே தெரிந்து விட்டது. "யாரது? புதுசா இருக்கே?'' என்றார், கண்களுக்கு மேல் கைவிரல்களை வளைத்துக்கொண்டு.

"சிவராமையருடைய மருமான் நான். பட்டணத்திலிருந்து நேத்திக்கு ராத்திரி வந்தேன்'' என்றான் மேஜர் மூர்த்தி, திண்ணையைவிட்டுக் கீழே இறங்கி மரியாதையாக நின்று கொண்டு.

"சண்டையிலெல்லாம் அகப்பட்டுக் கொண்ட பையனா? மதுரத் தின் பிள்ளையா நீ? தெரியறது தெரியறது! மதுரத்தின் முக ஜாடைதான் உனக்கும்" என்றார் கிழவர். அவர் மங்கிய கிழக்கண்கள் எதிலும் எதையும் பார்த்திருக்கக்கூடிய சக்தி வாய்ந்தவை - மதுரத்தின் முகம் அவருக்கு மறந்து எவ்வளவு நாளாகிறதோ என்று எண்ணிய மூர்த்தி, "வாங்கோ, உக் காருங்கோ. மாமாகூட முழிச்சுண்டுட்டா - ஏந்திருந்து வந்துடுவா" என்றான்.

அவனுக்குக் கிராமத்துப் பழக்க வழக்கங்கள் இன்னும் தெரிய நியாயமில்லையே! கிழவர் ஏதோ காரணமாகத்தான் தன் மாமாவைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறார் என்று அவன் எண்ணினான்.

கிழவர் மேற்கே நாலாவது வீட்டுக்காரர். திண்ணையில் பாயைப் போட்டுக்கொண்டு இரவு பூராவும் வயதிற்குரிய சிந்தனைகளாலும், கொசு உபத்திரவத்தாலும் தூங்காமல் அவஸ்தைப்பட்டுவிட்டு கிழக்கே வெளுத்ததும், வம்பளக்க யார் அகப்படுவார்கள் என்று தன் வீட்டுத் திண்ணையிலே மேல் துண்டைப்போட்டு விட்டு, துண்டை மறந்து விட்டதையும் பொருட் படுத்தாமல் வந்துகொண்டு இருந்தார். சிவராமையருக்கு நன்றாகத் தெரியும். இந்த நச்சுவாய்க் கிழவரை, அவ்வளவு அதிகாலையில் அவருடன் பேச்சுக் கொடுத்து மாட்டிக் கொள்ள அவர் விரும்பமாட்டார் - அந்த நேரத்தில் விழித்துக் கொண்டால்கூடக்

கிழவருக்குப் பயந்து கொண்டு, ரேழி தாண்டி வரமாட்டார். கிழக்கே அவருக்கேற்ற சகாக்களுடன் ஒன்றிவிடும் வரையில் சிவராமையர் வெளி வந்திருக்க மாட்டார் என்பது நிச்சயம். கிழவர் நச்சுவாய்க் கிழவர். வாய் ஓயாமல் பேசிப் பேசியே நாற்பது வருஷங்களுக்கு முன்னரே தனது மனைவியைக் கரை ஏற்றிவிட்டவர். தாயில்லாத இரண்டு சிசுக்களை வைத்துக்கொண்டு சிரம ஜீவனம் செய்து வளர்த்துப் பெரியவர்களாக்கினார். அவருடைய மூத்த பெண் மங்களம் தகப்பனைப் போல - வம்புக்காரி. அவள் கல்யாணம் செய்து கொண்டு கணவனுடன் பக்கத்து ஊரில் நாலு வருஷங்கள் வாழ்ந்துவிட்டு இரண்டு ஆண் குழந்தைகளுடன் அறுத்துக் குளித்துவிட்டு வீடு திரும்பிவிட்டாள். கிழவருக்கு வீட்டிலே குடும்பம். அந்தப் பெண்ணும், அவளுடைய இரண்டாவது பிள்ளையும்தான். அவளுடைய மூத்தபிள்ளை பட்டணத்திலே ஒரு சுருட்டுக் கம்பெனியில் குமாஸ்தாவாக நாற்பது ஐம்பது சம்பாதித்துக் கொண்டிருந்தான். இரண்டாவது பிள்ளை அத்தியானம் பண்ணியிருப்பதாகவும் பெயர் - அவன் அத்தியானம் பண்ணியதைவிட அதிகமாகத் தெருவிலே அதிக் கிரமங்கள் செய்து கொண்டிருந்தான் - அயோக்கியத்தனங்கள் படித்துக் கொண்டிருந்தான் என்று தெருவார் சொல்லுவார்கள்.

கிழவருடைய பிள்ளை வடக்கே, லாகூரிலோ அதற்கும் அப்பாலோ எதோ பெரிய உத்யோகத்தில் இருந்தான். தகப்பனாருக்கென்று மாதம் மாதம் முதல் வாரத்தில் நூறு ரூபாய் மணியார்டரில் அனுப்பி விடுவான். அவ்வளவுதான் அவனுக்கும் அவன் தகப்பனுக்கும் இருந்த உறவு. ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு கூடப் பல வருஷங்கள் இருக்கும். கிழவர் இடையில் ஒரு தரம் சாகக் கிடந்தபொழுது - அக்கிழம் வருஷத்துக்கு ஒருதரம் சாகக் கிடப்பது வழக்கம் - லாகூர்ப் பையன் வர மறுத்துவிட்டான். வைதீக கர்மாக்களைச் சரிவர நடத்தி விடும்படியும் அதற்கான பணத்தைத் தான் அனுப்பி விடுகிறேன் என்றும் கடிதம் எழுதி விட்டு வராதிருந்து விட்டான். அக்கடிதத்துக்குப் பதில் வராததுபற்றி அவன் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. கிழவர் பிழைத்தெழுந்து கடிதம் போட்டார். அடுத்த மாதம் முதல் வாரம் மீண்டும் நூறு ரூபாய் மணி யார்டர் வந்தது- அவ்வளவுதான். அவர் சாகக் கிடந்தது பற்றியோ அவர் பிழைத்தெழுந்ததுபற்றியோ அவன் எவ்வித உணர்ச்சியும் காட்டிக்கொள்ளவில்லை.

இது கிழவருடைய மனசை எவ்விதத்தில் பாதித்தது என்பது தெருவில் யாருக்கும் தெரியாது. அதற்கு உண்மைக் காரணம், அது

எவ்விதத்திலும் அவரைப் பாதிக்கவில்லை என்பதுதான். பிள்ளையிடம் அவருக்குப் பிடிப்புக் கிடையாது. அடுத்த தடவை அவர் சாகக் கிடக்கும்போது அவனுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்றே அவர் சொல்லி விட்டார். மணியார்டர் மாசா மாசம் வந்து கையெழுத்து ஆகிப் போவதி லிருந்துதான் பையன் தன் தகப்பனார் உயிருடனிருக்கிறாரா இறந்து விட்டாரா என்று தெரிந்து கொள்ள வேண்டும். மணியார்டர் என்றாவது பட்டுவாடா ஆகாமல் திரும்பிப் போய் விட்டதானால் தகப்பனார் இறந்து விட்டார் என்று பையன் அநுமானித்துக்கொண்டு ஒரு முழுக்குப் போட்டாலும் போடலாம். அது கூட நிச்சயமில்லை. அவன் முழுக்குப் போடுவ தும் போடாததும் லாகூரில் அது குளிர்காலமா, கோடைக் காலமா என்பதைத் பொறுத்துத்தான் இருக்கும்!

தகப்பன் பிள்ளைக்கு இடையே இருந்த இந்த உறவு தெரு வாருக்கு வெகு நாளாகவே ஆச்சரியமாகத்தான் இருந்து வந்தது. ஆனால் அமானுஷ்யமான இந்த உறவைப் பற்றி அவர்கள் ஆச்சரியப் படுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

கிழவனாரைத் தெருவிலே யாருக்கும் பிடிக்காது என்பதற்கு அவர் சள்ளுச் சள்ளு என்று வாய் ஓயாமல், எதிரே நிற்பவர் மேலெல்லாம் எச்சில் தெரிக்கப் பேசிக்கொண்டிருந்தது மட்டும்தான் காரணம் என்று சொல்ல முடியாது. கிழவருக்கு அக்கிரஹாரத்தில் வீடிருந்தது - ஏதோ சொல்பமாக நிலபுலன்கள் இருந்தன. மாசா மாசம் தவறாமல் பிள்ளை அனுப்பிய நூறு ரூபாய் இருந்தது. அவர் சௌகரியமாக இருக்கலாம். அப்படி இருப்பதில்லை அவர். பொய்ச் சாட்சி சொல்ல யார் கூப்பிட்டாலும் அணாவுக்கு நாலு பொய் ஜோடித்து ஆயிரம் சத்தியம் செய்யத் தயாராக இருந்தார் அவர். கும்பகோணம் கோர்ட்டிலே ஓயாமல் வேலை இருக்கும் அவருக்கு. அவர் குடியிருப்பது சப் ரிஜிஸ்திரார் கோர்ட்டிலே தான். எந்தக் குடும்பத்தில் எந்தக் காரியம் நடக்கிறது? அது எவ்வளவு சீக்கிரத்தில், தனக்கு (ஒரு காசு) சாதகமாக வாய்க்கப் போகிறது என்று கழுகுப் பசியுடன் காத்திருப்பார். இத்தனையும் போதாதென்று யாராவது கடன்கேட்டு வந்தால் இல்லையென்று சொல்லாமல் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டு, நாலு வட்டிக்குக் கடன் கொடுப்பார். இது விஷயத்தில் முக்கியமாக அவரிடம் அவசரத்தில் கடன் வாங்குகிறவர்களைத்தான் குறை சொல்லலாமே ஒழிய அவரைக் குறை சொல்வதற்கில்லை. ஆனால் அவரை வெறுப்புக்கு ஆளாக்கிய காரணங்களிலே இது முக்கியமானது ஒன்று.

இவ்வளவும் மேஜர் மூர்த்திக்குத் தெரியாதது தான். ஆனால் அவர் அண்மையில் வந்து அவன் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "இங்கே என்ன சுருட்டு வாசனை வீசுறதே" என்றதுமே ஓரளவு அவனுக்கு அவரிடம் வெறுப்பு ஏற்பட்டு விட்டது.

"ஆமாம் நான்தான் சிகரெட் பிடித்தேன்" என்றான் மேஜர் மூர்த்தி.

தலையில் இரண்டு தரம் போட்டுக் கொண்டார் கிழவர். "பிராமணனாகப் பொறந்துட்டு... ஐயோ! என்ன பண்றது? காலம் கலிகாலம்!" என்று மீண்டும் இரண்டுதரம் தலையில் போட்டுக் கொண்டார்.

நல்ல வேளையாக மேஜர் மூர்த்தி பதில் சொல்லவில்லை. பதில் சொல்லியிருந்தானனால் அது அவனை - அவரை எவ்வளவு தூரம் கொண்டு போய் விட்டிருக்குமோ?

அச்சமயம் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு, கையில் மூங்கில் கழி பிடித்துக்கொண்டு மேற்கு நோக்கி நடந்து கொண்டிருந்த ஒருவரைக் கிழவர் பார்த்துவிட்டார். பதற்றமாக எழுந்து, வயசுக் கொவ்வாத வேக நடை நடந்து, "என்ன, சீனுவாச ஐயர்வாள், கேட்டேளோ இந்த அக்கிரமத்தை, அக்கிரஹாரத்திலே—" என்று ஏதோ சொல்லிக் கொண்டே அவரைப் பின் தொடர்ந்தார்.

அவர் மேலே என்ன சொன்னார் என்பது மூர்த்தியின் காதில் விழவில்லை. அச்சமயம் அவன் மாமி, "கிட்டா! பல்லைத் தேய்... காபி தயாராயிடும் நீ பல் தேச்சுட்டு வரச்சே" என்று கூறிய படி வாசல் பக்கம் வந்தாள்.

அவன் மாமி வருவதற்கும், சாத்தனூர் கோயில் மணி உஷக் கால பூஜைக்காக ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது. ஐரோப்பாவிலே பிரமாதமாகச் சொன்ன மாதாகோவில் மணிகள் பல ஒலிப்பதை ஞாபகம் மூட்டியது மேஜர் மூர்த்திக்கு சாத்தனூர் கோயில் மணி.

மாமியைக் கேட்டான்; "இந்த ஊரிலே சிவன் கோயிலா விஷ்ணு கோயிலா?"

ஒரு நிமிஷம் இதென்ன பைத்தியக்காரக் கேள்வி என்று எண்ணியவள்போல அவன் மாமி அவனை ஒரு நிமிஷம் நிமிர்ந்து பார்த்தாள். பிறகு அவன் கேள்வி நியாயமானதுதான் என்ற முடிவுக்கு வந்தவள்போல, "சிவன் கோயில்தான்" என்றாள். பிறகு, "இந்த ஊர் சுப்பிரமணிய சுவாமிக்கு சக்தி அதிகம்" என்றாள்.

எந்த மாதிரியான சக்தியைப்பற்றித் தன் மாமி பேசினாள் என்பது மேஜர் மூர்த்திக்குத் தெரியாது. உள்ளூர் சாமியின் சக்தியை அறிந்து கொள்ள அவனுக்கு அது வரையில் தான் சந்தர்ப்பம் இருந்ததில்லையே!

## 6

கிழக்கு மேற்காக இருந்த தெருவிலே சூரிய வெளிச்சமும் நீண்ட நிழல்களும் தோன்றத் தொடங்கிவிட்டன.

தெருக்கோடி மூங்கிற் புதர் இபளீபாது ஏசுவாகவோ, நிழலுருவாகவோ காட்சி தரவில்லை - மூங்கிற் புதராகவே காட்சியளித்தது. சிறு சிறு இலைகளும், கோணலும், மாணலுமாக இருந்த முள்களும், உலர்ந்து பழுப்பேறிய பகுதியும், பசுமை தாங்கிய பகுதியுமாகக் காட்சி அளித்தது.

மூங்கிற் புதரைப் பார்த்துவிட்டு ஏசுவை எண்ணி இரண்டு நிமிஷம் தான் பிரமித்தது மேஜர் மூர்த்திக்கு ஞாபகம் வந்தது.

பழுதையும், பாம்பும் என்று அவன் படித்திருந்தான். மூங்கிற் புதருக்கும், ஏசு கிறிஸ்துவுக்கும் முடிச்சுப் போட முடியும் என்று அவன் அதற்குமுன் எண்ணியதில்லை.

காலை இளஞ் சூரியனின் வெளிச்சத்திலே மூங்கிற்புதர் மூங்கிற் புதராகவே காட்சி அளித்தமாதிரி தினத்தில் ஒரு நாழிகை, ஒருவேளை, ஒரு பொழுது மனிதர்கள் தாங்கள் உண்மை சொரூபத்துடன் காட்சி யளிப்பது என்று ஏற்பட்டு விட்டால் உலகமே மாறிவிடும் என்று தோன்றிற்று அவனுக்கு.

சங்கராசாரியார் சொன்னதுபோல உலகம் வெறும் மாயை அல்ல. ஒவ்வொரு விநாடியும்; ஒவ்வொரு விதமான ஆனால் அவ்விநாடிக்கு உண்மையான வர்ணப்போர்வை போர்த்திக்கொண்டு காட்சியளித்தது உலகம். சென்றுபோன விநாடியை எண்ணி, இவ்விநாடியைப் பொய் என்று கொண்டு விடுபவர்கள் செய்வது மிகவும் தவறான காரியம். உலகம் பொய்யென்ற தோற்றம்தான், மகத்தான பொய். அதை மீறி எழுந்து விடுகிற மனிதனுக்கு உலகம் எவ்வளவு உண்மையானது என்பது தெளி வாகவே தெரிந்து விடுகிறது.

உலகத்தின் ஒவ்வொரு விநாடியின் தோற்றமும்

உண்மையானதே! வேறு என்னவாக இருக்க முடியும்?

தெருவில் படர்ந்திருந்த தங்க நிற வெய்யிலும், நீண்ட நீல நிழல்களும் அடுத்த விநாடி மாறி விடுகின்றன என்பதில் அவை பொய்யாகி விடுமா?

அப்படியானால் மனிதன் என்கிற சிருஷ்டியுமே மகத்தான பொய்யாகி விடுமே என்று எண்ணினான் மேஜர் மூர்த்தி.

கண்ணுக்கெதிரேயே தென்னை மரத்து நிழல்கள் குறுகிக் கொண்டிருந்தன. ஆமாம் நேர் எதிர் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலே ஒரு பெண், வாசலில் தண்ணீர் தெளித்துவிட்டுக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். காலைக்கதிரவன் தெருவிலே புகுந்து வரைந்து கொண்டிருந்த சித்திரங்களைக் காட்டிலும் நித்தியமான ஒரு நாள் பூராவும் அழியாத சித்திரமாக இழைத்துக் கொண்டிருந்தாள் அப்பெண்.

நாலு நீளக் கோடுகளும் நாலு குறுக்குக் கோடுகளும் சேர்த்து இழுத்துவிட்டு அழகு நலம் சமைத்தாள் அவள். பிறகு அது தன் காலடியில் கிடக்க நிமிர்ந்து நின்று கிழக்கும் மேற்கும் பார்த்து விட்டு சாட்டை போலத் துவண்டு காலை நிழல் போல நீண்டு கருத்துக் கிடந்த பின்னல் சடையை ஒரு உலுக்கு உலுக்கி விட்டு மேஜர் மூர்த்தி நின்றிருந்த பக்கம் பார்த்தாள். மேஜர் மூர்த்தி முதலில் அவள் கண்ணில் படவில்லை. அவன் மாமி தான் பட்டாள்; "என்ன மாமி! அதுக்குள்ளே காபி" என்று ஆரம்பித்தவள் அச்சமயம் மேஜர் மூர்த்தியைப் பார்த்துவிட்டாள் போலும். அன்னியன் எதிரில் இவ்வளவு பேசி விட்டோமே என்று சுபாவமாக ஒரு நாணம் குறுக்கிட்டது. சொல்ல வந்ததை முடிக்காமல் விறுக்கென்று உள்ளே திரும்பிப் போய்விட்டாள்.

மேஜர் மூர்த்தியின் முகபாவத்தை பார்த்த அவன் மாமி சிரித்தாள். "அன்னபூரணி - அந்தப் பெண்ணுக்குப் பேர் அன்னபூரணி - உன்னைப் பார்த்து வெட்கப்பட்டுக் கொண்டே உள்ளே போய் விட்டாளே என்று ஏமாந்துடாதே. உன்னைக் கல்யாணம் பண்ணிண்டால் உன் கண்ணிலே விரலைக் கொடுத்து ஆட்டிவிடுவாள்" என்றாள்.

"நல்லவேளை. முன்னதாகச் சொல்லிவிட்டாயே! நான் இந்த அன்னபூரணியைக் கல்யாணம் பண்ணிக்கவில்லை. பயமாயிருக்கு" என்றான் மேஜர் மூர்த்தி.

"அவளைக் கல்யாணம் பண்ணிக்க நீ கொடுத்து வெச்சிருக்கணும். ரொம்ப கெட்டிக்காரக் குட்டி. ஒரு குடும்பத்தைச் சர்வ சாதாரணமாக நடத்தி வச்சிடுவாள். சாமர்த்தியக்காரி. வெடுக் வெடுக்வென்று பேசும்; முழுசு முழுசாக காரியமும்... எங்கிட்ட உசிராயிருக்கும் அது. எனக்கு ஒரு பிள்ளை இருந்தால் அவளைத்தான் நான் என் மாட்டுப் பொண்ணா வச்சுப்பேன்" என்றாள் மாமி.

மாமிக்கு இந்தப் பிள்ளையில்லாக் குறை பெரிய குறைதான் என்று உணர்ந்திருந்த மூர்த்தி பேசாதிருந்தான். மாமி தொடர்ந்து சொன் னாள்; "அன்னபூரணி தங்கமானப் பொண்ணு. ஒரே பொண்ணு. அப்பா ரிடையர்டு தாசில்தார். பாடம் பாட்டு எல்லாம் நன்னாச் சொல்லி வச்சிருக்கார். ஐயாயிரம் ரூபாய் கையிலே பணம் கொடுப்பார். பதினாயிரம் வரையில் செலவு செய்வார். பொண்ணும் தங்கமான குணம்" என்றாள் மாமி மீண்டும்.

"அவளை எனக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பாயோ நீ!" என்று கூறிச் சிரித்தான் மேஜர் மூர்த்தி.

"யாருக்கு அதிருஷ்டம் இருக்கோ? இன்னிக்குக்கூட யாரோ அவளைப் பார்க்க வரப்போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தா. பார்க்க லக்ஷ்மியாட்டமா, நன்னாத்தான் இருக்காள். வரவனுக்கு அதிருஷ்டம் இருக் கணும். தை மாசத்துலே ஜாம் ஜாமுன்னு கல்யாணம் பண்ணிக் கொடுத்து விடுமா."

தன் மாமியினுடைய இவ்வளவு உத்ஸாகமும் கெட்டுவிடக் கூடாது என்று மூர்த்தி பேச்சுக்காக விசாரித்தான். "யார் அந்த தாசில்தார்?" என்று.

"நாராயணசாமி அய்யர்னு பேரு. எங்கெல்லாமோ இருந்திருக்கார். நிறைய சம்பாதிச்சிருக்கார். ஆசாரமா, இப்போ நியமநிஷ்டையா இருக்கார்; வைசுவதேவம் பண்ணாமே இப்போவெல்லாம் சாப்பிடறதேயில்லை என்றாள் மாமி.

"வைசுவதேவம்னா..."

"அது உனக்கு எங்கே தெரியப் போறது? மாமாவைக் கேட்டுக் தெரிஞ்சுக்கலாம், வா! காபி சாப்பிட நாழியாறது. குழந்தைகளெல்லாம் எழுந்து ஓடும்" என்று கூறிவிட்டு மாமி உள்ளே போய்விட்டாள்.

மீண்டும் ஒரு முறை தெருவைக் கிழக்கும் மேற்குமாகப்

பார்த்தான் மூர்த்தி. கிராமத்துத் தெருவாக இருந்தாலும் கொஞ்சம் கலகலப்பாகத் தான் இருந்தது. மேலண்டைக் கோடியிலிருந்து ஒரு பால்காரி ஒரு பசு மாட்டையும் ஒரு கன்றையும் ஓட்டிக்கொண்டு வந்து கொண்டு இருந்தாள். கன்றுக்குட்டி துள்ளித் துள்ளிக் குதித்துக்கொண்டே வந்தது. பால்காரி யின் கையிலிருந்த பால் சொம்பில் பட்டு சூரியனின் பிரகாசமே அதிகரிப்பதுபோல் இருந்தது.

தெரு வீடுகளின் முன்பக்கமெல்லாம் பெருக்கி மெழுகி கோல மிட்டாகியிருந்தது என்று கவனித்தான் மூர்த்தி - அல்லது இன்னும் சில வீடுகளில் கோலம் இட்டுக்கொண்டிருந்தார்கள். ஒன்றிரண்டு பணக்காரர்கள் வீட்டில் தவிர மற்ற வீடுகளிலெல்லாம் அவரவர்கள் வீட்டுப் பெண்களே கோலமிட்டார்கள்.

இதற்கு விலக்குத் தன் மாமி வீடுதான் என்று எண்ணினான் மூர்த்தி.

அவனைத் தாண்டிக்கொண்டு அதே சமயம் உள்ளே போன ஸ்திரீ, வீட்டு வேலைக்காரியாகத்தான் இருக்க வேண்டும். ஆமாம். அவள் உள்ளே தலையைக் காட்டிய உடனேயே அவன் மாமி அவளைக் கோபித்துக் கொண்டாள். "ஏண்டி, தில்லைக் கண்ணு- என்ன நாளுக்கு நாள் மோசமாகிண்டிருக்கு! தெருவிலே எல்லோர் வீட்டு வாசலிலேயும் சாணி தெளிச்சுக் கோலம் போட்டு அரை நாழியாறது; நீ இப்பத்தான் வரே" என்றாள்.

"போ பாட்டி! தில்லைக் கண்ணுவைக் கோவிச்சுக்காதே! பாவம்! அவ புருஷன் சண்டைக்குப் போயிட்டு ஆறு வருஷம் கழிச்சு முந்தா நாள் தான் வந்திருக்கான்" என்றது ஒரு சிறுமியின் குரல்.

தில்லைக் கண்ணுவின் குரலே கேட்கவில்லை என்று கவனித்தான் மேஜர் மூர்த்தி. ஒரு பத்துநிமிஷ நேரத்திற்குள் அவள் கையில் வாளி ஜலம், ஒரு விளக்குமாறு, கோல டப்பா முதலியவற்றுடன் வெளியே வந்தாள். அவளைத் தொடர்ந்து வந்த பெண் - ஜயா என்ற பெயர் அவளுக்கு என்று ஞாபகப் படுத்திக் கொண்டான் மூர்த்தி - " நான் இன்னிக்கு தேர்க்கோலம் போடறேண்டி, தில்லைக்கண்ணு." என்று கூறிக் கொண்டே வந்தாள்.

"பெரிய கோலமா போடம்மா போடு- இன்னிக்கு உன்னைப் பார்க்க உன் புருஷன் வரப்போறானேல்லியோ. தேர்க்கோலம் போடு தில்லைக் கண்ணு" என்றாள் கேலியாக.

"போடி! உனக்கு வேறென்ன வேலை!" என்று கூறிக் கொண்டே ஜயா கோலமாவு டப்பாவைக் கையில் எடுத்தாள்.

பல் தேய்த்துக் காபி சாப்பிட உள்ளே போனான் மேஜர் மூர்த்தி.

## 7

சிவராமையராத்துக்குக் கிழண்டை மூன்றாவது வீட்டுக்குச் சொந்தக்காரர் மகாலிங்கையர். தெருவிலே பெரிய மனிதர் என்ற பெயர் அவருக்கு. பெயரளவில் பெரிய மனிதர் அவர். வாழ்க்கையில் மிகவும் சின்ன மனிதர்.

கிராமச் சமுதாயத்திலே என்றும் இந்த மாதிரி சின்ன மனிதர் களுக்குக் குறைவு இருந்தது கிடையாது என்று தான் சொல்லவேண்டும். கிராமத்து மனிதர் குறுகிய மனப்பான்மையுடையவர் என்று சொல்லி, என்னென்ன குணாதிசயங்களைக் கேவலம் மனுஷ்யத்துவம் அழறது என்று எண்ணுவோமோ அவ்வளவும் அவரிடம் குடிபுகுந்திருந்தது.

பக்கத்து வீட்டில் மேளம் கொட்டினால் மகாலிங்கையருக்குக் கண்ணில் ஜலம் வந்து விடும். கண்ணிலோ, காதிலோ கோளாறில்லை. மனசில்தான் உள்ளது கோளாறு எல்லாம். பிறர் சுகமாக வாழ்வதைக் கண்டு மனம் பொங்குவார் அவர். மற்றவன் நன்றாகச் சாப்பிடுவதை ஒரு நாள் கண்ணாரக் கண்டு விடுவாரேயானால் இரண்டு நாள் அவர் அரை வயிற்றுக்குத்தான் சாப்பிடுவார்! மகானுபாவர்! பட்டுக்கரை வேஷ்டி கட்டிக் கொண்டு போகிற பையனை பார்த்தால் கோபம் வரும் அவருக்கு. "உன் பவிசுக்கு என்னடா பட்டுக்கரை வேஷ்டி" என்பார். உலகத்து நியாயத் தராசையே தன் கையில் வைத்திருப்பவர் போலச் சக்கர வட்டமாகப் பேசுவார். அந்தப் பேச்சு ஒன்றுதான் அவருக்கு எஞ்சியிருந்த கௌரவம் - மற்ற கௌரவமெல்லாம் அற்று விட்டது அவருக்கு என்று கூறுவது மிகையாகாது.

சர்வமானிய அக்கிரகாரத்துப் பிள்ளையார் கோவில் டிரஸ்டி அவர். அதாவது பிள்ளையாருக்கென்று தலைமுறை தலைமுறையாக வந்திருந்த ஏழெட்டு மாமரங்களும், படுகை நிலம் பத்து செண்டும் இந்தத் தலைமுறையில் பிள்ளையாருடையது அல்ல -

மகாலிங்கையருடையது தான். காவிரிக்கரை மடத்துச் சாவியும் அவரிடம் தான் இருந்தது. தெருவாருக்கு இன்னமும் மகாலிங்கையரிடம் பிள்ளையார் கோவில் சாவியும் மடத்துச் சாவியும் இருந்தது ஆட்சேபகரமாகத்தான் இருந்தது - ஆனால் பிள்ளையாருக்கே ஆட்சேபம் இல்லாதபொழுது தெருவார் என்ன செய்ய முடியும்? எதுவும் செய்யாமல் தான் இருந்தார்கள், தெருவார்கள். பிள்ளை யார் விரும்பினாரானால் தன்னுடையதைக் கேவலம் ஒரு தனிமனிதனிடமிருந்து - மகாலிங்கையரைப் போன்ற ஒரு மனிதரிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளமுடியாதா?

மகாலிங்கையர் பெரிய குடும்பத்தில் உதித்தவர். அதாவது ஒரு காலத்தில் சாத்தனூரில் செல்வாக்கும் செல்வமும் நிறைந்திருந்த வம்சத்தில் வந்தவர். மகாலிங்கையரின் தாத்தா காலத்திற்கு முந்தியே செல்வம் போய் விட்டது. வாயளவில் செல்வாக்கு மட்டும் மகாலிங்கையர் வரைக்கும் வந்து விட்டது. அவருக்குப்பின் அவர் பிள்ளை சுப்புணிக்கு அந்தச் செல்வாக்கும் மிஞ்சாது என்றுதான் தோன்றியது. ஆனால் சுப்புணி அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவனுடைய கவலை எல்லாம் தன்னுடைய ஒரே எருமை மாட்டைப் பற்றித்தான்.

சுப்புணியைத் தவிர மகாலிங்கையருக்கு இன்னும் இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் நகரத்துப்பேர் வழிகள் - ஒருவன் கும்பகோணத்தில் சின்ன வக்கீலாகவும், ஊருக்கு வந்தால் பெரிய மனிதனாகவும் இருந்தான். அவன் பெயர் ராமச்சந்திரன். அவன் பிள்ளை குட்டிகளுடன் கும்பகோணத்திலேயே வசித்து வந்தான். அவசியம் நேர்ந்தாலொழிய சாத்தனூர் கிராமத்திற்கு வருவது கிடையாது. சுப்புணிக்குத் தன் "ஜ்யேஷ்டபிராதா, அண்ணா 'eldest brother' இடம் அலாதிப் பிரியம் - அவனை அண்ணா என்று சொல்வதுடன் நிறுத்திக் கொள்ளமாட்டான் சுப்புணி. சம்ஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் சேர்த்துச் சொன்னால்தான் அவனிடம் தனக்குள்ள மரியாதையைக் காண்பித்த மாதிரி என்கிற ஞாபகம் போலும் அவனுக்கு. சம்ஸ்கிருதம் அவனுக்கு இரண்டொரு வார்த்தைகள் தெரிந்திருக்கலாம். ஆங்கிலத்தில் அவன் அறிந்தது இந்த இரண்டு வார்த்தைகள் மட்டுந்தான். சமயம் வாய்த்தபோதெல்லாம் தன்னுடைய eldest brother ஐப் பற்றி சுப்புணி பேசத் தொடங்கியதற்கு இது ஒரு காரணம் என்று சொல்லுகிறவர்கள் உண்டு. ஆனால் உண்மையிலேயே சுப்புணிக்குத் தன் அண்ணாவிடம் அளவுக்கு மீறிய, உண்மையிலேயே அனாவசியமான மதிப்பு உண்டு.

மகாலிங்கையருடைய மூன்றாவது பிள்ளை நடேசன். வடக்கே எங்கேயோ ஒரு ஊரில் ஒரு சின்ன ஆபீசில் ஒரு சின்ன குமாஸ்தாவாக இருக்கிறான். ஏதோ ஒரு சமஸ்தானத்தில் - பெயர் தமிழ் உச்சரிப்புக்குச் சரிப்பட்டு வராத ஒரு ராஜ்யத்தை ஆளுகிற பிரதிநிதிக்கு கீழ்ப்பட்ட பிரதிநிதிக்கு எட்டாவது குமாஸ்தாவின் ஒன்பதாவது குமாஸ்தா நடேசன். ஆனால் அந்த, வாயில் பெயர் நுழையாத, சமஸ்தானத்துக்கே நடேசன்தான் திவான் என்கிற முறையில்தான் சாத்தானூர் சர்வமானிய அக்கிரஹாரத்தில், முக்கியமாக மகாலிங்கையர் வீட்டில் பிரஸ்தாபம். "மகராஜாவோடே எங்க நடேசன் பேசிண்டிருக்கச்சே..." என்று மகாலிங்கையர் பேசத் தொடங்குவார். நடேசன் சாத்தனூருக்கு வருவது மிகவும் அரிது. ஒரு சமயம் வந்த போதும் சமஸ்தானத்துக் கௌரவம் பூராவையும் தெரு தாங்காது என்று கண்டுகொண்டு விட்டான். குமாஸ்தா உத்தியோகம் ஆனபிறகு அவன் இரண்டாவது தடவை இன்னும் சாத்தனூருக்கு வரவில்லை.

இந்த மூன்று பிள்ளைகளைத் தவிர மகாலிங்கையருக்கு இரண்டு பெண்களுண்டு. பெண்களின் அதிருஷ்டம் - அவர்கள் இருவருமே நல்ல இடங்களில் வாழ்க்கைப்பட்டிருந்தார்கள். பிள்ளை குட்டிகளுடன் அசட்டுக் கௌரவம் எதையும் வேண்டாமலே உண்மையில் ரொம்பவும் சௌகரியமான வாழ்க்கை நடத்திவந்தார்கள். அவர்கள் இருவராலும் மகாலிங்கையருக்கும், அவர் பிள்ளைகளுக்கும் லாபம்தான். அடிக்கடி சாத்தனூர் வந்து போவார்கள் இருவருமே.

தன் குடும்பத்தைத் தவிர, தன் தம்பியின் குடும்பத்தையும் சேர்த்துக் கண்காணித்துக் கொள்கிற பொறுப்பு பல வருஷங்களுக்கு முன்பே ஏற்பட்டிருந்த மகாலிங்கையர் தம்பியின் குடும்பத்தைக் கவனித்துக் கொண்டதுமல்லாமல், தம்பியின் மனைவியை ரொம்பவும் கவனமாகவே பார்த்துக் கொண்டார் என்று தெருவிலே விஷமமாகச் சொல்வார்கள். அது எப்படியானாலும் இப்போது மகாலிங்கையருக்கும் அவருடைய தர்ம பத்தினியல்லாத தர்மாம்பாளுக்கும் விஷய சுகங்களில் ஈடுபடுகிற வயசெல்லாம் கடந்து பல வருஷங்களாகிவிட்டன.

தர்மாம்பாளுக்கு ஐந்து பிள்ளைகளும், நாலு பெண்களுமுண்டு. பெண்களெல்லாம் ஓஹோ என்று இல்லாவிட்டாலும் ஏதோ சுமாரான இடங்களில் வாழ்க்கைப்பட்டு சௌகரியமாகவே இருந்தார்கள். அவளுடைய பிள்ளைகளும் பலவிதமான தொழில்களில் ஈடுபட்டிருந்தார்கள். ஒருவன் வக்கீல் -

பட்டிணத்திலே சுமாராக ஜீவனம் நடத்தி வந்தான். ஒருவன் பள்ளி உபாத்தியாயர் - திருச்சி ஜில்லாவிலே ஊர் ஊராகப் போய்க் கொண்டு இருந்தான். ஒருவன் புனாவிலே மிலிடெரி அக்கவுண்ட் ஸில் குமாஸ்தா. நாலாமவன் படித்துப் பட்டம் பெற்ற பிறகு சென்னையிலே சொல்ப அளவிலே ஏதோ வ்யாபாரத்தில் ஈடுபட்டிருந்தான். யுத்த காலத்திலே ஏதோ பிளாக் மார்க்கெட் உதவியால் பணம் சுமாராகச் சேர்த்திருந்ததாகச் சொல்லிக் கொண்டார்கள். புனாவில் மிலிடெரி அக்கவுண்ட்ஸ் வேலையாயிருந்தவன் பெயர் சாமா. அவன், தன் பெண்டாட்டி, பிள்ளைகளுடன் ஒரு மாச லீவில் வந்து இப்போது சாத்தனூரில் ஒரு வாரமாகத் தங்கியிருக்கிறான்.

விடியற்காலையில் தலையில் முண்டாசை வரிந்து கட்டிக் கொண்டு கையில் மூங்கில் கழியுடன் வீட்டை விட்டுக் கிளம்பிய தன் பெரியப்பா மகாலிங்கையரைச் சாமா கேட்டான்: "காவேரிக் கரைப் பக்கமா...?"

"இல்லை, தெருக்கோடிப் பிள்ளையார் கோயில் வரைக்கும்" என்று பதில் அளித்தார் மகாலிங்கையர்.

அந்தப் பிள்ளையார் கோவிலுக்குத்தான் மகாலிங்கையர் டிரஸ்டி. தினமும் எழுந்தவுடன் பல்கூடத் துலக்காமல் தலையில் முண்டாசு கட்டிக் கொண்டு போய்ப் பிள்ளையார் கோயிலைத் திறந்து பிள்ளையாரைத் தரிசித்துவிட்டு, 'சௌக்கியமா?' என்று குசலம் விசாரித்துவிட்டு முண்டாசை அவிழ்த்துத் துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, தலையில் நாலு குட்டுக் குட்டிக்கொண்டு, மூன்று தோப்புக்கரணம் போட்டுவிட்டு வருவது மகாலிங்கையருடைய பழக்கம். இந்த ஐம்பது வருஷ காலத்தில் உடம்பு சரியில்லாத நாள் என்றுகூட, அவர் இந்த வழக்கத்தில் தவறினவர் இல்லை. பிள்ளையார் பக்தி அல்ல இதற்குக் காரணம். அது தெருவாருக் கும் வெளிப்படையாகத் தெரிந்த விஷயம். ஏதோ பழக்கம் - அவ்வளவு தான். அவருடைய கையிலிருந்த மூங்கில் தடி அவர் கையிலே ஐம்பது வருஷங்களுக்கு மேலாக சர்வீஸ் பார்த்திருந்தது. ஒரு சமயம் அதன் உதவியால் ஏழு வழிப்பறிக்காரர்களைக் கழி சுத்தி விரட்டியிருப்பதாக மகாலிங்கையர் அடிக்கடி சொல்வார். அது எவ்வளவு நிஜமோ? அந்த விஷயம் மகாலிங்கையரைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. 'மகாலிங்கையரைவிட அந்த மூங்கில் தடிக்கு ஆயுசு கெட்டி' என்று வைத்துப் பார்க்கும்போது ஒரு விந்தையான பிரச்னை எழும்.

பிள்ளையார் கோயிலுக்குத் தினம் அதிகாலையில் போகிற பழக்கத்தை - பழக்க வேகத்தில் அந்தத் தடி மட்டும் செய்யுமா? மகாலிங்கையர் போனபிறகும் அது தானாகவே நடந்து போகுமா? பிறர் கையில் ஏறிக்கொண்டு அவரும் மகாலிங் கையர் மாதிரி தினம் பிள்ளையார் கோயில்வரை போய்விட்டு வர வற்புறுத்துமா என்பது ரஸமான பிரச்னைதான். மகாலிங்கையர் செத்த பிறகுதான் தெரியும் அது.

மகாலிங்கையர் ஒன்றும் அப்படிச் சீக்கிரம் செத்து விடுவதாகவும் இல்லை. பள்ளிக்கூட உபாத்தியாயராக - அவர் அப்படி ஒன்றும் அறிவாளி அல்ல - நாற்பது வருஷங்கள் கத்திக் கத்தித் தொண்டைக் குழிக்கு வலுவு ஏற்றி வைத்திருந்தார். அவர் சாத்தனூரில் பல தலைமுறைப் பையன்களின் காதுகளைப் பதம் பார்த்துக் கைளுக்கு வலுவு ஏற்றிக் கொண்டிருந்தார். ட்வில் ஷர்ட் போட்டுக்கொண்டு தங்கமல்லாத தங்கப் பொத்தான்களைத் துடைத்துவிட்டுக்கொண்டு தன் மாரைத் தானே பார்த்துக்கொண்டு நடக்கக் கிளம்பினாரானால் ஆறு மைல் சளைக்காமல் நடப்பார். அவருக்கு வயது கிட்டத்தட்ட அறுபத்தைந்து ஆகிவிட்டது. கிழவர் என்று அவரைச் சொல்ல முடியாது. நடை தளரவில்லை. தலையில் நரையில்லை. உடலில் தளர்ச்சியில்லை. கண்கள் மங்கவில்லை. பற்கள் மட்டும் பல உதிர்ந்து விட்டன, அவ்வளவுதான். மனசிலும் உள்ளத்திலும் உடம்பிலும் வாலிபம் நிறைந்திருந்தது. அவர் அதிருஷ்டக்காரர்தான்.

"கேட்டேளா அக்கிரமத்தை!" என்று கூறிக்கொண்டே சிவராமையர் வீட்டுத் திண்ணையிலிருந்து இறங்கிவந்து தம்மைப் பிடித்த நச்சுவாய்க் கிழத்தின் தொணதொணப்பிலிருந்து தப்ப அவருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. "பால சுப்பிரமணிய ஐயர் உங்களை ஏதோ அவசர காரியமாக அரைமணியாத் தேடறாரே!" என்று மகாலிங்கையர் சொன்னதுதான் தாமதம். உலகில் உள்ள அநியாயங்கள், அக்கிரமங்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு, பாலசுப்பிரமணிய ஐயரைத் தேடிக்கொண்டு கிளம்பி விட்டார் தொணதொணப்புக் கிழவர்.

மகாலிங்கையர் வழக்கம்போல அமைதியாகப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று நாலுதரம் குட்டிக்கொண்டு மூன்று தரம் தோப்புக் கரணம் போட்டுவிட்டு வீடு திரும்பினார்.

# 8

பாலசுப்பிரமணிய ஐயர் என்பவர் ஒரு சகோதரத் தொழிலாளி. தொணதொணப்புக் கிழங்களிலே சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்திலே அவருக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுக்கவேண்டியதாக இருக்கும். இரண்டாவது ஸ்தானத்துக்கு லாயக்கானவர்தான் நமக்கு ஏற்கெனவே பரிசய மான வேங்கடராமையர் என்பவர்.

சர்வமானிய அக்கிரஹாரத்தின் தென்னண்டைச் சாரியில் கிழண்டைக் கோடி வீடு பாலசுப்பிரமணிய ஐயருடையது.

கோடி வீடு அவருடையதாக இருப்பது சர்வமானிய அக்கிர ஹாரத்துக்கே மிகவும் நல்ல காரியம் என்று தெருவார் சொல்லுவார்கள். தீவட்டிக்கொள்ளைக்காரன் யாராவது பாலசுப்பிரமணிய ஐயரைச் சந்தித்து அவரோடு பேச்சுக் கொடுத்துவிட்டானானால் போதும். அவரிடம் இருந்து தப்பி வருவதற்குள் பொழுது விடிந்துவிடும் என்பார்கள். தீவட்டிக் கொள்ளைக்காரன், எரிந்து கருகிவிட்ட தீவட்டிகளுடன் வெறுங்கையை வீசிக்கொண்டு திரும்ப வேண்டியதுதான் என்பார்கள். இது நிஜமோ? பொய்யோ? யாரும் சொல்லமுடியாது. இரண்டு தலைமுறைகளில் சர்வமானிய அக்கிரஹாரத்தில் நடந்த ஒரே கொள்ளை, மேலண்டைக் கோடியில் தொடங்கியதுதான் அதிசயம். தீவட்டிக்கொள்ளைக்காரன் உரிய சிக்ஷையை மட்டுமன்றி, பாலசுப்பிரமணிய ஐயரையும் தப்பிவிட்டான். அவன் அதிருஷ்டம் அவனுக்குத் தெரியுமோ என்னவோ?

பாலசுப்பிரமணிய ஐயர் சுகஜீவி. அவர் எதற்காக ஜீவித்தார் என்று சொல்வது வேண்டுமானால் சிரமமாக இருக்கலாம். அவர் எப்படி ஜீவித்தார் என்று சொல்வது சுலபம். சர்வமானிய அக்கிரஹாரத்திலே ஒரு வீடு, சர்வமானிய பூமியிலே ஓர் ஏக்கரா நிலம், படுகையிலே ஒரு வாழைத் தோட்டம். அக்கரையிலே ஒரு மாந்தோட்டம் - இவ்வளவும் இருந்தன அவருக்கு. தன்னந் தனியான மனிதர். அந்த வீட்டிலே வசிக்கப் பல்லிகளையும் பாலசுப்பிரமணிய ஐயரையும் தவிர வேறு யாரும் கிடையாது. அவருக்கு வாழ்க்கை சாத்தியமாக இருந்ததே, அவருடன் பேசுவதற்கு எதிர்பட்ட அப்பாவி ஜீவன்களால்தான் என்று கூறுவது மிகையே ஆகாது.

அவருக்குத் தெரியாத விஷயம் என்று உலகில் ஒன்றும் கிடையாது. தீவட்டிக்கொள்ளைக்காரன் வந்து அவரிடம் மாட்டிக் கொண்டிருந்தானானால், அவரிடம் தீவட்டிக் கொள்ளையைப்பற்றியே இரவு பூராவும் பேசிவிடுவார் அவர். அவர் ஏதோ ஒரு காலத்தில் ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தின் தலைவராக இருந்திருக்க வேண்டும் என்கிற தீர்மானத்துடன்தான் அவன் திரும்ப முடியும். தீவட்டிக் கொள்ளை முதல் தீவாந்தரசிக்ஷை வரையில் அவருக்கு எல்லா விஷயங்களும் எப்படியோ தெரிந்திருந்தன என்பதுதான் அவரைப்பற்றிய வரையில் சுவாரசியமான விஷயம். கொல்லனிடம் கொல்லு வேலையைப்பற்றி 'அத்தாரிடி'யுடன் பேசுவார் அவர். கொல்லன் தான் கடைசியில் தோல்வியை ஏற்றுக்கொள்ள வேண்டி வரும். தாவரசாஸ்திர மாணவனுடன் தாவரம் பேசுவார் அவர். அவருடைய அறிவு பள்ளிப்புஸ்தகங்களிலே ஏறியதில்லை. அவர் சொல்கிற பெயர் வேறாக இருக்கலாம். விஷயம்; ஒன்றுதான்! எல்லாவற்றையும் பார்த்து வைத்துக்கொள்ள அவருக்குப் பொழுது எப்படித்தான் இருந்ததோ, யாருக்கும் தெரியாது.

அவர் பேசுவதைக் கேட்க அவருக்கு மனிதன் தான் வேண்டுமென்பதில்லை. வீட்டு வாசலிலே உள்ள பூந்தோட்டத்தில் வேலை செய்து கொண்டேயிருப்பார். நேற்றிரவு விழுந்து செத்துவிட்ட வெட்டுக்கிளியுடன் மனிதனுடைய இல்வாழ்க்கை இன்ப ரகசியங்களை எல்லாம் பேசிக்கொண்டேயிருப்பார்.

கன்றுக்குட்டிக்கு வைக்கோல் பிடுங்கிப் போடும்போது வைக்கோல் போருடன் பேசிக்கொண்டேயிருப்பார்; கன்றுக் குட்டியுடன் பேசுவார். கன்றுக்குட்டிக்கு அவர் பேச்சுப் புரியாது. 'மே' என்கும். வாலைக் கிளப்பிக்கொண்டு துள்ளிக் குதித்தோடித் தன் ஆக்ஷேபத்தைத் தெரிவிக்கும். அதற்கு எல்லாம் சளைத்துவிட மாட்டார் பாலசுப்பிரமணிய ஐயர். அவர் பாட்டுக்குப் பேசிக்கொண்டேதான் இருப்பார். கன்றுக்குட்டி துள்ளி ஓடிவிட்டால் என்ன? அது கட்டியிருந்த கால், இருந்த இடத்திலேயே தான் இருக்கும்!

பாலசுப்பிரமணிய ஐயர் ஏகாங்கி. ஓயாமல் பேசுகிற இந்தப் பழக்கந்தான் அவரை ஏகாங்கியாக்கிவிட்டது என்று சொல்வார்கள். கன்றுக்குட்டி துள்ளி ஓடிப்போன மாதிரி அவர் உறவினர்கள், ஒருவர்பின் ஒருவராகத் துள்ளி ஓடிவிட்டார்கள். சிலர் துள்ளி ஓடிச் சாவையே எட்டி விட்டார்கள். சிலர் வேறு வியாஜமாகப் போனவர்கள் திரும்பவேயில்லை. ஊமைகள்மட்டும் வசிக்கிற நகரம் ஏதாவது

உண்டா என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது வதந்தி. அவர் மனைவிக்கு, காரணம் என்னவோ யாரும் சொல்வதற்கு இல்லை. உண்மையிலேயே பைத்தியம் பிடித்துவிட்டது. ஒரு நாள் புடைவையைக் கிழித்துக்கொண்டு வீட்டை விட்டு வெளிவந்தவள், தெருவை விட்டு வெளியேறிவிட்டாள். ஊர் திரும்பவில்லை அவள். பாலசுப்பிரமணிய ஐயருக்கு அவளைத் தேடிக்கொண்டு போக நேரம் கிடைக்கவில்லை. அவர் பேசி முடித்த பிறகுதானே நேரம் கிடைக்கும். பேசுவதற்கு, செத்துக்கிடந்த வெட்டுக்கிளி முதல் கன்றுக்குட்டி கட்டுகிற கால்வரையில் இருக்கும்போது அவர் பேசி ஓய்வது தான் ஏது?

மாட்டைக் கறந்து, பாலைக் காய்ச்சி, காபி போட்டுச் சாப்பிட்டு விட்டு அதிகாலையிலேயே வாசல் திண்ணைக்கு வந்து விட்டார் பாலசுப்பிரமணிய ஐயர். கிழக்கே வெளுத்திருந்தது. உதயசூரியனை வார்த்தை சொல்லி வரவேற்றார் அவர். தேவகாலத்து முனிவர்களுக்குப் பிறகு அவர்தாம் சூரியனை நேருக்கு நேர் அழைத்துப் பேசிய மனிதராக இருக்க வேண்டும். சூரியபகவான் இந்தப் பேச்சைக் கேட்டுச் சற்றுத் துரிதமாகவே உயரக் கிளம்பி வந்தான்.

காற்றிலே அலைந்தாடிய மூங்கில் புதர் சலசலத்தது. கழியோடு கழி உரசப் பேசியது. பாலசுப்பிரமணிய ஐயரும் பேசினார்; கவியைத் தவிர வேறு யார் மூங்கிற்புதரையும் சூரிய பகவானையும் ஆவாஹனம் செய்து கொண்டு அவற்றுடன் நேருக்கு நேர் பேசிவிட முடியும்? பாலசுப்பிரமணிய ஐயர் பைத்தியம் அல்ல; கவி. ஆம்; கவிதான்.

இந்த மானிட கவியைச் சந்திக்கச் சற்றே மட்டமான கவியான வேங்கடராமையர், சூரியபகவானைக் கண்குளிரப் பார்த்துக்கொண்டே வந்தும்! தாம் வந்தது சங்கிலிப் பாட்டிக்குச் சகுனத் தடையாக அமைந்தது என்பதை அவர் கவனிக்கவில்லை.

சங்கிலிப்பாட்டி வடவண்டைச் சரகத்தின் கீழண்டைக் கோடியில் இரண்டாவது வீட்டில் வசிப்பவள். அவள் ஒரு அவசர காரியமாக மேலண்டைக் கோடியில் இருந்த சாஸ்திரிகள் வீட்டை நாடி, வெளியே தெருவில் கால் வைத்ததுதான் தாமசம்; அவள் கண்ணிலே பட்டு விட்டார் வேங்கடராம ஐயர்.

"கரியாப் போவான், படுபிராமணன்! ஒத்தைப் பிராமணன் எதிர்ப்படுகிறானே. காரியம் என்ன ஆகுமோ! முருகப் பெருமானே,

நீயே துணை!" என்று தயங்கினாள் ஒரு விநாடி.

சங்கிலிப் பாட்டியின் பேரன் அன்று டைப்ரைட்டிங் பரீக்ஷைக்குப் பணம் கட்டத் தன் பாட்டியைப் பணம் கேட்டிருக்கிறான். பன்னிரண்டு ரூபாய் கட்டவேண்டுமாம். இந்தத் தடவையாவது ஸ்வாமி புண்ணியத்திலே பரீக்ஷை தேறணுமே என்று எண்ணி, இன்றில்லாவிட்டால் நாளை, மறுநாளாவது பணங்கட்ட நல்லநாள் பார்த்துச் தரச் சொல்ல வேண்டும் என்று சங்கிலிப்பாட்டி சாஸ்திரிகள் வீட்டை நோக்கிக் கிளம்பினாள். வேங்கடராம ஐயன் சனீசுவரன்மாதிரி எதிரே வந்து கொண்டிருந்தான். 'இந்த வருஷமும் அருமைப் பேரனுக்குப் பரீக்ஷை தேறாமல் போய்விட்டால்?' என்று சிந்தித்தாள் பாட்டி. சாஸ்திரிகளைக் கேட்டு நல்ல நாள் பார்த்துப் பரீக்ஷைக்குப் பணங் கட்டச் சொல்லிப் பேரனுக்குப் பணம் தந்தாலும் அவன் தேறப் போவதில்லை என்கிற ரகசியம் அவளுக்கு எப்படித் தெரியப் போகிறது? பரீக்ஷைக்குக் கொடுக்கிற பணம் சென்ற வருஷங்களில் கொடுத்த பணம் போலவே கும்பகோணம் ஹோட்டல்களுக்குத்தான் போகும். பரீக்ஷை அதிகாரிகளுக்குப் போய்ச் சேராது என்பது பாவம், பாட்டிக்குத் தெரியாது!

டைப்ரைட்டிங் பரீக்ஷை கொடுத்துச் சிரமப்பட்டுப் பாஸ் செய்து, அதற்குப் பிறகு சிரமப்பட்டு வேலைபார்த்துச் சிரமப்பட்டுச் சம்பாதிப்பது என்னவோ தூரத்து லட்சியம்; அநேகமாக நடக்காத காரியம் என்பது அவள் பேரனுக்குத் தெரியும். டைப்ரைட்டிங் பரீக்ஷையை வைத்து உடனடியாகச் சம்பாதித்துக் கொண்டுவிடுகிற காரியம் அந்தப் பையனுக்குச் சுலபமாக இருந்தது.

அவளுடைய பேரன் அறிவாளி; பிழைக்கிற பிள்ளை. அவன் பெயர் குபீல் சுவாமிநாதன். 'குபீல் குபீல்' என்றுதான் சிரிப்பான் அவன். அதனால் அவனுக்கு அந்தப் பெயர். சங்கிலிப் பாட்டிக்கு அவன், பெண் வயிற்றுப் பேரன். கும்பகோணத்தில் ஹைஸ்கூலில் படிப்பதாகப் பெயர். சுயமாகவே அறிவாளியாதலால் அவன், பள்ளிப்படிப்பு பலனளியாத காரியம் என்று ஆரம்பமுதலே தீர்மானித்து நடந்துகொள்ளத் தொடங்கி விட்டான். சீட்டாடவும் சீட்டியடிக்கவும், சினிமா பார்க்கவும் கும்பகோணத்திலே கற்றுக் கொண்டிருந்தான்; அதுவும் படிப்புத்தானே!

தன்னுடைய பேரப்பிள்ளைகளிலே இந்தப் பிள்ளையிடந்தான் சங்கிலிப்பாட்டிக்கு அபார வாஞ்சை அவனை

அவன் தகப்பனிடமிருந்து பிரித்துத் தன்னுடன் சாத்தனூரில் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, 'சாமாவுக்கு இது பிடிக்கும், அது பிடிக்கும்' என்று சமைத்துப் போட்டுக் கொண்டிருந்தாள். பையன் சாப்பிடுவதிலே மட்டும் வஞ்சனை பண்ணுவதில்லை.

சங்கிலிப்பாட்டிக்கு ஒரே லட்சியம் தன் வாழ்க்கையில் தன் பேரப்பிள்ளை டைப்ரைட்டிங் பாஸ் பண்ணிவிட வேண்டும். அந்தக் குப்பிப்பாட்டியாத்து ராமரத்தினத்திற்குப் போட்டியாகச் சென்னை பட்டணத்திலே ஓர் ஆபீஸிலே குமாஸ்தாவாக வேலைக்கு அமர்ந்துவிட வேண்டும். அதற்கானது எதுவும் செய்ய அவள் தயாராக இருந்தாள்.

வீடு வாசலென்று அவளுக்கும் சொற்ப சொத்து இருந்தது. பையன் டைப்ரைட்டிங் பாஸ் பண்ணுவதாக ஆசைக் காட்டி, வீட்டை விற்றுப் பணம் தா என்று கேட்டிருந்தால்கூடக் கொடுத்திருப்பாள். பையனுக்குத் தற்சமயம் கிடைத்த பதினைந்து ரூபாய் போதுமானதாக இருந்தது.

நல்ல காரியமாக, கிளம்பிக் கொண்டிருக்கிற சமயத்திலே திடீரென்று எதிரே ஒற்றைப் பிராமணன் முளைத்தானே என்று வேங்கட ராம ஐயரைத் திட்டிக்கொண்டே சாஸ்திரிகள் வீட்டை நோக்கி நடந்தாள் அவள்.

சங்கிலிப்பாட்டியின் நீண்ட நிழல் அவள் முன் சென்றது. அவளுக்கு முன் அவள் நிழல்தான் வைத்திநாத தீக்ஷிதரின் வீட்டு வாசலைத் தொடும்.

ஆனால் அவளுடைய நிழல் வைத்திநாத தீக்ஷிதரின் வீட்டைத் தொடுவதற்குமுன் அவளைத் தொட்டுவிட்டாள் குப்பிப் பாட்டி.

குப்பிப்பாட்டியும் சங்கிலிப்பாட்டியும் சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தின் நிரந்தரவாசிகள்; அழியாத செல்வங்கள். தெருவில் வீடுகள் பாழ்த்துக்கொண்டிருந்தன. குடும்பங்கள் நசித்துக்கொண்டிருந்தன. ஊர் விட்டு ஊதியம் தேடிக் கிளம்பியவர்கள், கிடைத்த ஊதியம் போதாமல், ஊரிலிருந்த பிதுரார்ஜிதமான வீட்டையும் வாசலையும் தின்று தீர்த்துக்கொண்டிருந்தனர். தெருவில் காலைநிழல் குறுகிப் பின்னோடி மறைந்து விடும். ஒவ்வொன்றும் விநாடிக்கு ஒரு வண்ணமாக மாறிக் கொண்டிருந்தன. குப்பிப் பாட்டியும் சங்கிலிப்பாட்டியும் மட்டும் மாறுவதில்லை. கிராமத்தின் நேற்றைய சரித்திரத்தில் அடுத்தடுத்த -

ஆனால் மிகவும் வித்தியாசமான பக்கங்கள் இந்த இரண்டும்.

சங்கிலிப்பாட்டிக்குத் தன்னுடைய அருமந்த, டைப்பிஸ்டு ஆக இருந்த அந்தப் பேரனைத் தவிர யாரும் கிடையாது; யாரும் தேவையில்லை, அவளுக்கு. குப்பிப்பாட்டிக்கு வீடு கொள்ளாமல் பேரனும் பேத்தியும் கொள்ளுப் பேரனும் கொள்ளுப் பேத்தியுமாக இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய சுக துக்கங்களிலும் தினசரித் துயரங்களிலும் உற்சாகங் களிலும் பூரணப் பங்கு எடுத்துக் கொண்டிருந்தாள் குப்பிப்பாட்டி. அவள் பிறந்தது சிவகங்கையில். வடக்கத்தி வடமாள் என்கிற பெருமையுடன் சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்திலே செயலுள்ள ஒரு மிராசுதாருக்கு வாழ்க்கைப் பட் டாள். இப்போது சிவகங்கை ஏதோ ஒரு பூர்வ ஜன்ம ஞாபகந்தான் அவளுக்கு. அவள் கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்து விட்ட பிறகு, ஒரு நாளாவது சிவகங்கைக்குத் திரும்பியதில்லை.

அவள் கணவன் நீளமடி கட்டிக்கொண்டு, சதா வாய் ஓயாமல் வெற்றிலைபாக்கை - கடைவாய் சிவப்பாய் வழிய - மென்று கொண்டே பெரிய ஆஸ்தியை ரங்காட்டம் ஆடியே தீர்த்துவிட்டவன். ஆனால் அவன் தீர்த்து முடிப்பதற்கும், அவன் மூத்த பிள்ளை தலைப்பட்டு பி.ஏ. ஆனர்ஸ் பரீட்சையில் பிரமாதமாகத் தேறி, ஐ.ஏ.எஸ். பரீக்ஷை கொடுத்துத் தேறாமல் நல்ல வேலை சம்பாதித்துக் கொள்வதற்கும் சரியாக இருந்தது. பிள்ளை, தன் தாயாரைக் கொண்டிருந்தான். டெல்லியில் 1925-ல் சர்க்கார் இலாகாவில் சின்னக் குமாஸ்தாவாகத் தொடங்கியவன் அஞ்சாமல் கொள்ளாமல் வருஷத்துக்கு ஒரு டிபார்ட்மெண்டு பரீக்ஷை தேறி, ஏழெட்டு வருஷங் களில் பெரிய வேலையையும், நிறையச் சம்பளத்தையும் எட்டிவிட்டான். அவன் தம்பிகள் நால்வரும் அவன் நிழலிலே தலை தூக்கினார்கள். அவன் தங்கைகள் இருவருக்கும் அவன் சம்பாத்தியத்திலேயே கல்யாணமாயிற்று. குப்பிப்பாட்டி அதிருஷ்டசாலிதான். அவளுடைய மூத்த பிள்ளை சோடை போகவில்லை.

இது எவ்வளவு பெரிய அதிருஷ்டம் என்பது மூத்த பிள்ளை சரியில்லாது அவஸ்தைப்பட்ட குடும்பங்களுக்கே தெரியும்!

குப்பிப்பாட்டியினுடைய கணவன் இறக்கும்போது அவருக்கு வயது ஐம்பதுக்குமேல் ஆகிவிட்டது. குப்பிக்கு நாற்பத்தைந்துக்குமேல் இருக்கும். நல்ல குடும்பம் கெட்டு மீண்டும் திருந்திவிட்டது. தன் கணவன் இருக்கும்போதே அவனையும் அவனுடைய நீண்ட

மடியையும் பழக்க வழக்கங்களையும் பொருட்படுத்தாமலே வாழப் பழகிவிட்டாள் அவள். அவன் போனதற்கு அழுது தீர்க்கவேண்டுமே. இல்லாவிட்டால் ஊரார் என்ன நினைப்பார்களோ என்று அழுது தீர்த்தாள் என்று சொல்லலாமே தவிர, வேறு உண்மை உணர்ச்சி அவளை உந்தியது என்று சொல்வதற்கில்லை. விதவைக்கோலம், சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்துப் பெண்களுக்குப் பரிச்சயத்தால் பயத்தை இழந்துவிட்ட ஒரு நிலைமையே தவிர வேறு அல்ல. பிரம்மசாரி, கிருஹஸ்தன், சந்நியாசி என்று புருஷர்களுக்கு மூன்று பருவ வாழ்க்கை சொல்வதுபோல, பெண்களுக்குக் கன்னி, கிருஹினி, விதவை என்கிற மூன்று பருவ வாழ்க்கைகளும் சகஜமானவை தான் என்கிற நினைப்பு உண்டு.

சாதாரணமாகச் சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்திலே ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு விதவையாவது உண்டு. ஒவ்வொரு விதவைக்கும், அவரவர் குடும்பத்திலே உரிய இடம் உண்டு; உரிய அன்பு உண்டு, குடும்பத்தாரின் உள்ளங்களிலே. ஹிந்துக்குடும்பங்களில் விதவை களின் நிலைமை கண்ணீருக்கு மட்டுந்தான் உரியது என்று எண்ணுவது மடமையாகும். அவர்களில் பலர், பலவிதமான பாவங்களை எழுப்ப வல்லவர்கள்தாம். மற்றவர்களுக்கு இருந்ததைவிட அவர்களுக்கு வாழ்க்கை ஓரளவு சுலபமாகவே இருந்தது. வழிகள் சந்தேகத்திற்கு இடமின்றித் தீர்மானமாகிவிட்டன. பலருக்குப் பெரும் பிரச்னைகளாக இருந்த பல விஷயங்கள் அவர்களுக்குப் பிரச்னைகளே அல்ல, தெருவிலே கன்னி விதவைகள் இருந்தார்கள்; வயசு அதிகமாகாத விதவைகள் இருந்தார்கள்; இரண்டொரு விபசார விதவைகள் இருந்தார்கள். ஆனால் விதவைகளின் தொகைக்கு, விபசார விதவைகள் சதவிகிதம் ரொம்பக் குறைந்ததுதான். தற்காலத்து விதவா விவாக உரிமையை வற்புறுத்தும் நாவல்களைப் படித்தறியாததனால் விபசார விகிதம் குறைவாக இருந்ததோ என்னவோ யார் சொல்ல முடியும்?

குப்பிப்பாட்டி அதிருஷ்டக்கார விதவை. வயது அதிகமாகி விட்டது; கிட்டத்தட்ட அறுபதை எட்டிக் கொண்டிருந்தாள் அவள். குடும்பம் எல்லாம் சீராக இருந்தது. மூணு சீட்டாடிக் கணவன் இழந்து விட்ட நில புலன்களை எல்லாம் மகன் சம்பாதித்துத் திரும்பவும் வாங்கி விட்டான். மாட்டுப் பெண்களும் பேத்திகளும் மாறி மாறிப் பிரசவத்திற்கென்றும், உடம்பு சரியாக இல்லை, ஊர்போய் இருந்து சாப்பிட்டுவிட்டு வரலாமே என்றும், குப்பிப்பாட்டியிடம் உள்ள பிரியத்தால் அவளுடன் கொஞ்சநாள் இருந்துவரலாமே என்றும், வந்து

போய்க்கொண்டிருப்பார்கள். அவள் வீடு, எப்பொழுதும் கலகலப்பாக இருந்தது. அவள் வாழ்க்கை பூரணத்துவம் பெற்று நிறைந்திருந்தது. இன்பங்களோ, துன்பங்களோ அவளை அதிக நேரம் பாதிக்க முடியாது மனசில் ஒன்று உறைக்கு முன் வேறு ஓர் இன்பமோ துன்பமோ குறுக்கிட்டுவிடும் அவளுக்கு. இதைப் பரிபூரண வாழ்க்கை என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?

குப்பிப்பாட்டி வர்ணமற்ற ஸ்திரீ. அவளுடைய வர்ணமெல்லாம் அவள் குடும்பத்தின் காரணமாக அவளுக்கு அவ்வப்போது ஏற்பட்டதுதான். எல்லாவற்றிற்கும் மேலாக அவளுக்கு அந்தரங்க சுத்தியாக ஒரு தெய்வபக்தி இருந்தது. தன் மூத்த பையன் சுயமாக உள்ள தன் கெட்டிக்காரத்தனத்தினால் வேலை செய்தான்; நல்ல பதவியில் இருந்தான்; ஏராளமான சம்பளம் வாங்கினான் என்று அவள் எண்ணவில்லை. சாத்தனூர் முருகன்தான் வேலை செய்ததும், சம்பளம் வாங்கித்தந்ததும் என்பதே அவள் நினைப்பு. மற்றப்படி எப்படியோ? இந்தச் சிந்தனை முருகனுக்குத் திருப்தி கரமானதாகத்தானே இருக்க வேண்டும். அவன் குப்பிப்பாட்டிக்கு அள்ளியே தந்தான் என்று சொல்லவேண்டும். தள்ளாத காலத்திலும், கையில் எண்ணெய்க் கிண்ணத்துடன் சாத்தனூர் முருகன் சந்நிதியிலே தினம் மாலை வேளையில் காட்சியளிக்கத் தவறமாட்டாள் குப்பிப்பாட்டி.

சாதாரணமாகக் குப்பிப்பாட்டியை வெளியில் தெருவில் காண்பதே அபூர்வம். தன் வீடு உண்டு, தன் வேலையுண்டு என்று இருப்பவள் அவள். இன்று ஏதோ காரியமாக, ஒருகரை ஆத்திலே போய் ஏதோ அவசர சமாசாரம் சொல்லிவிட்டுவர அதிகாலையில் கிளம்பியிருந்தாள்.

சங்கிலிப்பாட்டி எதிர்ப்பட்டவுடனே குப்பிபபாட்டி, "எங்கேடியம்மா சங்கிலி? எங்கே மேற்கே கிளம்பினே?" என்றாள்

முதலில் ஒத்தைப் பிராமணன். 'இப்போது எங்கே போகிறாய்?' என்ற கேள்வி. சங்கிலிப்பாட்டிக்குக் கோபம் கோபமாக வந்தது. அருமந்தப் பேரனின் குமாஸ்தா வேலை இன்னும் எட்டிப் போய்க் கொண்டிருந்தது அவள் கற்பனையில். "நீ கேக்கலியேன்னு தாண்டியம்மா காத்திண்டிருந்தேன்" என்று பதில் அளித்தாள் சங்கிலிப்பாட்டி

ஆனால் கோபத்துக்காகக் குப்பிப்பாட்டியுடன் நின்று பேசாமல் போய்விட இஷ்டமில்லை அவளுக்கு. குப்பிபபாட்டிககு

மனசில் ஒரு வருத்தத்தையாவது உண்டாக்கி விட வேண்டும். அல்லது மனசில் இருக்கிற - எங்கேயாவது மூலையில் ஒரு வருத்தம் இருக்காதா? - ஒரு வருத்தத்தையாவது கிளப்பிவிட வேண்டுமென்று ஆசை அவளுக்கு. "கிட்டுவின் பிள்ளைக்கு உடம்பு சரியாயில்லைன்னியே! எப்படி இருக்கு?" என்றாள்.

"சுவாமி புண்ணியத்திலே தேவலைன்னு நேத்திக்குத்தான் கடுதாசு வந்திருக்கு?"

"பட்டணத்திலே உன் பேத்தி...?"

"பிரசவிச்சிட்டா; ஆஸ்பத்திரியிலேதான் பிரசவமாம். ரொம்ப சிரமப்பட்டுது. ஆனால் தாயும் குழந்தையும் சௌக்கியம்" என்றாள் குப்பிப் பாட்டி.

வேறு எதுவும் குத்தலாகக் கேட்கச் சங்கிலிப்பாட்டிக்கு வாய் வரவில்லை. தன் தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டது போல, "வரட்டுமா? தீக்ஷிதர் ஆத்துவரையிலும் போறேன்"

"என்ன ஏதாவது விசேஷமா?"

"ஒண்ணுமில்லை; ஒரு நாள் பார்த்துத் தரச் சொல்லணும்; போறேன்" என்று கிளம்பினாள் சங்கிலிப்பாட்டி.

சங்கிலிப்பாட்டியின் நிழல் அவளுக்கு வழி காட்ட விரும்பியது போல அவள் முன் சென்றது. குப்பிப்பாட்டியின் நிழல் அவளைப் பின் தொடர்ந்தது.

காபி சாப்பிட்டுவிட்டு மாமா சிவராமையர் வீட்டு வாசலில் வந்து நின்ற மேஜர் மூர்த்தி, இந்த இரண்டு பாட்டிகளும் ஏதோ இரண்டு வார்த்தைகள் நின்று பேசிவிட்டுப் பிரிவதைப் பார்த்தான்.

## 9

குப்பிப்பாட்டியையும் சங்கிலிப்பாட்டியையும் பார்த்து விட்டு மேஜர் மூர்த்தி தன்னைப் பின்தொடர்ந்து திண்ணைக்கு வந்து தன் மாமாவைக் கேட்டான்: "இந்தத் தெருவிலேயே விடோஸ் ஜாஸ்திதான் போல் இருக்கு."

மாமா சொன்னார்: "நாலைந்து வருஷங்களுக்கு முன்னால் நீ பார்த்திருந்தாயானால் தெரியும். தெருவுக்கு 'விடோஸ் ஸ்டிரீட்'

என்று பெயர் வைத்துவிடலாம்போல் இருந்தது. வீட்டுக்கு ஒரு விதவையைத் தவிர தெருவிலே யாரும் கிடையாதே."

"இந்த நாலைந்து வருஷங்களிலே மாறுவதற்கும் காரணம்..?"

"ரிடையர் ஆனவா நாலைந்துபேர் வந்து குடியேறினாங்கிறது முதல் காரணம். இரண்டாவது, சென்னை இவாகுவேஷன் டயத்திலே ஊருக்குக் குடும்பங்களை அனுப்பினவாள்ளே பாதிப்பேர், முன்னால் நினைத்தபடி குடும்பத்தைப் பட்டணத்துக்கு அழைச்சுக்க முடியாமே போயிட்டுது. தவிரவும் அரிசி முதலிய அவசியப் பொருள் எல்லாம் இங்கே கிராமத்திலே இன்னிக்கும் கிடைக்கிறமாதிரி நல்ல தரமா பெரிய பட்டணங்களிலே கிடைக்கல்லே. அவசியமில்லாத பொருள்கள் கிடைக்காது. பிளாக் மார்க்கெட்டிலே பணங்கொட்டி வாங்கறதை விடத் தேவை யில்லைன்னு இருந்துவிடுவது சுலபம் இங்கே! முக்கியமாகப் பொருளாதாரக் காரணங்கள்தான் எல்லாம். கிராமத்திலே ஓரளவு ஜனங்கள் ஜாஸ்தியாயிட்டா..." என்றார் மாமா.

"பொதுவா இது சரியான விஷயம்னு தோணல்லியே எனக்கு" என்று ஆக்ஷேபித்தான் மேஜர் மூர்த்தி.

மாமா ஒரு விநாடி யோசித்தார். "நீ என்ன சொல்றேன்னு எனக்குப் புரியறதுன்னு நினைக்கிறேன். நம்மைப்போல நடுத்தர வகுப்பினருக்கு மட்டுமே நான் சொன்னது உண்மை. மத்தவாளைப்பத்திப் பொருளாதார நிபுணர்களைத்தான் கேட்டுக்கணும். எனக்குத் தெரியாது."

"அதுவும் சரிதான். தவிர அவா நிபுணத்துவத்திலே ஆளுக்கு ஒன்று சொல்லத்தான் சொல்வார்கள்."

"சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தைப் பற்றிய வரையில் நான் சொன்னது உண்மை. 1939 வாக்கிலே என்னையும் ஒருகரை சீனுவாசையரையும் மகாலிங்கையரையும் தீக்ஷிதரையும் தவிர, தெருவிலே புருஷாளே கிடையாதுன்னாப் பார்த்துக்கோயேன்!"

"இப்பவே தெரு, உயிர் இல்லாமல்தான் இருக்கு. அப்போ எப்படி இருந்திருக்கும்னு–" வெளிக் குறட்டோரம் போய்த் தெருவிலே எச்சில் துப்பிவிட்டு, மேஜர் மூர்த்தி மீண்டும் ஒரு தரம் கிழக்கும் மேற்கும் பார்த்தான். வெயில் ஏற ஏறத் தெருவிலே வெயில் தெரியாதுபோல் இருந்தது. இரண்டு புறங்களும், தென்னை மரங்களும் பாக்கு மரங்களும் வேப்ப மரங்களுமாக வளர்த்திருந்தார்கள்.

மகாலிங்கையர் வீட்டு வாசலில் அழகிய தளமிட்ட சிறு கிணறும் கிணற்றைச் சுற்றி ஏழெட்டுப் பாக்குச் செடிகளும், நாலைந்து புஷ்பச் செடிகளும் இருந்தன. செம்பரத்தை மலர்ந்திருந்தது. பாரிஜாதம் கீழே கல்தளத்தில் உதிர்ந்திருந்தது. பட்டுரோஜா ஏராளமாக மொட்டுக் கட்டியிருந்தது. ஒரு மல்லிகைக்கொடிக் 'கமான்' ஆர்ச்சில், சிவப்பு எறும்புகளும் சம்பங்கிப்பூக்களும் மல்லிகை இலைகளுமாக அடர்ந்திருந்தது. தெருவிலிருந்த ஒவ்வொரு வீட்டு வாசலிலுமே, புஷ்பச் செடிகளும் வேறுபல சிறு மரங்களும் இருந்தன. அவன் மாமா வீட்டு வாசலிலே ஒரு கிளுவை மரம் தளதளவென்று தளிர் விட்டிருந்தது. மூன்று வேப்ப மரங்கள் முண்டும் முடிச்சுமாக, கோணலும் மாணலுமாக உயர்ந்தோங்கி வளர்ந்து அடர்ந்திருந்தன. கோடை நாளில் அக்கிரஹாரம் மிகவும் சுகமாக இருக்கும் என்று எண்ணினான் மேஜர் மூர்த்தி. ஐப்பசியில் கோடை மாதிரிதானே இருந்தது?

தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான் மேஜர் மூர்த்தி. மணி ஏழரை தான் ஆகியிருந்தது. ஆனால், அதற்குள்ளாகவே சூரிய உஷ்ணம் அதிகமாகத்தான் இருந்தது. அவன் அணிந்திருந்தது மிகவும் மெல்லிய பனியன்தான். ஆனால் உடம்பெல்லாம் கசகசவென்று புழுக்கமாகத்தான் இருந்தது.

தெருவிலே இப்போது நடமாட்டத்துக்குக் குறைவில்லை. கிழக்கே ஒரு வீட்டு வாசலிலே குழிபோட்டு, நாலைந்துபேர் கோலி அடித்துக் கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் அல்ல. அந்தக் கோஷ்டியிலே ரொம்பச் சின்னவனுக்கு வயசு பதினைந்தாவது இருக்கும். ரொம்பப் பெரியவனுக்கு வயது இருபத்தைந்திருக்கும். கோலி ஆடக் கை வளையாததை அவன் வீச்சுப் பேசிச் சமாளித்துக் கொண்டிருப்பதுபோலத் தெரிந்தது. ஏழெட்டுப் பேர் இந்தக் கோஷ்டியைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். கக்கத்திலே தன் சாமான்களை இடுக்கிக் கொண்டே மேலே ஒரு துணியைப் போர்த்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான் கிராமத்துப் பரியாரி. அன்று திங்கட்கிழமை என்று ஞாபகம் வந்தது, மேஜர் மூர்த்திக்கு.

மோர்க்காரி ஒருத்தி கூவிக் கொண்டிருந்தாள். பட்டணத்து மோர்க்காரி மாதிரியில்லை அவள். அவளைப் பார்ப்பதற்கு ஆரோக்கிய மாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. அவளிடம் ஒரு கப் மோர் வாங்கிச் சாப்பிட்டால் தேவலைபோல் இருந்தது மூர்த்திக்கு. ஆனால் மாமாவும் மாமியும் என்ன சொல்வார்களோ என்ற பயம் அவனுக்கு.

கூடைக்காரிகள் இரண்டொரு பேர் கீரை, முள்ளங்கி என்று கூவிக் கொண்டிருந்தார்கள். ஒரு கிழவி, சிவராமையர் வீட்டு வாசலில் நின்று மிகவும் சாந்தமாக, "என்ன ஐயரே! இன்னிக்கி ஒண்ணும் வாங்கல்லியா?" என்று கூப்பாடு போட்டாள். அவளைக் கூப்பிட்டுக் கூடையை இறக்கிவிட்டு, "இந்தா! வாங்கிக்கோ... பச்சையா ஏதாவது வாங்கு" என்று தன் மனைவிக்கு உத்தரவிட்டார் மாமா.

அக்கிரஹாரத்துப் பேர்வழிகள் பலர், குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருந்தார்கள். காரியம் இருந்ததோ இல்லையோ, அவசரமாகத்தான் போய் வந்து கொண்டிருந்தார்கள். ஒரு கிழவர் பச்சைக் கம்பளியை மேல்வேஷ்டியாக மடித்துப் போட்டுக்கொண்டு, நெற்றியிலே கீற்றுச் சந்தனமும் விபூதியும் பளபளக்க ஸ்நானபானாதிகளை முடித்துக் கொண்டு மேற்கு நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். மேற்கேதான் இருக்க வேண்டும் கோயில் என்று எண்ணினான் மேஜர் மூர்த்தி. அவர் அவ்வளவு அதிகாலையில் கோயிலுக்குப் போகாமல் வேறு எங்கே போய்க் கொண்டிருக்கப் போகிறார்?

"கோயில் எந்தப் பக்கம்?" என்று மாமாவை விசாரித்தான் மேஜர் மூர்த்தி.

"மேற்கே தெருவோடு போய் வடக்கே திரும்பி நாலடி நடந்தா சின்ன அக்கிரஹாரம். அதோடு மேற்கே போய் வடக்கே திரும்பினால் தேர் முட்டி; கீழ் சன்னதி; கோயில்" என்றார் சிவராமையர்.

ஒரு நிமிஷம் கழித்துச் சொன்னார். "இரு, கொல்லையிலே வேலியடைக்கப் பறையனை வரச்சொல்லியிருக்கேன். அவன் வந்ததும் அவனுக்கு வேலை சொல்லிவிட்டு வரேன். கோயிலுக்குப் போயிட்டு வரலாம்..." என்றார்.

கோயிலுக்குப் போவதென்பது மிகவும் புனிதமான, மிகவும் நூதனமான அநுபவம் மேஜர் மூர்த்திக்கு. தான், அதற்கு அச்சமயம் தயாராக இருப்பதுபோலத் தோன்றவில்லை அவனுக்கு, "இப்ப வேண்டாம். சாயங்காலமாப் போயிட்டு வருவோம்" என்றான் மூர்த்தி.

"எங்க ஊரைச் சுத்திப் பார்க்கவேண்டாமா?"

"பாத்துண்டாப் போச்சு. முதல்லே இந்தத் தெருவைத் தெரிஞ்சுக்கறதுன்னா முக்கியம்" என்றான் மூர்த்தி.

சிவராமையருக்குப் பரம திருப்தி; "உன்னைப்போல நம்ம

அரசியல் தலைவர்களெல்லாம் இருந்துட்டா, எவ்வளவோ தேவலை" என்றார்.

"நம்ம ஊர் அரசியல் தலைவர்களையெல்லாம் பத்திப் பேச எனக்கு எதுவும் யோக்யதை இருப்பதாகத் தெரியவில்லை. நான் உள்ளூர்க்காரனே இல்லையே!"

"உன் போட்டோவைப் பேப்பரிலே பார்த்ததுலே நீயும் ஒரு தலைவனாகறத்துக்கு இருப்பதாகத்தான் நான் நினைத்தேன்" என்றார் சிவராமையர்.

"ஒரு நாள் பூராவும் எனக்கும் அந்த ஆசை இருந்தது. ஆனால் மத்த தலைவர்களையெல்லாம் பார்த்த பிறகு அந்த ஆசை போய்விட்டது" என்றான் மூர்த்தி.

மின்னூலாக்கம்
முரளிதரன்

"ஏன்?"

"ஏன் என்கிறது ரொம்பப் பெரிய கேள்வி. அவ்வளவு சுலபமாகப் பதில் சொல்லிவிட முடியாது.. ஒண்ணு சொல்லலாம்; எனக்குச் சுய நலம் ஜாஸ்தி. என் சுக சௌகரியங்களும் என் சம்பாத்தியமுந்தான் எனக்கு முக்கியமாகப் படறது."

"நம்ப தலைவர்களிலேயும் பலருக்கு அப்படித்தான்னு ஊரார் சொல்றாளே!" என்றார் சிவராமையர்.

"அதைப்பத்தி நம்ப சொல்வானேன், நம்ப கவலைப் படுவானேன்? எனக்கு என் கவலை ஜாஸ்தியாய்ப் போச்சு. ஊர்க்கவலை குறைவாக இருக்கு. நான் எப்படித் தலைவனாக இருக்க முடியும்?"

"தலைவராக விரும்பற ஒவ்வொருவரும் இந்த லைனிலே ஆத்ம விசாரம் செய்துவிட்டு வந்தாளான்னா நன்னாருக்கும்; நாட்டுத் தலைமை அப்புறம் நன்னாவே நடக்க ஆரம்பிச்சுட்டாக்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை"

"நம்ப ஜனங்களுக்குத் தலைவனாயிருப்பது ரொம்பவும் சுலபம்; பல விஷயங்களிலேயும் நம்ப ஜனங்களுக்கு வழிகாட்ட வேண்டியது அவசியமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் தலைவனாகப் போக எனக்கு ஆசையேயில்லை. சும்மா என் காரியத்தைப் பாத்துண்டு சும்மா இருந்தாப் போதும்னுதான் இருக்கு" என்றான் மூர்த்தி.

தெருவோடு தங்கள் அநுபவங்களைப் பேசிக் கொண்டு இரண்டு முஸ்லிம்கள் போனார்கள்.

"இந்த ஊரிலே துலுக்காள் வேறே இருக்காளா?" என்றான் மூர்த்தி.

"துலுக்கத் தெரு ஒன்று இருக்கு" என்றார் சிவராமையர் சுருக்கமாக.

தெருக்கோடியிலே மூங்கிற் புதரண்டை நின்றுகொண்டு, "சாமி, சாமி!" என்று யாரோ உரக்கக் கத்தினான். "பறையன்-வந்துட்டான்" என்றார் சிவராமையர். காவேரிக்கரை போகும் வழியாக அவனைக் கொல்லைப்புறம் வரச்சொன்னார் சிவராமையர். அக்கிரஹாரத்துக்குள்ளே ஹரிஜன் வரக்கூடாது என்று கூறுவது உண்மைதான் என்பது மேஜர் மூர்த்திக்கு அப்போதுதான் தெரிந்தது. கிறிஸ்துவுக்குப் பின் 1946-லே, மகாத்மா காந்தியின் இருபது வருஷப் பேச்சுக்கெல்லாம் பிறகும், இது சாத்தியமாக இருந்தது என்பது அவனுக்கு ஆச்சரியமூட்டுவதாகத்தான் இருந்தது.

அதிகாலையில் வந்திருக்க வேண்டிய குடுகுடுப்பைக்காரன் ஒருத்தன், நேரம் தப்பி வந்து, ஜக்கம்மாவைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய குடுகுடுப்பையும் எவ்விதமான இசையோடும் சேராத பாட்டும், சம்பிரதாயமான ஏதோ ஒன்றை ஞாபக மூட்டுவதுபோல இருந்தன. கிராமத்திலே, காலைப்பொழுது குடுகுடுப்பைக்காரன் இல்லாமல் இருக்கமுடியாது போலும்!

தெருவோடு போய்க்கொண்டிருந்த ஒருவர், "என்ன சிவராமையர் வாள்! சௌக்கியந்தானே!" என்று விசாரித்து விட்டுப் பதிலுக்குக் காத்திராமலே போய்விட்டார்.

அவர் போனபிறகு, "அவர்தான் ஒருகரை சீனுவாசையர். எங்க ஊரிலேயே மிகவும் சுவாரசியமான புள்ளி" என்றார் சிவராமையர் தம் மருமானிடம்.

"சுவாரசியமான மனுஷரா? அப்படீன்னா? நான் அவரைச் சரியாகப் பார்க்கவில்லையே!" என்றான் மேஜர் மூர்த்தி.

சிவராமையர் மட்டுமல்ல. தெருவிலே பலரும் ஒருகரை சீனுவாசையரை ஒரு தினுசான மனிதராகத்தான் கருதினார்கள். அப்படிக் கருதுவது ஓரளவு சுலபமாக இருந்தது. இல்லாவிட்டால் ஒருகரை சீனுவாசையர் ஞாபகப்படுத்திய சில அடிப்படையான வாழ்க்கைத்

தத்துவங்களை மறப்பது மிகவும் சிரமப்பட்டுப் போய்விடும். ஒரு தினுசு என்று கூறிவிட்டு, அசடு, பைத்தியக்காரன் என்று பேச்சளவில் சொல்லாமல், செயலளவில் ஏற்றுக்கொண்டு ஒதுங்கிவிடுவது கிராம சமூகத்தில் சுலபமாக இருந்தது.

அவர் சுவாரசியமான மனிதர் என்பதைச் சிவராமையர் ஒப்புக் கொண்டார். பலர் அதையும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

பார்ப்பதற்கு ஒன்றும் சீனுவாசையர் தனிப்பட்ட மனிதராகக் காணப்படமாட்டார். அவர் முகத்திலே இருந்த எடுப்பான மூக்கு, அவருக்கு வாழ்க்கையிலே வெற்றி வாங்கித் தந்திருக்க வேண்டுந்தான்; ஆனால் மூக்கு, தன் கடமையைச் செய்யத் தவறிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அவருக்கு ஏழெட்டுப் பிள்ளைகள்; நாலைந்து பெண்கள். இதில் ஒரு பகுதி மூத்த சம்சாரத்தினுடையவை. இளையாள், பாவம்! நோஞ்சான். அவளை வியாதி படுத்தாத நாளே கிடையாது. கும்பகோணம் டாக்டர் வாரத்துக்கு ஒருநாள் வீட்டிற்கு விஜயம் செய்யாமல் இருப்பது துர்பலம். நாலைந்து வருஷங்களாகவே ஒருகரை சீனுவாசையரின் இரண்டாவது மனைவி, படுத்த படுக்கையாகத்தான் இருக்கிறாள். லக்ஷ்மி என்கிற பெயருடைய அவள், உண்மையிலேயே லக்ஷ்மிதான் என்று தெருவார் கூறுவார்கள். தன் மூத்தாள் பிள்ளை குட்டிகளைத் தன் பிள்ளைகுட்டிகளைவிட ஆரம்ப நாட்களில் அதிகப் பிரியத்துடன் நடத்தி, அதனால் தெருவாரின் நல்ல அபிப்பிராயத்தையும் நன்மதிப்பையும் பெற்றவள் அவள். பார்ப்பதற்கும் அழகாக இருப்பாள்.

ஒருகரை சீனுவாசையர் தர்மிஷ்டர்; செலவாளி. சக்திக்கு மீறிய தயாள புத்தியுள்ளவர். இது சில சமயங்களில் அவரையே கஷ்டத்துக்கு உள்ளாக்கிவிடும். அதற்காகத் தாம் தாராள மனப்பான்மையை இழந்துவிட வேண்டியது அவசியம் என்று அவர் ஒப்புக்கொண்டுவிடமாட்டார். உதாரணமாக ஒரு கதை அவரைப் பற்றி:

அவருக்குத் தோட்டங்கள் நிறையவே இருக்கின்றன. உரிய காலத்தில் மாவும் பலாவும் நாரத்தையுமாக அவருக்கு விளைவு அதிகமாகவே இருக்கும். தேவைக்கு அதிகப்பட்டு விளைவதை விற்றுக் காசு பண்ண வேண்டும் என்கிற ஆசை கிடையாது அவருக்கு. முதல் தரம் ஆனதையெல்லாம் வண்டியேற்றி, வண்டிச் செலவையும் தாமே கொடுத்து, கும்பகோணத்தில் வக்கீல் பண்ணிவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த தன் மூத்த சகோதரனுக்கு அனுப்பிவிடுவார். இந்த

மூத்த சகோதரனைப்பற்றிப் பிறகு சொல்லுகிறேன். அண்ணாவுக்கு அனுப்பியதுபோக எஞ்சுவதைப் பலருக்கும் தாராளமாகப் பகிர்ந்து அளித்துவிடுவார். சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்திலே வருஷத்தில் ஏழெட்டு நாட்களாவது ஒவ்வொரு வீட்டாரும், ஒருகரை ஐயர் கொடுத்தனுப்பியது என்று எதையாவது சாப்பிடாமல் இருக்கமாட்டார்கள் என்று சொல்லலாம். எதையும் எதிர்பார்த்து இதையெல்லாம் செய்பவரல்ல இவர். சுபாவத்தில் இருந்த ஒரு தாராளபுத்தி: அவ்வளவுதான்.

ஒரு நாள் தெருவுக்கெல்லாம் கொடுத்ததுபோக மிஞ்சிய ஒரு பலாப்பழத்தை வீட்டிலே நறுக்கச் சொன்னார். அவருடைய படுகைத் தோட்டத்துப் பலா ரொம்பவும் நன்றாக இருக்கும். நறுக்கியது வேரிலே காய்த்துப் பழுத்திருந்த பலாப்பழம். ருசிக்கும் மணத்துக்கும் கேட்கவா வேண்டும்! அவர் வீட்டில் பெரியவர்களும் சின்னவர்களுமாகப் பத்துப் பன்னிரண்டு பேர் வழிகளாவது இருந்தார்கள். ஒருகரை ஐயரோ ஒரு பழத்தைத் தவிர மற்றதை எல்லாம் தானம் செய்துவிட்டார். ஒரு பழம் நறுக்கினால் ஆளுக்கு நாலு சுளை கிடைப்பதே சந்தேகம். பெரியவர் சும்மா இருந்துவிடலாம். சிறுவர்களால் - அதுவும் பலாப்பழ விஷயத்தில் - சும்மா இருக்க முடியுமா? எல்லாம் போகத் திண்ணையில் வந்து அன்று உட்கார்ந்த மகாலிங்கையருக்கும் அவர் பிள்ளைக்கும் அன்று நறுக்கிய பலாப்பழத்தில் இரண்டிரண்டு சுளை கொண்டு வந்து கொடு என்று ஒருகரை ஐயர் உத்தரவிட்டதும், பையன்களுக்கு மட்டுமல்ல, அவர் மனைவி லக்ஷ்மிக்குமே கோபம் வந்துவிட்டது.

ஒருகரை ஐயரின் பிள்ளைகள் எல்லோரும் கெட்டிக்காரர்கள்; அதுவும் மூத்தபிள்ளைக்கு விஷமம் ஜாஸ்தி. அவன் அப்போது கும்பகோணம் கலாசாலையில் பிஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். சமையலறையில் இருந்தபடியே அவன், "அந்த மாமாவுக்குப் பலாச்சுளை பிடிக்காது; அவர் பிள்ளைக்கு அது உடம்புக்கு ஒத்துக்காது" என்று சொன்னபோது மகாலிங்கையருக்கோ அவர் பிள்ளைக்கோ இன்னது செய்வது என்றே தெரியவில்லை. இதேதடா சங்கடம் என்று எவ்வளவு சீக்கிரம் அங்கிருந்து நகர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நகர்ந்து விட்டார்கள்.

இதில் விசேஷம் இதுதான்; இது சங்கடமான நிலைமை என்று ஒருகரை ஐயர் ஒப்புக்கொள்ள மாட்டார்.

நியாயம், தர்மம் போன்ற பலவிதமான அசட்டுக் கொள்கைகளை உடையவர் ஒருகரை ஐயர். முன்னொரு காலத்தில் இதெல்லாம் அசட்டுத் தனமில்லாத கொள்கைகளாக இருந்திருக்கலாம்; 1946-ஆம் வருஷ முடிவிலே இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னும் நியாயம், தர்மம் எல்லாம் உலகில் உண்டு, ஆட்சி செலுத்த முடியும் என்று நம்பியிருப்பதே அசட்டுத்தனந்தானே; வேறு என்ன? என்றுதான் மற்றவர்கள் நினைத்தார் கள்.

அசடு, பைத்தியக்காரன் என்று இவரை ஓரளவு ஒதுக்கி விட்டு இருந்துவிடுவதும் அவ்வளவு சாத்தியமாக இல்லை. அவர் செய்த ஒவ்வொரு காரியமும் தெருவிலே, கிராமத்திலே மற்றவர்களையும் பாதிப்பதாக இருந்தது. அவருடைய நல்ல தனத்துக்கு எதிராகத் தங்களுடைய கெட்டதனம் பயன்தர மறுப்பதை எண்ணிய பலருக்கும் கோபம் வந்தது என்னவோ உண்மைதான். இந்தக் கோபத்தை நியாயமானது என்று சொல்லமுடியாதுதான், எனினும் அதனால் பாதகம் இல்லை என்றுதான் எல்லோரும் எண்ணினார்கள்.

நல்லார் ஒருவருக்காகப் பெய்யும் மழை என்கிற வாக்கியம் பொய்த்துக் கொண்டிருந்த காலம் அது. நல்லவர்களுக்காக மழை பெய்ததோ என்னவோ? அதன் பலன்கள் கெட்டவர்களுக்குத்தான் அதிகமாகக் கிடைத்தன. ஒருகரை ஐயரைப் போன்ற பெரிய மிராசுதார்கூடத் தம்முடைய நல்லதனத்தினால், நியாயம், தர்மம் என்கிற கொள்கைகளினால் நிலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக விற்றுத் தம் செலவுகளைச் செய்துவர வேண்டியிருந்தது. மகாலிங்கையரைப் போன்றவர் - சொல்பம்தான் என்றாலும் - ஏதோ எப்படியோ பணம் சேர்த்து நிலம் வாங்கினார். ஒருகரை ஐயருடைய மிகச் சிறந்த நிலத்தில் ஆறு மா இப்படி மகாலிங்கையருக்குச் சேர்ந்துவிட்டது என்பது ஆச்சரியமான விஷயம் என்றுதான் சொல்ல வேண்டும். மகாலிங்கையருக்கு ஆஸ்தி குறைவு. வருவாயும் குறைவு. ஆனால் குடும்பம் குறைவில்லை. எனினும் அவரிடம் பணம் சேர்ந்தது. காலணாவும் அரையணாவுமாக மூச்சைப் பிடித்துக்கொண்டு சேர்ப்பது என்றால் என்ன அர்த்தம்? பிறருக்கு நியாயப்படி கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் சேர்ப்பது என்றுதான் அர்த்தம். நிலம் வாங்கினார். அவருடைய நிலத்திற்குப் பணம் உதவியவர்கள் கீரைக்காரி முதல் பிள்ளையார் வரையில். சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோருமேதான். மேஜர் மூர்த்தியைச் சந்தித்து ஒரு விநாடி பேசினாரானால் உடனேயே அவன்

தன்னைப்பற்றியவரையில் எத்தனை காலணாப் பெறுவான் என்று மதிப்பிட்டுவிடுவார் மகாலிங்கையர்.

ஒருகரை ஐயரின் செல்வத்திலே அதே கீரைக்காரி முதல் பிள்ளையார் வரையில் எல்லோரும் பங்கெடுத்துக்கொண்டார்கள். அவர் மனசறிந்து மனம் ஒப்பியே கொடுத்தார்; ஏமாந்து கொடுக்கவில்லை. கொடுத்துக் கட்டுமா என்று சிந்தித்துத் தயங்கவில்லை அவர். கொடுத்தார்; கொடுக்கக் கொடுக்க இருந்தது. அவரிடமும் குறைந்து விட்டது வாஸ்தவமோ என்னவோ? அவர் குறைவை உணரவில்லை.

பெரிய குடும்பத்தில் நாலாவது பிள்ளையாகப் பிறந்தவர் சீனுவாசையர். ஏழைக் குடும்பந்தான். பணக்கார உறவினர் ஒருவர் ஸ்வீகாரம் கேட்டபோது ஏழைப்பெற்றோர் கொடுத்து விட்டார்கள். ஒருகரை சீனுவாசையர், சாத்தனூர் வீட்டுக்கும் நிலத்துக்கும் அதிபர் ஆன கதை இது. ஏராளமான சொத்து என்று ஒரு விதத்தில் சொல்லலாம்; ஒருகரை ஐயர் கையில் அது ஏராளமாகவே உபயோகப்பட்டது.

ஸ்வீகாரத் தந்தையும் தாயும் மனங்கோணாமல் முகம் சிணுங் காமல் நடந்து கொண்டார் சீனுவாசையர். ஸ்வீகாரத் தந்தை, சீனுவாசனை ஸ்வீகாரம் எடுக்கும்போதே கிழவர்; அவர் அதிக நாள் உயிர் வாழவில்லை. அதற்குப் பிறகு விதவைத்தாய் நெடுநாள் இருந்தாள்; ஆயுளில் கடைசிப் பத்து வருஷங்கள் பைத்தியமாகவே இருந்தாள். அவளை வீட்டை விட்டுத் துரத்தியிருந்தால் யாரும் சீனுவாசையரைக் கேட்டிருக்க முடியாது; கடவுள் தவிர யாரும் கேட்க முடியாது. ஆனால் சீனுவாசையர் அதைச் செய்யவில்லை. ஸ்வீகாரத் தாயை வீட்டிலேயே வைத்து, எவ்வளவு ஜாக்கிரதையாகக் காப்பாற்ற முடியுமோ, அவ்வளவு ஜாக்கிரதையாகக் காப்பாற்றினார். மூத்த மனைவி மூன்று பெண்களைப் பெற்றுவைத்துவிட்டு இறந்து விட்டாள். இரண்டாவது மனைவியாக வந்தவள் பைத்தியக்கார மாமியாருக்கும், தாராள மனம் படைத்த கணவருக்கும். திருப்திகரமாகக் குடித்தனம் நடத்தினாள். அவளுடைய சீமந்த புத்திரி இறந்த பிறகுதான் கிழப் பைத்தியம் இறந்தாள். சாகிற சமயத்திலே ஒரு தெளிவான விநாடி யிலே, தன் ஸ்வீகாரப் பிள்ளையும், நாட்டுப் பெண்ணையும் மனங் குளிர வாழ்த்தி ஆசி கூறிவிட்டுச் செத்து வைத்தாள்.

ஸ்வீகார சொத்திலிருந்துதான் கும்பகோணத்துக் குடும்பம்

நிர்வகிக்கப்பட்டு வந்தது என்று கூறுவது முழுவதும் உண்மையாகாது. சீனுவாச ஐயருக்கு மூத்தவர்கள் மூவரும் - சீனுவாச ஐயர் சொத்துக்கு அதிபதியாகத் தலையெடுக்கு முன்னரே - ஏதோ தலைப்பட்டுச் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டார்கள். அவருடைய தம்பிகள் இருவரும், சீனுவாச ஐயரின் பணக்கார நிழலிலே ஒதுங்கினார்கள். ஏராளமாகச் செலவு செய்து அவர்களை நல்ல படிப்புப் படிக்கவைத்தார். அவர்களுடைய படிப்பும் வீணாகவில்லை. இளையவன் பெரிய வக்கீலாகத் தஞ்சாவூரிலே தினம் நானூறு ஐந்நூறு என்று சம்பாதித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு மூத்த வன் வடக்கே அக்கவுண்டண்டு ஜனரலாக மாதம் ஆயிரத்தைந்நூறு சம்பாதித்துக் கொண்டிருந்தான். அவர்கள் சுபாவம் தனிப்பட்ட சுபாவம். யாரிடமும் தனிப்பிரியம் என்று சொல்ல எதுவும் இல்லாமல் தங்கள் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருப்பவர்கள் அவர்கள்.

சீனுவாசையருடைய அண்ணன்மார்கள் மூவருக்கும் தம்பியின் ஸ்வீகார சொத்தால் ஏராளமான லாபம். அண்ணா, அண்ணா என்று பய பக்தியுடன் செய்வார் ஒருகரை ஐயர். இதைச் சுயநலத்துக்கு உபயோகப் படுத்திக்கொள்ளக் கூடியவர்கள் அவருடைய அண்ணன்மார்கள் மூவரும் என்பதுதான் வருத்தப்படவேண்டிய விஷயம். உழைப்பும் இடையறாத கவனிப்பும் தரவேண்டிய லாபமும், முதலில் இருந்து நாற்பது வருஷங்களில் மறைந்துவிட்ட மூன்று வேலி நிலமும், கும்பகோணத்தில் சீனுவாசையரின் அண்ணன்மார்கள் வீட்டிலே தேடிப் பார்த்தால் கிடைக்கும் என்று தெரு வார் அனுதாபப் பட்டுச் சொல்வார்கள். ஆனால் இதை அனுதாபத்துக்குரிய விஷயமாக நினைக்கவில்லை சீனுவாசையர். அண்ணன்களுக்கு உரிய தைச் செய்ததாகத்தான் அவர் நினைப்பு.

அவருடைய மூத்த பிள்ளை விஷமக்காரன்; மகா கெட்டிக் காரன் என்று ஏற்கெனவே சொல்லிவிட்டோம் இல்லையா? கும்பகோணத்துப் பெரியப்பா யாராவது வந்துவிட்டால், எதிர்வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்து, தன் மனசிலுள்ளதை அவன் சொல்ல ஆரம்பித்து விடுவான். பெரியவனாகி நினைவு தெரிந்த நாள்முதல் அவனுக்கு - அவன் பெயர் ராமசந்திரன் - தன் தாய் படுகிற கஷ்டமும், தன் தகப்பனாரால் வீட்டில் ஏற்படுகிற பொருளாதார நெருக்கடியும் நன்கு தெரிந்திருந்தன. 'சுருட்டிண்டு போக வந்துவிட்டான் பாருடா?' என்று தன் பெரியப்பாவைப் பற்றிக் கூறுவான் ராமசந்திரன். பெரியப்பாவுக்கு மரியாதை தர வேண்டும் என்கிற ஞாபகமே

கிடையாது அவனுக்கு. அவர்களும் மரியாதைக்கு உரியவர்கள் மாதிரி அப்படி நடந்துகொண்டுவிட மாட்டார்கள்.

சீனுவாசையரின் ஸ்வீகாரத் தாய் பைத்தியம் என்று சொன்னேனல்லவா? அதுமட்டும் அல்ல. சீனுவாசையரின் சொந்தக் குடும்பத்திலேயே பைத்தியம் உண்டு. அவர் தாத்தா பைத்தியமாக இறந்தார். அவருடைய அத்தைகளில் ஒருத்தி முற்றிய பைத்தியம்; இன்னமும் உயிருடனிருக்கிறாள். இப்படியாக அவருடைய குடும்பத்து ரத்தத்திலேயே பைத்தியக் களங்கம் கலந்திருந்தது.

சீனுவாசையரின் மூத்தபிள்ளை கெட்டிக்காரன். விஷமக்காரன்; ஆனால் பைத்தியமுங்கூட. சாத்தனூர் சர்வமானிய அக்ரஹாரத்திலே சிறுவனாகவும் பையனாகவும் பெரியவனாகவும் அவன் செய்த அட்டூழியங்களைச் சிறிதேனும் சொல்ல வேண்டியது அவசியந்தான்; ஆனால் அதை அதற்குரிய இடத்திலே சொல்லலாம். இந்த இடத்தில் ஒன்றுமட்டும் சொல்ல வேண்டும். மற்றப்படி எப்படியோ? அவனுக்குப் படிப்பு நன்றாக வந்தது. சென்னை ராஜதானியில் முதலாவதாக பி.ஏ. ஹானர்ஸ் பரீக்ஷை பாஸ் செய்துவிட்டு, ஒரு கல்லூரியில் நல்ல சம்பளத்தில் வேலையாக இருந்தான்.

அவனுடைய முதல் தம்பி சந்திரசேகரனும் அவனுடன் இருந்தான். பி.ஏ. படித்துக் கொண்டிருந்தான். அவனும் கெட்டிக்காரன்தான்.

சீனுவாசையர் இந்த விஷயத்தில் ரொம்பவும் அதிருஷ்டக்காரர் தான். அவருடைய ஏழு பிள்ளைகளில் ஒன்றுகூடச் சோடை போகவில்லை. பேச்சிலும் படிப்பிலும் ஒருவரையொருவர் மிஞ்சிவிடுவார்கள். மூத்தபையனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது; ஒரு குழந்தையும் இருந்தது. அவன் இப்போதெல்லாம் சாத்தனூருக்கு விடுமுறை நாட்களில் வருவதோடு சரி.

ஒருகரை ஐயரையும் அவர் குடும்பத்தையும் பற்றி இங்கே இவ்வளவு சொல்லியது போதும் என்று நினைக்கிறேன். அவருடைய குணாதிசயங்கள் சற்று விசித்திரமாகவேதான் இருக்கும். சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தில் நாம் தங்கவேண்டிய இந்த ஒருநாள் பொழுதில் அவரைப் பற்றிச் சாவகாசமாகவே அறிந்துகொள்ளப் பொழுது இருக்கிறது; உரிய இடத்தில் அறிந்துகொள்ளுவோம்.

மேற்கே சற்றுமுன் போன ஒருகரை சீனுவாச ஐயர் கிழக்கே

திரும்பி வந்துகொண்டிருந்தார். தெருவிலே போகிறவர், வருகிறவர்களிடம் எல்லாம் நின்று, அவர்களையும் நிறுத்தி இரண்டொரு வார்த்தை பேசி விட்டுத்தான் நடந்தார் அவர்.

வருகிறபோது அவரைச் சரியாகக் கவனித்தான் மேஜர் மூர்த்தி. அவருக்கு வயசு அறுபதுக்குமேல் ஆகியிருக்க வேண்டும். எனினும் வயது அவ்வளவு ஆனதாகத் தெரியவில்லை. சின்ன முகமும் சின்னக் கண்களும் மெலிந்த தேகமும் சற்று உயரமுமாகக் காட்சி அளித்தார் அவர். தோய்த்துத் தோய்த்துக் காவியேறியிருந்த ஒரு வேட்டியும், மேலே பட்டுக் கரை அங்கவஸ்திரமும் அணிந்திருந்தார். இரண்டும் சலவையை ஆதியில் பார்த்ததாகத்தான் இருக்கும். ஒருகரை ஐயர் எந்தத் துணியையும் இரண்டாவது சலவைக்குப் போடுவது கிடையாது.

நிமிர்ந்து நின்றுகொண்டு, ஒரு கையை இடுப்பில் தாங்கிக் கொண்டு தலையை ஒரு புறமாகச் சாய்த்தபடியே பேசினார் அவர். எல்லோரிடமும் ஒரே மரியாதையாகத்தான் பேசினார் அவர். எதிர்ப்பட்ட பரியாரி, வண்ணான், கூடைக்காரி, பால்காரன், மகாலிங்கையர், சுப்புப் பாட்டி, ஏழு வயதுச் சின்னமணி எல்லோருடனும் பேசாதிருக்கக் கூடாது என்பது அவர் கொள்கைபோலும். எல்லோருடனும் உரக்கவே சிரித்துச் சிரித்துக்கொண்டுதான் பேசினார். சிறுவர்கள்கூட அவரிடம் நின்று ஒரு வார்த்தை பேசினார்கள் என்பதையும் கவனித்தான் மூர்த்தி.

சிவராமையர் வீட்டு வாசலிலும் ஒருவிநாடி நின்றார். சிவராமையரிடம் சொன்னார்; "சாஸ்திரிகளைத் தேடிண்டு போனேன். அவரில்லை. மேலத்தெருவுக்கு எங்கேயோ போய் விட்டாராம்" என்றார்.

"பல ஜோலிக்காரரர் அவர்" என்றார் சிவராமையர்.

"நம்ப தெருவிலே இருக்கிறது ஒரே ஒரு சாஸ்திரிகள்; அவர் மேலத் தெருவுக்குப் போயிடறார். நமக்குச் சாஸ்திரிகள் தேவையானால் நம்ப போகணும் மேலத்தெரு சாஸ்திரிகளைத் தேடிண்டு" என்றார்.

அவரே ஒரு விநாடி கழித்து இன்னொன்றும் சேர்த்துக் கொண்டார். "சாஸ்திரிகள் விஷயத்திலே மட்டுமல்ல; எல்லா விஷயங்களிலும் இப்படித்தான் இருக்கு. நம்ப தெருவிலே இருக்கிறது ஏதாலேயும் நமக்குப் பிரயோசனங் கிடையாது..... இருக்கிறதில்லை;

பாருங்களேன்!" என்றார்.

இதே கருத்துக்கு வேறு உதாரணமும் சேர்த்தார் ஒருகரை சீனுவாசையர்; "நம்ப தெருவிலே இருக்கிற படித்தவர்களாலே நமக்கு ஏதாவது கொஞ்சமாவது பிரயோஜனம் இருக்கா. பாருங்களேன். நமக்குக் கும்பகோணம் கோர்ட்டிலே வேலையிருந்தாக்கூட நாம் நம்ம தெரு வக்கீலைத் தேடிண்டு போறதில்லை; வேறு வக்கீலைத்தான் தேடறோம். நம்ப படிப்பு நமக்கு உபயோகமாறதில்லை, ஸார். நான் அதைப் பார்த்தாகி விட்டது" என்றார்.

"வாங்களேன்! இப்படித் திண்ணையிலே இரண்டு நிமிஷம் உட்கார்ந்துட்டுப் போங்களேன்," என்றார் சிவராமையர்.

"உட்கார்றதுக்கு நேரம் எனக்கு ஏது?" என்று கூறிக்கொண்டே வாசல் ஹாலோடி ஏறி வந்து திண்ணையில் உட்கார்ந்தார் ஐயர்.

அவருக்குத் தன் மருமகனை அறிமுகம் செய்து வைத்தார் சிவராமையர். மேஜர் மூர்த்தியைப்பற்றி விசாரித்து அறிந்து கொண்டபின் ஒருகரை சீனுவாசையர் சொன்னார்: "சம்பளம், யுத்தப்படி எல்லாம் சேர்த்து வாங்குவதிலும், யுத்த விலையில் சாமான்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்குவதிலும் தவிர, மற்றப்படி யுத்தம் அக்கிரஹாரத்தில் யாரையும் அதிகமாகத் தொடவில்லை என்று நான் நினைத்தேன்."

"வெள்ளத்திலே துரும்புபோல என்னையும் அடித்துக் கொண்டு போயிற்று யுத்தம் என்று சொல்லலாமே தவிர, அதை ஒரு அநுபவமாகவே நான் இதுவரையில் கருதவில்லை என்பதுதான் உண்மை. சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தில் என் மாமா ஆத்துக்கு வந்த பிறகுதான் என் அநுபவங்களின் தராதரங்கள், அவற்றின் முக்கியத்துவம் எல்லாம் எனக்குத் தெரியவந்தன என்று நான் நினைக்கிறேன். நான் வாழ ஆரம்பித்ததே, சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்துக்கு வந்த பிறகுதான் என்று எனக்குத் தோன்றத் தொடங்கியிருக்கிறது" என்றான் மூர்த்தி.

ஒருகரை ஐயர் ஒரு விநாடி தயங்கினார். பிறகு சொன்னார். "பேச்சு நன்றாகப் பேசறேள்; ஒப்புக்கொள்ளுகிறேன். பேச்சிலே கொஞ்சம் உண்மையின் கலப்பு இருந்துட்டா நல்லது தான்" என்றார். மேஜர் மூர்த்திக்குத் தூக்கிவாரிப்போட்டது. உண்மைதான். அவன் கூறியது ஓரளவு மிகைப்படுத்திக் கூறியதே தவிர வேறல்ல. ஆனால் உணர்ச்சி வேகத்திலும் உண்மை ஓரளவு அதிலே கலந்திருக்கத்தான் இருந்தது.

இதனால் ஒருகரை சீனுவாசையரிடம் அவன் மதிப்பு ஒருபடி உயர்ந்தது. அவர் மனிதர் மனோபாவத்தை ஓரளவு உணர்ந்த மாதிரிதான் பேசினார். ஒரு கணம் சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்திலே அவர் ஒட்டாதவராக இருக்கவேண்டும் என்று மூர்த்தி எண்ணினான். ஆனால் அது தவறு; அவரைப் போன்றவர் கள் இன்னும் பத்துப்பேர் தெருவிலே இருந்துவிட்டால் கிராமத்து வாழ்க்கை முன்னெல்லாம் இருந்தது என்றார்களே அந்தமாதிரி வளம் பெற்று மீண்டும் விளங்கத் தொடங்கினாலும் தொடங்கி விடலாம்.

"என் பேச்சுப் பிடிக்கவில்லை உங்கள் மருமானுக்கு. அதான் சட்டுனு பேச்சை நிறுத்திக் கொண்டு விட்டார்" என்றார் ஒருகரை ஐயர், சிவராமையரிடம்.

"சற்று நிதானமாகப் பேசறவன்தான் என் மருமான்" என்று அவனுக்கு உதவி செய்ய வந்தார் சிவராமையர்.

இந்த உதவி தனக்குத் தேவையாக இருந்ததுபற்றி மேஜர் மூர்த்திக்கே வெட்கமாகத்தான் இருந்தது. அவன் சமாளித்துக் கொண்டு, "நான் சொன்னதில் எந்த அம்சத்தில் உண்மை குறைவாக இருந்தது என்று யோசித்துக்கொண்டிருந்தேன்" என்றான்.

இதற்குள் ஒருகரை சீனுவாசையரின் கவனம் அவனிடமிருந்து திரும்பிவிட்டது. சிவராமையரின் பேத்திகளில் ஒருத்தி வாசற்படிமேல் வந்து நின்றுகொண்டு இரண்டு கைகளாலும் நிலைப்படியைப் பிடித்துக் கொண்டு, ஒற்றைக்காலை ஆட்டிக் கொண்டே நின்றாள். ஒரு கரை சீனுவாசையரைப் பார்த்ததும் அவளுக்கு வெட்கம் தோன்றிவிட்டது. நாக்கைப் பிதுக்கிக் கொண்டு ஓடிவிட்டாள். "என் மாட்டுப்பொண் என்ன, இந்தக் காலத்து மாட்டுப் பொண்கள்ளாம் மாதிரி இல்லை. மாமனாரைக் கண்டால் வெட்கப்படறாளே!" என்றார். மேஜர் மூர்த்தியின் முகத்தில் தெரிந்த புரியாத பாவத்தைக் கண்டு, "அந்தப் பொண்ணை என் மூன்றாவது பிள்ளை கிருஷ்ணமூர்த்திக்குக் கல்யாணம் செய்து கொள்ளப் போறேன் ஸார்" என்றார்.

ஒரு விநாடி கழித்துச் சிவராமையரைக் கேட்டார்.

"ஆமாம். உங்க மருமானுக்குக் கல்யாணம் ஆயிடுத்தோ?" என்று.

"இத்தனை நாழி இதைக் கேக்காமல் இருந்துட்டேளேன்னு பார்த்தேன்; இன்னும் ஆகல்லை" என்றார் சிவராமையர்.

"எங்க அண்ணா பேத்திக்கு ஊர் ஊராக அலைஞ்சிண்டிருக்கேனே நான்! உங்க மருமான்னா, நல்ல குடும்பம், பார்க்க லஷணமாயிருக்கான். ஜாதகம் கொடுங்கோ" என்றார் சீனுவாசையர்.

"தேடிப் பார்த்துத் தரேன்."

"எங்கே தேடப்போறேளோ?" என்றான் மேஜர் மூர்த்தி கேலியாக. அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அவன் சாத்தனூர் வந்து 16 மணி நேரத்திற்குள்ளாக அவன் கல்யாணத்தைப்பற்றி இதுவரையில் இருபது தடவையாவது பிரஸ்தாபம் வந்திருக்கும்போல் இருந்தது! சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்திற்குள் வந்திருந்தவர்கள் எல்லோருக்குமே அந்தத் தெருவார் கல்யாணம் செய்து வைத்துவிட்டுத் தான் மற்றக் காரியங்களைப் பார்ப்பார்களோ?

ஆனால் ஒருகரை சீனுவாசையர் அவனை லட்சியமே செய்யவில்லை. அவர் அவனுடைய மாமாவைக் கேட்டுக்கொண்டிருந்தார், "என்ன எதிர் ஜாமீன் கேட்பார்கள்?" என்று.

"அவனுக்கு எதிர் ஜாமீன் கேட்க யார் இருக்கிறார்கள்? அவன் இஷ்டம்" என்றார் சிவராமையர். ஒருகரை ஐயர் இந்த விஷயத்தை விடாமல் கிண்டிக் கேட்டுக்கொண்டிருந்தது அவருக்கு ஓரளவு சிரமமாக இருந்தது என்பது தெளிவாகவே தெரிந்தது.

"தை மாசத்திலே ஒரு முகூர்த்தத்தை ஏற்பாடு பண்ணிப் புடுவோம்னா!" என்று கூறிக்கொண்டே ஒருகரை ஐயர் அங்கிருந்து நகர்ந்தார். படி இறங்கும்போதுதான் அவருக்குப் புதிதாக அறிமுகம் ஆனவரிடம் விடை பெற்றுக்கொள்ளவில்லை என்பது ஞாபகம் வந்ததுபோலும்! கைகூப்பிக் கும்பிட்டுவிட்டு, "வரேன் ஸார்! மத்தியானமா ஆத்துப்பக்கம் வாங்களேன்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

அவர் போனபிறகு சிவராமையர் சொன்னார்: "அவாத்திலே பிள்ளை குட்டிகள் ஏராளமா இருக்கு. ஒவ்வொண்ணுக்கும் கல்யாணம் ஆறது அரும்பாடு. தெருவிலே எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அவளைத் தன் மாட்டுப்பெண் என்பார்; எந்தப் பிள்ளையைப் பார்த்தாலும் எங்காத்து மாப்பிள்ளை என்பார் அவர்."

அக்கிரஹாரத்திலே சந்தடி அடங்கிக் கொண்டிருந்தது என்பதைக் கவனித்தான் மேஜர் மூர்த்தி. கோலிக்குண்டு ஆடிக் கொண்டிருந்தவர்கள் கூட ஓய்ந்துவிட்டார்கள். பழையது சாப்பிடுவது என்கிற பழைய பழக்கம் இன்னும் கிராமத்திலே ஆட்சி

செலுத்தியதனால் அதற்கு இதுதான் சமயமாக இருக்க வேண்டும். இரண்டொரு கூடைக்காரிகள் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒருத்தி, "தயிரோ தயிர்!" என்று கூவினாள். இன்னொருத்தி கறிகாய்காரி. ஒரு மலைப் பாம்பைத் தோளின்மேல் போட்டுக் கொண்டு ஒரு தாட்டியான பிச்சைக்காரன் ஒவ்வொரு வீட்டுக் குறடாக ஏறி இறங்கிக்கொண்டிருந்தான். மலைப்பாம்பு அவனைப்போலப் பஞ்சம் அறியாத ஜந்துவாக, வழுவழுவென்று பிரமாண்டமானதாக இருந்தது என்பதைக் கவனித்தான் மேஜர் மூர்த்தி.

"இவன் எதற்காகப் பிச்சைக்காரனாக வேஷம் போட வேண்டும்?" என்று தன் மாமாவைக் கேட்டான் மேஜர் மூர்த்தி.

"வேலை செய்ய மனசில்லாத சோம்பல்தான் காரணமாக இருக்க வேண்டும்" என்றார் சிவராம ஐயர்.

"இவங்களை எல்லாம் கட்டாயப்படுத்தி வேலை வாங்க வேண்டும்."

"அது சுலபமில்லை."

"இவங்களுக்குப் பிச்சை போடுவதை நிறுத்திவிட வேண்டும்" என்றான் மேஜர் மூர்த்தி.

"சுலபத்தில் யாரும் போடுவதில்லை. அவனுக்கு எப்படியோ கல்லிடிமங்கத்தனத்தில் ஒரு பிடி சோறு, தேவைக்கு அதிகமாகவே கிடைத்து விடுகிறது. அவன் ஏன் வேலை செய்யப் போகிறான்?"

வீட்டுக் கொல்லையிலிருந்து, "சாமி! சாமி!" என்று பறையன் குரல் கொடுத்தான். "போய் அவனுக்கு வேலை சொல்லிவிட்டு வரேன்" என்று உள்ளே போனார் சிவராமையர்.

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இருந்ததுபோலவே ஒவ்வொரு ஊருக்கும் - ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஒவ்வொரு தெருவுக்குமே - தனி ஆத்மா, தனி உயிர், தனி உள்ளம், தனி வாழ்வு இருந்தது என்பது ஏற்றுக் கொள்ளவேண்டிய விஷயம்.

திரியும் நன்றாக இருந்து, எண்ணெயின் தரமும் சரியாக இருந்தால் ஒவ்வொரு தீபமும் சரியாக ஒளி தந்துவிடுந்தான். தனித்தனியாகப் பெரிய விஷயங்கள் இல்லை, இவை இரண்டும்; எனினும் இரண்டும் சரியாக அமைவது சில இடங்களில், சில சமயங்களில்தாம் என்பது மனிதர்கள் கண்கூடாகக் காண்கிற உண்மை.

தெரு என்பது வெறும் தீபந்தான். திரியும் எண்ணெயும் அதிலுள்ள மனிதர்கள்.

கிராமத்து வாழ்விலே நம்பிக்கை இழந்துவிட்டார்கள், ஜனங்கள் இன்று. அதற்குக் காரணம் என்று எதைச் சொன்னால் என்ன? உண்மை ஒன்று நிலைத்துவிட்டது. பட்டணத்து வாழ்வு மனிதர் மனத்தை மயக்கி விட்டது. உப்புச் சப்பில்லாத வாழ்க்கைதான் அது; அவசரத்திலே, தின்கிற சோறு கையில் ஒட்டாது; ஓட்டம் பிடிக்கிற அவசர வாழ்க்கைதான் அது. அந்த அவசரந்தான் மனசை மயக்கியதோ? யார் சொல்ல முடியும்? தெய்வ அமைதி அலுத்துவிட்ட சமயத்தில் ராக்ஷஸ அவசரம் அலுக்காது இருக்க இடம் இருக்கும் அல்லவா?

ஒருவர்பின் ஒருவராக, குடும்பத்தலைவர்களும் அவர்களைப் பின்பற்றிக் குடும்பத்தவர்களும் கிராமத்திலிருந்து நான்கு தலை முறைகளாகவே நகர்ந்துகொண்டு வந்திருக்கிறார்கள் என்பது உண்மை. சிவராமையர் சொன்னார்: 'சில வருஷங்களுக்கு முன் வீட்டுக்கொரு நாதியற்ற விதவையைத் தவிர அந்தத் தெருவிலே யாரும் இருக்கவில்லை' என்று. நல்ல வேளையாக யுத்தம் வந்து பட்டணங்களில் நெருக்கடி ஏற்பட்டது; இல்லாவிட்டால் சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்திலே இப்பொழுதிருக்கும் நாலைந்து பாழ்மனைகளுக்குப் பதிலாக இருபது முப்பது பாழ்மனைகளாவது இருந் திருக்கும்.

மேஜர் மூர்த்தி மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போதே தெரிந்தது. வீடுகளில் பாதிக்கு மேல் புதுக்கிச் செப்பனிடப் பட்டவைதாம். ஒரு சில, பூரணமாகப் புதுப்பிக்கப்பட்டிருந்தன; பல வீடுகள், அதிகச் செல வில்லாமல், பழசுக்கு மேல் ஒட்டுப் போட்டு, ஒட்டுப் போட்டுப் புதுப்பிக்கப் பட்டிருந்தன.

சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்திலே ஓர் அமைதி குடி கொண்டிருந்தது; ஏமாற்றுதலான அமைதி என்று சொல்லலாம். ஏனெனில் அந்த அமைதி அந்தத் தெருவாசிகள் யாரிடமும் இருந்ததாகத் தெரியவில்லை. தெருவின் புறத்தோற்றத்திலே அமைதி இருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் அந்த அமைதி மனிதர்களின் அகத்திலே எதிரொலி செய்யவில்லை. அந்நியனாக வந்து அதிக நேரம் அங்கே இன்னும் தங்காத மேஜர் மூர்த்திக்கே அது புரிந்தது.

சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரம் எப்பொழுதாவது ஒரு காலத்தில் தபோவனமாக இருந்திருக்கலாம். இப்போது அது தபோவனம் இல்லை. மனிதர்கள் என்று சொல்லிக் கொண்ட பல்வேறு தரப்பட்ட மிருகங்கள் வசித்துவந்த தெருதான். மற்ற ஊர்த் தெருக்களுக்கும் சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்துக்கும் வெளித்தோற்றத்திலே வித்தியாசம் நிறையவேதான் இருந்தது.

தெருவின் வசதிகளிலே, தோற்றத்திலே குறைவில்லை. ஆனால் தெரு மனிதர்களிடையே வேறு என்ன இருந்ததோ இல்லையோ, தபோபலம் மட்டும் இருந்ததாகத் தெரியவில்லை.

தெருவில் முப்பது வீடுகள் ஒழுங்காக இருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் ஆண், பெண், குழந்தை என்று ஒரு குடும்பம் எப்படியோ வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தது. எப்படி என்று அறிந்துகொள்ள விரும்பினான் மேஜர் மூர்த்தி.

இ. தே. ரா. பிரச்னைகளும் அகில இந்தியப் பிரச்னைகளும் இப்போது அவன் மனசை விட்டு மாயமாக மறைந்துவிட்டன. அவை எல்லாம் உயிரற்ற, அவசியமே அற்ற பிரச்னைகளாகத் தோன்றின இப்பொழுது. காலைவேளையில் சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தில், தான் என்கிற தனிநிலையில், தன்னலத்திற்காக அவன் இப்போது ஒரு பிரச்னையையும் எதிர் நோக்கவில்லை. தனக்கும் இந்தச் சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்துக்கும் எந்த மாதிரியான சம்பந்தம், எப்படி ஏற்படக் கூடும் என்று அவன் சிந்தித்துப் பார்க்க விரும்பவில்லை. ஏதாவது சம்பந்தம் ஏற்படும், எப்படியோ ஏற்படும், ஏற்படத்தான் போகிறது என்று அவன் மனசில் ஏதோ ஒன்று கூறியது.

காலைவேளையில் என்றுமே அவன் மனம் இப்படிக் குழம்பிய தில்லை.

ஐரோப்பாவில் கிழக்கு முனையிலும் மேற்கு முனையிலும் தவறான கட்சியில் யுத்தத்தில் ஈடுபட்ட மிகவும் முக்கியமான தவிர்க்க முடியாத நெருக்கடியான பல சந்தர்ப்பங்களிலுங்கூட அவனுக்கு இந்த மாதிரி உணர்ச்சி ஏற்பட்டு, மனசைக் குழப்பியது கிடையாது. தன் விதியை நேருக்கு நேர் எதிர்த்து நிற்பது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டதில்லை. இப்போது இந்த அமைதியான தெருவிலே, அப்படிப்பட்ட உணர்ச்சி உண்டாயிற்று அவனுக்கு. அசாதாரணமான அநுபவங்களில் பழகிய அவன், இந்தச் சாதாரண அநுபவத்தை,

தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு சிறு கிராமத்தில் ஒரு சிறிய அக்கிரஹாரத்திற்கு, தன் மாமா வீட்டிற்கு வந்ததை ஒரு பெரிய, அசாதாரணமான அநுபவமாக ஏன் எண்ண வேண்டும் என்பது தான் அவனுக்குத் தெரியவில்லை. மிகமிகச் சாதாரணமான இந்த அநுபவம் ஏன் விதியின் செயலாக அவனுக்குப் பட வேண்டும்? ஏன் தன் விஸ்தாரமான வாழ்க்கையிலே தவிர்க்க முடியாத செய்கையாகப் பட வேண்டும் அவனுக்கு?

சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தின் அழைப்பை அவன் அப்பொழுது ஏற்றுக்கொண்டதே விதியின் செய்கைதானே? தத்துவ ரீதியாக இந்த மாதிரியான விஷயங்களை எல்லாம் பற்றிச் சிந்திக்கப் பழகாதவன் மேஜர் மூர்த்தி. அநுபவபூர்வமாக, அதுவும் சொந்த அநுபவமூலமே, தத்துவங்களையும் லக்ஷியங்களையும் அறியப் பழகியவன் அவன்.

தன் வாழ்க்கையின் மற்ற எல்லா நாட்களையும்விட இந்த நாள் அதிக அர்த்தம் வாய்ந்தது என்று அவன் மனசில் தோன்றிய எண்ணத்துக்கு ஆதாரந்தான் என்ன?

பலம் பொருந்திய உள்ளம் பலஹீனமடைந்து விட்டதென்று அர்த்தமா? அல்லது எல்லா மனிதர்களுக்குமே அவர்கள் வாழ்வில் இந்த மாதிரி எண்ணம் என்றாவது ஒருநாள் தோன்றுவதுண்டா?

மேஜர் மூர்த்தி தொழிற்கல்வி தவிர வேறு எதையும் அவ்வள வாகப் படித்தறியாதவன். மிகவும் சுலபமாகப் பதில் சொல்லக்கூடிய பல பிரச்னைகளுக்குங்கூட அவனால் என்றுமே பதில் சொல்ல முடிந்தது கிடையாது.

ஒவ்வொரு மனிதனும் வாழுகிற ஒவ்வொரு நாளுமே அவன வனுக்கு, அவனவன் அளவில், ஒவ்வொரு விதத்தில் முக்கியமான நாட்கள் தாம். இந்த உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டுதான் மனிதன் ஒவ்வொரு நாளுமே வெற்றிகரமான வாழ்க்கை நடத்த முடிகிறது; எவ்வளவு வெற்றிகரமாக, அந்த நாளின், அந்த நாழிகையின், அந்த விநாடியின் செயலிலே ஈடுபடுகிறான் என்பதைப் பொறுத்ததுதான் வாழ்க்கையில் வெற்றி.

இன்று பொழுது விடிந்து இன்னும் நாலு நாழிகை நேரம் ஆகவில்லை. இரவு விழ இருபத்தைந்து நாழிகை நேரத்துக்குமேல் இருக்கிறது. அதற்குப் பிறகு தூக்கம் வர, நினைவு மறக்க ஒரு பத்து

நாழிகையோ பதினைந்து நாழிகையோ...?

விழித்தெழுந்தால் வேறு ஒரு நாள்!

விழித்தெழாவிட்டால், அது எந்தத் தேசத்தில் எந்தக் காலத்தில் எந்த நாள் என்று இன்னும் யாரும் கண்டு சொல்லிவிடவில்லை.

மேஜர் மூர்த்தி இஷ்டப்பட்டிருந்தானானால் அந்த நாளை அவன் வேறு ஓர் ஊரில் கடத்தியிருக்கலாம்.

அக்கிரஹாரத்திலுள்ள மற்றவர்களைப்போல் அவன், ஊரிலே தெருவிலே வேரோடியிருக்கவில்லை. அவன் அந்நியன்தான் அங்கே. ஒரு இரவுத் தூக்கமும், நாலு நாழிகைநேரச் சிந்தனைகளும் அவனை அத் தெருவான் ஆக்கிவிட முடியாது.

உலகிலே எங்கும், எந்தத் தெருவிலும், எந்த ஊரிலும் அந்நியனாக இருக்கவே பிறந்தவன் அவன்.

அப்படி இருப்பது நல்லதா, கெட்டதா என்று தீர்மானிக்க முயன்றான் அவன்.

மனிதன் என்று சொல்லிக் கொள்பவன் எங்கேயாவது ஒரு ஊரில், பரந்த பூமியில் ஒரு குறுகிய இடத்தில், வேரோடி நிற்பதுதான் நல்லது. அவன் உலகில் நிலைக்க, அவன் தேசமும் குலமும் குடும்பமும் உதவுகின்றன. அதில்லாவிட்டால் ஒருவனை மனிதன் என்று ஒப்புக் கொள்வதே சிரமமாகிவிடும். மனிதனுடைய மனிதத்தன்மை வளருவதே அவன் ஓரிடத்தில் வேரோடி நிலைப்பதனால்தான் என்று சொல்லவேண்டும்.

அம்மாமி, கல்யாணம் செய்துகொள்ளச் சொல்லி மேஜர் மூர்த்தியை வற்புறுத்தினாள். அவன் சாத்தனூர் வந்து சேர்ந்ததும் சேராததுமாக, முதல் இரண்டொரு வாக்கியங்கள் அவனுடன் பேசுவதற்குள்ளாகவே, அவள் வாழ்க்கைப் பிரச்னையின் அடிப்படையைத் தொட்டுவிட்டாள். அவளைப் பற்றிய வரையில் தத்துவ விசாரம் எல்லாம் தேவையில்லை. தலைமுறை தத்துவமாக வந்திருக்கிற மனுஷ்ய தத்துவம், குடும்ப தத்துவம், உலக தத்துவம், வாழ்க்கைத் தத்துவம் இவைதாம் அவளுக்குத் தெரியும்.

ஊரெல்லாம் சுற்றியலைந்த அவனுக்குத் தெரியாத இந்தத் தத்துவம் அவன் மாமிக்குத் தெரிந்துவிட்டதே!

வந்தவுடன் கல்யாணத்தைப்பற்றிக் கேட்டாளே!

ஆனால் கல்யாணம் செய்துகொள்ளவா சாத்தனூருக்குத் தன் மாமா வீட்டுக்கு வந்திருந்தான் மேஜர் மூர்த்தி?

## 10

சாத்தனூர் கிராமம் என்கிற தத்துவம் மிகவும் பழமையானது; நிரந்தரமானது.

சாத்தனூர் கிராமம் என்கிற தத்துவம் மாறுவதற்கு இடமே கிடையாது.

மனித தத்துவமும் குடும்ப தத்துவமும் அதன் அடிப்படைகள். ஒரு துளி ஜலத்திலே உலகம் பூராவையுமே காண்பவன் ஞானி. அதே போல் சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்திலே பிரபஞ்சத்தின் போக்குப் பூராவையும் கண்டுவிடலாம் என்று தோன்றியது மேஜர் மூர்த்திக்கு.

சாத்தனூர் கிராமம் புறத் தோற்றத்தில்கூட மாறுவது அவ்வளவாகச் சாத்தியமில்லை.

எரிமலை அருகில் இல்லை, நெருப்புக் கக்கி அதைச் சாம்பலாக்கி விட.

சாத்தனூரைக் கோயில்கள் காவல் காத்து நின்றன - தெய்வங்கள் தாமாக விரும்பிக் குடியேறின கோயில்கள். பூமா தேவி ஆடாமல் அசையாமல், ஆதிசேஷன் தோன்றாமல், பூகம்பம் வந்துவிடாமல் கனம் தந்து காவல் காத்து நின்றன.

சாத்தனூருக்குப் பகைவர்கள் இல்லை, பரந்த பூமியிலே.

சாத்தனூர், புண்ணிய பூமிதான். சந்தேகம் என்ன? அதன் பெயரைக் கேட்டவர்கள் இவ்வுலகில் மிகவும் சொல்பப்பேர்தானே இருக்க முடியும்?

மகா யுத்தங்களும், மகாமகா யுத்தங்களும் சாத்தனூருக்குப் பக்கத்தில் வந்தது கூட இல்லை.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது மகாயுத்தத்தின் கரு மேகங்கள் இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் கவிந்து கொண்டிருந்த

பொழுதுகூட, சாத்தனூரில் விலைவாசிகள் தவிர, வேறு எதுவும் பாதிக்கப் படவில்லை.

மேகங்களுக்கும் மேலிருந்து பதுங்கிப் பாய்ந்து அழிக்க விரும்பும் பகைவன், நிர்மலமான சாத்தனூர் வானத்திலே தவறியுங்கூடத் தோன்றிவிட வில்லை. எந்தப் பகைவனின் கவனத்தையும் கவராத புண்ணிய பூமிதான் சாத்தனூர்.

கடல் எங்கேயோ கிடந்தது. கடல் பொங்கினாலுங்கூட இடையில் உள்ளதை எல்லாம் அழித்துக் கொண்டுதான் சாத்தனூரை எட்ட முடியும்.

சாத்தனூருக்கு எதுவும் நேர்ந்துவிடாது; சாத்தனூரைத் தேடி வந்திருந்த தனக்குத்தான் ஏதாவது நேரவேண்டும்.

இருபது நாழிகை நேரத்தில், ஒரு பகல்வேளைப் பொழுது முடிவதற்குள், ஏதோ பிரமாதமாக நடக்கப்போகிறது என்கிற எண்ணம் எழுந்தது மேஜர் மூர்த்தியின் மனசிலே.

இந்தச் சிந்தனைக்கு ஆதாரம் ஏது?

தேவையா என்ன?

மனிதனின் வாழ்வில் நடப்பதில் முக்கியமானதெல்லாம் தேவையே இல்லாமல் நடப்பதுதான்.

தன்னை உந்தித் தள்ளிக்கொண்டு வந்து, சாத்தனூர் சர்வ மானிய அக்கிரகாரத்தில் தன் மாமா வீட்டில் கொண்டுவந்து நிறுத்திய விதி, தன்னை ஒரு பலமான, ஆழ்ந்த அநுபவத்துக்கு இலக்காக்கிச் சோதனை செய்யப் போகிறது என்று தோன்றியது மேஜர் மூர்த்திக்கு.

அன்று பொழுது அஸ்தமிப்பதற்குள் பிரமாதமாக என்ன நடந்து விட முடியும். அந்தக் கிராமத்தில்?

பிரமாதமாக ஏதோ நடக்கப்போகிறது என்றும், அதை வரவேற்க தான் தயாராக இருக்கவேண்டும் என்றும் அவன் உள்ளத்திலே ஒரு நினைப்புத் தோன்றி, விசுவரூபம் எடுத்து, பேயாட்டம் ஆடியது. எதற்காகவோ அங்கே திண்ணையில் உட்கார்ந்தபடியே காத்திருப்பதுபோலப்பட்டது, மேஜர் மூர்த்திக்கு.

சாத்தனூர் வரும் வரையில் மேஜர் மூர்த்தியின் மனசில் அப்படியான களங்கமும் கலக்கமும் இல்லை. ஆனால் வந்து, இரவு

தேவலை என்கிற உணர்ச்சி அவனுள்ளே மேலோங்கி நின்றது. ஆனால் பிராயச்சித்தம் உண்டா? செய்ய முடியுமா? - என்பதுதான் பிரச்னை. இராதுபோல் இருக்கிறதே என்று தோன்றியது.

மாமி கடிந்துகொண்டாள், செல்லமாக. "சீச்சீ! இப்படி எல்லாம் அசட்டுப்பிசட்டென்று உளறாதே. ஒரு கை அடித்துச் சப்தம் உண்டாகி விடாது; தண்ணீரைக் கையால் விலக்கினால் விலகிப் போய்விடாது. நீ சின்னப் பையன்; விஷயம் தெரியாமல் அலட்சியமாக இருந்துவிட்டாய் என்பதற்காக நாங்களும் - விஷயம் தெரிந்தவர்களும் - அலட்சியமாக இருந்துவிட முடியுமா?"

"நான் மேல்படிப்புப் படிக்க ஜர்மனிதான் நல்ல இடம் என்று தேடிக்கொண்டு போனது பிசகு, மாமி. இங்கே சாத்தனூருக்கு வந்திருக்க வேண்டும்" என்றான் மூர்த்தி.

"நீ கெட்டிக்காரன்தாண்டா?" என்றார் சிவராமையர். இந்த விஷயங்களை இவ்வளவு சின்ன வயசிலேயே அறிந்து கொண்டு விட்டாயே? அது பெரிசுதான். எனக்குக் குட்டிச் சுவருக்கு ஆகிற வயசு ஆகிறது. இன்னும் உங்க மாமி சொல்லுகிற விஷயங்களில் பாதிக்குமேல் புரிவதில்லை. நான் என்ன செய்யறது?" என்று அவர் குறைப்பட்டுக் கொண்டார்.

வேடிக்கையாக இருந்தது மூர்த்திக்கு. அவன் சொன்னான்: "இத்தனை நாள் மாமியுடன் வாழ்ந்து நீங்களும் ஞானம் பெற்றிருப்பீர்கள் என்றுதான் நினைத்தேன்" என்று. அவன் இதைக் கேலியாகச் சொல்லவில்லை. உண்மையிலேயே மாமியின் வார்த்தை ஒவ்வொன்றிலும் தெரிந்த அநுபவ ஆழம் அவனை வியப்புறத்தான் செய்தது.

"பொறு பொறு" என்றார் சிவராமையர். "மாமியினுடைய ஞானம் பூராவும் உனக்கு இப்போது- அதற்குள்ளாகவே, தெரிய வராது. அவளிடம் பாடம் கற்றுக்கொள்ளப் பெரிய பெரிய மகான்களெல்லாம் வந்து போவதில் தவறில்லை என்றுதான் எனக்குச் சிற்சில சமயம் தோன்றும்"

மாமி குறுக்கிட்டாள். ஆத்திரத்துடன், "நன்னாப் பரியாசம் பண்றேள், மாமாவும் மருமானுமாகச் சேர்ந்துண்டு! நான்தான் அகப்பட்டேனா, உங்கள் கேலிக்கு? மணி எட்டாயிடுத்து. போய், சொன்ன சாமானை எல்லாம் வாங்கிண்டு வாங்கோ. பதினொரு

மணிக்குள் இலை போட வேண்டாமா?" என்றாள்.

"இதுவும் அவளுடைய அறிவுப் பொக்கிஷத்தில் தோன்றுவது தான்" என்றார் சிவராமையர்.

"போறும்; அசடு இன்னும் வழியாதங்கோ. மருமான், பட்டணத்துக்குப் போய், நாட்டுப்புறத்து மாமா மாமியைக் கேலி பண்ணப் போறான்" என்றாள் மாமி.

கூடைக்காரி ஒருத்தி ஆளோடி ஏறி, "கீரையம்மா!" என்று கூவிக் கொண்டு வந்தாள். அந்தக் கூடைக்காரியைப் போலவே அவள் கூடையில் இருந்த கீரையும் 'தள தள' வென்று பசுமையாக இருந்தது. பல்லெல்லாம் தெரியச் சிரித்துக் கன்னத்தில் குழி விழ அவள் கடைக்கண்ணால் சிவராமையரையும் அவருடன் நின்ற மூர்த்தியையும் பார்த்துக்கொண்டே, "மாப்பிள்ளை ஐயா வந்திருக்காங்களா?" என்று விசாரித்தாள்.

சிவராமையர் சிரித்தார். மேல்நாட்டுப் பெண்கள் பலருடன், சமமாகக் கூச்சமில்லாமல் பழகிய மேஜர் மூர்த்திக்கு வெட்கமாக இருந்தது. கிராமத்தில் பலருக்குமே இந்த ஆண் பெண் உறவு விஷயத்தில், கல்யாணம் குடும்பம் என்கிற உறவில் களங்கமற்ற சிந்தனை இருந்தது. மேஜர் மூர்த்திக்கும் அவன்போல் நாகரிகமடைந்துவிட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆண் பெண் உறவுபற்றி மனசில் களங்கம் ஏராளமாகத்தான் இருந்தது.

மூர்த்தியின் மாமி கூடைக்காரியின் கேள்விக்கு நிஷ்களங்கமாகவே பதில் அளித்தாள். "மாப்பிள்ளை ஆகவேணும்டி யம்மா; மாப்பிள்ளையாக வேணும். நல்ல கீரையாக் கொடு" என்று காரியத்தில் கண்ணாகக் கேட்டாள்.

மூர்த்தி வாய்விட்டுச் சிரித்துவிட்டான்.

"நம்ம மங்களத்துக்கு நல்ல ஜோடிங்கம்மா" என்றாள் கூடைக்காரி.

"நீ முடிச்சு வச்சுட்டயோல்லியோ, சரி; கத்திரிக்காய் பச்சை மிளகாய் இருந்தால் கொடு" என்றாள் மாமி.

அதுவும் கொடுத்துவிட்டு, மூர்த்தியையும் சிவராமையரையும் கண்ணால் ஒரு வீச்சு வீசிவிட்டு, கூடையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு ஒய்யாரமாக ஒரு கையை வீசிக் கொண்டு நடந்தாள் கூடைக்காரி.

"பலே கைகாரி அவள்!" என்றார் சிவராமையர்.

"யாரு? கோவிந்தம்மாள்தானே? அடேயப்பா!" என்றாள் மாமி.

"கீரை பார்க்கறத்துக்கே குளுமையாக இருக்கு. இந்த மாதிரிக் கீரையை நான் பார்த்தே பலநாள் ஆகிவிட்டது" என்றான் மூர்த்தி.

"அரிசலாற்றுக்கும் காவேரிக்கும் இடையே உள்ள மாங்குடிப் படுகையில் பயிராகிற கறிகாய் ருசியாக இருக்கும். நன்றாகவும் இருக்கும்" என்றார் சிவராமையர்.

"அதுவும் ஒங்க மாமாவுக்குக் கோவிந்தம்மாள் கொணர்ந்து தருகிற காய்கறி, கீரை எல்லாம் தனி ருசியாகத்தாண்டா கிட்டா இருக்கும்." என்றாள் மாமி.

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான் மேஜர் மூர்த்தி. மாமியின் கபடமற்ற முகத்தைப் பார்த்த பிறகுதான், அது வெறும் கேலி என்று புரிந்தது அவனுக்கு.

## 11

சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்து வாழ்க்கை என்னவோ அந்தக் கூடைக்காரி கோவிந்தம்மாளைப்போலவே, அவளுடைய கூடைக் கீரையைப் போலவே, பசுமையாகவும் இளமையாகவும் மனசுக்குச் சுகம் தருவ தாகவுந்தான் இருந்தது என்று எண்ணினான் மூர்த்தி.

காலை இளம் வெயில் இப்போது இளமை மாறிச் சுள்ளென்று தைக்கத் தொடங்கிக்கொண்டிருந்தது. நீள நிழல்கள் சுருங்கிக் கொண்டிருந்தன.

சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்திலே ஜன நடமாட்டம் அதிகரித்துக் கொண்டிருந்தது. ஊரில் உயிர் இருப்பதை அறிவிக்கப் போதுமான ஜன நடமாட்டமே தவிர, அது ஜனக்கூட்டம் அல்ல. பட்டணத்திலும் டெல்லியிலும் பம்பாயிலும் கல்கத்தாவிலும், யுத்தகாலத்தில் ஜப்பானிலும், போர் முனையிலும் ஜனக்கூட்டத்தை அறிந்திருந்த மேஜர் மூர்த்திக்கு இந்த அவசரமற்ற ஜன நடமாட்டம்

திருப்தியளிப்பதாக இருந்தது.

சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்தில் அப்போது குறுக்கும் நெடுக்கும் போய்க்கொண்டிருந்த ஆண், பெண், குழந்தை இவர்களுக்கு எங்கும் போய்ச் சேர எவ்வித அவசரமும் கிடையாது. போகும் வழியில் ஒவ்வொருவருடனும் நின்று சாவகாசமாகப் பேசப் பொழுதிருந்தது. உட்கார்ந்து பேசக்கூடப் பொழுது இருந்தது.

பொழுது விடிவதும், ஸ்நான பானாதிகளும், உணவும் ஓய்வும், பொழுது அஸ்தமிப்பதும் உறங்குவதும் சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்தில் மிகவும் சாவதானமாக நடந்த காரியங்கள். உலகம் வேறு இடங்களில் வெகு துரிதமாக முன்னேறிக்கொண்டிருக்கலாம், பின்னேறிக் கொண்டிருக்கலாம்; அல்லது நின்ற இடத்திலேயே நிலைக்க அவசரம் அவசரமாக சிவராமையர் வீட்டில் வெகு சுகமாக, 'ஒரு லட்சியத்தை நோக்கி' வாழ்வு கம்பீரகதி போட்டுக்கொண்டிருந்தது.

லட்சியம் என்றும் நிலைத்து நிற்கக்கூடிய லட்சியம். அதனால் தான் அதை நோக்கிச் சாவதானமாக நடப்பது சாத்தியமாக இருந்தது.

உலகத்தில் மனிதன் தோன்றிய நாள் முதலாக இதுதான் மனிதனுடைய லட்சியம்.

இதை வேறு தினுசாகச் சொல்லிப் பார்த்துக்கொள்வது சரி என்று பட்டது மேஜர் மூர்த்திக்கு.

குடும்பத்தை லட்சியமாகக் கொண்ட இடத்தில்தான் மனித குலத்தின் உயர்ந்த கிளைகள் தோன்றியிருக்கின்றன. அந்தக் கிளைகளில் தான் மகோன்னதமான தனி மனிதர்கள் தோன்றியிருக்கிறார்கள்.

மிகவும் எளிய விஷயம். இது புரியத் தனக்கு இத்தனை நாள் ஆயிற்றே என்று இருந்தது மூர்த்திக்கு.

சுமார் இரண்டாயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னதாகவே இரண்டொரு தீர்க்கதரிசிகள் உணர்ந்துகொள்ளாமல் இல்லை. சீனத்தின் குருக்கள், "எங்கே தகப்பன் தகப்பனாக இருக்கிறானோ, பிள்ளை பிள்ளையாக இருக்கிறானோ, அண்ணன் அண்ணனாகவும், தம்பி தம்பியாகவும் இருக்கிறார்களோ, எங்கே புருஷனும் மனைவியும் புருஷனும் மனைவியுமாக இருக்கிறார்களோ, அங்கே அரசனும் அரசனாக இருப்பான்; மந்திரியும் மந்திரியாக இருப்பான்" என்று கூறி இருக்கிறார்கள்.

உண்மை இதுதான்.

யூதர்களும் ஹிந்துக்களும் சீனர்களும் உலகத்தில் வேறு எந்த ஜாதியினரையும்விட அதிக நாட்கள் நிலைத்து விட்டார்கள்.

ஏன் என்று கேட்டு, 'இந்தக் குடும்ப உறவு' என்கிற முடிவுக்கு வர எந்த ஆராய்ச்சியாளனுக்கும் இன்னும் தைரியம் வரவில்லையே!

ஆராய்ச்சியாளர்களின் முடிவுகள், இன்றைய விஞ்ஞான அதிகாரிகளின் முடிவுகள், மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசங்களை, வேற்றுமைகளை மிகைப்படுத்திக் காட்டுகின்றனவே தவிர வேறு அல்ல.

மனிதனுடன் மனிதனை நெருக்கமாகக் கொண்டுவர மேலை நாடுகளில் இன்று எவ்விதமான முயற்சியும் நடைபெற்று வரவில்லை.

உண்மையை வெகுநாட்களுக்கு முன்னரே அறிந்து கொண்டு வாழ்வு நடத்திய கீழைநாட்டு மக்களுங்கூட, இன்றைய நாகரிக மோகத்துக்கு அடிமைப்பட்டு உண்மையை மறந்து, அழிவு தேடி அல்லல்படுகிறார்கள் என்று எண்ணினான் மேஜர் மூர்த்தி.

என்ன அவசரம்? என்ன அவசரம்?

யாருக்கும் தெரியவில்லை.

இயற்கையும் அண்டை அயலிலுள்ள மனிதனும் சேர்ந்து செய்த சதிக்குப் பின் சதி என்கிற சரித்திர உண்மைகளை எல்லாம் மீறிச் சீனாவால் நிற்க முடிகிறது.

மனிதத் தன்மையை இழக்காமல் சரித்திர சோதனைகளுக் கெல்லாம் ஈடு கொடுத்துக்கொண்டு ஓர் இந்தியா நிற்கிறது. நூற்றுக் கணக்கான மாறுதல்களை, உருவம் அழியாமல் ஏற்றுக் கொண்டு மீள்கிறது.

யூத குலம் நாடு நாடாக வீடு தேடி அலைந்தும், கங்கணம் கட்டிக் கொண்டு பிறர் செய்கிற துன்பங்களை எல்லாம் சகித்துக் கொண்டும் சரித்திரத்திலே சிறந்த இடம் பெறுகிறது.

இடையில் தோன்றி நிமிர்ந்து நின்று கச்சை கட்டிக் கொக்கரித்த எத்தனையோ தேசங்கள், பிரம்ம வருஷத்தில் ஒரு விநாடி. இரண்டு விநாடி ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, உலகைப் படாத பாடெல்லாம் படுத்தி விட்டு மறைந்தே விட்டன. சரித்திர பாடத்தில்

தவிர வேறு எங்கும் அவை இன்று காணப்பட மாட்டா!

அவை அழிவைத் தேடி அவசரப்பட்டனபோலும்! அழிந்து விட்டன.

சீஸர்களும், நெப்போலியர்களும், ஹிட்லர்களும் வகுத்த வழிகள் அவசர வழிகள் என்று எண்ணினான் மேஜர் மூர்த்தி. அவர்களைப் பற்றி உலகம் படித்தது; அவர்கள் மாதிரி இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறதே தவிர, அவர்களுடைய சரித்திரத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ள யாரும் விரும்பியதாகத் தெரியவில்லை.

யாரும் என்று சொல்வது பிசகுதான்.

சாத்தனூர் சர்வமானிய அக்கிரகார வாசிகளை, அவர்களுடைய வாழ்க்கை வழிகளை யாரும் அழித்துவிட முடியாது. ஹிட்லரும் சரி, ஹிட்லருக்குமுன் பிரிட்டீஷ் இந்திய சர்வாதிகாரிகளும் சரி, அதற்கும் முந்திய இஸ்லாமிய ஔரங்கசீப்புகளும் சரி, சாத்தனூர் சர்வமானிய அக் கிரகாரவாசிகளின் வாழ்க்கை வழிகளைத் தொடவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

மனிதன் - சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்திலாவது மனிதனாக வாழ்வதை அவர்களால் தடை செய்ய முடியவில்லை.

பிரிட்டீஷாரின் அவசரச் சட்டங்கள் கூடப் பலிக்கத்தான் இல்லை என்று சிந்தனைப் பெருமிதத்துடன் நினைத்தான் மேஜர் மூர்த்தி. மனிதன் மனிதனாக வாழ முயல்வதைப பிரிட்டீஷார்கூட அதிகாரபூர்வமாகத் தடை செய்துவிட முடியவில்லை.

ஜப்பானை ஜெயிக்க, ஜர்மனியைத் தோற்கச் செய்து அழிக்க, பிரிட்டீஷாருக்கு அதி அவசரந்தான். ஆனால் அவர்களுடைய அவசரம் சாத்தனூர்வாசிகளுக்கு அவ்வளவாகப் புரியக்கூட இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

"சாத்தனூர் கிராமத்திலிருந்து யுத்தத்திற்கு எத்தனை பேர் சென்றிருப்பார்கள்?" என்று மேஜர் மூர்த்தி சிவராமையரைக் கேட்டான்.

"மூன்று நாலுபேர் நேரடியாக யுத்தகளத்துக்குச் சென்றிருந்தால் அதிகம். மற்றப்படி மற்றவர்களெல்லாம், மறைமுகமாக யுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள்தான்" என்றார் சிவராமையர்.

"மறைமுகமாக என்றால்...?"

"யுத்தகாலத்தில் சாதாரண குமாஸ்தாக்களுக்குக்கூடக் கிராக்கி ஏறிவிடுகிறதே! அந்தக் கிராக்கியைப் பூராவும் பயன்படுத்திக் கொண்டவர்கள்தான் எல்லாக் குடும்பத்தாரும். குடும்பத்துக்கு ஒரு குமாஸ்தாவுக்குக் குறையாது. இரண்டொரு அதிருஷ்டக் குடும்பங்களில் ஏழெட்டுக் குமாஸ்தாக்கள் வரையில் கூட உண்டு" என்றார் சிவராமையர்.

"குமாஸ்தா என்றால்...?"

"குமாஸ்தா என்றால் உத்தியோகம் என்று வைத்துக் கொள்ளேன். பெரிய பெரிய உத்தியோகமானாலுங்கூடப் பிறர் காரியந்தான் என்பதனால் அதைச் செய்பவன் குமாஸ்தா என்றுதானே ஏற்படும்...?" என்றார் சிவராமையர்.

அவர் சொன்னதும் நியாயந்தான் என்று தோன்றியது மேஜர் மூர்த்திக்கு. அப்படியானால் இந்த யுத்தம் சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்தையும் அதன் வாழ்க்கையையும் பெரிதும் பாதித்திருக்கிறது என்று தானே சொல்லவேண்டும்? யுத்தம் அவ்வளவாக அவர்களைப் பாதிக்கவில்லை என்று, தான் அவசரப்பட்டு முடிவு கட்டிவிட்டது தவறு என்று தோன்றியது அவனுக்கு. ஆனால் அப்படி யுத்தத்தினால் நேரடியாகவோ, சிவராமையர் சொன்னது மாதிரி மறைமுகமாகவோ, பாதிக்கப் பட்டவர்களில் பெரும் பகுதியினர் ஊரில் வசிக்கமாட்டார்கள். அவர்கள் பெற்றோர், உற்றார், உறவினர் சிலர் மட்டுமே சாத்தனூர் வாசிகளாக இருப்பார்கள்.

இந்தச் சிந்தனையைத் தொடராமல் மேஜர் மூர்த்தி, தன் மாமாவைக் கேட்டான்: "யுத்த காரணமாக இந்தக் கிராமத்தில் கூடப் பணப் புழக்கம் அதிகந்தானே?" என்று.

"அதிகந்தான். ஏழையாக இருந்தவனைத் தவிர மற்றவர்களிட மெல்லாம் பணப் புழக்கம் அதிகரித்தது என்னவோ வாஸ்தவம். இப்போது, பணப்புழக்கம் அதிகமாக இருந்த காலத்தில் செலவு செய்யக் கற்றுக் கொண்டவன், மீண்டும் சாதாரண வாழ்க்கை வாழக் கற்றுக்கொள்ள முயற்சி செய்கிறான். முயற்சி பலிப்பதில்லை. என்ன செய்வது?" என்றார் சிவராமையர்.

"ஏழை மட்டும் அந்த நாட்களிலும் ஏழையாகவே இருந்து விட்டானாக்கும்?" என்றான் மூர்த்தி.

"கடவுளின் ஆட்சி என்கிற ஆதரவு மனிதனுக்கு இருக்கிற வரையில் உலகில் ஏழைகள் என்கிற ஜாதியினர் என்றும் இருந்துகொண்டுதான் இருப்பார்கள். ஏழைப்பங்காளன் என்கிற பெயர் கடவுளுக்கு நிலைக்க வேண்டுமே, அதற்காகவேனும்" என்றார் சிவராமையர்.

சிவராமையர் இவ்வளவு அனுதாபத்துடனும் கசப்புடனும் பேசுவார் என்று மூர்த்தி எதிர்பார்க்கவில்லை. ஒரு விநாடி திகைத்து விட்டான்.

இவர்கள் இதே விஷயத்தைத் தொடர்ந்து ஏதாவது பேசியிருப் பார்கள். அதற்குள் நச்சுவாய்க்கிழவர் நாராயணையர், "ஏண்டா சிவராமா, மருமான் வந்திருக்கானாடா? நீதான் உட்கார்ந்திருக்கயாக்கும் என்று விடியற் காலையிலே வந்தேன். ஒரே புகை நாற்றமாக இருந்தது."

மேஜர் மூர்த்தி சும்மாயிருந்திருக்கலாம்; ஆனால், "நான் தான் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தேன்" என்றான்.

சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்தில் புகை பிடிப்பதை நேருக்கு நேராக ஒப்புக் கொள்பவனைச் சமூகம் மகா பாபி என்றுதான் மதிக்கும். அடுத்த வீட்டானின் மனைவியை அடித்துக் கொண்டு போய் விடலாம்; சொந்த உறவிலேயே காதல் நாடகங்கள் நடத்தலாம்; பிள்ளையார் கோயில் சொத்தைச் சாப்பிடலாம்; அஞ்சாமல் கூசாமல் பொய்ச்சாட்சி சொல்லலாம்; நயவஞ்சகம் பேசலாம்; கொலை, கொள்ளை செய்யலாம்; புகை பிடிக்கலாம்; கள் குடிக்கலாம்; - ஆனால் எதையும் நேரடியாகச் செய்யக்கூடாது. பிறர் கண்ணில் படும்படியாகச் செய்யக்கூடாது. செய்வது தவறில்லை. செய்ததாகச் சொல்வது தான் தவறு. பிறர் செய்தால் கண்டிக் கலாம். தான் செய்வது மறந்துவிட்டது மாதிரி கடவுளுக்கும் தனக்கும் மட்டும் தெரிந்து ரகசியமாக இருக்கிய விஷயத்தில், இகத்தில் தண்டனை கிடையாது என்பது, சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரவாசிகள் உணர்ந்துவிட்ட உண்மை. பரத்தில் எப்படியோ அவர்களுக்குத் தெரியாது.

பரத்தில் மட்டுந்தான் என்ன? இதே கடவுளின் ஆட்சி தானே எங்கும்?

சிகரெட் பிடிப்பதைத் தான் ஏற்றுக்கொண்டதில்தான் செய்து விட்ட தவறு, பாவம், மூர்த்திக்குத் தெரியாது.

சிவராமையர் சிரித்துக்கொண்டே நச்சுவாய்க் கிழவருக்குப் பதில் சொன்னார்: “பையனுக்கு நம் ஊர் நடவடிக்கைகள் தெரியாது. சிகரெட் பிடித்த சாம்பமூர்த்திராயர் தெருவை விட்டே, ஊரை விட்டே ஓட நேர்ந்தது தெரியாது” என்றார்.

“யார் அது, சாம்பமூர்த்திராயர்? சிகரெட் பிடிப்பது அவ்வளவு பெரிய பாவமா? அது தெரியாதே எனக்கு. ஆனால் கதையைச் சொல்லுங்கள்” என்றான் மேஜர் மூர்த்தி.

“கதை, பெரிய கதை. தவிர, தாத்தாவுக்கும் அவருடைய சிநேகிதர் காத்துக் கொண்டிருக்கிறார். பொழுது வீணாகக் கூடாது” என்றார் சிவ ராமையர்.

“சிவராமா! நீ இருந்தாலும்...” என்று நச்சுவாய்க் கிழவர் தொடங்கு முன், சிவராமையர், “இதோ பார் கிட்டா, கடைத் தெருவுக்கு அவசரமாகப் போயிட்டு வரணுமே; வருவோம்; வந்து குளிக்கக் காவேரிக்கு வேறு போகணும்” என்றார்.

நச்சுவாய்க் கிழவரிடம் பேச்சுக் கொடுக்கத் தன் மாமாவுக்கு இஷ்டமில்லை என்பது மேஜர் மூர்த்திக்கு வெளிப்படையாகவே தெரிந்தது. அவனுக்கு அப்போதிருந்த மனோபாவத்தில் அவன் அந்த நச்சுவாய்க் கிழவரிடங்கூட மூச்சு விடாமல் பேசிக் கொண்டு நின்று கொண்டிருக்கத் தயார்தான். ஆனால் கடைத் தெருவுக்குப் போய் வருவதும், ஊரைப் பற்றி இன்னும் கொஞ்சம் தெரிந்துகொள்ளுவதும் அவசியந்தானே?

சிவராமையரும் மூர்த்தியும் கிளம்பினார்கள்.

## 12

சிவராமையர் வீடு சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்தின் நடுமத்தியில், தென்னண்டைச் சரகத்தில் இருந்தது. கீழண்டையும் மேலண்டையும் வாழைத் தோட்டம். எதிரே தென்னந்தோப்பு.

மண் ரோடுதான். ஆனால் கால் வைப்பதற்குக் கடினமாகவோ சகதியாகவோ இல்லை. ஐப்பசி மாதத்தில்,

ஆரம்பத்திலேயே குளிர் விழுந்து விட்டபடியால் மழை அதிகம் பெய்யவில்லை. அந்த வருஷம் காவேரியில் முழு ஆறு ஜலம் ஓடிக் கொண்டிருந்தது. அந்த வருஷம் வெள்ளம் வந்து விடுமே என்கிற பயம் சிறிதுகூடக் கிடையாது.

இரவில் குளிரிற்றே தவிர, சூரியன் உதித்த பிறகு, சூரிய வெப்பம் அதிகமாகத்தான் இருந்தது. மரங்கள்கூட ஆடாமல் அசையாமல்தான் நின்றன. தூரத்தில் காகங்கள் கரைந்தன. கிழக்கேயிருந்து நாய்களின் குரைப்புச் சப்தம் கேட்டது. மரங்களின் கிளைகளிலிருந்து பலவிதமான பட்சிகள் கிரீச்சென்றும் பளிச்சென்றும் குரல் கொடுத்துக் கொண்டிருந்தன. எங்கேயோ ஓர் எருமை மாடு அதற்கு உரிய குரலில் கத்திற்று. எதிர்ப்பட்ட ஒரு பசுவும் கன்றும் அழகான காட்சியாக மூர்த்தியின் கண்களில் பட்டன. அந்தக் கன்று துள்ளி விளையாடிக்கொண்டே, தெருவில் அங்கும் இங்கும் போனதைப் பார்த்துக்கொண்டே, தெருவில் இறங்கிய மூர்த்தி, தன் மாமாவிடம் சொன்னான்: "உலகில் எங்கேயும் மிருகங்கள் ஒன்றாகத்தான் இருக்கின்றன. சாவு என்கிற கோரத்தாண்டவத்தின் மத்தியிலே, தென் பிரான்சு தேசத்தில், எங்களுக்கு எதிர்ப்பட்ட ஒரு பசுங்கன்று எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது. பசு, மனிதனுக்கு இரையாகி விட்டது. கன்று மட்டும் எப்பொழுதும்போல், மனிதன் மனிதனுக்கு இழைக்க முயன்று கொண்டிருந்த தீமையை உணராமல், துள்ளி விளையாடிக்கொண்டிருந்தது. அந்த விநாடியில் என் கையிலும் என் ஜர்மன் சகாக்களின் கையிலும் இருந்த சக்திவாய்ந்த ஆயுதங்கள் உண்மையில் பயனற்றவை, சக்தியே அற்றவை என்றுதான் எனக்குத் தோன்றியது."

"அந்த மாதிரி ஒரு விநாடியை ஓர் ஆயுள் முழுவதும் நீடிக்க முடியாமல் இருப்பதுதான் மனிதன் சோக வாழ்வுக்கே சிகரமாக அமைகிறது" என்றார் சிவராமையர்.

"ஒரு விநாடிக்குமேல் அவ்வுணர்ச்சி எனக்கும் நீடிக்கவில்லையே? அடுத்த விநாடி எதிர்ப்பட்ட எதிரியை அழித்து, ஆணவங்காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறதே!" என்றான் மூர்த்தி.

"அந்த விநாடியின் ஞாபகம் இப்பொழுது ஏற்படுகிறது என்கிற போது அவ்விநாடி இரட்டித்து விட்டது இல்லையா?" என்றார் சிவராமையர்.

"அது என்ன பிரயோசனம்? தலைமை தாங்குகிறவர்

களுக்கில்லவா இந்த விநாடி தோன்றவேண்டும்; தோன்றி நீடிக்க வேண்டும்?" என்றான் மூர்த்தி.

"அசோக சக்ரவர்த்திக்குத் தோன்றிற்று என்கிறார்கள்."

"ஆமாம்; உலகத்தில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு காலங்களில் ஆண்ட ஆயிரக்கணக்கான மன்னர்களில், ஒரு பகுதியில் ஒரு காலத்தில் ஆண்ட ஒரு அசோகனுக்கு இந்த உணர்ச்சி உண்டாகியது உண்மைதான். உலக சரித்திரத்தை மாற்ற இது போதவில்லையே!" என்றான் மூர்த்தி.

"போதவில்லை. ஏன் போதவில்லை என்று யார் சொல்வது?" என்றார் சிவராமையர்.

"கடவுள், மனிதனைப் படைத்தான் என்று வைத்துக் கொள் வோம்; மனித சுபாவத்தையும் படைத்தான்; மனிதனுக்கு ஒரே கண்ணையும் அக்கண்ணுக்கு ஒரே நோக்கையும் படைக்காததுதான் கடவுளின் பிசகு."

மேஜர் மூர்த்தி சொன்னது என்ன என்று சிவராமையருக்குச் சரிவரப் புரியவில்லை. அவர் பதில் சொல்லாமல் நடந்தார்.

மூர்த்தி சிறிது நேரம் பேசாமல், தங்களுக்கு முன் சென்ற நிழல்களைப் பார்த்துக்கொண்டே சென்றான். நாலடி நிழல் தெருவில் மேடு பள்ளம் பார்க்காமல், சுத்தம் அசுத்தம் பார்க்காமல், ஈரம் உலர்ந்தது பார்க்காமல் போய்க்கொண்டிருந்தது. முதுகில் பட்ட வெயில் சூடும், முன்னால் ஓடிய நிழலுந்தான் மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த அவர்களுக்குச் சூரியனைப்பற்றிய காட்சிகள்.

மேஜர் மூர்த்தி பத்தடி நடப்பதற்குள்ளாகவே மறுபடியும் பேசத் தொடங்கினான். சாதாரணமாக அதிகமாகப் பேசாத மனிதன் தான் அவன். இன்று என்னவோ சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரம் என்கிற அநுபவம், சிவராமையர் குடும்ப வாழ்வு என்கிற அநுபவம் என்கிற இரண்டு அநுபவங்களுமாகச் சேர்ந்து அவன் பேச்சு வெள்ளம் என்ற மடையைத் திறந்து விட்டது போல் இருந்தது.

மூர்த்தி சொன்னான்: "மனிதனுக்கு நிழலைத் தந்து விட்டான் ஈசுவரன். வெளிச்சம் தெரிகிறதோ இல்லையோ, நிழல் தெரிகிறது!"

"நிழல் இருந்தால் வெளிச்சமும் உண்டு என்றுதான் ஏற்படும் இல்லையா?" என்றார் சிவராமையர்.

"நிழலைப் பின்பற்றிப் பின்பற்றி மனிதன் நடந்து பழகிக் கொண்டிருக்கிறான். நிழல் விழுகிற பக்கத்துக்கு எதிர்ப்பக்கம் திரும்பி நடந்தால், தன் நிழல் தன்னைத் தொடரும் என்பது மனிதனுக்குத் தெரிவதில்லை. நிழலைத் தொடர்ந்துகொண்டே காலத்தைக் கடத்தி வருகிறான். எதிர்ப்பக்கம் திரும்பினால் வெளிச்சம் கண்ணில் பட்டுவிடும்: ஆனால் எப்படியோ மனிதன் திரும்பாமலே காலந் தள்ளிவிடுகிறான்" என்றான் மூர்த்தி.

"உண்மைதான். ஆனால் வெளிச்சம் கண்ணைக் கூசுகிறதே?" என்றார் சிவராமையர்.

மேஜர் மூர்த்தி திரும்பிப் பார்த்தான். கீழ் வானம் வைகாசி மாசத்து வானம்போல் நிஷ்களங்கமாக இருந்தது. சூரிய ஒளி கண்ணைக் கூசத்தான் கூசியது.

தெருவின் கீழண்டைக் கோடியில் இருந்த மூங்கிற் புதர் பழுப்பும் பச்சையும் கழியும் குச்சியும் இலையுமாக, காட்டேரி போல் லேசான காற்றில் அசைந்தாடிற்று. அதன் கோரக்குரல் நாற்பது கஜம் தாண்டிக் கிரீச்சிட்டது.

வெளிச்சத்தை அணுக விரும்புகிறவன் எத்தனையோ கோர ஸ்வரூபங்களைத் தாண்டிச் செல்லத்தான் வேண்டியிருக்கும். அதற்காகப் பயந்து, இருக்கிற இடத்திலேயே இருக்கிறேன் என்று மனிதன் சொன்னால் முடியுமா?

"முன்னேயும் பின்னேயும் பார்த்துக்கொண்டு - குறுகிய அளவிலே தான் என்றாலும் - முன்னேறுபவன்தான் மனிதன்"

"பிள்ளையாண்டான் யாருடா சிவராமா?" என்று தன் மாமாவை யாரோ விசாரிப்பதைக் கேட்டுத் திரும்பினான் மூர்த்தி. யாரோ ஒரு பாட்டி. கிட்டத்தட்ட எழுபது வயது இருக்கும். அதிகங்கூட இருக்கும்.

"மருமான், மங்களம், மதுரத்தின் பிள்ளை" என்றார் சிவராமையர்.

"மதுரத்தின் பிள்ளையாடா? இப்பத்தான் வந்தானா? எங்காத்திலே ஒரு நாள் சாப்பிடச் சொல்லடா, அப்பா!" என்றாள் மங்களப்பாட்டி.

மதுரத்தின் பிள்ளை என்று சொல்லித்தான் சிவராமையர் தன் மருமானைத் தன் தெருவில் பலருக்கு அறிமுகம் செய்து வைக்க

வேண்டியிருந்தது. ஊரிலே ஒரு வயதுக்காரர்களுக்கு தன் தாயாரைத் தெரியும் போல் இருந்தது. உண்மைதானே! அவனுடைய தாயாரின் பிறந்த ஊர் சாத்தனூர். அவனுடைய தகப்பனாரின் பிறந்த ஊருக்குப் போயிருந்தானானால் அவனை ஸ்ரீநிவாஸையரின் பிள்ளை என்று பலருக்கும் அறிமுகம் செய்து வைக்க வேண்டி வந்திருக்கும். இங்கே, சாத்தனூரில் அவன் தாய்தான் முக்கியம்.

தாய்தான் முக்கியமாக இருக்கவேண்டும் என்றுதான் மூர்த்தியும் நினைத்தான். அதுதான் இயற்கை நியதி.

மூர்த்திக்குத் தாயையும் தெரியாது. தகப்பனையும் தெரியாது. அவன் கேட்டான்: "இந்தப் பாட்டிக்கு எங்கம்மாவைத் தெரியுமா?" என்று. அதைக் கேட்ட பிறகுதான் அது எவ்வளவு அசட்டுத்தனமான கேள்வி என்பது அவனுக்குப் புரிந்தது.

"என்னடா அப்படிக் கேக்கிறே!" என்றாள் மங்களப் பாட்டி.

"கிட்டா! மங்களத்துக்கு அந்த நாளிலே மதுரத்துக் கிட்டத்தான் அளவிட முடியாத பிரியம். தின்பதற்கு எது பண்ணினாலும் முதல்லே மதுரத்துக்கு, மதுரத்துக்குன்னு எடுத்து வைத்துவிடுவாள். அதற்கப்புறந்தான் தன் புருஷனுக்குக் கொடுப்பது, தன் குழந்தைகளுக்குக் கொடுப்பது எல்லாம். எனக்கு அடிதான் கிடைக்கும் மங்களத்துக்கிட்டே. மதுரத்துக்குத் தான் மற்றதெல்லாம் கிடைக்கும்" என்றார் சிவராமையர். பிறகு மங்களப் பாட்டியிடம், "கிட்டாவை அழைச்சுண்டு வரேன், சாயந்தரமா வரேன் ஆத்துக்கு" என்றார்.

அவள் போனபிறகு மேஜர் மூர்த்தி கேட்டான், "மங்களம் நமக்கு உறவா?" என்று.

"அப்படி ஒண்ணும் நெருங்கிய உறவில்லை. எனக்கு இரண்டு விட்ட சித்தியாகணும். ஆனால் அவளுக்கு அந்த நாளிலெல்லாம் மதுரத்திடந்தான் உசிரு. மதுரமும் குழந்தையிலே குறுகுறுவென்று துடியா இருப்பாள். ஆனால் மங்களத்திடம் பிரியமெல்லாம் மதுரத்துக்கு வாங்கித் தின்கிற வரையிலுந்தான். அதற்குப் பிறகு திரும்பிகூடப் பார்க்க மாட்டாள்" என்றார் சிவராமையர்.

"நாம் பிரியம் வைக்கிற இடமெல்லாம் அதே மாதிரியாகிறது என்பதுதானே மனித அநுபவம்?" என்றான் மேஜர் மூர்த்தி.

"மனித அநுபவத்தைப்பற்றி நமக்கு ஓரளவுதான் எட்டுகிறது.

பல கிளைகள் நமக்கு எட்டுவதே இல்லை" என்றார் சிவராமையர் அடக்கமாக.

மேஜர் மூர்த்தி பரந்த உலகில் பறந்து சென்றவன். பல இடங்களில் சுற்றித் திரிந்துவிட்டு, அடிபட்டு, அலைந்து அலைக்கழிந்து வீடு திரும்பியவன். அவனுக்கு அநுபவம் இருந்தது. அந்த அநுபவங்களை எல்லாம் பற்றிச் சிந்திக்கத் தெம்பிருந்தது. அவனுக்கு ஏற்பட்டிருந்த அநுபவங்களையும் விட அதிகமாகச் சாத்தனூரிலேயே அடைந்துவிட்டவர் போலப் பேசினார் சிவராமையர்; சிந்தித்துப் பார்த்திருந்தவர் போலப் பேசினார். எவ்வளவு அடக்கமாகவும் பேசினார்! மேஜர் மூர்த்திக்கு வியப்பாகத்தான் இருந்தது.

"என் வாழ்வில் நான் கண்டவரையில், ஆசைப்படாதவனே அதிருஷ்டசாலி என்று சொல்ல எனக்குத் தோன்றுகிறது" என்றான் மேஜர் மூர்த்தி.

சிவராமையர் நாலடி நடந்த பிறகுதான் இதற்குப் பதில் அளித்தார். ஏதோ தீர்க்கமாக யோசித்துவிட்டு பதில் சொல்பவர்போலச் சொன்னார். "அப்படியும் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லையே!" என்றார்.

மேஜர் மூர்த்தி, "ஆசைப்படுகிறவன் ஏமாறுகிறான் என்கிற அர்த்தத்தில் சொன்னேன் நான்' என்றான்.

"அது சரி, ஆனால் ஆசையற்றவன் மனிதனே அல்ல" என்றார் சிவராமையர்.

"அப்படிச் சொன்னால்? அதுவும் உண்மை என்று சொல்லத் தான் தோன்றுகிறது!" என்று ஒப்புக்கொண்டான் மேஜர் மூர்த்தி.

சற்றுத் தயக்கத்துடனேயே சிவராமையர் சொன்னார்: "உன் மாமியைச் சொல்லு. அவளுக்கு இன்னமும் குறைதான், பிள்ளை பிறக்கவில்லையே என்று! ஆனால் பிள்ளை பிறக்காதது அவளைப் பற்றிய வரையில் ஏமாற்றம் ஆகிவிடவில்லை. மற்றவர்களிடம் அவளுக்கு ஒரு அன்பு பிறப்பதற்கு அந்தக் குறை ஒரு காரணமாக அமைகிறது என்று எண்ணும்போது எனக்கே வியப்பாக இருக்கிறது" என்றார்.

"பிள்ளை பிறந்திருந்தால் அம்மாமிக்கு மற்றவர்களிடம் இவ்வளவு பிரியமும் அன்பும் இருந்திராது என்கிறீர்களா?" என்று கேட்டான் மூர்த்தி.

"அப்படியும் தீர்மானமாகச் சொல்லிவிட முடியாது" என்றார்

சிவராமையர்.

"பின் எப்படி?"

"என் நீண்ட வாழ்வின் காரணமாக நான் கொண்ட ஒரு முடிவு மட்டும் அசைக்க முடியாதது, மாறாதது என்று தெரிகிறது. வாழ்க்கையின் அடிப்படையான ஆதாரமான எந்த விஷயத்தையும்பற்றி எவ்வளவு பேர் எத்தனை நாள்தான் எவ்வளவோ அறிவோடு விவாதம் நடத்தினாலும் தீர்மானமான முடிவு கண்டுவிட முடியாது என்பதுதான் அந்த நிச்சயம். ஆகவே, கூடியவரையில் நான் யாருடனும் எவ்வித விவாதமும் நடத்துவது கிடையாது. சீட்டாடும்போது கூடத்தான்!" என்றார் சிவராமையர்.

"உண்மைதான்" என்று ஒப்புக்கொண்டான் மேஜர் மூர்த்தி.

சிவராமையர் சொன்னார் மீண்டும்: "இன்று நீ வந்த உணர்ச்சி உற்சாக வேகத்தில் நான்கூடச் சின்னப் பையன் மாதிரி - நாட்டுப்புறத் தானாகிய நான் - சகல விதத்திலும் நாகரிகம் அடைந்தவனாகிய உன்னுடன் சரிசமமாக ஏதோ பேசிப் பார்க்கிறேன்."

மேஜர் மூர்த்தி திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். "நான் ஊரெல்லாம் சுற்றியிருக்கிறேன். உண்மைதான்! அடிபட வேண்டிய இடத்திலெல்லாம் அடிபட்டிருக்கிறேன்; அடித்தும் இருக்கிறேன்! ஓடி ஓடி ஓய்வில்லாமல் அலைந்திருக்கிறேன். ஆனால் உண்மையாக உங்களிடமிருந்து ஏதாவது கற்றுக் கொண்டு போகத்தான் நான் இப்போது சாத்தனூர் வந்திருக்கிறேன்" என்றான் மேஜர் மூர்த்தி.

"நான் என்ன உனக்குக் கற்றுக்கொடுக்கப் போகிறேன்? என் பேத்திகளில் ஒருத்தியை நீ கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டாயானால், பாட்டியும் பேத்தியுமாக நீ கற்றுக் கொள்ள வேண்டியதை எல்லாம் கற்றுக் கொடுத்துவிடுவார்கள்! அதைத் தவிர, சாத்தனூரில் வேறு என்ன நீ கற்றுக்கொள்ள இருக்கிறது?" என்றார் சிவராமையர்.

"நேற்றைவிட இன்று நான் அறிவாளியாகிவிட்டேன், அதற்குக் காரணம் சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரந்தான் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றான் மேஜர் மூர்த்தி.

"அப்படி நீ நினைப்பதற்கு நான் ஆட்சேபமே சொல்லவில்லை. நம்ம ஜில்லாவில், நம்பப் பிரதேசத்தில், நம்ப நாட்டில், நம்ப உலகத்தில், சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரம் தனி ஒரு இடம் அல்ல.

எத்தனையோ இடங்களைப்போல இதுவும் ஒன்று. இதற்கென்று தனியாக ஓர் ஆத்மாவும் பாவமும் இருப்பது, ஏற்படுவது என்பது உன்னால் ஏற்படலாமே தவிர வேறில்லை... புரிகிறதா?" என்றார் சிவராமையர்.

"புரிகிறது; எமர்ஸன் இதையே சொன்னான்; 'நீ எங்கே சென்றாலும் உன்னையேதான் அழைத்துப் போகிறாய்' என்றான். அதுதான் நீங்கள் சொல்வதும்" என்றான் மூர்த்தி.

கிட்டத்தட்ட அதுதான். உன் நோக்கின் மேன்மையைப் பொறுத்தது, உன் லட்சியத்தின் திடத்தைப் பொறுத்தது, இவ்வுலகின் எந்த இடத்திலிருந்தும் உனக்குக் கிடைக்கிற லாபம்" என்றார் சிவராமையர்.

"உண்மைதான்" என்றான் மூர்த்தி.

## 13

தெருக்கோடியை அடைந்துவிட்டார்கள் மூர்த்தியும் அவன் மாமா சிவராமையரும். தெருக்கோடியில் தென்னண்டைச் சரகத்திலிருந்த வீடு, வாசலில் தென்னை மரமும், புதிதாகக் கல்போட்டுச் செப்பனிடப்பட்ட கிணற்றடியும், இரண்டொரு மல்லிகை முல்லைப் புஷ்பச் செடிகளுமாக அழகாக இருந்தது. அதைப் பார்த்துப் பரவசமாக நின்றான் மூர்த்தி.

சிவராமையர் எதிரில் இருந்த பிள்ளையார் கோயிலின் முன் நின்று, கால் செருப்பைக் கழற்றிவிட்டு, இரண்டு குட்டுக் குட்டிக் கொண்டார்; இரண்டு தோப்புக்கரணம் போட்டார்.

அவரைப் பின்பற்றி மேஜர் மூர்த்தியும் இரண்டு குட்டுக் குட்டிக் கொண்டான்.

கிழக்கு மேற்கான தெருவிலே பிள்ளையார் கோயிலுக்கு மேற்கே வீடுகள் கிடையாது; நிழலடர்ந்த குறுகிய ஒரு சந்து, சமீபத்தில் மழை பெய்து தரை காய்ந்திருந்தது. பூமியின் வளம் பார்ப்பதற்கே தெரிந்தது. தெருவின் இருபுறமும் நெருக்கமாக மாமரங்களும் தென்னைமரங்களும் இருந்தன. முக்கியமாகத் தென்னஞ்சோலைதான்

இருபுறமும்.

"என் தாத்தா காலத்தில் இந்த இடத்திலுங்கூட வீடுகள் இருந்ததாகச் சொல்லக் கேள்வி" என்றார் சிவராமையர்.

"இப்போ அப்படி இருந்த சுவடே தெரியவில்லையே!" என்றான் மூர்த்தி.

"இந்தப் பூமியைப் பாழாய்ப் போட்டு வைக்க யாருக்குத் தான் மனசு வரும்? மூன்று தலைமுறையில் உழுது பயிரிட்டு விட்டார்கள்; தென்னந்தோப்பாக்கிவிட்டார்கள் சிலர்" என்றார் சிவராமையர்.

"மண்ணைப் பார்த்தாலே தெரிகிறதே! இது உண்மையில் பொன் விளையும் பூமிதான்" என்றான் மேஜர் மூர்த்தி.

"காவேரிப் படுகை நிலம் அது. ஆனால், நம்ப நாளில் காவேரியின் வளங்கூடக் குறையத் தொடங்கிவிட்டதென்பது தான் நம் அதிருஷ்டம்" என்றார் சிவராமையர்.

"மனிதனுடைய வளம் குறைந்திருப்பதால்தானே காவேரியின் வளமும் குறைகிறது? ஆதாரக் காரணம் மனித வளம் குறைந்திருப்பது தான்" என்றான் மேஜர் மூர்த்தி.

சிவராமையர் பதில் சொல்லவில்லை.

மூர்த்தி ஒரு நிமிஷம் கழித்துத் தொடர்ந்து சொன்னான். "நான் ஜர்மனியில் படிக்கும்போது மேலைநாடுகளில் வளம் இருப்பதாக நினைத்தேன். சண்டை வந்து மனிதன் மிருகம் ஆனபிறகுங்கூட எனக்கு என் கண் திறக்கவில்லை. ஜப்பானிலும் மலேயாவிலும் பர்மாவிலும் மனிதன் மிருகத்துக்கும் கேவலமாக இருப்பதைத்தான் கண்டேன். வேறு எதையும் நான் காணவில்லை. நான் இங்கே வந்து உங்களுடன் சிறிது நேரம் பேசி, ஓர் இரவையும், ஒரு காலைப் பொழுதையும் கழித்த பிறகுதான் புரிகிறது, எனக்கு மனிதனுடைய வளம் எந்த நிலையிலிருந்து எந்த நிலைக்கு வந்திருக்கிறது என்று."

"எனக்கு எட்டாத விஷயங்களை எல்லாம் பேசுகிறாய் நீ!" என்றார் சிவராமையர்.

"உங்களுக்கு எட்டாத விஷயங்கூட உண்டா என்ன?" என்று கேட்டான் மேஜர் மூர்த்தி.

நிர்மானுஷ்யமான அந்தப் பகுதியைக் கடந்து வடக்குத் திருப்பம் திரும்பினார்கள். இரண்டொரு குடிசைகள் இருந்தன.

"இது மேட்டுத் தெருவின் ஆரம்பம். எங்களூர் மேட்டுத் தெருவுக்குப் பேரும் புகழும் நிறைய உண்டு" என்றார் சிவராமையர்.

"என்ன அப்படி? சொல்லுங்கள்."

"தஞ்சாவூர் ஜில்லாவின் கடைசித் தீவட்டிக் கொள்ளைக்காரன் என்று பெயர் பெற்ற பிச்சாண்டி இந்த மேட்டுத் தெருவான்தான்"

"அப்படியா? இறவாத புகழ்தான் அது!"

சிவராமையர் தொடர்ந்து சொன்னார். "சமீப காலத்தில் சோமு முதலி என்று ஒருத்தன் தோன்றி, பெயரும் ஏராளமாகப் பணமும் சம்பாதித்தான். திடீரென்று அத்தனையையும் விட்டு விட்டுச் சாமியார் ஆகி, சொல்லிக் கொள்ளாமலே போய் விட்டான்."

"அப்படியா?"

"இந்த மேட்டுத் தெரு இரண்டு மூன்று தலைமுறைகளில் சாதித்திருப்பதைப்போல எந்தக் காரியத்தையும் சாவமானிய அக்கிரகாரம் சாதிக்கவில்லை. அது ஏன் என்பது கொஞ்சம் ரஸமான கேள்வி என்றுதான் சொல்ல வேண்டும்"

அதாவது பிச்சாண்டியோ, யார் அது - சோமு முதலியோ மேட்டுத் தெருவில் தோன்றுவானேன்? அக்கிரகாரத்தில் அது அசாத்திய மாக இருப்பானேன் என்று கேட்கிறீர்கள்? இல்லையா?" என்றார் சிவராமையர்.

"ஆமாம்..."

"வேறு என்ன சொல்வது? காலத்தின் நியதி என்பதைத் தவிர."

இதற்குள் தெற்கு வடக்காக இருந்த சிறிய தெருவை இருவரும் கடந்துவிட்டார்கள். "இது சின்ன அக்கிரகாரம். இப்போது சின்ன அக்கிரகாரம் என்று பெயர் தாங்கி, இருபது இருபத்தைந்து பாழ்மனைகளும் இரண்டு மூன்று வீடுகளுமாகக் காட்சியளிக்கிற இந்த அக்கிரகாரம் ஒரு காலத்தில், அதாவது, இருநூறு வருஷங்களுக்கு முன் வரையில் பெரிய தெருவாகத்தான் இருந்தது. நாயக்க ராஜாக்கள் காலத்தில் தஞ்சை சமஸ்தான வித்துவான் ஒருவருக்குச்

சர்வமானியமாக அளிக்கப்பட்டது இந்தக் கிராமம். அந்த வித்துவானும் அந்த வித்துவானின் சந்ததிகளும் இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு வளமாக விளங்கினார்கள். அதற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய வளம் குன்றிவிட்டது. அவர்களுடைய அரண் மனையே பாழ்த்துவிட்டது. பின் வந்தவர்கள் ஒவ்வொன்றாக விற்றுச் சாப்பிட்டு விட்டார்கள். அவர்கள் கட்டிய அரண்மனை இடிந்து, அது இருந்த இடத்தில் இப்போது ஒரு குதிரை வண்டிக்காரன் குதிரை கட்டியிருக்கிறான்; இதோ!" என்று சிவராமையர் சுட்டிக் காட்டினார்.

"அந்த வித்துவான் எப்படியோ நமக்குத் தெரியாது. ஆனால் அந்தக் குதிரை நன்றாக இருக்கிறது. நல்ல குதிரை!" என்றான் மூர்த்தி.

சிவராமையர் சொன்னார்: "இவ்வளவு சாவகாசமாகப் பேசிக் கொண்டே போனால் அவள் கோபித்துக்கொள்வாள். சீக்கிரம் போய்ச் சேரவேண்டும். மருமானுக்கு விருந்து சீக்கிரம் செய்து போடவேண்டிய அவசரம் அவளுக்கு"

"எனக்கு என்னவோ ஒரே நாளில் இந்தக் கிராமத்து மனிதர்களில் ஒவ்வொருவரைப்பற்றியும் எல்லா விஷயத்தையும் தெரிந்துகொண்டுவிட வேண்டும் என்றும், ஒவ்வோர் அடி மண்ணின் சரித்திரத்தையும் அறிந்து கொண்டு விட வேண்டும் என்றும் ஆவலாக இருக்கிறது" என்றான் மேஜர் மூர்த்தி.

சிவராமையர் அவளுடைய கோபத்துக்குப் பயந்தவர் மாதிரி சற்று வேகமாகவே பேச்சுக் கொடுக்காமல் நடக்க முயன்றார்.

மூர்த்தி தொடர்ந்து சொன்னான்: "இந்த ஆவலைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ சாத்தனூருக்கும் எனக்கும் இதுகாறும் நான் அறிந்துகொள்ளாத ஒரு பிணைப்பு இருக்கிற மாதிரியும் அந்தப் பிணைப்பு இறுகப் போகிறது என்கிற மாதிரியும் இன்று காலை முதல் எனக்கு ஒரு சிந்தனை மனத்தில் தோன்றிக்கொண்டேயிருக்கிறது. அது ஏன் என்றுதான் தெரியவில்லை. தெய்வாதீனமாக நான் இங்கே வந்து சேர்ந்தேன் என்பதைத் தவிர வேறு பிணைப்புக்கு எவ்விதமான காரணமும் இல்லையே!"

சிவராமையர் சிரித்தார். "அம்மாமியின் யோசனை பலித்து விடுகிறதோ என்னவோ? பேத்திகளில் யாராவது ஒருத்தியை உன் கழுத்தில் கட்டினாலும் கட்டிவிடுவாள்" என்றார்.

திரும்பத் திரும்ப இந்தத் திருமணப் பேச்சு வருகிறதே என்று

சிந்தித்தவனாக மேஜர் மூர்த்தியும் மௌனமாக நடந்தான்.

சாத்தனூர் கோயில் எதிர்ப்பட்டது. தூரத்திலிருந்து பார்த்துக் கும்பிட்டுவிட்டு, கடைத்தெருவைக் கண்டார்கள். வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு, சற்று அவசரமாகவே வீடு திரும்பினார்கள்.

சிவராமையர் சிந்தனைகளின் முடிவை எட்டிவிட்டவர். மேஜர் மூர்த்தி சிந்தனைகளின் தொடக்கத்தில் இருந்தான். இருவரும் மௌனமாக, வந்த வழியே வீடு திரும்பினார்கள்.

சிவராமையர் வாழ்க்கை வழிகளை நிர்த்தாரணம் செய்து கொண்டு விட்டார். மேஜர் மூர்த்தி அநுபவங்களோடு மட்டும் நின்று விட்டவன். பரந்த அநுபவத்தின் மேல் அவன் எவ்விதமான மாளிகையும் இன்னும் எழுப்பவில்லை. வாழ்க்கை வழிகளைப்பற்றி அவன் மீண்டும் மீண்டும் சிந்தித்துக்கொண்டிருந்தானே தவிர, இன்னும் எவ்வித முடிவுக்கும் வரவில்லை.

சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரம் என்கிற அநுபவம், ஒரு முடிவுக்கு வரத் தனக்கு உதவுமா என்கிற சிந்தனை அவன் மனசில் விசுவரூபம் எடுத்தது.

## 14

தன்னைப்பற்றிச் சிவராமையரிடம் விசாரித்தவர்களை எல்லாம் பற்றி மேஜர் மூர்த்தி விரிவாக விசாரித்து அறிந்து கொண்டான்.

அவன் சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்தின் வெளித் தோற்றத்தை மட்டும் அல்ல; அகத்தோற்றத்தையும் உள் வாழ்வையும் அந்தராத்மாவையும் அறிந்துகொள்ள விரும்பினான்.

அவன் விருப்பத்தை அறிந்தவர்போல், ஏற்றுக்கொண்டவர் போல், சிவராமையரும் ரஸமான விஷயங்களையும் ரஸமில்லாத விஷயங்களையும் அவன் கேட்கக் கேட்கச் சொல்லிக்கொண்டே வந்தார். தெருவையும் தெருவின் ஆத்மாவையும் தெருவாரின் பழக்க வழக்கங்களையும் தெருவாரின் ஆசை அபிமானங்களையும் பற்றிப் பூராவும் தான் ஒரே பொழுதில் அறிந்து கொண்டுவிட

ஆசைப்பட்டான். இதே அறிவுத் தாகந்தான் அவனை அந்த நாளில் பேராசிரியர் மேனனுடன் ஜர்மனிக்கு அழைத்துச் சென்றது.

ஆகாத காரியத்தைச் செய்து முடிப்பதற்கு மனிதனுக்கு இருக்கக் கூடிய ஆர்வந்தான் என்ன? ஆகாது என்பது நிச்சயமாகத் தெரிகிறது. இருந்தாலும் நம்மால் ஆகும் என்றுதான் ஒவ்வொரு மனிதனும் தொடங்குகிறான்.

மனிதனுடைய மனசில் ஒரு பகுதியிலே அவனுக்குத் தேவையேயில்லாத பல விஷயங்கள் பதுங்கிக் கிடக்கின்றன. அநாவசியமான அறிவும் அவசியமான அறிவும் அவன் மனத்திலே போரிட்டுப் பதுங்கிக் கிடக்கின்றன.

சாத்தனூரையும் சாத்தனூர்வாசிகளையும் பற்றி அறிந்து கொள்ள அவர்களுடன் அதிக நெருக்கமான சம்பந்தம் கொள்ளாத இந்த மேஜர் மூர்த்திக்குத்தான் என்ன வேகம்? என்ன தாகம்? அவனுடைய மாமா சிவராமையர் அங்கே வசித்தார் என்பது உண்மைதான். ஆனால், அன்றுவரையில் அவனுக்கும் அவன் மாமாவுக்குங்கூட அவ்வளவாக நெருங்கிய சம்பந்தம் இருந்ததில்லையே! திடீரென்று க்ஷணச்சித்தத்தின் விளைவாக அவன் கிளம்பிச் சாத்தனூர் வந்துவிட்டான். வந்த இடத்தில் மாமாவும் மாமியும் அவர்களுடைய பேரன் பேத்திகள் அடங்கிய குடும்பமும் நல்லதோர் குடும்பமாக அவனுக்குப் பட்டது. அதற்காக?

அதற்காக அவனும் சாத்தனூர்வாசி ஆகிவிடுவது என்று தீர்மானித்துவிட்டான் என்று ஏற்பட்டுவிடுமோ?

அல்லது, அதுதான் சரி சாத்தனூரில் குடியேறி, தன் மாமாவின் வழியைப் பின்பற்றுவது என்று தீர்மானித்து விட்டான் என்று ஏற்படுமா?

தன் வழிகள் தவறு என்று அவன் இன்றுதான் உணர்ந்தான் என்று சொல்ல முடியாது. எப்பொழுதுமே ஜர்மனி போய்ச் சேர்ந்த நாள் முதலே தன் வாழ்க்கை வழி, தான் பின்பற்ற நினைத்த வாழ்க்கை லட்சியம் தவறானதாக இருக்கலாம் என்கிற சிந்தனை அவன் மனத்தில் இல்லாமல் இல்லை. ஆனால் காலத்தின் சதி, ஒவ்வோர் அடியாக அவனை உந்தித் தள்ளிக் கொண்டு நடந்தது. மேலே நடப்பது சாத்தியமில்லை என்று ஏற்பட்ட பிறகுதான் கழுத்தில் அந்தக் கையின் பிடிப்புத் தளர்வது போல் இருந்தது.

அந்தப் பிடிப்பு, சற்று அதிகமாகவே தளர்ந்திருக்கும்போது

மூர்த்தி எப்படியோ தப்பித்துக்கொண்டு சாத்தனூருக்கு ஓடிவந்து விட்டான். சாத்தனூரில் தஞ்சம் புகுந்துகொண்டான். தன்னை அதுவரை ஆட்டி வைத்துக் கொண்டிருந்த லட்சியங்கள், ஆசைகள், கொள்கைகள் முதலியவற்றிலிருந்து.

சாத்தனூர் எப்படிப்பட்ட தஞ்சம் தரும் தனக்கு என்று பூரணமாக ஆராய்ந்து பார்க்க அவனுக்கு ஆவல்.

ஆனால் வாழ்க்கை சுத்த வாழ்க்கையாக இருந்தது என்பது உலகில் எங்கேதான் உண்டு? ஓர் ஊரில், ஒரு தெருவில் ஏன் ஒரு வீட்டிலேயுங்கூட எத்தனை மனிதர்கள் இருந்தார்களோ அத்தனை லட்சியங்களும் நோக்கங்களும் ஆட்சி செலுத்தின. சில சமயம் திடப்படாத ஒரே மனிதனுக்குங்கூடப் பலவிதமான லட்சியங்களும் நோக்கங்களும் இருந்தன.

இதிலே மனிதன் தனக்குத்தானே கற்பித்துக்கொள்ளுகிற நோக்கங்களும் லட்சியங்களும் வேறு - பிறர் நலனுக்காகச் சந்தர்ப்ப விசேஷங்களால் கற்பிக்கும் நோக்கங்களும் லட்சியங்களும் வேறு வேறு.

மனிதனைப் படைத்த கடவுள் ஏன் இப்படி வேற்றுமைப் பட்ட உள்ளங்களைப் படைத்திருந்தான்? மனிதர்களுடன் மனிதர்களைப் போராட விட்டு அந்த ஈசன் கண்ட இன்பந்தான் என்ன? அலகிலா விளையாட்டு என்றால் பொறுப்பற்ற விளையாட்டா?

சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரம் சின்னத் தெரு தான் - ரொம்பப் பெரிய தெரு அல்ல. இருந்த வீடுகளிலும் பாதிக்குமேற்பட்டவைகளில் ஒரு நபருக்கு மேல் குடியிருப்பு இல்லை. தெருவின் மொத்த ஜனத் தொகை நூற்றுக்குள்தான் இருக்கும் - ஆண், பெண், குழந்தைகள் உள்பட. இந்த நூறும் ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசப்பட்டவை!

நூறும் நூறுவிதம்.

அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை.

லட்சமும் லட்ச விதங்களாக இருப்பதைப் பார்த்துப் பழகியவன் அவன். அதிலும் தவறில்லை.

அந்த லட்ச விதங்களான லட்சங்களையும், கோடி விதங்களான கோடிகளையும் ஒரு மனிதன் அடக்கி ஆண்டு ஒரேவிதமாக்கியதையும் அவன் பார்த்திருந்தான்.

ஹிட்லரின் ஜர்மனியில் லட்சம் சுபாவங்களாகத் தொடங்கிப் பதினாயிரமாகி, ஆயிரமாகி, நூறாகி, ஒன்றாகி அந்த ஒன்றும் ஹிட்லரே யாகிக் குறுகிய பிற்பகுதியை அவன் நேரில் கண்டவன் - பட்டு அநுபவித்தவன்.

மற்றவர்கள் எப்படியோ? படித்துப் பட்டம்பெற ஜர்மனி போயிருந்த மாணவன் மூர்த்தி, ஹிட்லரின் லட்சங்களில், கோடிகளில் ஒன்றாக இருக்கவேண்டியதில்லைதான் - ஆனால் பிரசார வேகம் அவனையும் கட்டுப்படுத்தியது - கட்டிப் பிடித்திருந்தது.

இந்திரஜித்தின் அஸ்திரத்தால் கட்டுண்டு ராவணதர்பாருக்கு வந்த பலமிழந்த பலசாலியான ஹனுமான்போல அவன் - பிரசாரப் பிசாசுக்கு, சைத்தானுக்கு - அடிமையாகி விட்டான்.

பிரசாரம் என்றால், என்ன பிரசாரம்?

கடவுளின் தெய்வத்தன்மையையே மாற்றக்கூடிய பிரசாரமே யன்றோ அது!

மனிதனின் மனிதத்தன்மையைப் பரிபூரணமாக அழித்து விட்ட பிரசாரம்.

ஆறேழு வருஷங்களுக்கு மேல் ஹிட்லரின் கொள்கைகளுக்கு அடிமைப்பட்டுத் திணறியவன் மூர்த்தி. அடிமை என்கிற உணர்ச்சி சிறிதளவு கூட ஏற்படாதவாறு நடந்த பிரசாரம் அன்றோ அது?

சுபாஷ்சந்திரபோஸின் வருகையால் அந்த அடிமைத் தளை யிலிருந்து மூர்த்தி விடுபட முடிந்தது.

விடுபட்டுப் பயன்?

ஒரு நுகத்தடியிலிருந்து கழற்றிக்கொண்டு இன்னொரு நுகத் தடிக்குக் கழுத்தைக் கொடுத்த கதை அது.

ஓர் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை - இன்னோர் அடிமைத் தனத்துக்கு வாழ்நாளை அர்ப்பணிக்க ஏற்பட்ட விடுதலை அது.

சுபாஷ்சந்திரபோஸ் ஒரு சின்ன ஹிட்லர். அவருடைய சாம்ராஜ்யத்திலே ஆட்சி செலுத்தியதும் அதே கொள்கைதான் - ஹிட்லரின் கொள்கைதான் - லட்சத்தையும் கோடியையும் குறுக்கிக்குறுக்கி ஒன்றாக, அந்த ஒன்றும் ஹிட்லராகச் செய்கிற வித்தைதான்.

சுபாஷ்சந்திரபோஸின் வித்தைத் திறன், ஹிட்லருடன் ஒப்பிடும்போது, மிகவும் குறைவுதான். ஆனால் இந்தியா என்கிற மந்திரம் அவருக்கு உதவி செய்தது. பிரசார வேகம் அதிகம் இல்லாமலே அவர் ஓரளவு, ஒரு குறுகிய காலத்திற்குள், ஒரு குறுகிய ஜனப்பகுதியிலே தம் லட்சியங்களை நிறைவேறச் செய்ய வழி தேடிக்கொள்ள முடிந்தது.

சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்திலே சிவராமையரின் வீட்டுத் திண்ணைச் சாய்மானத்தில் சாய்ந்து கொண்டு, மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான் மேஜர் மூர்த்தி. அவன் தன்னுடைய பழைய நாட்களின் வாழ்க்கையைப்பற்றி இதுவரை இப்படி எண்ணிப் பார்த்ததே இல்லை.

ஹிட்லரின் பிரசார ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கும்போது அதுவே உண்மை என்கிற கொள்கையில் தானாக வலியப் போய் அடிமைத்தளையைப் பூட்டிக் கொண்டவன் அவன். மனம் இருந்திருந்தால் அவன் அப்போதே ஜர்மனியைவிட்டு வெளியேறி இந்தியாவுக்கு வந்திருக்கலாம். அவன் வர விரும்பவில்லை. ஹிட்லரின் ஜர்மனியே சொர்க்கம் என்று எண்ணி இருந்துவிட்டான்.

அந்த நாட்களில் அந்த நம்பிக்கை உண்மை என்றுதான் பட்டது.

ஜர்மனிதான் பூலோக சொர்க்கம், மேஜர் மூர்த்தியைப் பற்றிய வரையில்.

சுபாஷ்சந்திரபோஸ் ஜர்மனி வந்து தன்னை அழைத்த பின், யோசித்துப் பார்க்கும்போது, ஹிட்லரின் ஜர்மனி நரகமாகக் காட்சி அளித்தது. தன் தேசம், தன் மக்கள் என்று இல்லாமல் இருப்பவன் மனிதனா என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டான் மேஜர் மூர்த்தி. அடிமைப்பட்டிருக்கும் இந்தியாவின் விடுதலைதான் ஒவ்வோர் இந்தியனுக்கும் முதல் கடமையாகும் என்கிற எண்ணம் ஏற்பட்டது.

இந்தியாவுக்கு எதிர்பாராத விடுதலை கிடைத்துவிட்டது.

ஆனால்...

எவ்வளவு பெரிய ஆனால் அது?

இந்தியா, சுதந்தரம் பெற்றபின் யோசிக்கும்போது, தன் லட்சியங்கள், ஜர்மனிக்கும் சரி, இந்தியாவுக்கும் சரி, சரியானவை

தாமா என்று முடிவு கட்டத் தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டான் மூர்த்தி.

கூட்டத்தோடு கோவிந்தா போட்டதோடு சரிதானா? லட்சியம், கொள்கை என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்ததெல்லாம் வெறும் பேச்சுத்தானே! வேறு என்ன?

ஹிட்லரும் போஸூம் சிந்தித்த சிந்தனைகளுக்கும் பிரசாரம் என்கிற ஒரே நோக்கத்துடன் பரப்பிய கொள்கைகளுக்கும், ஒன்றன் பின் ஒன்றாக, அடிமைப்பட்டிருந்ததைத் தவிர மேஜர் மூர்த்தி, தன் வாழ்க்கையில் முப்பத்தைந்து வருஷங்களில் சாதித்துவிட்டதுதான் என்ன?

சாத்தனூருக்குச் சரித்திரப் பிரசித்தம் இல்லை. பூகோளப் பிரசித்தமும் இல்லை.

சாத்தனூரில், அதுவும் சர்மானிய அக்கிரகாரத்தில், ஆடெல்ப் ஹிட்லரையும், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸையும் போன்ற பெரிய மனிதர்கள் இல்லை.

சரித்திரத்தில் பொன்னெழுத்துகளாலும் கரிக்கோடுகளாலும் வரைய வேண்டிய சம்பவங்கள் இல்லை.

இந்த தலைமுறையின் ஞாபகத்திலே சாத்தனூரிலே ஞாபகம் வைத்துக்கொள்ளும்படியாகப் பொதுக்காரியங்கள் எதுவும் இல்லை.

ஆனால் மனிதர்கள் தனித்தனி மனிதர்களாக வாழ்ந்தார்கள்.

தங்களுக்குத் தாங்களே தவிர வேறு எவ்விதத்திலும் யாருக்கும் அடிமைப்படாமல் வாழ்க்கை நடத்தினார்கள்.

தனித்தனி மனிதர்களும் தனித்தனி மனிதர்களாக ஒரு நூறு பேர்வழிகள், நூறு பேர்வழிகளாக வசித்து வந்தார்கள்.

மேலை நாட்டு அரசியல் கொள்கைகளின் விளைவுகளாக, சமூக, சமுதாயக் கொள்கைகளின் விளைவுகளாக, சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரம் அடிமைப்பட்டுவிட வில்லை.

முப்பது தலைமுறைகளில் அதிக மாறுதல் இல்லாமலே சாத்தனூர்ச் சர்வமானிய அக்கிரகாரத்தில் வாழ்க்கை நடைபெற்று வருகிறது.

இது குடும்பம் என்று, தனி மனிதனின் வாழ்க்கை என்று

மகத்தானதோர் லட்சியமாகப் பட்டது மூர்த்திக்கு.

'இப்பொழுது பட்டது' என்று தனக்குள்ளேயே சேர்த்துக் கொண்டான் மூர்த்தி.

முந்திய லட்சியங்கள் பொய்த்துப் போனதுபோல இதுவும் பொய்த்துவிடலாம்.

பொய்த்துவிடலாந்தான். ஆனால் சிவராமையரையும் அம்மாமியாரையும் பார்க்கும்போது பொய்த்துவிடாது என்றுதான் தோன்றிற்று.

## 15

"வெந்நீரில் குளிக்கிறாயா கிட்டா? அல்லது காவேரிக்குப் போகலாமா?" என்றார் சிவராமையர்.

"வெந்நீரெல்லாம் வேண்டாம், பேசாமல் இரண்டு பேருமாகப் போய் ஆனந்தமாகக் காவேரியிலே குளித்துவிட்டு வாங்கோ" என்றாள் அம்மாமி.

"நிறையத் தண்ணி இருக்குமா?" என்றான் மூர்த்தி.

"ஐப்பசி மாசம். தண்ணி நிறைய இருக்கணும். ஆனால் மழையே பெய்யல்லையே! தண்ணிக்கு எங்கள் ஊரிலே - காவேரி தீரத்திலே கூடப் பஞ்சந்தான்" என்றார் சிவராமையர்.

"முன்னெல்லாம் ஐப்பசி மாசத்திலே என்றால் கொல்லையில் நம்பாத்தில் கிணற்றுக்குக் கயிறே தேவையில்லை. குனிந்து சொம்பில் ஜலம் மொண்டுகொள்ளலாம். இப்போ..." என்றாள் மாமி.

"இப்போதும் கிணற்றில் தண்ணி மேலேதான் இருக்கு - ஐந்தடிக்குள்தானே இருக்கிறது!" என்றான் மூர்த்தி.

"சில சமயம் முன்னெல்லாம் பிடிமட்டத்துக்குக் கூடத் தண்ணி வந்துவிடும்" என்றாள் மாமி.

வெயில் சுள்ளென்று அடித்தது. ஐப்பசி மாசத்து வெயிலாக இல்லை அது.

"மணி பத்தாகவில்லை. அதுக்குள்ளே வெயில் இப்படிக்

காயறதே!' என்றாள் மாமி.

தெருவில் நிழல்கள் குறுகிக்கொண்டிருந்தன. வெயில் பட்ட பிரதேசம் அதிகமாகிக்கொண்டிருந்தது. எதிர்ச் சரகத்து வீட்டுக் கூரை மேடுகள் இப்போது - இந்த வெளிச்சத்தில் வானத்தைத் தொடாமல் தூரத்திலிருந்தே கைகூப்புபவைபோல் இருந்தன. காலை ஒளியின்மையால் அழகாகத் தெரிந்த அவை இப்போது, விகாரமாக, லட்சியவாதி என்று சொல்லிக்கொள்பவன் முடிவில் அறிந்துகொள்கிற உண்மைபோல், கோர சொரூபத்தில் காட்சியளித்தன.

"எனக்கென்னவோ பார்க்கப் பார்க்க இந்தத் தெரு ரொம்பவும் பிடித்திருக்கு" என்றான் மேஜர் மூர்த்தி.

"தெருவிலே மனிதர்கள் என்று சொல்லிக்கொண்டு விஷப் பாம்பும் நண்டுவாக்காளியுந்தான் வசிக்கின்றன. நீ தெரியாமல் தெரு பிடிச்சிருக்கு என்கிறாய்!" என்றாள் மாமி.

"உலகம் பூராவுமே விஷப்பாம்புகளும், நண்டு வாக்காளிகளுந்தான் மனிதர்கள் என்கிற மாறுபெயரில் நடமாடுகின்றன" என்றார் சிவராமையர்.

"இந்த மாதிரி, நம்பிக்கை இழந்து, உயிரை உறிஞ்சுகிற சிந்தனைகளுடன் வாழ்வதைவிட, வாழவே வேண்டாம் என்றுதான் நான் நினைப்பேன்" என்றான் மூர்த்தி.

சிவராமையர் நிமிர்ந்து பார்த்தார் அவனை. ஒரு நிமிஷம் கழித்துச் சொன்னார்: "இதோ பார் நீ வாலிபம். உனக்கு இன்னமும் கல்யாணம் என்கிற அநுபவங்கூட ஏற்படவில்லை. அதனால்தான் இப்படிப் பேசுகிறாய்" என்றார்.

"ஆனால் இந்த அநுபவங்கள் ஏற்பட்டு, மனிதன் வளர்ந்து, பெரியவனாகப் போவதற்கும், பெரியவனான பின் இதே முடிவுக்கு வருவதற்குந்தான் - கடவுள் என்று ஒருவர் உண்டானால் - கடவுள் நமக்கு இந்த வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறாரா? நம்பிக்கை தருகிற வேறு ஒரு முடிவுக்கு வருவதற்கு நம்முடைய வாழ்க்கையே, அநுபவங்களை உபயோகிக்க முடியாதா?"

"சாதாரணமாகப் பலரால் முடிவதில்லை. இரண்டொரு பேர் - அதிருஷ்டசாலிகள் - தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் அதுகூட இங்கே சாத்தியமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார்

சிவராமையர்.

"ஏதாவது பேசினால் கேட்டிண்டிருக்கிறவாளுக்குப் புரியற மாதிரி பேசப்படாதோ?" என்று கோபித்துக்கொண்டாள் மாமி.

"மாமி சொல்வதுதான் சரி" என்று கூறிச் சிரித்தான் மேஜர் மூர்த்தி. "இந்த விவாதங்களாலெல்லாம் நமக்கு லாபம் கிடையாது."

"ஆனாலும் இப்படி விவாதம் செய்யத்தானே தோன்றுகிறது? அதுதான் மனித சுபாவம்."

"அதாவது?"

"லாபம் உண்டோ இல்லையோ, லாபம் இருக்கலாம் என்கிற நம்பிக்கையில்தான் நாம் எதைப்பற்றியுமே பேசித் தீர வேண்டியிருக்கிறது. பசி, தாகம், தூக்கம் என்கிற மாதிரி, பேச்சு என்பதும் தவிர்க்க முடியாத ஒரு தேவை. மனிதன் பேச்சால்தான் வாழ்கிறான் என்று சொல்லுவது ஒரு விதத்தில் பொருந்தும்" என்றார் சிவராமையர்.

"பேச்சால் என்று சொல்லுவதைவிட வார்த்தைகளால் என்று சொல்லுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது" என்றான் மூர்த்தி.

மாமி குறுக்கிட்டாள்: "உங்க மாமா எப்பவுமே இப்படித் தான் பேசிண்டிருப்பார். நாள் பூராவும் புரிந்த விஷயங்களையும் புரியாத விஷயங்களையும், புரிந்து கொள்கிறவர்களிடமும், புரிந்து கொள்ளாதவர்களிடமும் இப்படியேதான் பேசிக்கொண்டிருப்பார். அவர் பேச்சிலே அர்த்தத்தை எதிர்பார்க்காமல் இருப்பது எனக்குப் பழக்கம் ஆகிவிட்டது" என்றாள்.

"உன் மருமானும் இந்த அர்த்தமற்றப் பேச்சு விஷயத்தில் தன் மாமாவைத் தாண்டியம்மா கொண்டிருக்கிறான். உன்மாதிரி எனக்கும் அடுப்பங்கரையில் ஒரு நாளில் அறுபது நாழிகை நேரமும் வேலை இருந்தால், பேச்சு அவசியமாயும் இராது, சாத்தியமாயும் இராது. வேறு வேலை இல்லாததால்தான் பேச்சுத் தேவையாக இருக்கிறது; என்ன பண்றது?" என்றார் சிவராமையர்.

மூர்த்திக்கு இப்போதுதான் புரிந்தது. அவன் மாமா சொன்னது உண்மைதான். வேறு காரியம் இல்லாததனால்தான் போலும், அவனுக்குச் சதா பேச்சுத் தேவையாகவே இருந்தது.

வாய்விட்டுப் பேச யாரும் அகப்படாவிட்டால் தனக்குத்தானே - ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் இருக்கிற இரண்டாவது மனிதனுடன் - ஒவ்வொருவனும் பேசிக் கொள்ளத் தொடங்கி விடுவான். ரஸமான பேச்சு, ரஸமான முடிவேயில்லாத விவாதங்கள். பேசுவதற்கு ஆள் இருந்துவிட்டாலோ அவனும் அவன் மாமி சொன்னதைப்போலவேதான். புரிந்த விஷயங்களையும் புரியாத விஷயங்களையும் புரிந்து கொள்ளுகிறவர்களிடமும் புரிந்து கொள்ளாதவர்களிடமும் பேசத் தொடங்கிவிடுவான். புரியாத விஷயங்கள்கூடச் சிலசமயம் பேச்சால் புரியத் தொடங்கி விடுவதுபோல இருக்கும் - உண்மைதான்.

சொல் என்றால் மந்திரம் என்றுதான் அர்த்தம். சொல்லுக்குக் கட்டுப்படாத விஷயம் விஷயமே அல்ல. நாம் தெளிவாகச் சொல்லால் கட்டுப்படுத்திவிட்டால் எவ்விஷயமும் எளிதாகி விடுகிறது.

மாமியிடம் சிவராமையர், "உனக்கு எந்த விஷயந்தான், என்றைக் குத்தான் புரியப்போகிறதோ!" என்று அலுத்துக் கொண்டார்.

"புரியவேண்டிய விஷயங்களெல்லாம், எனக்குப் புரிகிற அளவு உங்களுக்குப் புரிந்துவிட்டால் போதுமே" என்றாள் மாமி.

'பேஷ் மாமி' என்றான் மூர்த்தி.

அவனுக்கும் இது தெளிவாகவே தெரிந்தது. மனிதன் தேட வேண்டாததை எல்லாம் தேடிக்கொண்டு, நாட வேண்டாததை எல்லாம் நாடிக்கொண்டு, அலைந்து திரிந்து வாழ்நாளை வீணாக்கிக் கொண்டிருக்கிறான். மனத்தில் அலைந்து திரிந்தால் என்ன? ஆத்மாவில் அலைந்து திரிந்தால் என்ன? பூகோள ரீதியில் அலைந்து திரிந்தால் என்ன? ஆசை அபிலாஷைகளில் அலைந்து திரிந்தால் என்ன?

ஆடெல்ப் ஹிட்லர் அநாவசியமான ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயன்று அலைந்து திரிந்து கெட்டான். அவனை எதிர்த்து நின்று போராடி வென்றுவிட்டவர்களும் வேறு ஒன்றும் பிரமாதமாகச் சாதித்து விடத்தான் இல்லை.

நேதாஜியின் ஓட்டமும் சேனை திரட்டலும் பாடுபட்டதும் எல்லாம் பெயரளவில் புகழ்தரப் பயன்பட்டதே தவிர, மனித குலத்திற்கு வேறு எந்தவகையில் - உண்மையான வகையில் - லாபம் தந்தது?

மூர்த்தியும் தான் படித்துப் புரட்டிவிடுவதாக எண்ணற்ற ஆசைகளுடன் ஜர்மனி போய்ச் சேர்ந்தான். அந்த ஆசை, யுத்தத்தின் வருகையுடன் அழிந்துவிட்டது.

யுத்தம் வேறு பல ஆசைகளைக் கொணர்ந்தது.

யுத்தத்தின் முடிவு அவற்றை அழித்துவிட்டது.

யுத்தத்திற்குப் பிறகு தன் சுயதேசத்தில் பெயரும் புகழும் தரக் கூடிய பங்கு தனக்குக் கிடைக்கும் என்றுதான் எண்ணினான் மூர்த்தி. அதுகூடக் கிட்டவில்லை.

'ஏது, ஏது? சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரமும் மாமா அம்மாமியினுடைய வார்த்தைகளும் என் வாழ்க்கையையே திருத்தி அமைத்து விடக்கூடிய அநுபவமாக அமைந்து விடும்போல் இருக்கிறதே' என்று தனக்குள் எண்ணிக்கொண்டான் மூர்த்தி.

கடைசியாக மாமி சொன்னாளே, அது எவ்வளவு நிஜம்! புரிய வேண்டிய விஷயங்களெல்லாம் அவளுக்குப் புரிந்த அளவு மற்றவர்களுக்குப் புரிந்துவிட்டால் உலகமே பிரகாசம் அடைந்து விடுமே என்றுதான் தோன்றியது மூர்த்திக்கு.

வாழ்க்கை வழிகளை ஓரளவுக்கு முடிவாக, மாற்ற முடியாதபடி, ஒருவன் அமைத்துத் தந்துவிட்டானானால் தேவலையே என்று தோன்றிற்று மூர்த்திக்கு. ஒரு காலத்தில் பல நூறு வருஷங்களுக்கு முன் மனு என்று ஒருவன் அழுத்தமாக, 'இப்படித்தான் மனிதன் வாழவேண்டும்' என்று முடிவுகட்டிக் கூறிவிட்டுப் போய்விட்டான். அவன் கூறிய வழிகளைப் பின்பற்றி ஒரு சமூகம் பல நூறு வருஷங்கள் ஆடாமல் அசையாமல், எவ்விதமான பூகம்பத்துக்கும் குலைந்துவிடாமல், நிலைத்து வர முடிந்தது.

மனு, மோஸஸ், குருகங் மூவரும் அசைக்கமுடியாத அஸ்திவாரத் தின்மேல் மனிதனை நிலைநிறுத்த முயன்று, ஓரளவு வெற்றியும் பெற்றார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

ஆனால் அவர்கள் இட்ட அஸ்திவாரங்கூட, இன்று கிருஸ்துவுக்கும் ஆயிரத்துத் தொள்ளாயிரம் வருஷங்களுக்குப் பிறகு இரண்டு மகா யுத்தங்களுக்குப் பிறகு, அணுக்குண்டுக்குப் பின்னர் - தகர்ந்து கொண்டிருந்த மாதிரிதான் தோன்றியது.

நியாயத்தை அடிப்படையாகக் கொண்டு மனுவோ -

மோஸஸோ குருகங்கோ தங்கள் சட்டங்களை இயற்றவில்லை. தங்களுக்கு எட்டிய வரையில் நியாயம் தர்மம் என்கிற நியதி வழுவாமலும், மனித சுபாவம் என்கிற அறிய முடியாத ஒரு தத்துவத்தை ஒட்டியும், ஒரு தெய்விக பலத்தினால், சுயநலமற்ற ஆன்ம பலத்தினால், சிந்தனை என்கிற தபோபலத்தினால் அவர்கள் அறிந்தபடி வாழ்க்கை வழிகளை மனிதனுக்கு வகுத்துத் தந்தார்கள். 'இது சரியான பாதை, நட' என்றார்கள்.

இப்போது இன்று அவர்களுடைய தெய்விகத் தன்மையையும், தபஸையும், நியாயத்தையும் தர்மத்தையும், நாம் சந்தேகிக்கத் தொடங்கி விட்டோம்.

வாழ்க்கை வழிகள் இன்று கரடுமுரடாகிக் கொண்டிருக்கின்றன.

ஏதோ கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி தலைக்குத் தலை தேடி, மேட்டில் ஏறிப் பள்ளத்தில் விழுந்து, முள்ளைக் குத்திக் கொண்டு பாறையில் மோதிக் கொண்டு ஒவ்வொருவனும் தனிப்பாதை வகுத்துக்கொள்ள முயலுகிறான்.

பலிக்குமா? சுலபமாகப் பலிக்கிறமாதிரியில்லை.

தேரோடும் வீதியிலே மனிதன் தனிவழி தனக்கென்று தேடிக் கொண்டு நடக்கலாம். தேரும் ஓடும் அதிலே, தெருவடைச்சானும் ஓடும் அதிலே. நின்று கும்பிட விரும்புகிறவர்களுக்கும் தெருவுக்குள்ளே இடமுண்டு.

தேரோடும் வீதியிருக்க, நான் வீடுகளின் கூரைமோட்டின் மேலேயே நடந்துதான் தெருக்கோடியை அடைவேன் என்று யாராவது சொன்னால்_?

நிமிர்ந்து பார்த்தான் மூர்த்தி. எதிர்வீட்டுக் கூரைமேல் கூனிக் குறுகிக்கொண்டு இரண்டு குரங்குகள் உட்கார்ந்திருந்தன. மட்டை உரிக்காத தேங்காய்க்குள் ஒரு கையைவிட்டு, பல்லால் எதையோ கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது ஒரு குரங்கு. இன்னொன்று சுவாரசியமாக வயிற்றைச் சொரிந்துகொண்டு சூரியனை மட்டும் பார்க்காமல் மற்றப் பக்கங்களிலெல்லாம் சட்டுச் சட்டெனத் திரும்பிப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தது.

மூர்த்திக்குச் சிரிப்பு வந்தது; சிரித்தே விட்டான்!

# 16

"பார்த்தியாடியம்மா உன் மருமான் லக்ஷணத்தை!" என்றார் சிவராமையர். "பார்த்துக்கோ. அவன் தன் மாமாவைத்தான் கொண்டிருக்கான். பாதி பேசிண்டிருக்கச்சே திடீர்னு மௌனமாயிடறான். திடீரென்று சிரிக்க ஆரம்பிச்சுடறான்; பார்த்துக்கோ!" என்றார்.

மாமியோ மூர்த்தியோ பதில் சொல்லுமுன் தெருவில் சின்னப் பையன்கள் கூட்டம் 'ஹோ'வென்ற இரைச்சலுடன் வந்துவிட்டது. குரங்கைக் கண்டுவிட்ட கும்மாளம் அவர்களுக்கு.

பன்னிரண்டு வயசிலிருந்து இரண்டு இரண்டரை வயசு வரையில் இருக்கும் பையன்களும் பெண்களும் அங்கே வந்து விட்டார்கள். இருபது இருபத்திரண்டு பேர்களாவது இருப்பார்கள்.

குரங்குகளைக் கண்டு அவர்களுக்குக் கும்மாளம் அதிகமா? குழந்தைகளைக் கண்டு குரங்குகளுக்குக் கும்மாளம் அதிகமா என்று விவாதிக்க வேண்டியது அவசியம் என்று பட்டது மூர்த்திக்கு. இரண்டும் சரிசமமாக இருக்கும்போலத்தான் இருந்தது.

குழந்தைகளும் குரங்குகளைத் துரத்திவிட விரும்பின மாதிரி எதுவும் செய்யவில்லை. கல்லெடுத்து வீசினவர்கள்கூடக் குரங்கின்மேல் பட்டுவிடக் கூடாதே என்று வீசியமாதிரிதான் இருந்தது. ஒரு கல்லை ஒரு குரங்கு கையை நீட்டி லாவகமாகப் பிடித்து, திருப்பி எறிந்தது.

"குரங்குகளைப் பார்த்தால் நன்றாக இல்லையாடா கிட்டா?" என்றாள் மாமி.

மாமியின் பேத்தி, பேரன்கள் இதற்குள் குரங்கு பார்க்க வெளியே வந்துவிட்டார்கள். அவர்களில் பெரிய பெண்கூடக் குரங்கு பார்க்கிற ஆசையில் வெட்கத்தை மறந்துவிட்டு, மூர்த்தி தன்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டால் என்ன செய்வது என்கிற நாணத்தையும் விட்டு, விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்தாள்.

மூன்று வயதுப் பேரனைத் தன் இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு சிவராமையர் குரங்கைக் காட்டினார். பையன் பொக்கைவாய்ப் பல்லெல்லாம் தெரியச் சிரித்தான் - கையைக் கொட்டினான் ஆனந்தத்தில்: "அதில் எந்தக் குரங்குடா அம்மம்மா

மாதிரி இருக்கு?" என்று அவனைக் கேட்டார் சிவராமையர்.

பையன் சிறிது நேரம் என்ன சொல்வது என்று அறியாமல் விழித்தான். பிறகு தன், 'அம்மம்மா' நின்றுகொண்டிருந்த பக்கம் திரும்பி அவளையே சுட்டிக் காட்டினான்.

"அம்மமாவேதான் குரங்கு என்கிறாயா! பலே ராஜா" என்றார் சிவராமையர்.

"எதிர் வீட்டுக் கூரைமேல் இரண்டு குரங்குதான் இருக்கு. அதில் ஒன்று நான் என்றால், இன்னொன்று..." என்று சொல்லி முடிக்காமல் நிறுத்தினாள் மாமி.

தன் கௌரதையைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்று சிரித்தான் மேஜர் மூர்த்தி.

"மனிதன் குரங்கிலிருந்துதான் தோன்றினான். குரங்கு இனம் மனித இனத்துக்கு உறவுதான் என்று முடிவுகட்டியிருக்கிறார்கள் அறிஞர்கள். நான் உன்னைக் குரங்கு என்று அப்படி ஒன்றும் இளப்பம் பண்ணுகிற நோக்கத்துடன் சொல்லவில்லை" என்றார் சிவராமையர்.

மேஜர் மூர்த்தி சொன்னான்: "மனிதனைப் படைத்துப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு மனிதன் சிந்திக்கவும் உச்சாணிக் கிளையை எட்டித் தொட ஆசைப்படவும் தொடங்கிய பின், கடவுள் குரங்கைச் சிருஷ்டித்தார் என்று எனக்குத் தோன்றுகிறது."

"நான் கேள்விப்பட்டதில்லை, இந்த மாதிரி. நான் கேள்விப் பட்டது வேறுவிதம்" என்றார் சிவராமையர்.

மாமி ஏதாவது சொல்வாளோ என்று மூர்த்தி அவளைத் திரும்பிப் பார்த்தான். எதுவும் சொல்லவில்லை என்று கண்ட பின் அவன், "மனிதனுக்கு, தான் என்கிற தனி அகம்பாவம் ஏறிவிட்டபின் அதை அடக்குவதற்காகக் கடவுள் அவனைப் போலவே குரங்கையும் சிருஷ்டித்தார் என்பது என் கட்சி" என்றான்.

"சொல்லு" என்றார் சிவராமையர்.

குரங்குகள் எதிர்வீட்டுக் கூரைமோட்டிலிருந்து பக்கத்து வீட்டுக் கூரைமோட்டுக்குத் தாவிவிட்டன. குழந்தைகளின் கூட்டம் கண்ணெதிரிலிருந்து கலைந்துவிட்டது. ஆனால் அவர்களுடைய கூக்குரல் மட்டும் காதில் விழுந்துகொண்டிருந்தது. சிவராமையரின்

பேரன், பேத்திகளில் ராஜாவையும் ஏழு வயசு மீனாட்சியையும் தவிர மற்றவர்கள் உள்ளே போய்விட்டார்கள்.

மாமியும் சமையல்காரியத்தைக் கவனிக்க உள்ளே கிளம்பினாள். ஆனால் கிளம்புமுன், "அதிக வெயிலாறதுக்குள்ளே கிளம்பு கிட்டா; குளித்துவிட்டு வந்துவிடு. இல்லாவிட்டால் ஏதாவது டிபன் பண்ணித் தரேன்; சாப்பிடு. பிறகு மத்தியானம் எவ்வளவு நேரம் கழித்து வேண்டுமானாலும் சாப்பிடலாம்" என்றாள்.

"நீங்களெல்லாம் வழக்கமாகச் சாப்பிடற மாதிரி எனக்கும் போட்டால் போதும். இப்போ ஒண்ணும் எனக்கு டிபன் வேண்டாம்" என்றான் மூர்த்தி.

"சாப்பிடற அவசரத்துக்காகச் சொல்லல்லே நான். நாழி கழித்துப் போனால் காவேரியிலே ஸ்நானம் பண்ணறது அவ்வளவா சுகமாக இராது" என்று சொல்லிவிட்டு மாமி உள்ளே போய்விட்டாள்.

"போவோம்" என்றார் சிவராமையர். "என்னவோ குரங்கைப் பற்றிச் சொன்னாயே, சொல்லு கேட்கலாம்"

மேஜர் மூர்த்தி சொன்னான்: "வெறும் கற்பனைக் கதைதான். எங்கேயோ படித்தது சட்டென்று ஞாபகம் வந்தது; சொன்னேன். அவ்வளவுதான்."

"ஞாபகம் வந்த கதையைச் சொல்லு. எனக்கும் மீனாட்சிக்கும் கதை கேட்கப் பிடிக்கும். இந்த ராஜாப் பயலுக்கும் அப்படித்தான்" என்று சொல்லிக்கொண்டே சிவராமையர் தன் மருமானுக்கு எதிரில் தூணில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்துவிட்டார்.

மூர்த்தி சொன்னான்: "எப்பொழுதோ முன் ஒரு காலத்தில் ஓர் ஓவியன் இருந்தானாம். உலகத்திலேயே மிகச் சிறந்த ஓவியன் என்று பெயர் வாங்கியவன் அவன். அவனுக்கு வயசும் ஐம்பதுக்கு மேல் இருக்கும். அப்படியும் அவனுக்கு விளையாட்டுப் புத்தி போகவேயில்லையாம்!"

"என்னைப்போல" என்றார் சிவராமையர்.

"பொறுப்பில்லாமல் பல காரியங்களைச் செய்துவிட்டு, சின்னப் பையன் மாதிரி கைகொட்டிச் சிரித்து ஆனந்திப்பானாம் அவன், ஐம்பது வயசு ஆனபிறகுங்கூட, பெரிய பெரிய மனிதர்கள் கூட அவனுடைய இந்த விளையாட்டுக்கு இலக்காகி அவஸ்தைப்

பட்டிருக்கிறார்களாம். சபையில் பல பேருக்கு நடுவில்கூட - மன்னனிடங்கூட - இம்மாதிரி விளையாடுவானாம் அவன். மகாப் பெரிய ஓவியனாயிற்றே என்று எல் லோரும் பொறுத்திருந்தார்கள். அவசியமானால் ஒழிய அவனை யாரும் சந்திப்பதே கிடையாது. அவன் கேலி செய்யவே இடம் கொடுக்காமல் நடந்து கொள்வார்களாம். அவனிடம் அவ்வளவு பயம் அவர்களுக்கு"

"ம்..." என்றார் சிவராமையர்.

ஒரு நாள் மன்னன் புதுசாகக் கட்டிய கோயில் ஒன்றில் ஓவியங்கள் தீட்டுவதற்கென்று இந்த ஓவியன் அமர்த்தப்பட்டான். அவனுக்கு அப்போது வயசு சற்றேறக்குறைய அறுபது இருக்கும் என்று வைத்துக் கொள்ளுங்களேன். தன்னுடைய கடைசிப் பெரிய வேலையாக இருக்கும் அது என்பது தான் அவனுடைய ஞாபகம். உலகம் என்றென்றைக்கும் புகழும்படியாக பிரமாதமான சிற்பங்களால் சுவாமி சந்நிதியின் நான்கு சுவர்களையும் நிரப்பிவிட வேண்டுமென்று அவன் வேலை செய்தான். சிறந்த ஓவியனின் கைதேர்ந்த ஓவியங்கள் - ஓவியக் கலையின் எல்லை என்றே சொல்லும்படியாக - சுவர்களில் தோன்றத் தொடங்கின. முதலில் சில நாட்கள் வரை கைங்கரியம் சரிவர நடந்து வந்தது."

"ம்...." என்றார் சிவராமையர்.

"ம்.." என்றான் ராஜுப்பயல், ஏதோ புரிந்துகொண்ட மாதிரி.

"நான் உள்ளே போறேன்" என்று கூறிக்கொண்டு, மீனாட்சி எழுந்து போய்விட்டாள்.

மேஜர் மூர்த்தி தொடர்ந்து கதையைச் சொன்னான்: "இப்படி இருக்கையில் ஓர் ஓவியத்தை, நடுநாயகமான ஓர் ஓவியத்தைச் சிறப்பாகத் தீட்டிவிட்டு, 'அஸ்தமித்து விட்டது; நாளை வந்து கடைசி வரிகளை தீட்டி முடித்துக்கொள்ளலாம்' என்று கிளம்பினான் ஓவியன். ஆனால் அவன் மறுநாள் காலையில் வந்து பார்த்தபோது அவனுக்கே பரிதாபமாக இருந்தது. நடுநாயகமாக மிகச் சிறந்ததாக இருக்கவேண்டுமென்று அவன் தீட்டியிருந்த ஓவியத்தில் குறுக்கும் நெடுக்குமாகக் கண்டபடியெல்லாம் சலாகையால் இஷ்டப்பட்ட வர்ணங்களை எல்லாம் இழுத்திருந்தது."

"..ம்.."

"பிரமித்துப் போனான் ஓவியன். முழுவதையும் அழித்து விட்டு முன்னிலும் அதிஜாக்கிரதையாக அதிஅழகான உருவம் ஒன்றை அஸ்தமன சமயத்தில் பாதி முடிந்த வகையில் தீட்டி விட்டு, கோயிலுக்குள் அன்றிரவு யாரும் வந்துவிடாமல் பூட்டிக் காவல் காக்கச் சொல்லிவிட்டு வீடு திரும்பினான் ஓவியன். மறுநாள் அதிகாலையிலேயே அவன் கவலையினால் எழுந்துவிட்டான் என்று சொல்லவும் வேண்டுமா? போய்ப் பார்த்தால், முந்தின தினம்போலவே நடந்திருந்தது. காவலாளிகளை எல்லாம் கூப்பிட்டு விசாரித்தான். யாரும் இரவில் அங்கே வந்திருக்க வழியே கிடையாது என்பது ஏற்பட்டது.

"அடே!" என்றார் சிவராமையர்.

"இதற்குள் விஷயம் - இரண்டு நாட்களாகக் கோயிலில் ஓவியன் எழுதுகிற ஓவியங்கள் சின்னாபின்னப்படுத்தப்படுகின்றன என்கிற விஷயம் - மன்னன் காதுவரை எட்டிவிட்டது. 'இனி இப்படி நடக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன், காவல் சரிவரப் போட்டுவிடுகிறேன்' என்று மன்னன் உறுதிமொழி கூறியதன் பேரில் ஓவியன் மூன்றாவது நாளும் நடுநாயகமான உருவத்தை வரைந்தான்."

"மூன்றாவது நாள் இரவு போய்க் காலையில் வரும்போது முன் போலவே இருந்ததாக்கும்?"

"ஆமாம், இதற்குள் விஷயம் ஊரெல்லாம் பரவிவிட்டது. மன்னாதி மன்னர்களையும் கேலி செய்த ஓவியச் சக்கரவர்த்தியை, யாரோ இழிவுபடுத்திக் கேலி செய்கிற விஷயம் ஊரெல்லாம் பரவிவிட்டது. அவனுடைய மிகச் சிறந்த ஓவியத்தைப் பார்க்க எவ்வளவு பேர் திரண்டு வருவார்களோ, அவ்வளவு பேரும் அதற்கும் அதிகமாகவே அவனுடைய சின்னாபின்னப்படுத்தப்பட்ட ஓவியத்தைப் பார்க்க வந்து கூடிவிட்டார்கள். ஓவியன் மிகவும் தலையிறக்கமாக நண்பகல்வரை உட்கார்ந்திருந்து விட்டான். பிறகு, 'இது என்ன ரகசியம்?' என்று கண்டுபிடித்து விட வேண்டும் என்று தீர்மானித்தவனாக, சாயங்கால வேளையில் வழக்கப்படி நடுநாயகமான உருவத்தை வரைந்தான். வரைந்தவன் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு இரவு நாலைந்து நாழிகைக்கெல்லாம் கோயிலுக்கே வந்து விட்டான். தன்னை அவமானப்படுத்துகிற உத்தேசத்துடன், தன் ஓவியத்தில் குறுக்கும் நெடுக்கும் கோடிழுத்துச் சின்னாபின்னப்படுத்திய

திருடன் யார் என்று அன்றிரவு அங்கே கண்விழித்துக் காத்திருந்து கண்டுபிடித்து விடுவது என்பது அவன் உத்தேசம்."

"அப்புறம்?"

"இரவு, கோயிலில் கர்ப்பக்கிருகத்தில் ஒரே ஓர் எண்ணெய் விளக்கு மட்டுந்தான் எரிந்துகொண்டிருந்தது. நள்ளிரவுக்குச் சற்று முன் ஓவியன் சற்றே கண்ணயர்ந்திருப்பான். அவன் கண் திறந்து பார்த்தபோது அவன் ஓவியத்துக்கு முன் யாரோ ஒரு குட்டையான மனிதன் உட்கார்ந் திருப்பது அந்த மங்கிய வெளிச்சத்தில் தெரிந்தது. பதற்றமடையாமல் கவனித்தான் ஓவியன். சலாகைகளை எடுத்து, தலையை அப்படியும் இப்படியுமாக ஆட்டிக்கொண்டே, வர்ணங்களில் தோய்த்து இரண்டொரு பட்டை களைத் தீட்டியவுடனேயே அந்த ஓவியனுக்குத் தெரிந்து விட்டது. கோயில் நந்தவனத்தில் வெகுநாளாகக் குடியேறியிருந்த ஒரு கிழக்குரங்கு அது. தான் ஓவியம் தீட்டிக்கொண்டிருக்கும்போது அந்தக் குரங்கு பல தடவைகளில் வந்து, கழுத்தை நீட்டித் தலையைச் சாய்த்துக் கொண்டு கவனித்திருக்கிறது என்கிற விஷயம் ஓவியனுக்கு ஞாபகம் வந்தது. இப்போது கூட அந்தக் குரங்கு அசப்பிலே பார்த்தால், தான் உட்கார்ந்திருக்கிற மாதிரியேதான் உட்கார்ந்திருக்கிறது என்று தோன்றிற்று அவனுக்கு."

"பேஷ்! நல்ல கதைதான்!" என்றார் சிவராமையர்.

"தான் படேபடே ஆசாமிகளைக் கிண்டல் செய்து கேலி பண்ணி நகைத்தது போலத் தன்னை ஒரு கிழக்குரங்கு இப்படி அவமானப்படுத்தி விட்டதே என்று ஓவியனுக்கு முதலில் பிரமாதமான கோபம் வந்ததாம். பிறகு தெய்வம் தனக்குச் செய்த உபதேசம் அது என்று ஏற்றுக் கொண்டு, அதற்குப் பிறகு யாரையும் எவ்விதமான கேலியோ கிண்டலோ செய்வதில்லை என்று அந்த ஓவியன் தீர்மானித்தானாம். அந்தக் கோயிலில் தீட்டிய ஓவியங்கள்தான் அவன் கடைசியாகத் தீட்டியவை என்றாலும் அவன் அதற்குப்பிறகு பல வருஷங்கள் உயிரோடு இருந்தான் என்றும் தனக்குத் தெரிந்த வித்தைகளை எல்லாம் அதற்குப் பிறகு பலருக்குக் கற்றுக் கொடுத் தான் என்றும் எங்கேயோ படித்திருக்கிறேன்." என்று கதையை முடித் தான் மூர்த்தி.

சிவராமையர் எழுந்து ராஜாப்பயலை உள்ளே விட்டுவிட்டு வந்தார். பிறகு சொன்னார்: "மனிதனுடைய அகங்காரமும் ஆணவமும் வளர்ந்து, பேயாட்டம் ஆடுவதைக் கண்ட பிரம்மதேவன், மனித உருவத்

திலேயே, அவன் செய்யக்கூடியதில் அநேகமாக எல்லாவற்றையுமே செய்யக் கூடியதாகக் குரங்கு இனத்தைப் படைத்திருக்கலாந்தான். ஆனாலும் அந்த ஓவியன் குரங்கின் செய்கையைக் கடவுள் தனக்குத் தந்த படிப்பினை என்று ஏற்றுக்கொண்ட மாதிரி மனிதன் குரங்கை ஏற்றுக் கொள்ளவில்லை. மனிதன் இன்னும் திருந்திவிடவில்லை" என்றார்.

"என்றாவது ஒரு நாள் திருந்தித்தானே ஆகவேண்டும்?" என்றான் மூர்த்தி.

"அப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருப்பவனை நான் அதிருஷ்டசாலி என்றுதான் கருத வேண்டும்" என்றார் சிவராமையர்.

"குளிக்கப் போகலாமே கிட்டா" என்றார் சிவராமையர்.

"போகலாம்; டவல், சோப்பு எல்லாம் எடுத்து வருகிறேன்" என்று உள்ளே போனான் மூர்த்தி.

உள்ளே கூடத்தில் யாரையும் காணவில்லை. குழந்தைகள், வயதாகாத பெரியோர்கள் எல்லோரும் எங்கெங்கேயோ அவரவர்கள் காரியங்களில் ஈடுபட்டிருந்தனர். சமையல் அறையில் ஏதோ பாத்திரங்கள் ஒன்றோடொன்று உராயும் சப்தம் கேட்டது. கொல்லையில் கிணற்றடியில் குரல்கள் கேட்டன.

உலகத்தில் அவரவர்களுக்கென்று ஏற்பட்டிருக்கிற காரியங்களை உரிய காலத்தில் செய்துகொண்டிருந்தார்களானால் மனிதகுலம் உய்யாமல் என்ன செய்யும்?

மனித குலம் உய்வதில் நம்பிக்கை வைப்பவனை அதிருஷ்டசாலி என்றார் சிவராமையர்.

அதாவது மனித குலம் உய்யாது, உய்யவே உய்யாது என்று அவர் கருதுகிற மாதிரி தோன்றியது.

ஏன் அப்படி?

இத்தனை காலமும், மண்ணில் மனிதன் தோன்றிய காலம் முதலாக, கண்டிருக்கிற கரைகள் எல்லாம், பட்டிருக்கிற ஆசையெல்லாம் வியர்த்தந்தானா? அர்த்தமற்றவைதாமா?

சாத்தனூர் சர்வமானிய அக்கிரஹாரத்திலே நேர்மையான பாதையிலே வாழ்க்கை நடத்திய சிவராமையர் இப்படிச் சொன்னால்?

இந்த நம்பிக்கையின்மை எதனுடைய சின்னம்?

மனிதனுடைய வாழ்க்கை வழி எங்கே நேர்ப்பாதையில், தருமமும் நியாயமும் தழைக்கச் சென்றுகொண்டிருக்கிறது என்று சற்று முன் மூர்த்தி எண்ணினானா, அங்கே இந்த நம்பிக்கையின்மை எப்படித் தோன்றியது? ஏன் தோன்றியது?

மனித குலத்தை ஆட்கொள்ள இருந்த அழிவுச் சக்திகளின் சின்னமா இந்த நம்பிக்கையின்மை?

நல்லது என்பதிலும் நியதி என்பதிலும் நேர்மை என்பதிலும் நம்பிக்கை இருந்ததே சிவராமையருக்கு?

உடன் இருந்தவர்களில் வேறு யாருக்கும் நம்பிக்கை இல்லை இவற்றில், என்பதால் அவருக்கு மனித குலத்திலேயே நம்பிக்கை இல்லாது போய்விட்டதா?

பின் என்ன?

தனக்கு மட்டும் நம்பிக்கை இருந்ததா? 'ஏன் இருந்தது? எப்படி வந்தது அந்த நம்பிக்கை?' என்று தன்னையே கேட்டுக் கொண்டு மாடிப் படி ஏறினான் மூர்த்தி.

மாடியில் பெட்டி திறந்தபடியே இருக்க மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான் அவன், வந்த காரியத்தை மறந்துவிட்டு.

மனிதனுடைய சரித்திரம் என்பது என்ன?

அந்தச் சரித்திரத்தின் முடிவுதான் என்ன?

எவ்வளவு தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் எந்த எந்தக் காலங்களில் எங்கெங்கெல்லாம் தோன்றி என்ன என்ன சொல்லியிருக்கிறார்கள்?

நம்பத்தகுந்த விதமாகக் கூறியிருக்கிறார்கள். ஏதோ மனிதன் தன் அறிவினாலும் அறிவுக்கு அப்பாற்பட்ட வேறு ஏதோ ஒன்றினாலும் அனுமானிக்கக்கூடிய வகையிலே கொஞ்சம் சொல்லியிருக்கிறார்கள்; அவ்வளவுதான்.

'இதோ இதுதான் உண்மை' என்று கூற யாரும் துணியவில்லை.

துணிந்த சில இடங்களிலும் நன்மை பயப்பதற்குப் பதில் இப்படி அடித்துக்கூறிய உண்மை, மனித குலத்துக்குத் துன்பத்தையே

விளைவித்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். அந்த உண்மை உண்மையாக அதிக காலம் ஆட்சி செலுத்தவில்லை.

உண்மைக் கடவுள் தன் தன்மையை, தன் சுயசொரூபத்தை ஏன் ஒளித்து வைத்துக்கொள்ள வேண்டும்?

எல்லோரும் காண, கண்டு களிக்க, களித்துப் பருக, ஏழைக்கு எளியவனாக, அறிவிலிக்கும் அறிவுதரக்கூடியவனாக ஏன் அவன் நம்மிடையே வருவதில்லை?

'மனிதகுலத்தின் நல்லகாலம் கடந்து விட்டது; இனி இல்லை' என்று நம்புகிறவர்கள் வேண்டுமானால் சொல்லலாம். மனிதர்களிடையே கடவுளும் நடமாடிய காலம் உண்டு; கலி முற்ற முற்றக் கடவுள் நகர்ந்து விட்டார்' என்று.

நகர வேண்டிய அவசியம்?

சென்றுவிட்ட காலமும் வரப்போகிற காலமும் நிகழ்கின்ற காலத்திலே சந்திக்க வேண்டாமா?

அப்படிச் சந்திக்காவிட்டால் நிகழ்காலம் ஏது?

கலி முற்றுவது மனிதனால்தான் என்றால், கலி மாறுவதும் மனிதனால்தானே ஏற்படவேண்டும்?

கடவுளையோ அல்லது அந்தப் பெயர் பிடிக்காவிட்டால் மனித குலத்துக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு சக்தியையோ மனிதர்களுக்கிடையே ஆவிர்ப்பவிக்கச் செய்யவேண்டியது யாருடைய கடமை?

மனிதர்களுடைய கடமையே அல்லவா அது?

மனிதர்களுடைய சிந்தனைகள், உலக அரங்கிலே நடத்துகிற நாடகங்களுக்குத்தானே நாம் சரித்திரம் என்று பெயர் கொடுக்கிறோம்?

ஹிட்லர் ஒரு கேலி நாடகம் நடத்திவிட்டு மறைந்து விட்டான்.

கேலி நாடகம் என்று அது சிலருக்குப் படாமல் இருக்கலாம். நாடகம் என்கிற மட்டில் ஒப்புக்கொண்டு விடுவார்கள்.

அணுகுண்டும் ஸ்டாலினும் அடுத்த நாடகத்துக்கு அஸ்திவாரம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்று தோன்றியது

மூர்த்திக்கு.

அடுத்த நாடகத்தின் முடிவு எங்கே? ஆரம்பம் எங்கே?

இறந்ததெல்லாம் இறந்ததுதானா?

நிகழப்போவதெல்லாம் நிகழப் போவது மட்டுந்தானா?

இரண்டும் இன்று, இப்போது, இவ்விநாடியில் இல்லையா

இல்லையானால் இருக்கச் செய்யவேண்டியது அவசியமா இல்லையா?

எப்படிச் செய்வது?

யார் செய்வது?

நம்பிக்கையே அற்றுப் போனவர்கள் எப்படி, என்ன, செய்ய முடியும்?

"என்ன செய்யணும் இப்போ?" என்று கேட்டுக்கொண்டே சிவராமையர் மாடிக்கு வந்த பிறகுதான் மூர்த்திக்குப் புரிந்தது தான் தனது சிந்தனை வேகத்தில் இரைந்து பேசிவிட்டது. இருந்தாலும் சிவராமையர் பூனைபோல அவ்வளவு மெதுவாகவும் மாடிப்படி ஏறி வந்திருக்கக் கூடாது தான்!

"பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு என்ன யோசனையில் ஆழ்ந்துவிட்டாய்?" என்றார் மீண்டும்.

பதில் சொல்லாமல் இருந்துவிடுவது என்றுதான் முதலில் நினைத்தான் மூர்த்தி. பிறகு தன் சிந்தனையைச் சொல்லத்தான் சொல்லுவோமே என்று சொன்னான்: "இதுதான் எனக்கு யோசனை: நம்பிக்கையற்றுப் போய் விட்ட மனிதர்கள் நம்மிடையே அதிகமாக இருக்கும்போது எப்படி உலகம் இந்தப் படுகுழியிலிருந்து எழுந்து மீண்டும் முன்னேறப்போகிறது என்கிற யோசனை எனக்கு" என்றான்.

"அடே கெடுத்தாயே!" என்ற சிவராமையர் சிரித்தார். "உலகம் படுகுழியில் விழுந்துவிட்டதைப்பற்றியும் அது எப்படி முன்னேறும் என்பது பற்றியும் நீயும் நானும் கவலைப்பட வேண்டியதில்லை. அது குழியில் விழும்; தானாக எழுந்திருக்கும்; தானாகவே வைத்தியம் செய்து கொள்ளும்; தானாகவே முன்னிலும் அதிவேகமாக நடக்கும்; நடந்துவிட்டு மீண்டும் ஒரு படுகுழியில் விழும். நீ அதைப்பற்றிப்

பிரமாதமாகக் கவலைப்பட ஆரம்பித்து விடாதே! அதற்கு அப்புறம் நீ மீளமுடியாது" என்றார் சிவராமையர்.

அவர் கேலி செய்வதன் அர்த்தம் என்ன என்று அவர் முகபாவத்திலிருந்து கண்டுகொள்ள முயன்றான் மூர்த்தி. முடியவில்லை. பெட்டியிலிருந்து சோப்புப் பெட்டியையும் ஒரு டவலையும் எடுத்துக் கொண்டு கிளம்பினான். படி இறங்கி வாசலுக்கு வந்தார்கள்.

சிவராமையர் வீட்டுக்கு நேர்எதிர் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலே ஒரு பெண், வயசு இருபதுக்குள்தான் இருக்கும், ஒரு கூடைக்காரியிடம் ஏதோ பேசிக்கொண்டு நின்றவள், இவர்கள் வெளியே வந்ததும் அவசரமாக உள்ளே போய் விட்டாள்.

சிவராமையர் மூர்த்தியைக் கேட்டார். "அந்தப் பெண்ணைப் பார்த்தாயா கிட்டா?" என்று.

"பார்த்தேன்" என்றான் மூர்த்தி. பிறகு தான் விடியற் காலையில் கீழே இறங்கி வந்தபோது பார்த்த பெண் உருவம் அவளாகத்தான் இருக்க வேண்டும் என்றும் சொன்னான்.

சிவராமையர், "அந்தப் பெண்ணுக்குங்கூட வாழ்விலே நம்பிக்கை இருக்கிறது. நம்பிக்கைக்கு இடம் இருக்கிறது" என்றார்.

"அப்படியென்றால்? "அந்தப் பெண்ணுக்கு வயது ஏழெட்டு இருக்கும்போது கல்யாணம் செய்து வைத்து விட்டார்கள். அவள் கணவன் இரண்டொரு வருஷங்களில் இறந்துவிட்டான். ஆயுள் பூராவும் அவள் கணவன் இல்லாமலேயே கழிக்கவேண்டியவள்."

"அடடா! அப்படியா?" என்றான் மூர்த்தி.

"அவளைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால் நமது பரிதாபத்துக்கு அர்த்தமோ பலனோ கிடையவே கிடையாது. இந்தச் சமூகத்தில் மனிதனுக்கு நினைவு தெரிந்த நாளாக இந்த மாதிரி பரிதாபப்படக்கூடிய நிலைமையில் ரொம்பப் பேர் இருந்திருக்கிறார்கள்" என்றார் சிவராமையர்.

"நீங்கள் இன்று இப்படிச் சொல்வது அழகில்லை" என்றான் மூர்த்தி.

"இதற்குப் பரிகாரம் தேடேன். தேடிப் பிடி. என்ன ஆகப் போகிறது என்கிறாய்? இந்த மாதிரியான பரிதாபக் காரணங்கள் ஒழிந்து

விடும். வேறு ஒரு விதமான அவஸ்தை வந்து புகுந்து கொண்டுவிடும்"

"அதற்காக இது இப்படியே இருக்கட்டும் என்று விட்டு விடுவதா?" என்று கேட்டான் மூர்த்தி, ஆத்திரமாக.

அவனுடைய ஆத்திரத்தைக் கண்டு சிரித்தார் சிவராமையர். "உன் ஆத்திரம் உனக்குப் பெருமை தருவதாக இருக்கிறது. எனக்கும் திருப்திதான். பொறு. இதற்கு வழி எப்படித் தேடுவாய்? எனக்குத் தெரிகிறது; 'விதவா விவாகம் செய்து கொள்ளலாம்' என்று சொல்லுவாய். சரி; விதவாவிவாகம் அநுமதிக்கிற சமூகங்களிலே பெண்களைப் பற்றிய வரையிலே வேறு பயங்கரமான, பரிதாபகரமான பிரச்னைகள் வந்துவிடுகின்றது அல்லவா?"

"அது சரி. ஆனாலும் இந்தமாதிரி, பரிதாபகரமான விஷயத்திலே அவனவன் யோசித்து ஏதாவது செய்யத்தானே வேண்டும்? இதுமாதிரி வேறு பல ரகமான பிரச்னைகள் வேறு பல சமூகங்களில் உண்டு என்பதற்காக, நாம் சும்மா இருந்து விடுவதா? நம் ஆண்மைக்கு அடுக்குமா அது?" என்றான் மூர்த்தி பதற்றமாக.

"உன் ஆண்மை என்ன செய்ய முடியும், கிட்டா? ஒரு விதவையை வேண்டுமானால் நீ மணந்துகொள்ளலாம். இந்தத் தெருவில் இதே போலச் சற்றேறக்குறைய இதே வயசில் இன்னும் ஒரு விதவை இருக்கிறாள். இந்த ஊரிலே இன்னும் நாலைந்து பேர் இருப்பார்கள். தேசத்திலே நூற்றுக்கணக்கில் இருப்பார்கள்" என்றார் சிவராமையர்.

"நீங்கள் கணக்கெடுக்கும்போது எனக்கு ரத்தம் கொதிக்கிறது. இந்த மாதிரி ரத்தம் கொதிக்கிற ஆசாமிகள் நூற்றுக்கணக்கில் அகப்பட மாட்டார்கள் என்கிறீர்களா?" என்றான் மூர்த்தி.

"அகப்படுவார்கள், அகப்பட்டு? இப்படி மணம் செய்து கொள்கிற வாலிபர்கள் உயிர் இழக்காமல் இருக்க வேண்டும் என்று யாராவது சட்டம் செய்ய முடியுமா?"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதே புரியவில்லை" என்றான் மூர்த்தி.

"இந்தப் பங்கஜத்தையே எடுத்துக்கொள். இவள் கணவனை இழந்துவிட்டாள். வாழ்வில் சுகத்தையே அறியாமல் ஐம்பது வருஷமோ

அறுபது வருஷமோ இருந்துவிட்டுச் சாகத் துணிவு கொள்கிறாள். வேறு வழியில்லை என்று ஞாபகம் இருக்கும் வரையில் அவள் இப்படியே வாழ்ந்துவிடுவாள். நல்ல வாழ்வு: ஒரு குறிப்பிட்ட எல்லைகளுக்குள், பிறர் போற்ற, பிறருடைய சுக துக்கங்களில் பங்கெடுத்துக்கொண்டு வாழ்ந்து விடுவாள். 'வேறு வழியுண்டு. நீ இப்படி வாழ வேண்டாம். நான் உன்னை மணந்து கொள்ளுகிறேன்' என்று ஓர் ஆண்சிங்கம் வருவதாக வைத்துக்கொள். அவனை நம்பி, இறந்துவிட்ட தன் ஆசைகளை அவள் உயிர்ப்பித்துக்கொள்கிறாள். மறுபடியும் அவள் வாழத் தயாராகிறாள். ஆனால் ஒரு தரம் ஆனமாதிரி மறுபடியும் ஆகாது என்கிற நிச்சயம் ஏது? இரண்டு வருஷ வாழ்வுக்குப் பிறகு புதுக்கணவனும் போய்விடுகிறான் என்று வைத்துக் கொள்...." என்று சிவராமையர் சொல்லும்போது மேஜர் மூர்த்தி சற்றுக் கோபமாகவே குறுக்கிட்டான். "அப்படித் தான் நடக்கும் என்று நீங்கள் நிச்சயமாகவே சொல்லிவிடுவீர்கள் போல் இருக்கே" என்றான்.

சிவராமையர் சிறிது தயங்கினார். பிறகு கேட்டார்: "கிட்டா! உனக்கு ஜோசியத்திலே நம்பிக்கை உண்டா?" என்று.

"ஹிட்லருக்குங் கூடத்தான் ஜோசியத்தில் நம்பிக்கை இருந்தது. என்ன பலன்? ஜோசியம் உண்மையா என்பதுதானே பிரச்னை?" என்றான் மூர்த்தி.

"அதுதான் கேட்கிறேன். ஜோசியம் என்பது உண்மை என்று உனக்குத் தோன்றியதுண்டா?"

"மனிதனுடைய அறிவுக்கு எட்டாத எத்தனையோ விஷயங்கள் பிரபஞ்சத்தில் இருக்கின்றன. அவற்றில் ஒன்றாக ஜோசியமும் இருக்கலாம். ஆனால் இன்று, நடைமுறையில் நாம் பார்க்கிற ஜோசியக்கலை நம்பிக்கை தருவதாக இல்லை" என்றான் மூர்த்தி.

"அது போகட்டும். விதி என்பதில் நம்பிக்கை உண்டா உனக்கு?" என்றார் சிவராமையர்.

"இதிலெல்லாம் நம்முடைய நம்பிக்கை இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? தெரியாது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது" என்றான் மூர்த்தி.

"நீ உலகெலாம் சுற்றிவந்திருக்கிறாய்; சரிதான்; மனிதன் மிருகமாகிச் சஞ்சரிக்கிற போர்க்களங்களையும் பட்டாளங்களையும் பார்த்திருக்கிறாய். சரிதான். ஆனால் மனிதன் மனிதனாக மகத்தான துக்கங்களை அநுபவிப்பதைப் பார்த்ததில்லை; உன் மட்டில் அநுபவித்ததும் இல்லை" என்றார் சிவராமையர்.

மேலே என்ன சொல்லப்போகிறார் என்று காத்திருந்தான் மூர்த்தி, பொறுமையற்றவனாக.

சிறிது நேரம் மௌனமாக இருந்தார் சிவராமையர். பிறகு, "இதோ பங்கஜத்தின் தகப்பனார் வருகிறார் வெளியே. பார்; கிழவர். தன் பெண்ணின் விதவைக் கோலமும் கஷ்டமும் விதி என்பதை எண்ணி அவரால் சகித்துக் கொள்ள முடிகிறது. கடவுள் தந்தார் இன்பம், கடவுள் தந்தார் துன்பம் என்று, விதியின் பேரில் பாரத்தைப் போட்டுவிட்டு ஏற்றுக்கொள்ள முடிகிறது என்பது மகத்தான ஒரு மனித சாதனை!" என்றார்.

"காவேரிக்குப் போய்க் கொண்டே பேசலாம். அப்புறம் ரொம்ப நேரம் ஆகிவிடும். அம்மாமி கோபித்துக் கொள்வாள்" என்றார் சிவராமையர்.

இருவரும் ஆளோடியை விட்டு இறங்கித் தெருவிலே கிழக்கு நோக்கி நடந்தார்கள்.

மனித வாழ்க்கையைச் சுலபமாக்குகிறது விதி என்கிற சித்தாந்தம்.

உண்மைதான்.

ஆனால் விதியின் பெயரால் சகித்துக் கொள்ளப்படும் எண்ணிக்கையற்ற துன்பங்களுக்கு வேறு மாற்றே கிடையாதா?

குற்றமற்ற சமூக வாழ்வைச் சமைப்பதென்பது மனிதனால் ஆகாத காரியமா?

எப்படிப்பட்ட சமூகத்தை வகுத்துக் கொண்டாலும் அதிலே ஒரு பகுதி இன்னல்களுக்கும் இழிவுகளுக்கும் தீமைகளுக்கும் அடிமைப் பட்டுத்தான் கிடக்கவேண்டுமா?

மனிதனால் பூரணமான அறிவோடு கூடிய வாழ்க்கை - இன்னல்களற்ற, தீமைகளற்ற, இழிவுகளேயற்ற வாழ்க்கை - நடத்த இயலாதா?

"விதியைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விட்டாயாக்கும் நீ?" என்று கேலி செய்தார் சிவராமையர்.

மூர்த்தி பதில் அளிக்கவில்லை.

சிவராமையர் ஒரு வீட்டைக் குறிப்பிட்டுக் காட்டினார். "இதோ இந்த வீட்டைப் பார்த்துக்கொள். இதனுடைய சொந்தக்காரர்களைப் பற்றி நான் கொஞ்சம் சொல்கிறேன் கேள்" என்றார்.

அவர் சுட்டிக் காட்டிய வீட்டைப் பார்த்தான் மூர்த்தி.

## 17

வடவண்டைச் சரகத்தில் ஒரு வீடு. வாசலிலே இரண்டு தென்னம்பிள்ளைகள், மார் உயரத்திற்கு வளர்ந்திருந்தன. அதைத் தவிர அந்த வீட்டிலே செழுமையோ பசுமையோ இருந்ததாகத் தெரியவில்லை. இருபத்தைந்து அடி அகலமே இருக்கும் வீடு. மண்ணாலான திண்ணை; பல இடங்களில் இடிந்தும் சரிந்தும் இருந்தது. திண்ணைக்குக் கீழே ஆளோடி. சிறு நெறிஞ்சிச் செடிகள் பல சில்லென்று பூத்திருந்தன. ஆளோடியின் மூலையில் ஓர் ஊமத்தம்பூப் புதர் பூத்துத் தொங்கியிருந்தது. திண்ணையின் மேல் இருந்த தூண்களை எல்லாம் பாதிக்கு மேல் செல் அரித்திருந்தது. வெளிச் சுவரெல்லாம் உப்புப் பூத்துக் கொட்டியிருந்தது. கூரை ஒரு பக்கம் ஓலையில்லாமல் திறந்த வெளியாக இருந்தது. அந்தப் பக்கத்தில் சுவரெல்லாம் மழைஜலம் பட்டுக் கரைந்திருந்தது. சுவரிலே சுண்ணாம்போ, சாணமோ பட்டு வெகுநாள் ஆகியிருக்கும்போல் இருந்தது. ஒடுமாற்றி யுகாந்தரங்கள் ஆகியிருக்கும். வாசற் கதவு ஒரு நாதாங்கியில் தொத்திக் கொண்டிருந்தது.

"இப்போது யாரும் மனுஷா வசிக்கிற வீடு மாதிரியே இல்லையே இது?" என்றான் மூர்த்தி.

"இருக்கா இருக்கா" என்றார் சிவராமையர். "அதுவும், ஒரு காலத்தில் சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்தில் ரொம்பவும் பெரிய வீட்டுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தவர்கள் இப்போது இந்த வீட்டில் இருக்கிறார்கள். சாத்தனூர் சர்வமானிய நிலங்களில் பெரும்

பகுதி அவர்களிடம் இருந்தது..."

"ஒரு காலத்தில் என்றீர்களே. அது ரொம்ப நாட்களுக்கு, பல தலைமுறைகளுக்கு முந்திபோலும்!" என்றான் மூர்த்தி.

"அப்படியும் இல்லை. இந்த மாறுதல் இரண்டு தலைமுறைகளுக்கு உள்ளாகவேதான். இரண்டு தலைமுறை என்று கூடச் சொல்லிவிட முடியாது. நாற்பது வருஷங்களுக்கு முன் இவர்கள் குடும்பம் சாத்தனூரிலேயே முதற் குடும்பமாக வாழ்ந்தது எனக்குத் தெரியும்" என்றார் சிவராமையர்.

"பின் இது எப்படி நேர்ந்தது?"

"விதி என்றுதான் சொல்லவேண்டும். வேறு என்ன சொல்வது? சொல்றேன், கேளேன்" என்றார் சிவராமையர்.

அவர் சொல்லத் தொடங்குமுன் அவர் சுட்டிக்காட்டிய வீட்டிலிருந்து ஒரு கிழவர் வந்தார். வயசு சற்று ஏறக்குறைய எழுபதாவது இருக்கும். வயசு அவருக்குக் காம்பீர்யத்தைத் தந்திருக்கிறது. முதுகில் இருந்த லேசான வளைவைத் தவிர அவரிடம் வேறு எவ்விதமான வயசுக்கோளாறுகளும் தெரியவில்லை. கண்கூட மங்கியதாகத் தெரியவில்லை.

"ஏண்டா சிவராமா? இப்பத்தான் காவேரிக்குப் போறயா என்ன? விடியற்காலையிலேயே குளிச்சுடவயே! யாரு, பிள்ளையாண்டான்?" என்று கேட்டார் சிவராமையரைப் பார்த்து.

"மருமான்; மதுரத்தின் பிள்ளை."

"ஓ! அன்னிக்குப் பேப்பரிலே பார்த்து எழுதணும்னு சொன்னயே! எழுதி அதுக்குள் வந்துவிட்டானா? தேவலையே!" என்றார் கிழவர்.

"ஆமாம்" என்றார் சிவராமையர்.

"கோயிலுக்குக் கிளம்பினேன். வரட்டுமா?" என்று அவர் போக யத்தனிக்கிற சமயம் பார்த்து எதிர் வீட்டிலிருந்து யாரோ தும்மிய சப்தம் கேட்டது.

கிழவருக்குக் கோபம் வருகிற மாதிரி இருந்தது. "எதிராளாத்திலே காலேஜிலே படிக்கிற கழிசிறை ஒண்ணிருக்கே; அது தினம் நான் கோயிலுக்கு கிளம்பறச்சே வேணும்னு மூக்கிலே திரியை

விட்டுண்டு தும்மறது. நான் என்னடா செய்யறது சிவராமா?" என்றார் கிழவர்.

எதிராளாத்திலிருந்து கேட்ட தும்மல் செயற்கைத் தும்மல் மாதிரி தான் மேஜர் மூர்த்திக்கும் பட்டது. "வேணும்னு தும்மினால் அதுகூடச் சகுனம் ஆகுமா என்ன?" என்றான்.

"அது என்னவோ போ, கெட்ட குடியே கெடும்னு கெட்டாச்சு. பட்ட காலிலே படும்னு பட்டுக்கொள்வானேன்? போய் மோர் சாப்பிட்டு விட்டுக் கிளம்புகிறேன்" என்று கிழவர் வீட்டுக்குள் போய்விட்டார்.

மூர்த்தி நேர் எதிர் வீட்டைப் பார்த்தான். படிய வாரிய கிராப்புத் தலையும், பவுடர் பூசிய முகமுமாகக் காட்சியளித்தான் ஒரு வாலிபன்; அந்தக் கிழவர் சொன்ன 'காலேஜ் போகிற கழிசிறை' யான அந்த வாலிபன் சிரித்துக்கொண்டிருந்தான். மூர்த்தியோ சிவராமையரோ சிரிக்கவில்லை.

"அவரைப்பற்றி ஏதோ சொல்ல ஆரம்பித்தேளே!" என்று ஞாபகப்படுத்தினான் மூர்த்தி.

மேலே நடந்துகொண்டே சிவராமையர் சொன்னார்:

"கிழவர் பெயர் கிட்டா. அவர் குடும்பம் ஒரு காலத்திலே இந்தக் கிராமத்திலே பெரும் பணக்காரர் குடும்பமாக இருந்தது. முப்பது நாற்பது வேலி நிலம்; பெரிய வீடாக இரண்டொரு வீடுகள், நன்செய், புன்செய் எல்லாம் இருந்தன. ஒரு பையனை அதாவது கிட்டாவின் தம்பியை ஆங்கிலப் படிப்பெல்லாம் படிக்க வைக்க வேண்டும் என்று ரொம்பவும் ஆசைப்பட்டு, ஊரில் எல்லோருடைய பகையையும் பொருட்படுத்தாமல், முதலில் கும்பகோணத்திலும் பிறகு தஞ்சாவூரிலும் காலேஜில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். அப்போது தஞ்சாவூரில் இன்டர்மீடியட் காலேஜ் ஒன்று இருந்தது. நான் சொல்றது நாற்பது ஐம்பது வருஷங்களுக்கு முன் என்று வைத்துக் கொள்ளேன்."

"உம்"

"கும்பகோணத்தில் படித்துக் கொண்டிருந்த வரையில் பையன் ஒழுங்காகத்தான் இருந்தான். தஞ்சாவூர் போனபிறகுங்கூட முதலில்அதிக மாறுதல் இல்லை. தஞ்சாவூரில் பிள்ளை படிக்கிறானே என்று தாயும் தகப்பனும் போய்க் கொஞ்ச நாள் குடித்தனம் போட்டுப் பிள்ளையுடன் தாங்களும் இருந்தார்கள். பிறகு பிள்ளைக்குக்

கல்யாணம் செய்து வைக்கத் தனிக்குடித்தனம் வைத்துப் படிக்க ஏற்பாடு செய்துவிட்டு வந்தார்கள். பிறகுதான் வந்தது எல்லா வினையும். பையனுக்குத் தஞ்சாவூரிலேயே மோகினி பிடித்துவிட்டது. பட்டணம் போய்ச் சேர்ந்தபின் தொடர்ந்து வருகிற வெறிகளும் வந்துவிட்டன."

"இவர் கிட்டா என்பவர் - மாத்திரம் கிராமத்திலேயே இருந்தா ராக்கும்?"

"ஆமாம். இவர் அத்தியயனம் செய்து நியமநிஷ்டை தவறாமல் மிகவும் வைதிகமான வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார். இவர் தம்பி பட்டணத்தில் அமர்க்களம் பண்ணிக் கொண்டிருந்தார். மூத்த பிள்ளையும் அவஸ்தைப்படாதிருக்கட்டும் என்று படித்த பிள்ளையின் போக்கு நிச்சயமானதும் தகப்பனாரே பாகத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டுத்தான் இறந்தார். பாகம் பிரித்தால் என்ன? ஒரு வருஷம், இரண்டு வருஷங்களில், தன் வீதத்துக்கு வந்தது பூராவையும் குடி, கூத்தி, சூது என்று தீர்த்து விட்டான் இளைய பெருமாள். பிறகு வருஷந்தோறும் கிட்டாவையர் பட்டணம் போவதும், தன் தம்பியை ஒரு கூத்தியாள் வீட்டிலிருந்து பணம் கொடுத்து மீட்டு வருவதுமாக நடந்துவந்தது. அவன் கையில் காசு இல்லாவிட்டாலுங்கூட, கொடுத்து அழைத்துக் கொள்ள ஆள் வரும் என்கிற நம்பிக்கையில் எல்லாத் தாசிகளும் இளையபெருமாளுடன் உறவு கொண்டாடினார்கள்" என்று சொல்லிவிட்டு நிறுத்தினார் சிவராமையர்.

"இந்தக் கிட்டாக் கிழவரைக் கோயிலில் வைத்துக் கும்பிடலாமே!" என்றான் மூர்த்தி.

"அவர் பாகமும் கடைசியில் கரைந்துவிட்டது. நோயும் நொடியுமாகக் கடைசியில் வந்து சேர்ந்தான் தம்பி. ஒரு பாவமும் அறியாத அவன் மனைவியும் இரண்டு குழந்தைகளும் வேறு கதியில்லாமல் கிட்டாவைத் தேடி அடைக்கலம் என்று வந்துவிட்டனர். வீட்டை விற்றுத் தம்பிக்கு வைத்தியம் செய்தார், பலிக்கவில்லை. மனைவியையும் குழந்தைகளையும் அண்ணாவின் காலடியில் கட்டிவிட்டு இறந்துவிட்டான் தம்பி."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? கதை அவ்வளவுதான். எவ்வளவோ நல்ல நிலைமையில் இருக்கவேண்டிய கிட்டா இப்போது தலை மேல் இடி விழுந்துவிடுமோ என்று பயப்படும்படியாகக் கிலமாகிப்போன வீட்டில்,

அன்றாடம் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று அறியாமல் காலந் தள்ளி வருகிறார்" என்றார் சிவராமையர்.

"தம்பியின் மனைவியும் குழந்தைகளும் என்ன ஆனார்கள்? கிட்டாக் கிழவருக்கு மனைவி குழந்தைகள் உண்டா?'' என்று கேட்டான் மூர்த்தி.

"தம்பியின் மனைவியும் சீக்கிரமே இறந்துவிட்டாள். தம்பியின் குழந்தைகள் இரண்டும் வளர்ந்து பெரிதாகிவிட்டன. ரொம்பவும் சிரமப் பட்டு ஏதோ இரண்டு படிப்புச் சொல்லிக் கொடுத்தார். ஏதோ வேலையில் இருக்கிறார்கள்; தங்களுக்கு போதுமானதைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள்"

"ஓ! அவர்களால் இவருக்கு ஒன்றும் லாபமில்லையோ?"

"எப்படி இருக்கும்? இருக்க முடியாது" என்றார் சிவராமையர். "கிட்டா உபயோகம் இருக்கும் என்று எதிர்பார்த்திருக்கவும் மாட்டார்" என்றார் தீர்மானமாக.

"அவர் குடும்பம்?" என்று விடாமல் கேட்டான் மூர்த்தி.

"அவருக்குக் கல்யாணமாகிப் பத்து வருஷங்கள் குழந்தையே பிறக்காமல் இருந்தது. பிறகு, காசி ராமேசுவரம் என்று தெய்வங்களை வேண்டித் தவம் கிடந்து ஒரு குழந்தையைப் பெற்றாள் அவர் மனைவி. பெற்று வைத்துவிட்டு, குழந்தைக்கு ஒரு வயசு ஆவதற்கு முன்னரே இறந்து விட்டாள். அந்தக் குழந்தையும் அதற்கப்புறம் இரண்டொரு வருஷங்களே உயிருடன் இருந்தது" என்றார் சிவராமையர்.

"அடடா! வாழ்க்கையே சூன்யம் ஆகிவிட்டதே!" என்று அங்கலாய்த்தான் மூர்த்தி.

"இதை ஊழ் என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்வது?"

"ஆமாம்; அதிலும் முக்கியமாகப் பட்டணத்துத் தாசிகள் வீடு ஒவ்வொன்றாகத் தன் தம்பிக்காகத் தாம் ஏறவேண்டி வந்ததே, அதை விதி என்றுதான் சொல்லவேண்டும். வேறு என்ன என்று சொல்வது?" என்றான் மூர்த்தி.

சிவராமையர் சொன்னார்: "கிட்டாவுக்கு இப்போது வயசு அறுபத்தைந்து தாண்டியிருக்கும். தக்ககாலத்தில் சந்தியா வந்தனம் மாத்தியான்னிகத்தைப் பண்ணிவிட்டுக் கோயிலுக்குப்

போய்வந்துகொண்டிருக்கிறார். தன் சொத்து, சுதந்தரம், வீடு வாசல், மனைவி மக்கள் போனதைப்பற்றி எப்போதும் பேசமாட்டார். எப்பவாவது ஒரு சமயம் ரொம்பவும் வேண்டியவர்கள் பேச்சுக் கொடுத்தால் தன் தம்பியையும் அவனுடைய அப்பாவி மனைவியையும் பற்றிப் பேசுவார்; அவனுடைய குழந்தைகள் ஏதோ உத்தியோகம் பார்த்துக்கொண்டு செளகரியமாகச் சம்பாதித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றன என்பார். தம்பியின் காரியங்களைப்பற்றி இன்னும் அவர் வருத்தத்துடன் பேசுகிறாரே தவிர, கோபத்துடன் பேசி நான் அறியேன். ஆங்கிலப் படிப்பையும், அதன் வழிகளையும் போக்கையும் பற்றி ஒவ்வொரு தடவை ஆத்திரத்துடன் பேசுவார். ஒவ்வொரு சமயம் தம் தகப்பனாரை நொந்து கொள்வார். அவர் அந்த இளவயசில் தம் பிள்ளையைப் பட்டணக்கரையில் விட்டிருக்கப்படாது என்பார். அவ்வளவு தான்."

"இந்த மாதிரி மனிதர்களும் இன்னும் உலகில் இருக்கும்போது உலகில் மனிதனுடைய எதிர்காலம் நம்பிக்கை தருவதாக இல்லை என்று சொல்லிவிட முடியுமா?" என்றான் மூர்த்தி.

"கிட்டாவைப்போல இந்த ஊரில் வேறு யார் இருக்கிறார்கள்? ஆயிரத்தில் ஒருவர் இவர். அதுகூடத் தவறு. நூறாயிரத்தில் ஒருவர் இவர் என்று சொல்லவேண்டும்" என்றார் சிவராமையர்.

"நீங்கள் சொல்வது புரிகிறது. அவரை மனிதர்களில் ஒருவர் என்று சொல்வது பிசகு. மனித குலத்துக்கு அப்பாற்பட்டவர்களில் ஒருவர் என்கிறீர்கள் நீங்கள்" என்றான் மூர்த்தி.

"எப்படி வேண்டுமானாலும் சொல்லு" என்று சிவராமையர், தெருவின் கிழக்குத் திருப்பம் திரும்பிக் காவேரியில் ஸ்நானம் செய்துவிட்டுத் தெருவுக்குள் வந்துகொண்டிருந்த முப்பது முப்பதிரண்டு வயசிருக்கும் ஒருவனைப் பார்த்து, "வா ராமு! எப்ப வந்தே? இப்போ உங்க பெரியப்பாவோட பேசிண்டிருந்தேன். நீ வந்திருக்கிறதாகச் சொல்லல்லையே! அண்ணா செளக்கியமா?" என்று விசாரித்தார்.

"செளக்கியந்தான். நான் இன்று காலையில்தான் வந்தேன் பம்பாயிலிருந்து. பத்துநாள் லீவு. அண்ணா செளக்கியம். டெல்லியிலே தான் இருக்கான், பழைய வேலையிலேயே!" என்றான் ராமு.

"பெரியப்பா திடமாகத்தான் இருக்கிறார். இருந்தாலும் நீங்கள் யாராவது கூட இருந்தால்தான் தேவலை" என்றார் சிவராமையர்.

"அது எப்படி மாமா சாத்தியம்? சம்பாதித்தால்தான் சாப்பாடு என்கிற நிலைமை, என்றைக்கு மீந்து வைத்துக் கொண்டு ஓய்வு பெற்றுத் திரும்பப்போகிறோம். அதுகூட இல்லை. சம்பாதிக்கிறது சாப்பாட்டுக்குப் போதுமானதாகத்தான் இருக்கிறது. பெரியப்பாவோ சாத்தனூரை விட்டுக் கிளம்ப மாட்டார். என்ன செய்யறது? வருஷத்திற்கு ஒரு முறை மற்ற எந்தக் காரியம் எப்படிப் போனாலும் வந்து நாலுநாள் இருந்து பார்த்து விட்டுப் போகிறேன். அவ்வளவுதான் நான் செய்யலாம்" என்றான் ராமு.

"உன் அண்ணா அதுகூடச் செய்யறதில்லை"

"அதைச்சொல்லி என்ன மாமா பண்றது? அவன் குடும்பம் பெரிசாயிடுத்து. தெரியாமல் பார்த்து ஒரு பிசாசைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாயிற்று. என்ன பண்றது? ஏதோ மானமாய்க் காலந்தள்ளினால் போதும் என்று அவன் சிரமப்படறான்; எங்கே வரது, எங்கே போறது?" என்றான் ராமு.

"அது போகட்டும். நீ இன்னிக்கு வாயேன், எங்காத்துக்குச் சாப்பிட" என்று அவனை அழைத்தார் சிவராமையர். "ஒரு விருந்தாளிகூட வந்திருக்கு; என் மருமான் இது. கிருஷ்ண மூர்த்தின்னு பெயர். ஜர்மனி, ஜப்பான் எல்லாம் போய் வந்திருக்கான்" என்று மேஜர் மூர்த்தியை அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தார் மாமா.

"எங்கேயோ பார்த்த முகமா இருக்கே என்று பார்த்தேன். மேஜர் மூர்த்தின்னு போட்டோவெல்லாம் பத்திரிகைகளெல்லாம் வந்ததோ?" என்றான் ராமு.

"ஆமாம். அவனேதான். ஏதோ பெரிய மனசு பண்ணி மாமா கூப்பிட்டதற்கு ஆட்சேபம் செய்யாமல் வந்திருக்கிறான்..." என்றார் சிவராமையர். "உங்க பெரியப்பாவைப் பற்றி இப்பத்தான் அவனிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். நம்ப பேசிண்டிருந்தமே அந்தக் கிட்டாவின் தம்பி பிள்ளை இவன், இரண்டாவது பிள்ளை" என்றார்.

"தெரிந்துகொண்டேன்" என்றான் மூர்த்தி.

"இன்னும் இரண்டொரு நாள் இருப்பீர்களில்லையா?" என்று மூர்த்தியை ராமு கேட்டான்.

"தெரியணும். ஒண்ணும் நிச்சயமில்லை" என்றான் மூர்த்தி.

"இருப்பான் இருப்பான்!" என்றார் சிவராமையர்.

அவருக்குத் தன்னைச் சாத்தனூர் கிராமத்தில் தன்னுடன்

நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று எவ்வளவு ஆசை இருந்தது மனத்தில் என்பதுபற்றி மூர்த்திக்கு வியப்பாக இருந்தது.

"இங்கே அவருக்குப் பொழுது போகாது. காவேரிக் கரையில் உள்ள அசல் பட்டிக்காடு இது! அவர் நாகரிக உலகம் பூராவும் சுற்றிப் பார்த்தவர்" என்றான் ராமு.

"அவனுக்கு இங்கே இருப்புக்கொள்ளாது என்பது உண்மைதான்" என்றார் சிவராமையர்.

"மனிதன் மனிதத்தன்மையை இழக்காத எந்த இடமுமே புனிதமானதுதானே? இது சாத்தனூராக இருந்தால் என்ன? லண்டன் மாநகரமாக இருந்தால் என்ன?" என்றான் மூர்த்தி.

"பட்டணக்கரைகளைவிட இங்கே வசிப்பது எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது" என்றான் ராமு.

தன் மருமான் மேஜர் மூர்த்தி அந்த ராமுவிடம் ஒரு விவாதத்தைத் தொடங்கிவிடப் போகிறானே என்று பயம் சிவராமையருக்கு. அவர், "இன்று எங்காத்துக்குச் சாப்பிட வாயேன். பெரியப்பாவிடமும்-" என்று ராமுவிடம் மீண்டும் சொன்னார்.

ராமு, "இன்றைக்கு வேண்டாம். நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். சாப்பிட்டுவிட்டு வருகிறேன் உங்காத்துக்கு, மத்தியானமாக" என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு போனான்.

மூர்த்தியும் சிவராமையரும் தெருத் திரும்பி, தெற்குப் பார்த்து, காவேரியை நோக்கி நடந்தார்கள்.

## 18

"மெல்லவே போவோம். அவசரம் ஒன்றும் இல்லையே! இந்தச் சந்து நடப்பதற்கு ரொம்பவும் நன்றாயிருக்கிறது" என்றான் மூர்த்தி.

அவன் வீட்டிலிருந்து பார்த்தபோது தெரிந்த மூங்கிற் புதர், சர்வமானிய அக்கிரகாரமும் அந்தச் சந்தும் சேருகிற இடத்திலே, இடது கைப் பக்கத்தில் இருந்தது. தெற்கு வடக்காகச் சந்து, மூங்கிற் புதரைத் தாண்டி இரண்டு பக்கமும் ஓடிற்று. சந்தில் வெயிலே தெரியவில்லை. நிழல் அடர்ந்திராத சில இடங்களில் மட்டும் வெயில் சில்லுகள் பளிச்சிட்டன. சந்தின் இருபுறத்திலும் எண்ணிக்கையற்ற

பறவைகளின் விதவிதமான குரல்கள் கேட்டன. நாட்டுப்புறத்தில் தண்ணீர் இருக்கிற இடத்தில் வீசுகிற சுகந்தம் அங்கே வீசியது. சந்தின் இருபுறமும் அழகாக நூல் பிடித்த மாதிரி, முள்வேலி இருந்தது. களிமண் தரைமேல் புல்லுச் செடிகளும் முளைத்திருந்தன. நடப்பதற்கு, கால் வைப்பதற்கு ரொம்பவும் சுகமாக இருந்தது. தெருவின் கோடி வீட்டுச் சுவர்கள் மிகவும் சுத்தமாக இருந்தன. சமீப காலத்தில் - மிகவும் சமீப காலத்தில் - சிமெண்டு பூசிச் செப்பனிட்டது போல் இருந்தது.

நாரத்தை மரங்கள் நிறைந்த ஒரே தோட்டம் முதலில் இருந்தது. "இந்தத் தோட்டம் பட்டாபிராமையருடையது. அவர் ரொம்பவும் சிரமப்பட்டு இந்தத் தோட்டத்தைக் காப்பாற்றி வருகிறார். புஸ்தகங்களை வைத்துப் படித்துப் படித்து நாரத்தை மரங்களை ஏராளமாகக் காய்க்க வைக்கிறார். கூலியாட்களுக்குச் சம்பளம் முதல் உணவு வரையில் எல்லாம் ஏராளமான செலவுதான்" என்றார் சிவராமையர்.

"இவ்வளவு ஏராளமான செலவுக்கும் கவனத்துக்கும தகுந்த கூலி கிடைக்குமா?" என்று கேட்டான் மூர்த்தி.

சிவராமையர் சொன்னார்: "கூலியை உத்தேசித்தா செய்கிறார் அவர்? இல்லவே இல்லை. நாரத்தங்காய் பயிரிடுவதில் அவருக்கு அளவு கடந்த ஆர்வம். காய்க்கிற நாரத்தங்காய்களை முதலில் உறவினருக்கும் தெருவுக்கும் ஊருக்கும் என்று பங்கு போட்டு, நாரத்தங்கொல்லை நாரத்தங்காய் நன்றாயிருக்கும் என்று ஒவ்வொரு வீட்டுக்கும் ஆறு ஏழு எட்டு பத்து என்று அனுப்பிவிடுவார். கண்டு மிஞ்சினால் கும்பகோணத்தில் உள்ள நண்பர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிடுவார். ஒரு நாரத்தங்காயைக் கூடப் பட்டாபிராமையர் விற்று நான் பார்த்ததில்லை" என்றார்.

"அப்படியா? அதைக் காய்க்க வைக்கப் பாடுபட்டு, அவர் சாப்பிடு வதிலும் பிறர் - வேண்டியவர்கள் - சாப்பிடுவதிலும் திருப்தி அடைகிறாரே. தேவலையே!" என்றான் மூர்த்தி.

"பட்டாபிராமையர் ஒரு தினுசான பேர்வழி. சொத்து அதிகம் இல்லாவிட்டாலும் எல்லோருக்கும் கொடுக்கவேண்டும், தானும் சாப்பிட வேண்டும் என்கிற கொள்கையும் தாராள சிந்தனையும் உள்ளவர். தெருவுக்கு யாராவது அந்நியப்பேர் வந்துவிட்டால், தெரிந்தவரா, தெரியாதவரா என்று யோசிக்காமல், சாப்பிட வாயேன் என்று அழைத்துக் கொண்டு போய் விடுவார்.

யரீரையாவது அழைத்துத் தம் வீட்டில் சாப்பிடச் செய்யாவிட்டால் அவருக்கு அன்று சாப்பாடு இறங்காது" என்றார் சிவராமையர்.

"ஏது, ஏது நீங்கள் சொல்வதைப் பார்த்தால் சாத்தனூர் பூராவுமே ஆயிரத்துக்கு ஒருவர் ரகத்தைச் சேர்ந்த மனிதர்கள்தான் இருப்பார்கள் போல் இருக்கிறது?" என்றான் மூர்த்தி.

"அப்படிச் சொல்லவில்லை நான். இதற்கு மாறான ரகத்தில் ஒரு ஏழெட்டுப் பேரைப்பற்றி நீ காலையில் அறிந்து கொண்டாய் அல்லவா? அதற்கு மாற்றாகத்தான் சில பேரைப் பற்றிச் சொல்ல நினைத்தேன்; சொன்னேன்" என்றார் சிவராமையர்.

மூர்த்தி பதில் சொல்லவில்லை. வேலி ஓரத்தில், இடுப்புயரம் வளர்ந்திருந்த ஒரு செடியில் பூத்திருந்த நீல நிறப் பூ ஒன்றைப் பறித்து மோந்து பார்த்தான்; அது ஒரே நாற்றமாக நாறியது. 'சீ' என்று பூவை எறிந்துவிட்ட பிறகு கூடக் கை நாறிற்று. பார்ப்பதற்கு என்னவோ அந்தப் பூவும், ஆறு இதழ்களுடன், நீல வர்ணமாக அழகாகவேதான் இருந்தது.

மூர்த்தி பூவைத் தூக்கி எறிந்ததைச் சிவராமையர் கவனிக்காமல் இல்லை. கவனித்தார். ஆனால் அதைப்பற்றி எதுவும் சொல்லாமல் பட்டாபிராமையரைப்பற்றித் தொடர்ந்து சொன்னார்: "அவர் தெருவுக்கு வருபவர்களைச் சாப்பிடக் கூப்பிட்டு வருவதைப் பற்றி அவர் பையன் என்ன சொல்கிறான் தெரியுமா?" என்றார்.

"சொல்லுங்கள்" என்றான் மூர்த்தி.

"போன ஜன்மத்தில் அவர் ஒரு சத்திர நிர்வாகியாகவோ ஹோட்டல் சொந்தக்காரராகவோ இருந்திருக்க வேண்டும் என்கிறான் அவர் பையன்" என்றார் சிவராமையர்.

"ஏனாம்?"

"இந்த ஜன்மத்திலும் பூர்வஜன்மப் பழக்க வேகத்தால் எல்லோரையும் சாப்பிடக் கூப்பிட்டு வருகிறார்; லாபம் அடைய மட்டும் மறந்து விடுகிறார்; என்பது அவர் பையன் அபிப்பிராயம்" என்றார் சிவராமையர்.

"பையனுக்கு வக்ரபூத்தி என்பதைத் தவிர, கெட்டிக்காரன்தான் போல் இருக்கிறது" என்றான் மூர்த்தி.

"ஆமாம், பி.ஏ. பரீட்சையில் ராஜதானியிலேயே முதலாவதாகப் போன வருஷம் பாஸ் பண்ணினான்" என்றார்

சிவராமையர்.

"தேவலையே!" என்றான் மூர்த்தி.

அவனுக்குத் தன் கல்லூரி நாட்கள் ஞாபகத்துக்கு வந்தன. அறுபது பேரில் முதல்வனாக இருக்க அவன் எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டியிருந்தது. சிலசமயம் முதல்வனாக இருப்பது சாத்தியமில்லாமல் போய்விடும். வகுப்பில் இரண்டாவது பையன் ஆகிவிடுவான்.

நாரத்தங்கொல்லையை அடுத்து வேறு ஒரு தோட்டம் இருந்தது. அதில் எட்டு வரிசை தென்னைமரங்கள் கிழக்கு மேற்காக இருந்தன. தென்னைகள் தவிர மா, பல முதலிய மரங்களும் இருந்தன. நடுவிலே ஒரு சிறு குளம் இருந்தது. அக்குளத்தைச் சுற்றிப் பூஜைக்குத் தேவையான சகலவிதமான புஷ்பங்களும் இருந்தன. ஒரு துளசி மாடம் இருந்தது. அதை அடுத்துச் சிறியதாக ஒரு சவுக்கண்டி இருந்தது. கூரை போட்ட சிமெண்டுத் தளமிட்ட சவுக்கண்டி.

"மனத்துக்கும் உடலுக்கும் சௌக்கியம் தரக்கூடிய இடம் இது" என்றான் மூர்த்தி; சற்று நின்று சவுக்கண்டியையும் துளசி மாடத்தையும், கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த புஷ்பச் செடிகளையும் தெளிந்த நீரோடு கூடிய குளத்தையும் பார்த்துக் கொண்டு.

"தெருவிலிருந்த வீட்டையும் தொலைத்த பிறகு சாம்ப மூர்த்தி ராயர், இந்தத் தோட்டத்தில் இந்தச் சவுக்கண்டியை அமைத்துக்கொண்டு ஒரு வருஷம் இருந்துவிட்டுப் பிறகு இங்கிருந்துதான் பாண்டுரங்க பஜனை செய்துகொண்டு பண்டரீபுரம் கிளம்பினார்" என்றார் சிவராமையர்.

"பண்டரீபுரத்திலிருந்து அவர் இன்னும் திரும்ப வில்லையோ? சவுக்கண்டியில் யாரும் ஆள் நடமாட்டம் இருக்கிற மாதிரியே தெரிய வில்லையே" என்றான் மூர்த்தி.

"அவர் பண்டரீபுரத்திலிருந்து திரும்பவே மாட்டார். நேரடியாக ஒரே எட்டில், பண்டரீபுரத்திலிருந்து வைகுந்தத்துக்கே போய்விட்டார். அவர் வாழ்வு அற்புதமான வாழ்க்கை. அவகாசம் கிடைக்கும்போது பூராவும் சொல்லுகிறேன். மனிதனுடைய பலவீனத்துக்கும் பலத்துக்கும் ஆண்மைக்கும் ஆண்மையின்மைக்கும் அவர் ஓர் உதாரணம். அவர் இருக்கும்போதும், இறந்தபிறகும் அவரால் திருந்தியவர்கள் பலர்...." என்றார் சிவராமையர்.

"அப்படியா?" என்றான் மூர்த்தி.

"என்ன, சாம்பமூர்த்திராயருடைய சவுக்கண்டியைப் பற்றி ஆராய்ச்சி நடத்தத் தொடங்கிவிட்டேள்? என்ன விசேஷம்? யாரு மாமா இது? புதுசாக இருக்கே?" என்று கேட்டுக் கொண்டே வந்து சேர்ந்த ஆசாமியைக் கவனித்தான் மூர்த்தி.

அம்மை வடு நிறைந்த முகமும் வாராத தலையும் விளிம்பு ஓரங்களிலும் களிம்புப் பச்சை காட்டிய மூக்குக் கண்ணாடியும் லேசான முதுகுக் கூனலுமாக இருந்தார் வந்தவர்.

"இவ என் மருமான்; மூர்த்தின்னு பெயர். ஜர்மனி, ஜப்பான், இ.தே. ரா. எல்லாவற்றிலும் போய் இருந்தவன்" என்று மேஜர் மூர்த்தியை வந்தவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். பிறகு மூர்த்தியின் பக்கம் திரும்பிச் சொன்னார் சிவராமையர்: 'இவர் ஒரு கதாசிரியர், சாமா என்று பெயர். இரண்டொரு புஸ்தகங்கள் போட்டிருக்கிறார்.'

சாமா என்கிற இலக்கியாசிரியன் குறுக்கிட்டான்: "யாரும் படிக்காத புஸ்தகங்கள் ஏழெட்டுப் போட்டிருக்கிறேன்" என்றான்.

"பத்திரிகைகளிலெல்லாம் நிறையக் கதைகள் எழுதியிருக்கிறார். பட்டாபிராமையர்னு - முன்னே சொன்னேனே அந்தப் பட்டாபிராமையர் அல்ல - இவர் வேறு ஒருத்தர்; சர்க்கார் உத்தியோகத்திலிருந்து பென்ஷனுடன் விலகிக்கொண்டவர். அவருடைய ஒரே பிள்ளை..." என்று இலக்கி யாசிரியன் சாமாவை மூர்த்திக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் சிவராமையர்.

"பெயரை மட்டும் இரண்டொரு பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன். ஒன்றும் படித்ததில்லை" என்றான் மூர்த்தி.

"அதனால் ஒன்றும் நஷ்டமில்லை" என்று அடக்கமும் அடக்கமில்லாமையும் தொனித்த குரலிலே பதில் அளித்தான் இலக்கியாசிரியன் சாமா.

ஒரு விநாடி, பதில் சொல்லலாமா வேண்டாமா என்று தயங்கிவிட்டு மூர்த்தி சொன்னான்: "நீங்கள் எழுதிவிடுகிறீர்களே தவிர, படிப்பது படிக்காதிருப்பது, நஷ்டம் நஷ்டமில்லை என்பதை வாசிக்கப் பிறந்தவர்களாகிய நாங்கள்தானே சொல்லவேண்டும்?" என்று கேட்டான்.

"எங்க ஊர்க்காரர் என்பதற்காக மட்டும் நான் சொல்வதாக நினைத்துக்கொள்ளாதே, கிட்டா. சாமா உண்மையிலேயே நன்றாக

எழுது கிறவன்தான். நீ வாசித்தாயானால் உனக்கு நிச்சயம் அவன் எழுத்துப் பிடிக்கும்" என்றார் சிவராமையர்.

சாமா சிரித்தான். "சிவராமையர் சொல்லுகிறாரே என்று நீங்கள் படித்து ஏமாந்து போய்விட வேண்டாம், ஸார். ஆமாம், இப்பவே சொல்லி விட்டேன். நான் எழுதுகிற கதைகளும் கட்டுரைகளும் உண்மையில் என்னை தவிர வேறு யாருக்குமே பிடிப்பது கிடையாது" என்றான்.

"அவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறீர்களே?" என்று சொல்லிச் சிரித்தான் மூர்த்தி.

"நிச்சயமில்லாமல் என்ன, ஸார்? நிச்சயந்தான். இதோ சவுக்கண்டி யைப் பார்க்கிறீர்களே; இந்தச் சவுக்கண்டியின் சொந்தக்காரரைத் தெருவிலி ருந்து கொஞ்சம் கொஞ்சமாக விரட்டியடித்து, இந்தத் தோட்டத்தில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு குடியேறச் செய்தார்கள். கடைசியில் இந்தச் சவுக்கண்டியையும் பிடுங்கிக்கொண்டு அவரை இந்தத் திசையிலிருந்தே துரத்திவிட்டார்கள். சாம்பமூர்த்தி ராயரைப் போன்ற மனிதர்கள் மட்டுந்தான் உயிர்வாழ யோக்கியதை உள்ளவர்கள்; மற்றவர்கள் மாள்வது தான் நியாயம் என்கிற கொள்கையை உடையவன் நான். என் எழுத்து இந்தத் தெருவில் யாருக்காவது பிடிக்கும் என்று சொன்னால் நம்பும்படியாக இருக்கிறதா?" என்றான் சாமா, அடக்கமாட்டாத ஆத்திரத்துடன்.

சிவராமையர் சொன்னார்: "ஆத்திரப்படாமல் கேள். சாமா, நான் சொல்லுகிறேன். யாரும் சாம்பமூர்த்தி ராயரைச் சர்வமானியத் தெருவிலி ருந்து இங்கும், இங்கிருந்து பண்டரீபுரத்துக்கும் விரட்டவில்லை.

அவர் தம் சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள, ஆத்மார்த்தமான ஒரு பரிபூரணத்தை எட்டிப்பிடிக்க ஆரம்பத்திலிருந்து முயன்றுகொண்டே வந்தார். குதிரைச் சவாரி செய்யும் மணமகனாகவும், பிறகு சொத்துள்ள கிரஹஸ்தனாகவும், குடியானவனிடம் நெல் வேண்டாத மிராசுதாராகவும், பண்டரிநாதனை பூஜிப்பவராகவும், பெண்டிழந்தவராகவும், குடிகாரராகவும், கூத்திமார் லோலராகவும், பிறகு சகலமும் ஒடுங்கி நீயறிந்த சாம்பமூர்த்தி ராயராகவும், சவுக்கண்டியில் சந்நியாசியாகவும், அவர் ஓர் ஆத்ம தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளப் பாடுபட்டார். பூர்ணத்வம் பண்டரீபுரத்தில் நின்று கை காட்டி அழைத்தது; போனார். அவரை யாரும் விரட்டியதாக நீ நினைப்பது அவருடைய மேன்மைக்கே இழுக்குத்

தேடுவதாகும்" என்றார் சிவராமையர்.

அவர் சொன்னதுதான் சரி என்று பட்டது மூர்த்திக்கும்.

ஆனால் சாமா ஒப்புக்கொள்ளுகிற மாதிரி இல்லை. "வெறும் வார்த்தைகள்" என்றான்.

சிவராமையருக்கும் கோபம் வருவது மாதிரி இருந்தது. "வார்த்தை வியாபாரி நீ! நீ என்னைப் பார்த்து, நான் சொல்லுவது வெறும் வார்த்தைகள் என்கிறாயே! இது சரியா?" என்று கேட்டார்.

சாமா சிறிது நேரம் யோசித்தான். பிறகு அடக்கமாகச் சொன்னான்: "உண்மைதான். நான் வார்த்தை வியாபாரிதான். இந்த உலகத்தில் வேறு என்னத்தைச் செய்ய முடிகிறது?" என்றான். ஒரு பெருமூச்சு விட்டான். "காவேரிக்குத் தானே போகிறீர்கள்? நானும் வரேன். காவேரியில் ஸ்நானம் செய்தால் உடம்பிலுள்ள அழுக்குகள் மட்டும் அல்ல, மனசிலுள்ள அழுக்குகளும் கூட அழிந்துவிடும் என்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது" என்றான்.

மூவரும் நகர்ந்தார்கள் காவேரிக் கரையை நோக்கி.

"இவ்வளவுக்கும் பிறகு நீங்கள் எழுதியிருப்பதில் ஏதாவது கொஞ்சம் படிக்கவேண்டும். அது அவசியம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்றான் மூர்த்தி.

"நான் அப்படி ஒன்றும் பிரமாதமாக எழுதியிருக்க மாட்டேன். பிரமாதமாக இருக்கும் என்று எண்ணிக்கொண்டு படிக்க வேண்டாம்" என்றான் சாமா.

"அவரவர்களிடம் உள்ளத்தில் சிறந்ததைத் தரத்தான் உலகில் எல்லோருமே முயலவேண்டும். அவரவர்கள் தருவதும் வெளியிடுவதும் எவ்வளவு சிறந்தது என்பது வேறு பல காரணங்களையும் காரியங்களையும் பொறுத்தது; இல்லையா?" என்றான் மூர்த்தி.

இலக்கியாசிரியன் சாமா சிறிது தயங்கிவிட்டுச் சொன்னான்; "என்னில் சிறந்தது என்று நான் அறிவதைத் தந்திருக்கிறேன்; அதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆனால் அது இன்னும் சிறந்ததாக இல்லையே; சாம்பமூர்த்தி ராயருக்கும் ஏற்றதாக இல்லையே என்பதுதான் என் வருத்தம் எல்லாம்."

"நான் ஜர்மனியிலும் ஜப்பானிலும் நம் ஊரிலேயும் பல ஆசிரியர் களைச் சந்தித்திருக்கிறேன். அவர்களில் ஒரு சிலரைத் தவிர

வேறு யாரும் இந்த, 'சிறந்தது, எவ்வளவு சிறந்தது, ஏன் சிறந்தது, இன்னும் சிறந்தது' என்கிற பக்கமே திரும்பிப் பார்க்க மாட்டார்கள்" என்றான் மூர்த்தி

"அவர்கள்தான் அறிவாளிகள்" என்றான் சாமா.

அவன் உள்ளத்தின் அமைதியின்மை அவனை இப்படிப் பேசத் தூண்டியது என்பது மூர்த்திக்குப் புரிந்தது. அவன் எழுதியது - கதையோ கட்டுரையோ - எதையானாலும் படித்துப் பார்த்துவிட வேண்டுமென்று தோன்றியது அவனுக்கு.

"தார்மீகமான கோபம் என்பதே கலிகாலத்தில் அரிதாகிக் கொண்டிருக்கிறது" என்றார் சிவராமையர்.

"தர்மத்தையும் மனிதனுடைய ஆத்மாவையும் அரித்து, மண்ணாக உதிர்த்துவிடக் கூடிய கோபமும் வெறுப்பும் உலகம் பூராவும் இன்று நிறைந்திருக்கின்றன" என்றான் சாமா.

"நேரில் பார்த்தவன் நான் இருக்கிறேன்" என்றான் மூர்த்தி.

"ஏது? உலகில் மூன்று பேர் இப்படிப்பட்ட ஒரு விஷயத்தைப் பற்றி இப்படிப்பட்ட ஒரே முடிவுக்கு வருவது என்பது ஒரு விசேஷ சமபவந்தான்!" என்று கூறிச் சிரித்தான் சாமா.

"விசேஷ சம்பவந்தான். மருமானுடைய வருகைக்காக என் ஆம்படையாள் வடை பாயசமாவது பண்ணியிருப்பாள். எங்காத்துக்குச சாபபிட வாயேன், சாமா" என்று சாமாவை அழைத்தார் சிவராமையர்.

சிவராமையருக்கு வயசு என்னவோ அதிகம் ஆகிவிட்டதே தவிர, அவர் உள்ளத்தில் உண்மையில் வாலிபந்தான் என்று எண்ணிக்கொண்டே மூர்த்தி எதிர்ப்பட்ட அரசமரத்தைத் தாண்டிச் சரக்கொன்றை மரத்தைத் தாண்டி, காவேரிக்கரை ஏறினான்.

## 19

**கா**வேரி என்கிற பெயருக்கு எண்ணிக்கையற்ற தலைமுறைகளாகக் கவிகள் தனியான ஓர் அர்த்தத்தைக் கற்பித்துத் தந்திருக்கிறார்கள். அந்த அர்த்தம காவேரி தீரத்தில் பிறந்து, வளர்ந்து,

பெரியவர்கள் ஆனவர்களுக்கு மட்டுமே தெரியும் என்று சொல்வது ஒரு விதத்தில் தவறுதான் - ஒரு விதத்தில் தவறும் ஆகாது.

மூர்த்தி, தன் ஆயுளில் பல ஊர்களைச் சுற்றி இருக்கிறான். பல ஆறுகளைப் பார்த்திருக்கிறான். கவிதைப் புகழ் பெற்ற எத்தனையோ ஆறுகளில் நீந்தி விளையாடியிருக்கிறான்.

ஆனால் அவன் அதற்குமுன் காவேரி ஆற்றை - நினைவு தெரிந்து - பார்த்ததுகூடக் கிடையாது. பிறந்தது என்னவோ சாத்தனூரில் சர்வமானிய அக்கிரகாரத்தில்தான். தாய் இருந்தது அவன் ஞாபகத்தில் உறைக்குமுன் அவள் இறந்து விட்டாள். தாய் மாமனைப்பற்றி அவன் என்றைக்குமே கவலைப் பட்டதில்லை. ஆகவே சாத்தனூருக்கோ காவேரிக்கரைக்கோ மூர்த்தி வந்ததே இல்லை.

காவேரி என்று இப்போது நினைக்கும்போது எத்தனையோ எண்ணங்கள் அவன் மனசிலே ஊசலாடின. ஊசலாடப் போராடின.

இதுவரையில் தான் காவேரியாற்றைப் பார்த்ததுகூடக் கிடையாது என்பதை எண்ணியபோது அவனுக்கே வெட்கமாக இருந்தது.

காவேரி என்று தாயை அழைப்பது போல ஓவென்று உரக்கக் கூப்பிட்டுவிட்டு, கரைமேட்டிலிருந்து விழுந்து புரண்டு காவேரித் தாய்க்கு நமஸ்காரம் செய்யவேண்டுமென்று தோன்றியது மூர்த்திக்கு. 'என்ன பைத்தியக்காரத்தனம!' என்கிற சிந்தை தொடர்ந்தது. கூட மாமா சிவராமையர் இருந்தார். இலக்கியாசிரியன் ஒருவனுங்கூட இருந்தான். "இது என்னடா, வக்கிரம்! முழுக்கோணல்!" என்று நினைப்பார்களே!'

தன் நினைப்பை அடக்கிக் கொண்டு மூர்த்தி, "காவேரி! காவேரி!' என்பது இன்று வரையில் என்னைப்பற்றிய வரையில் ஒரு பெயரே தவிர வேறு அல்ல. இன்றுதான் நான் முதல் தடவையாகக் காவேரிக் கரையில் நிற்கிறேன். காவேரியாற்றையே பார்க்கிறேன்" என்றான்.

"நீ பிறந்த இடம் சாத்தனூர். அதையே நினைவு தெரிந்து இன்றுதான் பார்க்கிறாய்;. இல்லையா?" என்றார் சிவராமையர்.

சாமா சொன்னான்: "சொந்த ஊர் எது என்று கேட்டால் நாம நம்முடைய தகப்பனாருடைய ஊரைச் சொல்வதுதான் வழக்கம். உண்மையில் பிறந்த ஊர் எது என்றுகேட்டால் தாயாருடைய ஊராகத்தான் இருக்கும்."

"இதிலே அதிசயம் ஒன்றுமில்லை. நாம் இருவருக்கும் சொந்தந்தானே!" என்றார் சிவராமையர்.

"இந்தக் காவேரி மண்ணுக்குந்தான் சொந்தம்" என்றான் சாமா, மனத்தில் இருந்த ஒரு கசப்பு வார்த்தைகளிலும் தொனிக்க.

சிவராமையர் சற்று யோசித்தார். பிறகு, "உண்மைதான். காவேரி மண்ணுக்குந்தான் நாம் சொந்தம். நான் இங்கேதான் இறக்க விரும்புகிறேன். இங்கேதான் இருக்கவும் விரும்பினேன் என்பது வேறு விஷயம். என்னை இதே காவேரிக்கரையில் கிழக்கே நாலு துறைகளுக்கப்பால் இருக்கிற ஸ்மசானத்தில் வைத்துக் கொளுத்த வேண்டும் என்பதுதான் என் ஆசை. என் சாம்பலும் எலும்பும் இந்த மண்ணிலே கலந்து இந்தக் காவேரித் தண்ணீரிலே கரைந்துவிட வேண்டும் என்பதுதான் ஆசை. ஏன், இந்த ஆசைக்கு அஸ்திவாரம் என்ன என்று யாராவது சொல்ல முடியுமோ?" என்றார்.

மனிதனுடைய ஆசைகள், சிந்தனைகள், கனவுகள், வார்த்தைகள் எல்லாவற்றுக்குமே ஆண் பெண் உறவு சம்பந்தமான அர்த்தம் கற்பித்து உலகச் சிந்தனையையே பொய்யாக ஒரு புரட்டுப் புரட்டிய ஸிக்மண்டு ப்ராய்டு என்பவன்கூட, இந்த ஆசைக்கு காரணம் கண்டுபிடித்துச் சொல்லி விட முடியாது என்பது திண்ணம்" என்றான் மூர்த்தி.

"காவேரி நதிக் கரையிலே நம்முடைய முன்னோர்கள் பலரும் வாழ்ந்து வந்தார்கள். நமது ஊனும் உடலும் உணர்வும் எல்லாம் காவேரி நதி வளத்திலேதான். காவேரியின் நீரே நமக்குள் ரத்தமாக ஓடுகிறது என்று வேண்டுமானால் கற்பனை செய்து கொள்ளலாம்" என்றார் சிவ ராமையர்.

"அது எவ்வளவு தவறான, அழகில்லாத, உண்மைக் கலப்பே இல்லாத கற்பனை என்பது சற்று நின்று யோசித்தால் தெரிந்து விடும்" என்றான் சாமா.

"யோசிப்போமே; நிழலில்தான் நிற்கிறோம். சாத்தனூரில் உள்ள நமக்கு என்ன அவசரம் கொள்ளை போகிறது?" என்றார் சிவராமையர்.

"காவேரி நதி தீரத்தில் நம் முன்னோர்கள் குடியேறியதெல்லாம் சென்ற சில தலைமுறைகளுக்கு முன்தான்" என்றான் சாமா.

"அப்படியானால் அதற்குமுன்...?" என்றான் மேஜர் மூர்த்தி.

"விஷயத்தைத் தெளிவாக்குவதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் கொண்டு சொல்லுகிறேன் நான். நானேதான் அந்த உதாரணம். என் அப்பா சாத்தனூர்க்காரர். ஆனால் என் தாத்தா வேறு ஓர் ஊர்க்காரர். அவர் சாத்தனூரில் கல்யாணம் செய்து கொண்டவர். இதுவே சௌகரியமாக இருக்கிறது என்று இங்கே தங்கிவிட்டார். அதற்கு முன் என் தாத்தாவின் தகப்பனாருக்குச் சொந்த ஊர் திருவாலங்காடு. ஆனால் அதுவும் காவேரி தீரந்தான். ஆனால் அந்தத் தாத்தாவின் தகப்பனாரின் தாத்தாவுக்குத் தாத்தா ஹைதருக்குப் பயந்துகொண்டு அவர் காலத்தில் தெற்கே ஹிந்து ராஜாக்களிடம் இருந்த ராஜ்யங்களில் வந்து குடிபுகுந்தவர். இது நூற்றைம்பது நூற்றறுபது வருஷக் கதை. இதற்குள்ளாகவே இது ஓரளவு மறைந்துவிட்டது. என் குடும்பத்துக்கே மறந்துவிட்டது. அதற்கு முந்திய கதையை - மனிதன் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குப் போய்க் குடி ஏறிய கதையை - எப்படி அறிந்து யார் சொல்வது?" என்றான் சாமா.

"அதனால் காவேரியின் புனிதத் தன்மை போய்விடுமா?" என்றார் சிவராமையர்.

இதுவரை தனக்குத் தோன்றாத ஒரு புது உண்மையைக் கேட்கத் தயாராக நின்றான் மூர்த்தி. ஆட்சேபம் ஆதரவு இரண்டுக்கும் அவன் மனசிலும் விஷயங்களும், வார்த்தைகளும் தோன்றின. பிறகு, அவசியமானால் சொல்லிக்கொள்ளலாம் என்று அவன் பேசாமல் இருந்தான்.

சாமா சொன்னான்: "காவேரியின் புனிதத் தன்மையைக் குறைத்துச் சொல்லவில்லை நான். மனிதன் காலடிபட்டுள்ள எந்த இடமும், கைபட்டுள்ள எந்த இடமும், நின்று சிந்தித்துள்ள எந்த இடமும் புனிதமானதுதான்; காவேரி நதிக்கரையைப்போல் புனிதமானதுதான்" என்றான்.

"உண்மைதான்; நாம் காவேரி என்று நமக்குள் உள்ள, அவ்வப்போது ஏற்படுகிற ஒரு தேவைக்காக ஏதோ ஒன்றை உருவகப்படுத்திக் கொண்டு போற்றுகிறோம். அவ்வளவுதான்" என்றான் மூர்த்தி.

"நம் உள்ளத்தில் உள்ள புனிதத் தன்மையையோ, புனிதத் தன்மையல்லாததையோதான் நாம் வெளிக்கொணர்ந்து காவேரிக்குத் தரமுடியும்!" என்றான் சாமா.

"காவேரிக்கு என்ன? எல்லாவற்றுக்குமே அதுதானே பொருந்தும்?" என்றார் சிவராமையர்.

"ஆமாம், கோயில், காவேரி, பள்ளிக்கூடம், கிராமம், தெரு, குடும்பம் எல்லாவற்றுக்குமே நாம் ஏற்றி வைக்கிற புனிதத்தன்மைதான் ஒளி வீசும். நாம் ஏற்றிக் காண்பிக்கிற கற்பூரந்தான் எதிர் ஒளி தரும்" என்றான் சாமா.

மனிதனைச் சிந்தனைப் பலவீனம் என்கிற வியாதி எத்தனை இடங்களில் அமுக்கத் [illegible]தாகக் காத்திருந்தது என்று யோசித்தான் மூர்த்தி. சிந்[illegible] என்று பெருமை பாராட்டிக்கொ[illegible] மூர்த்தி தன்னை [illegible] ஒன்றன்பின் ஒன்றாகப் பல தவறுகளைச் [illegible] தூண்டி விட்ட[illegible]?

தா[illegible] சாத்தனூர் வந்ததும் ஒரு த[illegible]றுதானோ?

பல[illegible] நிறைந்த ஒரு தீர்மா[illegible]ில் செய்துவிட்டு ஆயுள் பூராவும் வருத்தப்பட[illegible] விஷயமோ, அது?

சிந்திக்கத் தெரிந்தவனாக இருந்துதான் என்ன பலன்?

தன் சிந்தனைகளின் அசட்டுத்தனத்தைச் சாமா - இந்த முப்பது வயதாகாத வாலிபன்; கேவலம் பேனா வீரன் - இடித்துக் காட்டுகிறான். கிழவராகி விட்ட சிவராமையர், அவனுடைய மாமா, அவன் கட்டுகிற சிந்தனைக் கோட்டைகளை ஒரே வார்த்தையில் தகர்த்து எறிந்துவிடுகிறார். 'சிந்தித்தும் புரியாத விஷயங்களைத் துரத்தி ஓடி என்னடா பலன்?' என்று வெகு சுலபமாகக் கேட்டுவிட்டு அவன் மாமி நகர்ந்து விடுகிறாள்; அதுவும் சமையல் அறைக்கு! வாழ்க்கையில் மிகவும் சுலபமான பலனுள்ள காரியங் களைச் செய்வதற்காகச் சமையல் அறைக்கு!

கிட்டா என்று ஒரு கிழவர் தன் வாழ்க்கையே தியாகமாகச் சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்தில் வாழ்ந்து வந்தார். நச்சுவாய்க் கிழம் நாராயணையரும் அதே தெருவில், தம் வாழ்வின் அழமின்மையைத் தெரிந்துகொள்ளாமலே வாழ்ந்து வந்தார். பாடுபட்டு உழைத்துக் காசு கொடுத்து வாங்கி எருப்போட்டு, காய்க்காத வகை மரங்களையும் காய்க்க வைத்து ஒருவர் பிறருக்குக் கொடுத்துத் திருப்தி அடைந்துகொண்டிருந்தார். அதே சமயம், அவருடைய உதாரகுணத்தைப் பூராவும் உதாசீனம் செய்து விட்டுப் பிள்ளையார் கோயில் பொதுச்சொத்தைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டுக்கொண்டே

பிள்ளையாருக்குக் குட்டிக்கொள்வதும் தோப்புக் கரணங்கள் போடுவதுமாக ஒருவர் - பெரிய மனிதர் என்று - வாழ்ந்து வந்தார். அக்கிரகாரத்திலிருந்து காவேரிக்கரைக்கும், மாளிகையிலிருந்து சவுக்கண்டிக்கும், மணமகனாக்க குதிரை மேலிருந்து கால்நடையாய் மண்டப கோபுரத்துக்குமாக யாரோ ஒருவர் - சாம்பமூர்த்தி ராயர் என்று பெயராம் - போய்விட்டாராம். அவரைப்பற்றி இரண்டு அறிஞர்கள் - ஒருவருக்கு வயது அறுபது; மற்றவருக்கு வயது முப்பது இருக்கலாம் - எவ்வளவு ஈடுபாட்டுடன் பேசிக்கொண்டார்கள்?

சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரம் என்கிற உண்மையை அறிந்துகொண்டுவிடுவது என்பது, அதுவும் ஒரே நாளில் அறிந்து கொண்டு விடுவது என்பது மிகவும் சிரமந்தான் என்று பட்டது மேஜர் மூர்த்திக்கு.

எல்லாவற்றுக்கும் சிகரமாக இந்தக் காவேரி என்கிற புதிரை வேறு விவரித்துக்கொண்டிருந்தான் இந்த இலக்கியாசிரியன் சாமா.

அப்பால் கோயில் இருந்தது.

காலையில் தூரத்திலிருந்து பார்த்ததுதான். இன்றும் மூர்த்தி நெருங்கிப் பார்க்கவில்லை.

அந்தக் கோயிலையும் கவிகள் பாடியிருந்தார்கள்.

## 20

ஸ்நானம் பண்ணக் காவேரியில் இறங்கியபோது படித் துறையில் நாலைந்து பேர்தாம் இருந்தார்கள். எல்லோரும் ஸ்நானம் செய்து விட்டுப் போயிருப்பார்கள். அதாவது, அக்கிரகாரத்து ஆசாமிகளில் அநேகமாக எல்லோரும் போயிருப்பார்கள். மேட்டுத் தெருவார் இன்னும் வர நேரம் ஆகவில்லை.

சூரியன் உச்சியை இன்னும் எட்டவில்லை. ஆனாலும் வெயில் ஐப்பசி மாசத்துக்குச் சற்றுக் கடுமைதான்; ஜலத்துக்கு மேலே இருந்த ஜிலுப்பு, அந்தச் சமயத்திலே ஜலத்திலே இல்லை.

"இன்னும் இரண்டு மணி நேரம் முன்னதாக வந்திருக்க வேண்டும்" என்றார் சிவராமையர்.

"இன்னும் கொஞ்ச நேரங் கழித்து வந்திருந்தால் இன்னும் மோசமாக இருக்குமே" என்றான் சாமா.

மாமா சொன்னதற்குச் சாமாவின் பதில் சரியான பதில் என்று பட்டது மூர்த்திக்கு. சிரித்தான்.

சாமா தொடர்ந்து சொன்னான்: "நமக்குக் கையில் ஒரு காரியம் இருக்கிறது; நமக்கென்று ஒரு இடம், எங்கேயோ காவேரி நதிக்கரையிலேயோ, ஏதாவது ஒரு பெயரில்லாத ஏரிக் கரையிலேயோ - ஏற்பட்டிருக்கிறது. வேறு காரியத்தைக் கண்ணெடுத்தும் பாராமல், வேறு இடத்தைச் சிந்தனையால் கூட நாடாமல் இருப்பதுதான் எதையும் செய்ய வழி" என்றான் சாமா.

"நீ சாத்தனூரில் இருக்க மாட்டேன் என்று சென்னைக்குப் போன போது, இந்தக் கொள்கை எங்கே போச்சாம்?" என்றார் சிவராமையர்.

"ஓஹோ!" என்று திரும்பிச் சாமாவைப் பார்த்தான் மூர்த்தி.

சாமா உடம்பைத் தேய்த்துக்கொண்டே சொன்னான்: "துவந்தங் களிலிருந்தும் தளைகளிலிருந்தும் விடுபட முயல்வது மனிதனுடைய முதல் கடமையாகும்" என்று.

"அட பாவி!" என்றார் சிவராமையர்.

மூர்த்திக்குத் தூக்கிவாரிப் போட்டது.

சாமா சிரித்தான்.

சிவராமையர் கேட்டார்! "துவந்தம், தளை என்று ஏனடா இப்படிச் சொல்லுகிறாய்? வேறு யார்? ஒரு கிழட்டுத் தகப்பனார் இருக்கிறார்; மனைவி இருக்கிறாள். இன்னும் குழந்தை குட்டிகள்கூட உண்டாகவில்லை. துவந்தம், தளை என்று யாரையடா சொல்கிறாய்? உன்னை விட்டால் அவர்களுக்கு வேறு யார்?" என்று சரமாரியாக, கோபமாகப் பேசினார் சிவராமையர் கரை ஏறிக்கொண்டே.

சாமா மீண்டும் சிரித்தான். அவன் சொன்னான்: "உம்முடைய இந்தக் கோபம் தார்மீகமான கோபம். சொந்தக் காரியத்துக்காக வந்த கோபம் அல்ல. அதனால் நீங்கள் இப்படிச் சொல்வதைப்பற்றி நான் கோபித்துக்கொள்ளவில்லை. சமாதானம் மாத்திரம் சொல்கிறேன்."

"இந்த மேதாவித்தனமான பேச்சைத்தான் கண்டது!" என்றார் சிவராமையர்.

"மேதாவித்தனமான எழுத்தும் கொஞ்சம் இருக்கு" என்றான் சாமா சிரித்துக்கொண்டே.

சாமாவினுடைய மனோபாவமும் பேச்சும் அவ்வளவாகப் புரிய வில்லை மேஜர் மூர்த்திக்கு. கட்டுக்கு அடங்காத ஒரு விபரீதப் போக்காகவும் பேச்சாகவும் பாவமாகவும் பட்டது அது.

"ஏதோ, சமாதானம் சொல்றேன் என்றாயே, சொல்லு" என்றார் சிவராமையர்.

சாமா கரை ஏறினான். மேஜர் மூர்த்தியும் அவனைத் தொடர்ந்து கரை ஏறினான். உடம்பைத் துடைத்துக்கொண்டே சாமா சொன்னான்: "எனக்கு இருப்பது நீங்க சொன்ன மாதிரி இரண்டே தளைகள்தான் - ஒரு பெண்டாட்டி, ஒரு தகப்பனார். அவர்கள் இரண்டு பேருக்கும் சமாதானம் செய்து வைக்கிற முயற்சியிலேயே நான் என் வாழ்நாள் பூராவையும் கழித்துவிட முடியுமா? வேறு வேலையே எனக்குக் கிடையாதா? சிவராமையரே, நீங்களே யோசித்துச் சொல்லுங்கள்" என்றான்.

ஊருக்கு ஊர் தெருக்களும், தெருவுக்குத் தெரு வீடுகளும், வீட்டுக்கு வீடு வாசற்படிகளும் உண்டு என்கிற வாக்கியம் உண்மைதான் என்று எண்ணினான் மூர்த்தி. அன்று காலை விடிந்தது முதல் அவன் வாசற்படிகளை எண்ணிக்கொண்டே காலந்தள்ளி விட்டான். அது அநாவசியமான, பயனற்ற ஒரு காரியந்தான்.

சிவராமையர் சாமாவுக்குப் பதில் சொன்னார்: "பாக்கி எல்லாக் காரியத்துக்கும் முந்தி நீ இதைக் கவனிக்க வேண்டியது தான் முக்கியம். அதுதான் முதல் காரியம், பிறகுதான் உன் மற்ற வேலைகளை நீ கவனிக்கலாம்" என்றார்.

"அது உங்களுக்குத் தெளிவாகத் தெரிகிற மாதிரி எனக்குத் தெரியவில்லையே?" என்றான் சாமா.

"இதுதான் பெரிசாகப் பேசி, பெரிசு பெரிசாகக் கரை காண்பவர்களிடம் உள்ள விசேஷம்; பிறருடைய பிரச்னையைப் பற்றி அலசி முடிவு காண்கிற மாதிரி தங்கள் காரியங்களைப் பற்றி அலசி ஆராய்ந்து முடிவு கண்டு நடக்க அவர்களால் முடிவதில்லை"

என்றார் சிவராமையர்.

மனித குலத்துக்கே இதுதான் சாபம் போலும் என்று எண்ணினான் மூர்த்தி துக்கத்துடன்.

சிவராமையர் தொடர்ந்து சொன்னார்: "ஏதோ கதைகள் சொல்கிறார்களே தவிர, இந்தக் காவேரி நதியின் கரைகளை மனிதன் கட்டியதில்லை; 'இந்தக் கரைகளுக்குள் ஓடு' என்று யாரும் காவேரி நதிக்கு ஆணையிட்டுக் கட்டுப்படுத்தவில்லை. இந்தக் கரைகளை, தன் தேவைகளை உத்தேசித்து, தன் போக்கை அறிந்து, தன் லட்சியத்தை மனத்தில் ஏற்றுக்கொண்டு காவேரி நதியே இந்த இரண்டு கரைகளையும் ஏற்படுத்திக் கொண்டது. வெள்ளம் வருவது உண்டு சில சமயம்; கரை உடைவது உண்டு. உடைந்துவிட்ட கரையைச் செப்பனிட மனிதன் மண்ணும் கூலியும் உதவுவது உண்டு. ஆனால் இந்தக் கரைகள், காவேரியாறு தானாகச் சிருஷ்டித்துக்கொண்டதுதான். கரைகளை மீறக்கூடாது என்கிற சிந்தனை தூய்மையானது. அதனால்தான், தன் கரைகளினாலேயே காவேரி நதி புனிதமடைகிறது."

"அதே மாதிரி?" என்று சாமா கேட்பதற்கும் சாம்பமூர்த்தி ராயரின் சவுக்கண்டிக்கு நேர் எதிரில் அவர்கள் வருவதற்கும் சரியாக இருந்தது.

"சாம்பமூர்த்திராயர் - உன் சாம்பமூர்த்திராயர் - என்ன சொல்லுவார் என்று யோசித்துப் பார். உன்னைத் தவிர வேறு புகலிடம் இல்லாத உன் தகப்பனையும் உன் மனைவியையும் தளைகள் என்று நீ சொல்வதை அவர் ஒப்புக்கொண்டிருப்பாரா என்று உன்னை நீயே கேட்டுக்கொண்டு பார்" என்றார் சிவராமையர்.

சிறிது நேரம் தயங்கினான் சாமா. பிறகு, "மனைவியைப் பற்றிச் சொன்னதை அவர் ஒப்புக்கொண்டிருக்கமாட்டார். ஆனால் தகப்பனார் விஷயமாகச் சொன்னதைப்பற்றி அவர் என்ன சொல்வாரோ எனக்குத் தெரியாது" என்றான்.

"அவர், தம் மனைவியைப்பற்றிப் பேசி நீ கேட்டிருக்கிறாய். அவருக்கு மனைவி இருந்தாற்போலத் தகப்பனாரும் இருந்தார். அந்தத் தகப்பனாரிடமும் அவருக்கு அத்தியந்தமான கனிவும் விசுவாசமும் உண்டு. அவர் தகப்பனாரையும் நான் பார்த்திருக்கிறேன். அவர், தம் தகப்பனாரைப் பற்றிப் பேசியும் நான் கேட்டிருக்கிறேன். நான் சொல்றேன் நீ நம்பலாம்" என்றார் சிவராமையர்.

"நம்புகிறேன் மாமா" என்று அடக்கத்துடன் பதில் அளித்தான் சாமா.

சாம்பமூர்த்திராயரைப்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று மேஜர் மூர்த்தி முதலில் எண்ணியது வாஸ்தவந்தான். ஆனால், இப்போது அவன் மாமா என்ன சொல்லுவார்? சாம்பமூர்த்தி ராயர் இருந்தது, போனது எல்லாவற்றையும் சொல்லுவார். அவரைப் பற்றிய முழு உண்மையையும் அவரிடம் கேட்டு அவன் தெரிந்து கொண்டு விட முடியாது.

சர்வமானிய அக்கிரஹாரத்தில் வசித்தவர்களில் யாரைப் பற்றியுமே ஏன், உலகத்தில் வசித்தவர்கள் யாரைப்பற்றியுமே, யாரையும் கேட்டுத் தெரிந்துகொண்டுவிட முடியாது. உண்மை என்பது எங்கேயோ காணக்கிடக்கிறது. மனத்தால், உள்ளத்தால் ஆத்மாவால் அறியக்கிடக்கிறது.

சாமாவைப் போன்ற ஒருவனிடம் சாம்பமூர்த்தி ராயர் என்கிற பெயர் இவ்வளவு அடக்கத்தைத் தரவில்லை என்றால், சாமாவைப் பற்றிய வரையில் சாம்பமூர்த்திராயர் என்கிற உண்மையை வார்த்தைகளால் அளக்க முடியாது என்பதுதானே உண்மை?

மாமாவிடம் தெருவில் உள்ள மற்றவர்களைப் பற்றிக் கதையாக விசாரித்து அறிந்துகொள்ள வேண்டியது அவசியமில்லை என்று எண்ணினான் மேஜர் மூர்த்தி.

அக்கிரகாரத்தில் திரும்பினார்கள். தென்னண்டைச் சரகத்தில் வடக்குப் பார்த்த வீடுகளிலே மாடிவீடு - கிழக்கேயிருந்து நாலாவது வீடு - சாமாவின் வீடு.

"சாப்பிட்டுவிட்டு வருகிறேன் மாமா" என்று விடை பெற்றுக் கொண்டான் சாமா.

அவன் வீட்டுத் திண்ணையில் சிவந்த மேனியும், தளர்ந்த உடலும், நரைத்த தலையுமாக உட்கார்ந்திருந்த கிழவர், பொடியை எடுத்து ஒரு தரம் உறிஞ்சிவிட்டு, "ஏண்டா சாமா இவ்வளவு நேரம்?" என்று கேட்டார்.

"ஏதோ பேச்சு" என்று சொல்லிக்கொண்டே சாமா உள்ளே போய் விட்டான்.

அவன் தகப்பனாரான கிழவரின் குரலிலேதான் எத்தனை

ஏக்கம் நிறைந்திருந்தது! 'காவேரிக்குப் பிள்ளை போய் நேரமாயிற்றே, இன்னும் வரவில்லையே, என்ன நேர்ந்திருக்குமோ?' என்ற கவலை போலும்! அவன் வந்து விட்டதில்தான் எத்தனை ஆசுவாசம்!

கற்பனை உள்ள மனிதர்.

'அப்படித்தான் இருக்கும்; அதனால்தான் அவர் பிள்ளை கதைகள் எழுதுவது சாத்தியமாக இருந்தது' என்று எண்ணினான் மூர்த்தி.

அந்த வெயிலில் குளித்துவிட்டு வந்ததே தெரியவில்லை; வீட்டுக்குப் போய்க் கிணற்றடியில் ஒரு தரம் ஸ்நானம் செய்தால் கூடத் தேவலை என்று இருந்தது மூர்த்திக்கு.

மனிதனைக் கடவுள் வெறும் சிந்தனை யந்திரமாக மட்டும் படைத்துவிட வில்லை. வெறும் சொந்த ஆசைகள், அபிலாஷைகள், ஏக்கங்கள் மட்டும் நிறைந்த மாமிச பிண்டமாகவும் படைத்து விடவில்லை. வார்த்தைகளுக்கே அகப்படாத பல ஏக்கங்களுடனும், அதீதமான சில புலன்களுடனும் படைத்திருந்தான்.

ஏன்?

மனிதனுக்கு இவ்வுலகில் அவன் வாழ்க்கையைச் சகல விதங்களிலும் சுலபமாக்கித் தந்திருக்கலாமே, அந்தப் பாழும் கடவுள்.

ஏன் அப்படிச் செய்யவில்லை அவன்?

அதற்கு மர்மமான காரணம் ஏதாவது இருக்கலாமா?

வெயில் சற்று கடுமைதான்; கீழே தெரு மணல் சுட்டது. மணல் சுடுகிறது என்கிற காரணத்துக்காகத்தான் போலும் எங்கள் நிழல்கள் எல்லாம் காலோடே ஒட்டிக்கொண்டிருந்தன. அதிகதூரம் நீண்டு முன்னும் செல்லவில்லை; பின்னும் செல்லவில்லை.

இந்த நிழலின் காரியத்திற்கு ஓர் உள் அர்த்தம் கற்பிக்கலாம் என்று தோன்றியது மூர்த்திக்கு.

ஆனால் அவன் உள் அர்த்தங்களில் அவ்வளவாக நம்பிக்கை வைக்காதவன்.

அவன் இருளில்தான் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். எனினும் அவனுக்குப் பிரியமானது இவ்வுலகில் ஒன்று உண்டு

என்றால், அது ஒளிதான்.

ஆச்சு, மணி பன்னிரண்டு ஆகியிருக்கும். இன்னும் ஆறு மணி நேரத்தில் இருட்டிவிடும்.

காலையில் சூரியனை வரவேற்க அவன் எழுந்துவிட்டான். காலை இளம்பரிதியின் மென்மையாலே, கிழக்கு வெளிறிட, எதிர் வரிசை வீட்டுக்கூரைகள் தோன்றத் தொடங்கியது அவன் கண்ணில் அன்று காலையில் பட்டது.

இருளும் ஒளியும் அற்ற ஒரு மயக்கநிலையிலே தெருக் கோடியிலிருந்த மூங்கிற்புதரைச் சிலுவையில் அறையப்பட்ட ஏசு கிறிஸ்துவாக ஏற்று அவன் மனம் மயங்கியது உண்டு. ஒளி மயக்கத்தால் ஏற்பட்ட மன மயக்கம் அது.

ஒளியிலும் இருட்டிலும், மென்மையான அந்தியிலும், நண்பகலிலும் அதிகாலையிலும் அவனும் அவனுடைய நிழலும் தான் உண்மைகள் என்று சூரியன் உச்சியை எட்டுகிற சமயத்திலே அவனுக்குத் தோன்றியது.

இருளில் நிழல் இல்லையா என்ன?

இருக்கிறது, இருக்கும். இருக்கத்தான் வேண்டும். வேண்டுமென்றே மனிதன் கண்ணில் படாமல் மறைந்து நின்று கண்ணாமூச்சி விளையாட விரும்புகின்றன இவைகள்.

இருளில் நிழலைக் கண்டுகொள்பவன் - அவனை என்ன என்று சொல்வது? சித்தன் என்று சொல்லலாமா? பித்தன் என்று சொல்லலாமா? ஞானி என்று சொல்லலாமா? அறிஞன் என்று சொல்லலாமா? கலைஞன் என்று சொல்லலாமா?

'இருளிலும் தங்கள் நிழலையே கண்டுவிட்டவர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்திலே. கிட்டா என்கிற கிழவர், சிவராமையர் என்கிற தன் மாமா, சாமா என்கிற இலக்கியாசிரியன், அன்பு ததும்ப', 'மதுரத்தின் பிள்ளையா, ஆத்துக்கு வாடா என்ற மங்களத்தம்மாள் நாரத்தங்காய்த் தோட்டத்துப் பட்டாபிராமையர், என்றைக்கோ மறைந்துபோன சாம்பமூர்த்திராயர், யாரோ மளிகைக் கடைக்காரன் என்று சொன்னாரே, மாமா, சோமு முதலி என்று. அடடா, இதில் பெண்களை விட்டுவிட்டோமே' என்று தோன்றியது மூர்த்திக்கு.

ஆனால் சர்வமானிய அக்கிரகாரத்துப் பெண்மணிகளில் யாரைப் பற்றி அவனுக்குத் தெரியும்?

புருஷர்களின் கதைகளில் பலவற்றைத் தனக்குத் தெரிந்த வரையில் ஏதோ மாமா சிவராமையர் சொல்லிவிட்டார். பெண்மணிகளின் கதைகளை அம்மாமி சொன்னால்தான் உண்டு.

ஆனால் அம்மாமி சொல்லமாட்டாள்.

இந்தச் சமூகத்தில் இன்றுவரை பெண்களுக்குப் பேசத் தேவையே இருந்ததில்லை.

பராசக்தியின் அம்சங்கள் அவர்கள். வாய் திறவாமலே ஆட்டி வைக்கவும் அழிக்கவும் ஆக்கவும் அறிந்தவர்கள்!

நிழலும் காலைச் சுற்றிக்கொண்டு உள்ளே வர மூர்த்தி வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

## 21

"நன்னாப் பத்து மணிக்குப் போய்ட்டுப் பன்னிரண்டு மணிக்கு வந்தேள்" என்று மாமி மூர்த்தியைக் கோபித்துக் கொள்கிற மாதிரி சிவராமையரையும் சேர்த்துச் சொன்னாள்.

"என்ன அவசரமாம்? பேசிக்கொண்டே, ஆற அமரக் குளித்து விட்டு வந்தோம்" என்றார் சிவராமையர்.

ஒரு டம்ளர் ஜலம் கொண்டுவந்து வைத்துவிட்டு மாமி, "மாத்தி யான்ஹிகத்தைப் பண்ணுங்கோ, சாப்பிடலாம். கிட்டா பட்டணத்துக்காரன். அதெல்லாம் பண்ணமாட்டான்" என்றாள்.

உண்மையில் மேஜர் மூர்த்திக்கு, சந்தியாவந்தனம் மாத்தியான் ஹிகம் என்கிற மாதிரி ஒரு பழக்கம் தங்களுக்குள் உண்டு என்பதே மறந்துபோய்விட்ட விஷயந்தான். மாமியின் குற்றச்சாட்டுக்கு என்ன பதில் சொல்வது என்று அறியாமல் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு நின்றான்.

சிவராமையரின் மூன்றாவது பேத்தி களுக்கென்று சிரித்தாள்.

"ஏன் அம்மா! தாத்தா கப்பலேறிப் போனவனோடேயும் சந்தியா வந்தனம் பண்ணாதவனோடேயும் கூட உட்கார்ந்திண்டு சாப்பிடலாமோ?" என்று நியாயமான ஒரு சந்தேகத்தைக் கிளப்பினாள்.

"என்ன பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளச் சொல்றயோ, பண்ணிக்கொள்றேன்" என்றான் மூர்த்தி.

"நான் மந்தரம் சொல்லித் தரேன். கூடச் சொல்லிண்டே வா, மாத்தியான்ஹிகம் பண்ணிவிடேன்" என்றார் சிவராமையர், தம்
மாத்தியான் ஹிகம் பண்ணிவிடேன்" என்றார் சிவராமையர், தம்
மாத்தியான்ஹிகத்தை முடித்துவிட்டு, டம்ளரில் மீதமிருந்த ஜலத்தைக் கொட்டிவிட்டு எழுந்து வந்து.

"போருமே! மணி பன்னிரண்டேகால் ஆயிடுத்து. இனிமே மருமான் மாத்தியான்ஹிகம் பண்ணி முடிக்க இரண்டாயிடும். சமைச்சு வச்சதெல்லாம் ஆறிப் போயிடும்" என்றாள் அம்மாமி.

"நம்பாத்துக் கடிகாரம் பத்து நிமிஷம் ஃபாஸ்ட்; இல்லை, இல்லை, ஸ்லோ" என்றான் பேரன்மார்களில் ஒருவன்.

மூர்த்தியைப் பார்த்துச் சிவராமையர், "உட்காரு கிட்டா" என்று இலையில் உட்காரச் சொல்லிவிட்டுத் தாமும் உட்கார்ந்து கொண்டார். பேரன் பேத்திகள் ஆரவாரம் செய்து கொண்டே உட்கார்ந்தனர்.

"அன்பு, பிரியம், உள்ளத்தில் உண்மையிலேயே நெருக்கம் இருக்கிற இடத்தில் எந்தவிதமான தவறுக்கும் பிராயச்சித்தமே தேவையில்லை என்றுதான் நம்ப சாஸ்திரங்கள் எல்லாம் சொல்லுகின்றன" என்றார் சிவ ராமையர்.

முதலில் பாயஸத்தைக் கொணர்ந்து பரிமாறினாள் மாமி.

"மருமானே மாப்பிள்ளையாக வந்தால் யார் வேண்டாமென்பார்கள்?" என்றார் சிவராமையர்.

மேஜர் மூர்த்தி சிறிது நேரம் தயங்கிவிட்டுச் சொன்னான்: "நீங்க கேலியாகச் சொல்றேளோ, நிஜமாகச் சொல்றேளோ, எனக்குத் தெரியாது. ஆனால் நான் கல்யாணம் பண்ணிக் கொண்டு விடறேன் என்று சொல்லி விடுவேன்" என்றான்.

கறியைப் பரிமாறிக்கொண்டே மாமி சொன்னாள்: "இப்படி எல்லாம் பயமுறுத்தாதே கிட்டா. யார் தேவலைன்னு படறது உனக்குன்னு சொல்லு. நான் பொறுப்பு. முகூர்த்தம் பார்த்து ஏற்பாடெல்லாம் செய்து விடுகிறேன். இப்படிப்பட்ட அழகான அநுபவம் நிறைந்த, ஊரெல்லாம் தெரிந்த, புகழும் பிரக்யாதியும் பெற்ற மாப்பிள்ளை கிடைக்க வேண்டுமே!" என்றாள் மாமி.

"ஆனால் ஒண்ணு'' என்றான் மூர்த்தி. பாதி விளையாட்டாகவும், பாதி உண்மையாகத் தொனிக்கவும், உடனே கல்யாணம் பண்ணிக்க நான் சம்மதிக்க மாட்டேன். பட்டணத்துக்குப் போய் எனக்குன்னு நான் இருக்கவும் உழைக்கவும் ஒரு இடம் தேடிக்கொள்ளணும். தேடிக்கொண்டு வந்து கல்யாணம் பண்ணிக்கிறேன்" என்றான்.

மூன்றாவது பேத்தி மங்களம் துடுக்குக்காரி. "ஐயையோ! அதுக்குள்ளே நான்கூடக் கிழவியாயிடுவேன்" என்றாள்.

மற்ற இரண்டு பேரும் சமையல் அறையில் இருந்தபடியே கலகல வென்று சிரித்தார்கள். சிவராமையரும் சிரித்தார்; 'மாமியும் சிரித்தாள்.

மூர்த்தியும் சிரித்துக்கொண்டே சொன்னான்: "நீதான் காத்துக் கொண்டிரேன் மங்களம்; நான் அடுத்த வருஷமே வந்து கல்யாணம் பண்ணிக்கொண்டு போய்விடுகிறேன்" என்றான்.

எங்கேயோ ஒரு கழுதை கத்திற்று.

பூஜை அலமாரியில் சாத்தியிருந்த பூமாலையிலிருந்து ஒரு பூ உதிர்ந்து கீழே விழுந்தது.

இரண்டையும் கவனித்த மாமி உடனேயே "இது நிச்சயந்தானே கிட்டா?" என்றாள்.

"நிச்சயந்தான்" என்றான் மூர்த்தி.

"நல்ல சகுனங்கூடக் கிடச்சுடுத்து, அம்மாடி! எனக்கு மூன்றில் ஒரு பங்கு கவலை குறைந்தது" என்றார் சிவராமையர்.

கூடத்தில் சாப்பிடுகிறவர்களுக்கு எதிரே, ஊஞ்சலில், ஒய்யாரமாக இதுவரை உட்கார்ந்துகொண்டிருந்த மங்களத்துக்கு எங்கிருந்தோ இப்போது வெட்கம் வந்துவிட்டது. தடதடவென்று

சமையல் அறைக்குள் போய்ப் புகுந்துக்கொண்டாள். அங்கே குசுகுசுவென்று பெண் குரல்கள் ஒலித்தன. இரண்டு பெண் குரல்கள் கேலி செய்தன. ஒரு குரல் கோபித்துக் கொண்டது. கூடத்தில் சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்களுக்கும் இது காதில் விழுந்தது.

"கல்யாணம் நிச்சயம் பண்ணிவிடறது என்றே அம்மாமி விருந்தாகப் பண்ணிவிட்டாள்போல் இருக்கு!" என்றான் மேஜர் மூர்த்தி.

"இது விருந்தில்லேடா அப்பா! பாயசத்தையும் வடையையும் தவிர இங்கே தினசரி ஆகிற சாப்பாடுதான்" என்றாள் மாமி.

"இந்த மாதிரி சாப்பாடு- நாவுக்கு ருசியான சாப்பாடு- நான் சாப்பிட்டு எவ்வளவோ நாள் ஆச்சு! ஏன் மாமி, பேத்தி எல்லாமே சமைக்குமோல்லியோ?" என்று கேட்டான் மூர்த்தி.

"கேட்டாயே ஒரு கேள்வி!" என்றாள் மாமி. "மங்களத்துக்குச் சமைக்கத் தெரியுமான்னுதானே நீ கேக்கறே! நீ ஒரு வருஷத்திலே வந்து கல்யாணம் பண்ணிக்கிறேன்னியே, அந்த ஒரு வருஷத்திலே சமைக்கிறதிலே எனக்குத் தெரிஞ்சதை எல்லாம் அவளுக்குச் சொல்லித் தந்துடறேன்" என்றாள் மாமி.

மீண்டும் சமையல் அறையில் குசுகுசுவென்று பேச்சும் கேலிக் குரல்களும் கோபக்குரலும் ஒலித்தன.

பாயசம் கொண்டு வந்து போட்டாள் மாமி.

மேஜர் மூர்த்தி சொன்னான்: "நான் ஜர்மனியில் படிக்கப் போனபோது என் கையில் என்னுடையது என்று செல்லாக் காசுகூடக் கிடையாது. என்னை அழைத்துப் போன ஆசிரியரும் அங்கே நடுத்தெருவில் நிறுத்திவிட்டுப் போன பிறகு எனக்குச் சாப்பாட்டுக்கே லாட்டரியாகி விட்டது. அந்த நிலைமையில் தெருவில் பட்சணக்கடைகள், ஓட்டல்கள் இவைகளில் உள்ள தின்பண்டங்கள் எல்லாவற்றையும் பார்க்கும்போது எனக்கு நாக்கில் ஜலம் ஊறும். அதுவும் தித்திப்பு என்றால் எனக்கு எப்பவுமே பிடிக்கும். எங்கே எந்தத் தித்திப்புப் பட்சணம் கண்ணில் பட்டாலும் பேயறைந்து பிரமித்தவன் போல் பிரமித்துப்போய் அப்படியே பார்த்துக்கொண்டு நின்றுவிடுவேன்!"

"பாவம்!" என்றாள் மாமி. அவன் இலையில் இன்னும்

கொஞ்சம் பாயசம் கொண்டு வந்து போட்டாள்.

"உனக்குத் தித்திப்புப் பிடிக்குமென்று அம்மாமிக்குத் தெரிந்திருந்தால் சேமியாப் பாயசத்தில் இன்னும் கொஞ்சம் சர்க்கரை போட்டிருப்பாள்" என்றார் சிவராமையர்.

"சர்க்கரை போராதா என்ன? அந்தப் பொண் போட்டாள்" என்றாள் மாமி.

"இல்லையே, சரியாயிருக்கே" என்றான் மூர்த்தி.

"எங்கள் காலேஜில் முன் வாசலில் ஸ்பினோஸா என்ற ஒரு தத்துவாசிரியனின் உருவச்சிலை வைத்திருக்கும். அந்த உருவச்சிலைதான் அப்போதெல்லாம் நான் கும்பிட்ட தெய்வம். அதன் முன் போய் நின்று கொண்டு, 'ஸ்பினோஸா தெய்வமே, தித்திப்புப் பக்ஷணங்கள் சாப்பிட இப்போது என் கையில் காசில்லாமல் செய்துவிட்டாய். பிற்காலத்திலாவது எப்பவாவது கணக்கில்லாத, போதுமென்கிற மட்டும், தித்திப்புப் பக்ஷணங்கள் சாப்பிடுவதற்குப் பொருள் அருளுவாய்' என்று பிரார்த்தித்துக் கொள்வேன்" என்றான் மூர்த்தி.

இலையில் சாதம் போட்டுத் தயிர் ஊற்றினாள் மாமி.

"என் ஸ்பினோஸா தெய்வமும், மனிதர்கள் கும்பிடுகிற மற்றத் தெய்வங்களைப் போலத்தான். அதற்கும் இன்றுவரை காது செவிடாகவே தான் இருக்கிறது" என்றான் மூர்த்தி.

"அது போகட்டும். மங்களத்துக்குத் தித்திப்புப் பக்ஷணங்கள் சகலமும் செய்யச் சொல்லித் தந்துவிடுகிறேன்" என்றாள் மாமி.

சாப்பிட்டுக் கையலம்பிய பிறகு மூர்த்தி, சமையலறைக்குள் பதுங்கிக்கொண்டுவிட்ட மங்களத்தைத் தேடிக்கொண்டு போனான். கூட அவன் மாமியும் வந்தாள்.

"ஏன் மாமி, மங்களத்தையும் ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? என்னைக் கல்யாணம் பண்ணிக்க அவளுக்குச் சம்மதந்தானா?" என்று கேட்டான் மூர்த்தி.

"நீயேதான் கேளேன்" என்றாள் மாமி.

மங்களம் அங்கிருந்து தப்பி ஓடிவிட முயன்றாள், முடியவில்லை. கூட இருந்த மற்றவர்கள் அவள் ஓடிவிடாமல்

பார்த்துக்கொண்டிருந்தனர். மாமி சமையலறை வாசற்படியில் நின்றுகொண்டிருந்தாள்.

"ஏன் மங்களம், எனக்காக ஒரு வருஷம் காத்திண்டிருப்பயோல் லியோ? உனக்கு இஷ்டந்தானே!" என்று மங்களத்தையே கேட்டான் மூர்த்தி.

முகம் சிவக்க, "ஒரு வருஷம் என்ன! ஒன்பது வருஷமானாலும் காத்திண்டிருக்கேன்" என்றாள் மங்களம். அவள் அதைக் கேலியாகத்தான் சொல்ல முயன்றாள். ஆனால் கேலி அவள் குரலில் தொனிக்கவில்லை. தன் தோல்வியை ஒப்புக் கொண்டவள் போல் மங்களம் தலைகுனிந்து கொண்டாள்.

அதே சமயம் கணகணவென்று தூரத்தில் மணி அடித்தது.

"தேவலையே, சகுனமெல்லாம் சரியாகத்தான் இருக்கு. இந்தக் கல்யாணம் தெய்வப்ரீதிதான்" என்றாள் மாமி.

சிவராமையர், "இன்றைக்கு என்ன, கோயிலில் உச்சிகால பூஜை இத்தனை நேரம் கழித்து ஆறது?" என்றார்.

"எல்லாம் நமக்காகத்தான், பாருங்களேன்!" என்றாள் மாமி.

உலகமே, இப்பிரபஞ்சமே நமக்காகத்தானே!

தெய்வம், தன் உச்சிக்காலப் பூஜை வேளையை, நமக்காகத் தள்ளிப் போட்டுக்கொள்கிறது!

என்ன திடம்! என்ன நம்பிக்கை!

களங்கமற்ற உள்ளங்கள், அன்பு நிறைந்த உள்ளங்கள் தவிர வேறு எந்த உள்ளங்கள் இம்மாதிரி முடிவு செய்யத் துணிய முடியும்?

ஏன்? மங்களம் நன்றாகத்தான் இருந்தாள். வயசு வித்தியாசமும் அதிகம் இல்லை. பாதகமில்லை.

கடவுள் சித்தம் அதுவானால் மேஜர் மூர்த்தி அதை ஏற்றுக் கொள்ளத் தயாராகவே இருந்தான்.

# 22

சிறிது நேரம் மாமாவுடன் பேசிக்கொண்டிருக்கலாம் என்று சிவராமையரைத் தொடர்ந்து வாசலுக்குப் போனான். திண்ணையில் அவர் துணியை விரித்துக்கொண்டு படுத்து விட்டார். "இன்று சாப்பாடு கொஞ்சம் ஜாஸ்தி" என்றார்.

மூர்த்தியும் பேசுகிற பாவத்தில் இல்லை, அப்போது. "நானும் சற்றுப் படுத்துத் தூங்கினால் தேவலைதான்" என்றான்.

"திண்ணையில் வேண்டாம். ஒரே சத்தமாக இருக்கும். வெயிலாகவும் இருக்கும். நீ மாடியில் போய்ப் படுத்துத் தூங்கு" என்றார் சிவராமையர்.

வெற்றிலை போட்டுக்கொண்டான் மூர்த்தி. அதைத் துப்புவதற்காக ஆளோடியில் இறங்கிப் போனான்.

நிழல்கள் கிழக்கு நோக்கிச் சாயத் தொடங்கிவிட்டன.

வாசலில் காவல் நின்ற இரண்டு வேப்பமரங்களும், நாள் பூராவும் வெயிலில் காய்ந்தும், பசுமையான புன்னகை இழக்காமல் குளுமையாக இருந்தன. கண்ணுக்கும் உடலுக்கும் மனசுக்கும் குளுமை தந்தன.

வீட்டு வாசலில் எச்சில் இலை வந்து விழப்போகிறது என்று ஒரு நாய் வேப்பமரத்து நிழலில் படுத்திருந்தது.

எதிர்வீட்டுத் திண்ணையில் சீட்டாட்டம் தொடங்கிக் கொண்டிருந்தது.

தெருவோடு ஒரு சாயபு ஒரு கட்டு வெற்றிலையைத் தூக்கிக் கொண்டு போய்க்கொண்டிருந்தான்.

தெருக்கோடியில் யாரோ ஒருவன் வெகு தூரத்துக்கு எட்டும் படியாகக் குரல் கொடுத்துக்கொண்டிருந்தான். யாரையோ கூப்பிட்டுக் கொண்டிருந்தான் போல் இருந்தது.

காற்று லேசாக வீசிக்கொண்டிருந்தது. வெயில் வெப்பம், சாப்பிட்ட பிறகு சற்று அதிகமாகி இருப்பதுபோலத்தான் இருந்தது.

சிவராமையர் கண் மூடிவிட்டார்.

சத்தப்படுத்தாமல் மூர்த்தி உள்ளே போனான். அவன் மாமியும் இரண்டு பேத்திகளும் சாப்பிட இலையில் உட்கார்ந்து விட்டார்கள். மங்களம் இன்னும் இலையில் உட்காரவில்லை.

"எனக்கு ஒரு டம்ளர் ஜலம் வேண்டும் மாமி" என்றான் மூர்த்தி.

"மங்களம், தீர்த்தம் கொண்டுபோய்க் கொடு" என்றாள் மாமி.

குடத்திலிருந்து ஜலம் சரிக்கும் சப்தம் கேட்டது. ஆனால் உடனே மங்களம் ஜலத்தை எடுத்துக்கொண்டு வரவில்லை.

"அவசரப்படாதேடா, கிட்டா! அவள் முகத்தைத் துடைச்சுண்டு வரட்டும்" என்றாள் மாமி.

"பவுடர் வேண்டுமானாலும் போட்டுண்டு வரட்டும்! காத்திண்டிருக்கேன்" என்றான் மூர்த்தி சிரித்துக்கொண்டே.

"புடைவை மாத்திண்டு போடியம்மா மங்களம்" என்று பரிகாசம் பண்ணினாள் அவள் அக்கா.

குனிந்த தலை நிமிராமலே தீர்த்தத்தைக் கொண்டு வந்து மூர்த்திக்கு முன் வைத்தாள் மங்களம். விருக்கென்று ஒரு பார்வை பார்த்து விட்டு உள்ளே போய்விட்டாள்.

சிரித்துக்கொண்டே போகிறவளைப் பார்த்துக்கொண்டே தீர்த்தத்தைச் சாப்பிட்டுவிட்டு, ஊஞ்சலில் உட்கார்ந்தான் மூர்த்தி.

"அடேயப்பா! திடீர்னு என்னடியம்மா இப்படி வெட்கம் வந்து விட்டது? கல்யாணம் பண்ணிண்டப்புறம் தானேடி ஆம்படையான்? அது வரையில் அத்தான்தானே" என்று மங்களத்தைக் கோபித்துக் கொண்டாள் மாமி.

"ரொம்பக் கோபிச்சுக்காதே மாமி, அவள் சாப்பிடாத இருந்துடப் போறா. அப்புறம் நான் கல்யாணம் பண்ணிக்கறச்சே இளைச்சுப் போயிடுவாள்" என்றான் மூர்த்தி ஊஞ்சலை லேசாக ஆட்டிக்கொண்டே.

"இளைச்சுப் போனாத்தான் என்னவாம். முதல் பிள்ளையைப் பெத்த பிறகு அவள் அம்மா மாதிரி குண்டுப்பெருச்சாளி ஆகிவிட மாட்டாளா?" என்றாள் மாமி.

கல்யாணம் என்கிற பேச்சுந் தாண்டி 'ழ'பம்பாது குழந்தை

பிறக்கிறதைப்பற்றிப் பேசுகிற கட்டம் வந்துவிட்டது.

தான் அப்படித் திடீரென்று முன்பின் யோசியாமல் கிளம்பிச் சாத்தனூருக்கு வந்தது பிசகுதானா?

சாமா தன் மனைவியையும் கிழத் தகப்பனாரையும் தளைகள் என்று சொன்னான்.

தான் அதுவரையில் - அந்த நிமிஷம் வரையில் - எந்தவிதமான தளைகளும் இல்லாமல் காலம் தள்ளிவிட்டவன், இப்போது மனைவி, மக்கள், சுற்றம் என்கிற எல்லாத் தளைகளுக்கும் உட்படச் சம்மதிக்கிற மனோபாவத்துக்கு வந்துவிட்டான்.

மனிதனுக்கு எந்த உருவத்தில் எந்தச் சமயத்தில் எப்படிப் பட்ட பலவீனம் வரும் என்று யார் சொல்லமுடியுமா?

ஆமாம், இது பலமா, பலவீனமா?

யார் நிச்சயமாகச் சொல்வது?

மாமியும் மாமாவும் நடத்திய வாழ்க்கையைப் பார்த்தால், 'இது தான் வாழ்க்கை' என்று சொல்லத் தோன்றியது மூர்த்திக்கு. அந்த வாழ்க்கை, தனக்கும் சாத்தியமானால் அதில் ஈடுபட வேண்டியதுதான் தன் கடமை என்று தன் உள்ளம் வற்புறுத்தியது என்பதை அவன் உணர்ந்தான். அந்த வற்புறுத்தலின் காரணமாகத்தான் அவன் மாமி பரிகாசம் செய்தபோது மங்களத்தைக் கல்யாணம் செய்துகொண்டு விடுகிறேன் என்று சொன்னான்.

அதுவெறும் வேடிக்கை வார்த்தையல்ல. உண்மையிலேயே முழுச் சம்மதத்துடனும் மூர்த்தி தனக்குள் செய்து கொண்ட தீர்மானம்தான் அது.

ஆனால் இப்படி நினைப்பது இப்போது உள்ளத்திற்கு எட்டாத ஒரு பலவீனத்தின் விளைவாக இருக்கப் போகிறதே என்றுதான் ஒரு வருஷம் ஆகட்டும் என்று பின்யோசனையுடன் அவன் சொன்னான்.

இப்போது கல்யாணம் என்கிற பேச்சுக்குப் பிறகு குழந்தை என்கிற நிலைக்கு வந்தாகிவிட்டது - முதல் குழந்தை என்று திட்டம் போடத் தொடங்கிவிட்டாள் மாமி.

ஆஹா! வாழ்க்கையிலேதான மாமாவுக்கும் மாமிக்கும் எவ்வளவு திடமான நம்பிக்கை இருந்தது!

அந்த நம்பிக்கையில் கொஞ்சம் தனக்கும் இருந்துவிடுமேயானால்? எதற்கும் அஞ்சாமல் அவன் முன்னேறலாமே!

"என்ன கிட்டா? யோசனையில் ஆழ்ந்துவிட்டாய்?" என்றாள் மாமி.

"யோசனை என்ன? சாப்பாடு கொஞ்சம் பலம். தூக்கம் வராப்லே இருக்கு. அவ்வளவுதான்" என்றான் மூர்த்தி.

"படுத்துக்கோயேன், மாடியிலே போய். இந்தப் பாளையங்கள்ளாம் வந்து தொந்தரவு பண்ணாமே நான் பார்த்துக்கறேன்" என்றாள் மாமி.

"இருந்தாலும் இன்னிக்குச் சாப்பாடு கொஞ்சம் பலம் தான்" என்றான் மூர்த்தி.

"என்ன பலம் என்கிறே! வழக்கமாகச் செய்யறதுதான். பாயசமும் வடையும் மட்டும் அதிகப்படி. அவ்வளவுதான். இங்கேதான் நபர் இரண்டு டஜன் இருக்கே. ஒண்ணுக்குக் குழம்பு பிடிக்காது; ஒண்ணுக்கு ரஸம் பிடிக்காது; ஒண்ணு பச்சடி இல்லையாங்கும்; ஒண்ணு அப்பளம்னு கத்தும்; இப்படியாத் தினம் இங்கே சம்பிரமமான சாப்பாடுதான். எல்லாக் குழந்தைகளுக்கும் மேல் அவர் குழந்தை. எல்லாம் இருந்தால் தான் அரை வயிறு ரொம்பித்து என்பார் அவர்" என்றாள் மாமி.

'இத்தனையையும் மாமி ஒரு குறையாகச் சொல்லிக்கொள்ள வில்லை. நிறை என்கிற அர்த்தத்திலே சொன்னாள் என்பதுதான் விசேஷம்' என்று எண்ணினான் மேஜர் மூர்த்தி.

மாமியுடன் பேசப்பேசக் குடும்பம் என்கிற மன மயக்கம், வசீகரமான மயக்கம் அதிகரித்துக்கொண்டுதான் போகும் போல் இருந்தது.

ஊஞ்சல் சங்கிலியில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்தான்.

ஊஞ்சல் ஆடவில்லை. அவன் மனம் உருவகம் ஆகாத சிந்தனை களுக்கு இடையே ஊசலாடிக்கொண்டிருந்தது.

மனிதனுடைய வாழ் நாட்களிலே எந்த நாளை முக்கியமானது என்று சொல்வது? எந்த நாளை முக்கியம் அல்லாதது என்று சொல்வது? எல்லா நாட்களுமே, எல்லா நாழிகைகளுமே, எல்லா

விநாடிகளுமே முக்கியமான நாட்கள்தாம். நாழிகைகள்தாம். விநாடிகள்தாம்.

எப்படியோ நேர்ந்துவிடுகிற ஒரு விஷயம் இது. ஒரு நாள், ஒரு நாழிகை, ஒரு விநாடி சிறந்துவிட்டதாக அவனுக்குத் தோன்றிவிடுகிறது.

பிறந்த நாள் தெரிவதில்லை; இறந்த நாளும் மனிதனுக்குத் தெரிவதில்லை. இந்த இரண்டு நாட்களுமே முக்கியமான நாட்கள்தாம்.

இடையில் பல நாட்களைக் கொண்டாடுகிறான் மனிதன்.

'ஜோசியத்தில் உனக்கு நம்பிக்கை உண்டா கிட்டா?" என்று சிவராமையர் காலையில் கேட்டார்.

ஜோசியத்தில் மூர்த்திக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லைதான். ஆனால் இப்போது - இந்த ஒரு நாள் - சாத்தனூர் சர்வமானிய அக்கிர காரத்தில் தன் மாமா வீட்டில் தான் செலவழித்துக் கொண்டிருந்த இந்த நாள் - தன் வாழ்க்கையை எப்படிப் பாதிக்கப்போகிறது என்று தீர்மானிக்க முயன்று கொண்டிருந்தான் அவன்.

சிந்தித்து முடிவு கண்டுவிடுகிற விஷயம் அல்ல அது.

ஜோசியம் பார்த்துத்தான் முடிவு சொல்லலாம்.

ஊஞ்சல் சங்கிலியில் சாய்ந்தபடியே அவன் கண்ணை மூடி விட்டான்.

கண்ணை விழித்தபோது மங்களம் கையில் எச்சில் இலையுடன் ஓரக்கண்ணால் அவனைப் பார்த்துக்கொண்டே, வாசல் பக்கம் போய்க் கொண்டிருந்தாள்.

இருவர் கண்களும் ஒரு விநாடி சந்தித்தன.

"தூணிலே மோதிக்காதே" என்றான் மூர்த்தி கேலியாக.

பதில் சொல்லாமல் போய்விட்டாள் மங்களம்.

சற்று உரத்த குரலில் மூர்த்தி சொன்னான்: "மாமி, நான் இன்று ராத்திரி பட்டணத்துக்குத் திரும்பிவிடலாம்னு பார்க்கிறேன்" என்றான்.

"என்னடா கிட்டா? என்ன சொல்றே?" என்று கேட்டுக்

கொண்டே மாமி கொல்லைப் பக்கத்திலிருந்து வந்தாள்.

"இல்லை! இன்னி ராத்திரிக்குப் பட்டணத்துக்குத் திரும்பி விட லாம்னு பார்க்கிறேன்" என்றான் மூர்த்தி மீண்டும் ஒரு தரம்.

"ஏண்டா, என்ன அவசரம் அப்படி, அதுக்குள்ளே?" என்றாள் மாமி.

"திடீரென்று நினைச்சுண்டேன். புறப்பட்டு வந்தேன் உங்களை எல்லாம் பார்த்தாச்சு. போகலாமே என்று தோணித்து. சொன்னேன்" என்றான் மேஜர் மூர்த்தி.

"வயசு இருபத்தி ஏழு இருபத்தி எட்டு ஆறதே தவிர நீ இன்னும் குழந்தைப் பிள்ளை மாதிரி தாண்டா இருக்கே!" என்றாள் மாமி.

"ஏன்?"

"அத்திம்பேர், உங்கப்பா - கூட இப்படித்தானாம். திடீர்னு நினைப்பாராம்; எங்கேயாவது ஓடுவாராம். திடீர்னு நினைச்சுப்பாராம்! திரும்பி வருவாராம். எல்லோரையும் அப்படியேதான் விரட்டு விரட்டுன்னு விரட்டு வாராம்" என்றாள் மாமி.

"அப்பாவுக்கு ஏத்த பிள்ளைதான் நான்னு சொல்லு மாமி" என்றான் மூர்த்தி.

"அது சரி, ஆனால் பட்டணத்திலே அப்படி அவசரமா என்ன வேலை இருக்கு உனக்குன்னு சொல்லு அவசரமா வேலையிருந்தாப்போ. நான் குறுக்கே நிற்கமாட்டேன்" என்றாள் மாமி.

அவசரமாக வேலை இருப்பதாகப் பொய் வேண்டுமானாலும் சொல்லியிருக்கலாம் மூர்த்தி ஆனால் சொல்லவில்லை. "மனசிலே போகலாம் என்று தோணித்து; சொன்னேன்" என்றான் உண்மையையே.

"உன்னை நன்னா ஆட்டி வைக்கவும் படுத்திவைக்கவும் மங்களத்தைப்போல் ஒருத்திதாண்டா தேவை" என்றாள் மாமி.

"அதுதான் நிச்சயமாயிடுத்தே' மங்களத்துக்கும் என்னைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டந்தான் என்று தெரிஞ்சு போச்சே" என்றான் மூர்த்தி.

"எப்படித் தெரிஞ்சது உனக்கு!" என்றாள் மாமி.

"அவள் நடந்துக்கறதைப் பார்த்தால் தெரியவில்லையா?" என்றான் மூர்த்தி.

"நீ அசடு என்று பார்த்தேன்; கெட்டிக்காரன் என்று இப்பத்தான் தெரிகிறது" என்றாள் மாமி.

"ஏதோ கொஞ்சம் அறிவு, கொஞ்சம் அநுபவம் எல்லாம் இருக்கு. அது இருக்கட்டும் மாமி; இப்போ நான் சொல்லுறது இதுதான். இத்தனை நாளாகக் கல்யாணம் பண்ணிக்கிற உத்தேசமே எனக்கு ஏற்பட்டது கிடையாது. இப்போ இங்கே வந்தப்புறம் திடீர்னு - முக்கியமா நீ சொல்றதைக் காதில் வாங்கின குத்தம் - நான் சரி, கல்யாணமும் பண்ணிக்கலாமே, என்று யோசித்தேன். இல்லை; நான் இத்தனையும், மங்களத்தைப் பத்தி விளையாட்டுக்குத் தான் சொன்னேன் என்று நினைச்சுக் கொண்டாயோ நீ, அதுவும் எனக்குத் தெரியாது" என்று கொஞ்சம் தடுமாறியவனாக நிறுத்தினான் மேஜர் மூர்த்தி.

மாமி சிரித்தாள். "உங்க மாமாவே நான் சொல்லித்தான் உனக்குக் கடிதாசு எழுதினார். என் மூன்று பேத்திகளிலே ஒருத்தியை உன் தலையில் கட்டிவிடறது என்றுதான் உன்னை இங்கே நான் வரவழைத்ததுங்கூட?" என்றாள் மாமி.

"என் கிட்ட இருக்கிற பிரியத்தினால் வா என்று எழுதச் சொல்லியிருப்பாய் என்று எண்ணினேன் நான்" என்றான் மூர்த்தி.

"அதுவும் கொஞ்சம் உண்டுதான். கேளேன். நீ கெட்டிக்காரன். மூன்று பேரில் கெட்டிக்காரியைப் பார்த்துப் பிடித்து விட்டாய். அதிருஷ்டக்காரன்தான். தெய்வசம்மதமும் இருக்காப்லேதான் இருக்கு" என்றாள் மாமி.

"அதைத்தானே சொல்ல வந்தேன். இப்ப, சத்தியாக நான் வெத்து ஆள். இருந்தால் சாப்பிடுவேன்; இல்லாவிட்டால் பேசாமல் இருந்து விடுவேன். பொறுப்பு எதுவும் இல்லாமல் இதுவரை காலந் தள்ளியாகிவிட்டது. இனிமேல் கல்யாணம் செய்துகொள்வது என்று தீர்மானித்துவிட்ட பிறகும் அப்படியே இருந்துவிட முடியாதில்லையா?"

"அதுக்காக? இன்னிக்கே பட்டணம் போய் என்ன பண்ணப்

போகிறாயாம்?" என்று கேட்டாள் மாமி.

"கிடைக்க இருக்கிற என் புது அந்தஸ்திற்கும் பொறுப்பிற்கும் ஏற்றபடி வேலை தேடுவேன்" என்றான் மூர்த்தி.

"அடேயப்பா! நீ வந்து தேடப்போறே என்று வேலை எங்கேயோ காத்திண்டிருக்கு இல்லையா?" என்று கேலி செய்தாள் மாமி.

மூர்த்தி கேட்டான்: "இப்படியே சொல்லிக்கொண்டு ஒரு வருஷமும் போய்விட்டால்?"

மாமி சொன்னாள்: "நான் சொல்கிறபடி செய், பத்துப் பதினைந்து நாள் இங்கேயே, இரு. எங்கெங்கெல்லாமோதான் வருஷக்கணக்காக இருந்து அல்லல் பட்டாகி விட்டது. இனிக் கவலை வேண்டாம். இரண்டொரு மாசத்திற்கெல்லாமே கல்யாண நாள் இருக்கு. முகூர்த்தம் வைக்கச் சொல்றேன்."

"சரிதான் போ!" என்றான் மேஜர் மூர்த்தி; "அடுத்த வருஷத்திற்கு முந்தி நீ எவ்வளவு சொன்னாலும் நான் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன். அதுமட்டும் நிச்சயம். அதற்குள் நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள லாயக்குத்தானா என்பதை நான் எனக்குள்ளாகவே தீர்மானித்துக்கொள்ள வேண்டும்" என்றான்.

"இங்கிருந்துகொண்டே தீர்மானித்துக்கொள்ளேன்" என்றாள் மாமி.

மூர்த்தி சிரித்தான்: "உன்னிடமிருந்து தப்பித்துக் கொள்ள வழியுண்டான்னு பார்க்கத்தானே ஒரு வருஷம் டய்ம் கேட்டேன்?"

"மங்களத்திடமிருந்து தப்பித்துக்கொள்ள இனி உன்னால் முடியுமா? கல்யாணம் என்பது உன் போன்றவனுக்குப் பெரிய பொறுப்பா?" என்றாள் மாமி.

"நான் போற வழியில் விடு மாமி, நான் தூங்கி எழுந்து கோயிலுக்குப் போறேன். போய்விட்டுக் கும்பகோணம் போய் ராத்திரி ரெயிலுக்குப் பட்டணம் போறேன். கூடிய சீக்கிரமே திரும்பி வறேன்." என்றான் மூர்த்தி. அவன் குரலில் பிடிவாதம் தொனித்தது.

அவனையே ஒரு விநாடி பார்த்துக்கொண்டு நின்றாள் மாமி. பிறகு, "போய்த் தூங்கு. கோயிலுக்குச் சாயந்தரம் அர்ச்சனை எல்லாம்

பண்ண ஏற்பாடு செய்கிறேன்" என்றாள் மாமி.

எழுந்து மாடிப்படியேறி, கடைசிப்படியில் நின்று திரும்பிப் பார்த்தான் மூர்த்தி. மாமி ஊஞ்சல் பலகையண்டையில் நின்றபடியே யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

அடுத்த அங்கணத்தில் மங்களமும் சிலைபோல அசையாமல் நின்றிருந்தாள்.

மாடிப்படி ஏறிவருகிற காரியத்திலே தூக்கம் கலைந்து விட்டது, மேஜர் மூர்த்திக்கு. படுக்கையை விரித்துக்கொண்டு படுத்தவன் கைக்கடி காரத்தைப் பார்த்தான். மணி ஒன்று.

தெற்குப் பக்கமும் வடக்குப் பக்கமும் சுவரில் வரிசையாக ஜன்னல்கள் இருந்தன. ஜன்னல்களுக்கு அப்பால் அந்த உயரத்தில் அடைப்பு எதுவும் இல்லை. ஆகவே காற்று அடித்தது.

வீட்டுக்கூரைமேல் பட்டு பிரதிபலித்த உஷ்ணமும் வெளிச்சமும் உறைத்தன. ஐப்பசி மாதத்தில் இப்படி இருப்பது ஆச்சரியந்தான் என்று எண்ணினான் மேஜர் மூர்த்தி.

மாதம் மும்மாரி பெய்த காலம் எல்லாம் கலி முற்றுவதற்குமுன் என்றுதான் தோன்றியது. இப்போது வருஷத்தில் மும்மாதிரி பெய்தால் ஆச்சரியப்படவேண்டியது. இல்லா விட்டால் அவசியம் இல்லாத சமயத்தில் அகாலத்தில் - மழை பெய்தால் நன்மைக்குப் பதில் கெடுதி விளையக் கூடிய சமயத்தில் - மழை கொட்டியது.

உலகில் நல்லவர்களே இல்லாமல் போய்விட்டார்கள் என்று தான் அர்த்தமா இதற்கு?

ஒருவர் இருந்தாலும் போதும் என்று பாட்டுக் கூறியது. பாட்டுகளும் கவிகளும் கூறியவை எல்லாமே பொய்தானோ?

தென்னண்டைப் பக்கத்து ஜன்னல் வழியாகத் தென்னையும் கமுகும் இலவ மரமும் தெரிந்தன.

சிவராமையர் வீட்டுக் கொல்லையிலே எல்லாவிதமான கறிகாய்ச் செடிகளும் புஷ்பச்செடிகளும் பழமரங்களும் வேறுபல மரங்களும் வைத்துப் பயிரிட்டிருந்தார்கள். அதைத் தாண்டிப் படுகை; காவேரி நதியைத் தொடுகிற வரையில் இடம் இருந்தது.

மாமி மத்தியானமே சொன்னாள். "மருமான் நீ வந்திருக்க யேன்னு மாமா இன்னிக்குக் கொல்லை கொத்தப்போகவில்லை. இல்லா விட்டால் காபி சாப்பிட்டதும் சாப்பிடாததுமாகத் தலையில் முண்டாசை வரிந்துக் கட்டிக்கொண்டு கிளம்பிவிட மாட்டாரா? கொல்லையில் அவர் நட்ட செடியில் ஒரு வெண்டைக்காய், ஒரு தக்காளி, ஒரு கத்தரிக்காய் காய்த்து விட்டால் போதுமே! அதற்குப் பிறகு அவர், 'பெண்டாட்டி வேண்டாம், பிள்ளை வேண்டாம், பேரன் பேத்திகள் வேண்டாம்!' என்று சொல்லிவிட மாட்டாரா?" என்று.

மாமா பதில் சொல்லாமல் இல்லை. "தோட்டம் வைத்துப் பயிர் செய்பவனுக்குத் தெரியும் அதனுடைய மேன்மை, உனக்கென்ன தெரியும்!" என்றார்.

மூர்த்தி குறுகிட்டான்: "மாமிக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்று சொல்றது தப்பு மாமா. பேரன் பேத்தி எடுத்து, வளர்த்து எண்ணெய் தேய்த்து, உண்ணக் கொடுத்துச் சீராட்டித் தாலாட்டித் தூங்கப் பண்ணுகிற பொம்மனாட்டிக்குத் தோட்டக்கலைத் தத்துவம் தெரியாதுன்னு நீங்கள் சொல்றது சரியில்லை" என்றான்.

மாமி சிரித்தாள்: "மருமான் பத்து விஷயமும் தெரிஞ்சவன்தான்" என்றாள்.

படுக்கையிலிருந்து தூங்க முடியாமல் புரண்டு கொண்டிருக்கும்போது இது ஞாபகம் வந்தது மூர்த்திக்கு.

அதைத் தொடர்ந்து மனக்குரங்கு வேறு ஒரு ஞாபகத்தை, ஒரு சிந்தனையை அவன் மனத்தில் தட்டி எழுப்பியது.

கல்யாணம் செய்து கொண்டு விடுகிறேன் என்று சம்மதித்த அவன் பெண்மை என்கிற புதிருக்குப் புதியவன் அல்ல.

ஜர்மனியில் அவனுடைய கலாசாலைப் படிப்புத்தான் பூர்த்தி யுறவில்லையே தவிர, மற்றப் படிப்புகளெல்லாம் பூர்த்தியாகிவிட்டன.

சாதாரணமான ஆண் பெண் உறவு வரையில் உள்ள எல்லாவகை உறவுகளிலும் ஆராய்ச்சி செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தபோது அவன் தவறியதில்லை.

முழுமனத்துடனும் தேடிக்கொண்டுபோய் அவன் இதிலெல்லாம் ஈடுபட்டான் என்று சொல்ல முடியாது, நண்பர்கள்,

சந்தர்ப்ப விசேஷங்கள் இவை உதவி செய்தபோது ஈடுபட்டான், அவ்வளவுதான்.

அவன் மிகவும் சாதாரணமான ஆண்மையும் ஆண் மனோபாவமும் படைத்தவன். அறியாப்பருவத்திலே கனவுகள் கண்டவன்; பெண்மையையும் பெண்மையின் ரகசியங்களையும் பற்றி.

அவன் ஜர்மனிக்குக் கிளம்பும் முன்னரே சென்னையிலே தான் குடியிருந்த வீட்டின் முப்பத்தைந்து வயசு அம்மாளின் ஜோக்குக்குப் பாத்திரமாகி இரண்டு மாசங்கள் வள்ளிசாக அவளுடைய காமத்தின் கைப்பாவையாக இருந்தவன். அப்போது அவனுக்கு வயசு பதினாறு அல்லது பதினேழு தான் இருக்கும்.

அவளுடைய, வயசாகிக்கொண்டிருந்த காமம் பயங்கரமான ரூபம் எடுத்து வருகிற சமயத்திலே தப்பித்துக்கொண்டு ஜர்மனிக்குக் கிளம்பி விட்டான் மூர்த்தி.

ஜர்மனியில் அவனுடைய அநுபவங்களைப் பற்றிச் சொல்லி மாளாது. மாணவனாகவும் படை வீரனாகவும் அவன் பெண்ணுறவின் சகல அம்சங்களையும் அநுபவித்தவன்.

ஒரு ஜர்மானியப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு ஹிட்லர் ஸ்தாபித்த ஸ்வர்க்கத்திலே இருந்து விட வேண்டும் என்பதுதான் அவனுடைய ஆசை. பெண்ணையும் தேடிக் கொண்டான். ஆனால் அந்தப் பெண் அவனுடைய சக மாணவி. அவனைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்து விட்டாள்.

ஏதோ இந்தியனுடன் பொழுது போக்காக ஒரு நாள். இரண்டு நாள், ஒரு மாசம் இரண்டு மாசங்கூட உடல் உறவு கொள்ள அவள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அவனைக் கல்யாணம் செய்து கொள்ள அவள் துணியவில்லை; விரும்பவில்லை.

இந்தியாவில் ஆண் பெண் உறவின் புனிதத்தையும் புனித மின்மையும் பக்கத்தில் பக்கத்தில் பார்த்து அநுபவித்தவன் அவன்.

ஆண் பெண் உறவுப்பற்றி அவன் சிந்தனைகள் தெளியத் தொடங்கின.

உலகில், மனித சமூகத்திலே குடும்பம் என்கிற கொள்கை எவ்வளவு மகத்தான ஸ்தானம் வகிக்கிறது என்பதை அவன் சிந்தித்து அறிந்து கொண்டான்.

குடும்பம் அடிப்படையில் ஆண் பெண் உறவு என்கிற உண்மையில்தான் திளைக்கிறது; கிளைத்துத் தழைக்கிறது.

ஜப்பானில் அவன் அநுபவங்கள் விரிந்தன. மலேயாவிலும் பர்மாவிலும் அவனுக்குச் சொந்தமாகவும், பிறர் விஷயத்தில் கவனிக்கவுமாக ஏராளமான அநுபவங்கள் கிடைத்தன.

சென்னையில் தனக்குக் கன்னி கழித்துவிட்ட அந்த ஸ்திரீயை ஒரு நாள் - வேறு ஒன்றும் வேலை இல்லாத சமயத்தில் தேடிக் கொண்டு போனான். ஆசையுடன் அல்ல; 'அவள் இத்தனை வருஷங்களில் கிழவியாக இருப்பாள். பார்க்க வேண்டும்; அந்தப் பழைய அநுபவம் இப்போது எப்படி மனசில் உருவம் எடுக்கிறது; பார்க்கலாம்' என்று.

ஆனால் அந்தக் குடும்பம் சென்னையை விட்டுப் போய்விட்டதாகத் தெரிந்ததே தவிர, எப்போது போயிற்று எங்கே போயிற்று என்று விசாரித்து அறிந்துகொள்ளக் கூடவில்லை.

அதற்குப் பிறகு இரண்டு வருஷங்கள் வரையில் அவனுக்குப் பெண் என்கிற ஞாபகமே வரவில்லை! இங்கே சாத்தனூர் வந்து, அன்று மாமி ஞாபகப்படுத்தும் வரையில்.

அவன் ஏன் கல்யாணம் செய்துகொண்டு சாதாரண மனிதர்களிடையே சாதாரண மனிதனாக வாழ்க்கை நடத்தக் கூடாது?

சிவராமையரையும் மாமியையும் பார்த்த பிறகு அதுதான் சிறந்த வாழ்க்கை; அதுபோன்ற குடும்ப வாழ்க்கையைத் தானும் நடத்த வேண்டும் என்றுதான் அவனுக்குத் தோன்றியது.

சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்தின் காற்றிலேயே குடும்பம் என்கிற கொள்கையின் மணம் வீசுவதுபோல அவனுக்குத் தோன்றியது.

அந்த வாடை அவன்மேல் ப்ட்டுவிட்டது. மங்களம் என்கிற பெண் கடைக்கண் வலை வீசி அவனைப் பிடித்துவிட்டாள். அவன் இனித் தப்புவது சிரமம்!

அவன் மங்களத்தின் கடைக்கண் வீசிய வலையிலிருந்து தப்ப விரும்பவும் இல்லை.

மூர்த்தி தூங்கிவிட்டான்.

# 23

அவன் விழித்தெழும்போது மணி நாலரைக்குமேல் ஆகி விட்டது.

அப்படியும் தானாகத் தூக்கம் கலைந்து விழித்துக்கொள்ள வில்லை அவன். யாரோ எழுப்பித்தான் எழுந்தான்.

"காபி தயாராகிவிட்டது" என்று மாமி வந்து எழுப்பினாள்.

நல்ல காபியாகக் கொடுத்தாள். அதைச் சாப்பிட்டு விட்டுக் கீழே இறங்கி வந்தான் மூர்த்தி.

கூடத்திலோ, சமையல் அறையிலோ மங்களத்தைக் காணவில்லை. அவன் நாலா பக்கமும் கண்களை ஓட்டியதைக் கவனித்த அவன் மாமி சொன்னாள்: "யாரு, மங்களத்தைத் தேடறயா?" என்றாள் கேலியும் பரிவும் கலந்த குரலிலே.

மூர்த்திக்கே வெட்கமாகப் போய்விட்டது. மாமி தெரிந்து கொள்ளும்படியாக இவ்வளவு அப்பட்டமாக மங்களத்தைத் தேடிவிட் டோமே என்று!

இருந்தாலும் இந்த மாமிக்குத்தான் எவ்வளவு அறிவு இருந்தது? அடடா! குடும்பத்தை நிர்வகிப்பதிலே அவள்தான் எத்தனை வித்தைகளையும் எத்தனை கலைகளையும் கற்றிருந்தாள்!

"இல்லை..." என்று தொடங்கினான் மூர்த்தி.

"நிஜத்தை ஒப்புக்கோயேன், மங்களத்தைத்தான் தேடினேன்னு. அதிலே என்ன தப்பு?" என்றாள் மாமி.

"ஆமாம். அப்படித்தான் வச்சுக்கோயேன் மாமி, அவள் எங்கே?" என்றான் மூர்த்தி.

கலகலவென்று சிரித்தாள் மாமி. பிறகு சொன்னாள்: "மூணாவது ஆத்துக்கு எல்லோருமாகப் போயிருக்கா; மங்களத்துக்கு அலங்காரம் பண்ணிண்டு வர. பாரேன்; இன்னும் அரை மணிக்கெல்லாம் வந்துடுவா! உனக்கே அவளை அடையாளம் தெரியாது; பாரேன்" என்றாள் மாமி.

"அவளை என் மனைவியாக அடையாளம்

தெரிஞ்சுக்கணும்னு தானே நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று சொன்னேன். மங்களத்தை நான் மங்களமாகத் தெரிந்து கொள்ளாவிட்டால் எதற்காக நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்றதாம்?" என்றான் மூர்த்தி.

அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்த மாமி, "அப்படி ஒன்றும் சுலபமாக ஒருத்தரை ஒருத்தர் தெரிஞ்சுகொண்டுவிட முடியாது" என்றாள்.

அதைக்கேட்டுக்கொண்டே, வாசல் பக்கத்திலிருந்து உள்ளே நுழைந்த சிவராமையர், "நிஜந்தாண்டா கிட்டா, ஒருத்தரை ஒருத்தர் மனுஷாள் சரிவரத் தெரிந்துகொள்றதுக்கே வருஷக்கணக்காக ஆயிடறது. இதோ பாரேன் - உன் மாமியும் நானும் எத்தனை வருஷமாச் சேர்ந்து குடித்தனம் நடத்தறோம்? அப்படியும் எனக்கு உன் மாமியை இன்னமும் சரியாகத் தெரிந்தபாடில்லையே!" என்றார்.

"ஆனால் எனக்கு உங்க மாமாவைச் சரியாகத் தெரியும்" என்றாள் மாமி.

அவள் பெண்குலத்தில் பிறந்தவள். அவள் அப்படிச் சொன்னது தகும் என்று மூர்த்திக்குத் தோன்றியது. உலகில் பெண்களுக்கு மட்டும் மனிதர்களைத் தெரிந்துகொள்வதில் அசாதாரணமான, அலாதியான ஒரு சமர்த்தியம் இருப்பது போலத்தான் இருந்தது.

சிவராமையர் சொன்னார்: "நான் தூங்கி எழுந்து வந்ததும் உன் மாமி ஒரு சமாசாரம் எனக்குச் சொன்னாள். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது."

"என்ன அது?" என்றான் மூர்த்தி, முகத்தைக் கவலை தெரிவிக்கிற பாவத்தில் வைத்துக்கொண்டு.

"நல்ல சமாசாரந்தான்" என்றார் சிவராமையர். "நீ மங்களத்தைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்து விட்டாய் என்று சொன்னாள்" என்றார்.

"உங்களுக்குத் தெரிந்தாப்லே சாப்பிடுகிறபோது பேசினது தானே அது.'" என்றான் மூர்த்தி.

"அது சரி. பேச்சு அதேதான். நான் அதை விளையாட்டுப்

பேச் சாத எடுத்துக் கொண்டேன்" என்றார் சிவராமையர்.

"எது நிஜம், எது கேலி என்று தெரியாத ஆம்பிள்ளையைக் கட்டிண்டு நானும் நாற்பது வருஷமாக் குடித்தனம் பண்ணிப்பிட்டேன்" என்றாள் மாமி கேலியாக.

"உங்களுக்கும் மாமிக்கும் ஆட்சேபம் இல்லையானால், மங்களத் தைக் கல்யாணம் பண்ணிக்க எனக்கும் ஆட்சேபம் இல்லை" என்றான் மூர்த்தி.

"எங்களுக்கென்னடா ஆட்சேபம் கிட்டா. உன்னைப்போல வரன், தேடிண்டுபோனாலும் கிடைக்குமா?" என்றார் சிவராமையர்.

"என்னைப்போல மாப்பிள்ளைதான் தேவையா உங்களுக்கு என்பதுதானே பிரச்னை?"

"ஏதேது; மருமான் ரொம்ப சாமர்த்தியமாகவும் அடக்கமாகவும் பேசற மாதிரி தோன்றதே எனக்கு?" என்றாள் மாமி.

"மங்களத்தைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு, ஏன் சொன்னோம் என்று தோன்றிவிட்டதா உனக்கு?" என்றார் சிவராமையர்.

"அதெல்லாம் இல்லை மாமா. 'ஊரெல்லாம் சுத்தினவன் கெட்டிக்காரன்னு' நினைச்சுக் கொண்டிருக்கேள் நீங்க. பத்திரிகையிலே படமெல்லாம் வந்தது; பெரிய மனுஷன்தான்னு தீர்மானம் பண்ணிவிட்ட மாதிரி தோன்றது எனக்கு. உண்மை என்னவென்றால்–" தொடங்கிச் சற்றுத் தயங்கி நிறுத்தினான் மூர்த்தி.

"உன்னைப்பற்றி உண்மையை நீ தெரிஞ்சுண்ட வரையிலும் சொல்லு. கேட்கிறேன்" என்றார் சிவராமையர்.

"சுருக்கமாக இதுதான். இன்று, எனக்கு 29 ஆகிறதா வயசு, முப்பதா? இன்று வரையில் யாருடனும் ஒட்டாமல், யார் கிட்டவும் பிரியமும் அன்பும் இல்லாமலே காலந்தள்ளிவிட்டவன் நான். ஊரெல்லாம் சுற்றினேனே தவிர ஓரிடத்திலும் தங்கவில்லை. ஒரு பெரிய பேராகப் பத்திரிகைகளில் அடிபடுகிறதே தவிர ஒரு காசு சம்பாதிக்கக் கையாலாகாதவன் நான். இந்தியாவுக்கு நான் திரும்பிய நாள் முதல் இன்று வரை நானும் எவ்வளவோ விதங்களில் முயன்று பார்த்தாகிவிட்டது. எந்தப் பொறுப்பான வேலைக்கும் என்னை

வைத்துக்கொள்ள யாரும் சம்மதிக்கிற மாதிரியே தெரியவில்லை."

மூர்த்தி சற்று நிறுத்திய சமயம் பார்த்துச் சிவராமையர் சொன்னார்: "காலம் சரியாக இல்லை. உனக்கு வேலை கிடைப்பதெல்லாம் தானே நடந்துவிடும். படிப்பும் அறிவும் இருக்கிறது-"

"படிப்பும் போதாது; அறிவும் போதுமானது இருப்பதாகத் தெரியவில்லை" என்றான் மூர்த்தி.

"சம்பாதிப்பது, சாப்பிடுவது எல்லாப் பொறுப்பும் ஏற்பட்டுவிட்ட பிறகு சரிவரவே நடந்துவிடும். அதில் ஒன்றும் சிரமம் இராது. மனசும் திடசித்தமும் இருந்தால் உன்னைப் போன்றவனுக்கு-" என்று சிவராமையர் சொல்லிக்கொண்டிருக்கும்போது மூர்த்தி குறுக்கிட்டான்.

"என் போன்றவன் என்றால் எப்படி, ஏன் என்று சொல்லத் தான் தொடங்கினேன். நீங்கள் நடுவில் ஏதோ குறுக்குப் பாய்ச்சிப் பேச்சை மாற்றிவிட்டீர்கள். விஷயம் இதுதான்; நான் காலேஜில் படிக்கும்போது என்ன செய்வது எப்படிச் செய்வது என்றெல்லாம் சிந்திப்பதே கிடையாது. இன்றைப்பாடு ஆச்சா என்பதுடன் எல்லாம் முடிந்துவிடும். நாளையைப் பற்றிய யோசனை நாளைக்கு. யாரோ ஒரு லெக்சரர் பிரியமாக இருந்தார். அவர் கூப்பிட்டார் என்பதற்காக, அவரை நம்பிக்கொண்டு நான் கிளம்பி விட்டேன். அங்கிருந்த வாழ்வே சதம் என்று நம்பி ஹிட்லர் பிரசாரத்துக்கு மனசைப் பறிகொடுத்தேன். நேதாஜி வந்ததும் அவர் வழியில் மனசு மாறியது. இப்போது சாத்தனூர் வந்த பிறகு சாத்தனூர் வாழ்வுதான் லட்சிய வாழ்வு என்று தோன்றுகிறது. என் லட்சியங்கள் திடம்படாமல் மாறுகின்றன. இன்றைய என் தீர்மானம் நாளை வரையில் நீடிக்குமா? அதை நோக்கி நான் செய்கிற முயற்சிகள் வெற்றி பெறுமா என்பதுதான் கேள்வி" என்றான் மூர்த்தி.

"இன்றைத் தீர்மானம் நாளைக்கு இராது என்றால் கிட்டாவுக்கு இன்றைக்கே மங்களத்தைக் கல்யாணம் செய்துவைத்து விட வேண்டியது தான். பிறகு தானாகவே பொறுப்பும் இந்தத் தீர்மானமும் நிலைக்க வழி செய்தாகிவிடுகிறது" என்றாள் மாமி.

சிவராமையர் சொன்னார்: "அது ஒரு வழி; அல்லது பிறருடைய உதவியால் இதுதான் லட்சியம் என்று திடப்படுத்திக்

கொள்வது இன்னும் நல்ல வழி. மங்களம் காத்திருப்பாள் என்கிற ஞாபகத்துடன் ஏற்பாடுகள் செய். கல்யாணத்துக்குத் தயார் செய்துகொள். ஒரு வருஷம் ஆகட்டுமே, மங்களத்துக்கு அப்படி ஒன்றும் வயசு ஆகிவிடவில்லை. காத்திருக்கலாம்"

மூர்த்தி சொன்னான்: "அதைத்தான் நானும் சொன்னேன். ஒரு வருஷம் கழித்துக் கல்யாணம் செய்துகொள்கிறேன் என்று"

"அது நியாயந்தான். ஆனால் இந்த ஒரு வருஷமும் இத்தனை நாளும் பண்ணிவந்தது போலச் சோதனைகள் செய்யக் கூடாது. அதாவது இந்த லட்சியத்தை விட்டுத் தாவி, இன்னொரு லட்சியத்தை மேற்கொள்ளலாம் என்று எண்ணக் கூடாது. அப்படி எண்ணத் தொடங்கினால், அத்துடன் போச்சு" என்றார் சிவராமையர்.

"தங்களுடைய ஆசீர்வாதம்."

"எங்களுடைய ஆசீர்வாதத்துக்கு என்ன? அது எப்பவும் இருக்கு. உனக்கும் மங்களத்துக்கும் அது எப்பவும் உண்டு. கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்துண்டு வருவோம். குளிக்கறதானால் குளித்துவிட்டுக் கிளம்பு. ஆறு மணிக்குள் போய்விடலாம் கோயிலுக்கு" என்றாள் மாமி.

"இன்று ராத்திரி எப்படியும் போட் மெயிலுக்குக் கிளம்பி விடறேன்" என்றான் மூர்த்தி.

"அவசியம் போகணும்னு தோன்றினால் கிளம்பு" என்றார் சிவராமையர்.

"வந்தது வந்தாச்சு. இன்னும் நாலுநாள் இருந்துவிட்டுத் தான் போயேன்" என்றாள் மாமி.

"இல்லை மாமி, இந்தக் கல்யாணப் பேச்சும் நிச்சயமும் இல்லாவிட்டால் ஒரு மாசங்கூட இருந்துவிட்டுப் போய் விடுவேன். இப்போது புதுசா ஒரு பொறுப்பு வந்துவிட்டது. போய், அவசரமாக ஏற்பாடுகளெல்லாம் செய்யணும் என்று தோன்றுகிறது" என்றான் மூர்த்தி.

"ஒரு வருஷம் இருக்கே அதான்" என்றாள் மாமி.

"நான் நினைக்கிறமாதிரியான ஏற்பாடுகளுக்கு ஒரு வருஷம் போதாமலும் இருக்கலாம்" என்றான் மூர்த்தி.

"ஒரு வாரமே போரும்னாலும் போரும்" என்றார் சிவராமையர்.

"உண்மைதான்" என்று எண்ணிக்கொண்டே குளிக்கக் கிணற்றடிக்குப் போனான் மூர்த்தி.

தெருப்பக்கத்தில் இருந்ததைவிடக் கொல்லைப்பக்கத்தில் குளுமையாக இருந்தது. மாலை வேளை என்பது மட்டும் அல்ல; கொல்லையில் கிணறும், கிணற்றைச் சுற்றிப் பாக்குமரங்களும் பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தன.

வெயிலே அவ்வளவாகத் தெரியவில்லை. கிணற்றடியில் ரோஜாச் செடிகளும் வேறு பல புஷ்பச் செடிகளும் பூத்துக் குலுங்கின. கிணற்றுக்கு அப்பால் ஒரு திராக்ஷைக்கொடி பயிராகி உயரத்தில் படர்ந்திருந்தது. ஒரு கொத்துத் திராக்ஷை தொங்கிக்கொண்டிருந்தது. அது இன்னும் பழுக்கவில்லை. இருந்தாலும் கை நீட்டி ஒன்றைப் பறித்துத் தின்னவேண்டும் என்றுதான் இருந்தது. மூர்த்தி பறித்து வாயில் போட்டுக் கொண்டான்.

ஆஹா! என்ன புளிப்பு! என்ன புளிப்பு!

கொல்லையில் வைத்து மாமா பயிராக்கியிருந்த செடி கொடி மரங்களைப் பார்வையிட்டுக்கொண்டே சிறிது நேரம் நின்றான் மூர்த்தி. கொஞ்ச தூரம் போனான். பிறகு கோயிலுக்குப் போக நாழிகையாகிவிடும் என்று மாமி சொன்னது ஞாபகம் வந்தது.

ஏழெட்டுக் குடம் ஜலம் இழுத்து விட்டுக்கொண்டு, துடைத்துக் கொண்டான். ஸ்நானம் பண்ணியது மனசுக்கு உல்லாசமாகத்தான் இருந்தது.

இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு உள்ளே போனான். புது வேஷ்டியைக் கையோடு எடுத்துவர மறந்துவிட்டான்.

கூடத்தில் ஏழெட்டுப் பெண்களுக்கு மத்தியில் சர்வாலங்கார பூஷிதையாகப் புதுப் புடைவை கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தது யார் என்று புரிய அவனுக்கு இரண்டு நிமிஷம் பிடித்தது. மங்களம் அழகியாக அப்போது தோன்றவில்லை அவனுக்கு; அலங்காரியாகத்தான் தோன்றினாள்.

ஒரு நிமிஷம் மெய்ம்மறந்தவனாகத் தன் அதிருஷ்டத்தை

நினைத்து வியந்தவனாக மங்களத்தையே பார்த்துக்கொண்டு நின்று விட்டான்.

மாமியின் குரல் அவன் சிந்தனைகளைக் கலைத்தது. "கிட்டா, யாரோன்னு நினைக்காதே; மங்களந்தான்!" என்றாள் மாமி.

கூடத்திலிருந்த மற்றப் பெண்களெல்லாம் சிரித்தார்கள். மங்களம் விறுக்கென்று எழுந்து சமையலறைக்குள் மறைந்து விட்டாள்.

மாமிக்கு என்ன பதில் சொல்லலாம் என்று சிறிது நேரம் யோசித்தவனாகத் தயங்கினான் மூர்த்தி. பிறகு பதில் சொல்லத் தேவையில்லை என்று எண்ணியவனாக மாடிக்குப் போய் விட்டான்.

## 24

எவ்வளவு அவசரப்பட்டும் கோயிலுக்கு ஆறரை மணிக்குத்தான் போக முடிந்தது.

போகும்போது அவர்களுடன் இலக்கியாசிரியன் சாமாவும் வந்தான்.

"மனிதனுக்குத் தெய்வம் என்ற சித்தம் உண்டாகியதைத் தான் மனித குலத்தின் முதல் வெற்றியாகக் கொண்டாட வேண்டும்" என்றான் சாமா.

"பல்வேறு ரூபங்களில், ரூபமில்லாத ரூபத்திலும், பல்வேறு சமயங்களில் பல்வேறு இடங்களில் கடவுள் தோன்றித் தோன்றி மனிதனை ஆட்டி வைத்திருக்கிறார்" என்றார் சிவராமையர்.

"அற்றுவிடுமா அடியோடு?" என்று கேட்டான் சாமா.

"அற்றுவிட்டால் அன்று கலி முற்றி முடிந்துவிட்டது. பிறகு பிரளயமும் மீண்டும் சத்திய யுகமுந்தான் என்று நாம் தீர்மானித்துக் கொள்ளலாம்" என்றான் மூர்த்தி.

சாத்தனூர் கோயிலைக் கவிகள் பாடியிருக்கிறார்கள். தலை முறைக்குப் பின் தலைமுறை என்று நூற்றுக்கணக்கான தலைமுறைகள்

நல்லவர்களும் கெட்டவர்களும் வந்து நின்று கடவுளை பக்தியுடனும் கேலியாகவும் வரம் வேண்டியும் படாடோபமாகவும் அடக்கத்துடனும் நின்று தொழுதுபோன இடத்திலே நின்று மூர்த்தியும் தொழுதான்.

அவன் ஆதிகாலத்தில் கிறிஸ்தவன் ஆகிவிடவேண்டும் என்று எண்ணியது உண்டு. ஆனால் கிறிஸ்தவர்களின் பழக்க வழக்கங்களை அறிந்து கணித்துக்கொண்ட பின் அது நிரம்பவும் அற்பமான ஆசை என்று பட்டுவிட்டது அவனுக்கு. ஜர்மனியில் பல கோயில்களில் புகுந்து தொழுதிருக்கிறான். தத்துவாசிரியன் ஸ்பினோஸாவே தெய்வம் என்று அவன் எண்ணிய காலமும் உண்டு.

சாத்தனூர் சுப்பிரமணிய ஸ்வாமி சந்நிதியிலே நின்று அவன் தொழும்போது, 'இதோ தெய்வம்; ஆசைகள் அபிலாஷைகள், ஏக்கங்கள், துக்கங்கள் இவற்றை மறந்து விட்டு, காரண காரியமில்லாமல் தொழுவோம்' என்று தொழுதான்.

ஆராதனை நடந்துகொண்டிருக்கும்போது மங்களத்தின் ஞாபகம் உண்டாயிற்று. திரும்பித் திருட்டுத்தனமாகப் பார்த்தான். அவள் முகம் தூண்டிவிட்ட சுடர் விளக்குப்போலப் பிரகாசிக்க அவள் ஸ்வாமியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு இருந்த தெய்வபக்தி தனக்கு இல்லையே என்று சிறிது வெட்கமாகக்கூட இருந்தது மூர்த்திக்கு. ஆனால் அவன் இப்படி நினைப்பதற்கும் மங்களம் அவனைத் திரும்பிப் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.

தீபாராதனை நடக்கிறது என்று மாமி ஞாபகப்படுத்த வேண்டி யிருந்தது மூர்த்திக்கு.

ஆராதனையின் போதும், முந்தியும் பிந்தியும் சாமா ஏதோ பேசிக் கொண்டு வந்தான். வழக்கம்போல இருந்தால் மூர்த்தி அவற்றிற்கெல்லாம் சாங்கோபாங்கமாகப் பதில் சொல்லி வந்திருப்பான். சாமாவின் வார்த்தைகளுக்கெல்லாம் சிவராமையர்தான் பதில் சொன்னார்.

சாமா என்ன சொன்னான். சிவராமையர் என்ன பதில் சொன்னார் என்றுகூட மூர்த்தி கவனிக்கவில்லை.

அவனுடைய மௌனமும் ஈடுபாடும் சிவராமையருக்குத் திருப்தி அளிப்பதாக இருந்தன.

# 25

இரவும் விருந்துதான்.

வீடு திரும்பும்போதே மணி ஏழரையாயிற்று.

சாப்பிட்டு முடிக்கும்போது மூர்த்தி அசாதாரண மௌனம் சாதிப்பதைப் பார்த்து மாமி அவனைப் பேச்சுக்கு இழுக்கப் பார்த்தாள்; பலிக்கவில்லை.

"ஏது, நேத்து வந்த கிட்டாமாதிரியில்லையே இது? யாரோ மேஜர் மூர்த்தி என்றார்களே, அதுமாதிரி இருக்கே!" என்றாள் மாமி.

"இப்படி ஒரு கிட்டா" என்றார் சிவராமையர்.

"இருந்தாலும் கலகலப்பா இருக்கப்படாதோ? அதுவும் இன்னிக்கே ஊருக்குப் போறேன் என்கிறான்..."

மூர்த்தி சொன்னான்: "இந்த ஒரு நாள் என் வாழ்விலேயே அதிர்ச்சி தந்துவிட்ட ஒரு நாள். நான் செய்வதில்லை என்று நினைத்துக் கொண்டிருந்த காரியங்களை எல்லாம் மாமியும் நீங்களுமாகச் சேர்ந்து செய்ய வைத்துவிட்டீர்கள். நான் என் பிற்கால வாழ்க்கையைப் பற்றிக் கட்டியிருந்த கோட்டைகள் எல்லாம் ஒரே நாளில் தகர்ந்துவிட்டன. எனக்குப் பேச நாவெழவில்லை. சிந்திக்கக்கூடத் தைரியம் வரவில்லை" என்றான் மூர்த்தி.

"மங்களத்தை எண்ணி நீ அப்படியெல்லாம் பயப்பட வேண்டாம், கிட்டா! அவள் ரொம்பவும் சாது" என்றாள் மாமி சிரித்துக்கொண்டே.

"பயமில்லை மாமி, இது பயமில்லை"

"பக்தியாக்கும்!" என்றாள் மாமி.

"பொறுப்பு" என்றார் சிவராமையர்.

"ஒவ்வொருவனும் தனக்கு வாழ்வில் எவ்விதமான பொறுப்பும் இருக்கக்கூடாது என்றுதான் முதலில் நினைக்கிறான். ஆனால் எப்படியோ ஒவ்வொருவன் தலையிலும் அவன் சுமக்கக்

கூடிய அளவுக்குப் பொறுப்பு ஏற்பட்டுவிடுகிறது. ஏற்றப்படுகிற பொறுப்பைச் சகிக்கக் கூடிய அளவுக்கு மனிதன் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டியது அவசியந்தானே!" என்றான் மூர்த்தி.

சாப்பிட்டுவிட்டு வெற்றிலை போட்டுக்கொண்டு கிளம்பினான் மூர்த்தி. வாசலில் குதிரை வண்டி வந்து நின்றது. போட்மெயில் கும்ப கோணத்தில்தான் நிற்கும். மணி எட்டு அடிக்கவில்லை, இன்னும். பெட்டி படுக்கையை எடுத்து வைக்கச் சொன்னான் மூர்த்தி. மாமா மாமி குழந்தைகளிடம் சொல்லிக் கொண்டான்.

"மங்களத்தையும் கூப்பிடு மாமி! அவளிடத்திலேயும் சொல்லி விட்டுப் போறேன்" என்றான்.

"அவள்கிட்ட சொல்லப்படாது. நீ சொல்கிறதெல்லாம் அவள் காதிலேயும் விழுந்துண்டுதான் இருக்கு. சமையல் அறைக் கதவுக்குப் பின்னாடிதான் இருக்கா" என்றாள் மாமி.

"நான் நடுவில் இன்னும் பத்து நாளைக்குப் பின், இரண்டு நாள் இருக்கும்படியாக வறேன்."

"நானும் வரட்டுமா கிட்டா, கும்பகோணத்துக்கு?" என்றார் சிவராமையர்.

"வேண்டாம் மாமா" என்று கிளம்பினான் மூர்த்தி. "ஏதுக்கு?" என்றான்.

"மங்களம் கொடுத்தாள்" என்று அவள் தம்பி, மூர்த்தியிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

"ஏண்டா தடிப்பயலே! மங்களம் ரகசியமாகக் கொடு என்று கொடுத்தால் நீ இப்படி இரைஞ்சு சொல்லி, அமர்க்களப் படுத்தறேயே!" என்று பையனைக் கோபித்துக் கொண்டாள் மாமி.

கடிதத்தைப் படித்துப் பார்த்தான் மூர்த்தி. அதில் மணி மணியாக, 'காத்துக்கொண்டிருப்பேன். மங்களம்' என்று எழுதியிருந்தது.

'அடேயப்பா! இவளுக்குத்தான் என்ன துணிச்சல்!' என்று எண்ணிக்கொண்டே மூர்த்தி வெளியே வந்தான்.

எல்லாரும் வெளியே வந்தார்கள். மூர்த்தியைக் குதிரை வண்டி யில் ஏற்றிவிட.

"வரட்டுமா?" என்று திரும்பினான் மூர்த்தி.

ரேழிக்கு அப்பால் கையில் அரிக்கேன் லைட்டுடன் மங்களத்தின் உருவம் தெரிந்தது.

"வறேன்" என்றான் மூர்த்தி. குதிரை வண்டியில் ஏறி உட்கார்ந் தான்.

கோயிலில் இரண்டாம் கால பூஜை மணி அடித்தது.

வண்டி கிளம்பிற்று.

முற்றும்

56782
031348
மின்னூலாக்கம்
முரளிதரன்



## க.நா.சு. நாவல்கள்

கநாசு படைப்புலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய படைப்பாளி. அயல் இலக்கியங்களை அவர் காட்டித் தந்த விதம் யாரும் மறக்காமல் மனதில் இருத்திக் கொள்ள வேண்டிய ஒன்று. மிகவும் குறைந்த அளவிலான வரிசையில் நாவல்கள். ஆனால் அவைகள் தவிர்க்க முடியாமல் முக்கியத்துவம் பெறுகின்றன. இன்றைய இளம் வாசகர்கள் படிக்கத் தவறியிருக்கக் கூடிய - படித்தே ஆக வேண்டிய நாவல்கள் அவை.

விமரிசனம் ... எழுதும்போது ... சுதந்திரத்தை தனது ... ர். ... ந ... ப் ... ச் ... ம ... ணி ... க்கு பெரும ... வை மறப்பதற்கில்லை. மறக்கவும் முடியாது.

அதன் வெளிப்பாடு இந்த நாவல்களின் அணிவகுப்பு.

TVR
TVR56782
2966155
TVR56782

கண்மணி வெளியீடு